# T A M I L   D R A M A S

XIV

## CONTENTS

1. Birammāvai ciṟaivaitta nāṭakam

2. Darumar imayagiri tapacu nāṭakam

3. Kavirattiṉa kāḷidācar carittiraṉ nāṭakam

4. Pāṇḍavar vaigunda nāṭakam

5. Vaṉṉi kiṉaru līṅgam cākṣi nāṭakam

# பி[illegible]வை

## [illegible] நாடகம்



திரு. C. V. ஜெகந்நாத முதலியார் குமாரர்.

C. [illegible] தாமோதர முதலியாரவர்களது

சென்னை [illegible] அச்சகத்தில்

[illegible]

[illegible] 1 ரூபாய்

உ

குகமயம்.

ஸ்ரீ சிவசுப்பிரமணியர்

பிரம்மாவை

# சிறைவைத்த நாடகம்.

கூடலூர் தாலுக்கா சாத்தாங்குப்பம்

ச. வரதா உபாத்தியாயர் அவர்களால்

இயற்றியதை.

கூடலூர்-வீரப்ப படையாட்சியாரிடம்

சகல சுதந்திரமும் பெற்றுக்கொண்டு,

## சி. வே. மீனாக்ஷிசுந்தர முதலியார்

அவர்களாற்றமது

சென்னை-முனா

பெரியநாயகியம்மன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1937. [அணா 10

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

உ

கடவுள் துணை.

ஸ்ரீ சிவ சுப்பிரமணியர்

# பிரம்மாவை சிறைவைத்த நாடகம்.

தேவேந்திரன் கவி.

பொன்னிழைத்த மணிமகுடந் தகதகென்ன
 பூவையர்க ளிருபுறமுஞ் சவரிபோட
வின்னமில்லாவேதியர்கள் வேதம்பாட
 வேணதொருபெண்களிருபாலுமேந்த
நன்னயமாசூரரிட இமிசை தன்னை
 நலமுடனே பறமனுக்கு சொல்வோமென்று
இன்னிமிஷந்தேவர்களும் நெருங்கிசூழ
 யிந்திரனுங்கொலுவாக வருகின்றாரே.

தரு.

| | |
|---|---|
| தேசத்தரசர்போற்றும் | யீசன்பதத்தையேற்றும் |
| தேவேந்திரராசன்வந்தார் | நல்லதிகழ்முடியணிந்து |
| தேவேந்திரராசன்வந்தார் | |
| பேசுமாதர்கள்தினம் | பெருமைசொல்லிநடக்க |
| சரு பேரிகைபூரிகை | சாரியாய்போட |
| மீரியேவந்துமே | தேரியேநாட தே |
| யெத்திசையுலகெல்லாம் | சித்தமகிழுந்திரன் |
| மிமையவர்வந்துபோற்றவே | நல்ல-இன்பமதாகவே |
| அருமையுமலர்கள்சாற்றவே | |
| பத்திபத்தியதாக | படைமன்னவர்நெருங்க |
| சரு பாசமாகவே | வீசியபணிமுடி |
| தேசமெச்சிய | ராஜசுந்திரன் தே |
| வச்சிரவாளுங்கையில் | உச்சிதமுடனே தாங்கி |
| மகுடவர்த்தனர்சூழவே | வெகு-மன்னவனென்று |
| விகிதமுடனே தாழவே | |

அச்சமில்லாதமந்திரி அடிபணிந்துபுரிய
சரு அங்கசனென்னவே மங்களகறமுடன்
நங்கையரிருபுரம் இங்கிர்தமாக தே
அரனிடபாதத்தை அன்பாகபோற்றியே
ஆசைபுரியுந்தீரனும் நல்ல-அரசனுமென்ன
பூசைபணியுமாரனும்
திரமதாய்தேவர்தினம் திருவடியெச்சரிக்க
சரு திந்திமிதிமியென மேளமதிர்ந்திட
கந்தம்பரிமளம் வென்றுசொரிந்திட

### தேவேந்திரன் கவி.

பார்க்கடல்பள்ளிகொண்ட பறவாசுதேவாவுந்தன்
யேர்க்கவேதிருவடிக்கி யிறைஞ்சிவாய்புதைத்துநின்றேன்
தாக்குள்ளமுல்லைவில்வம் தந்திடதுளபங்கொண்டு
சேர்க்கவேபதமர்ச்சித்து திருவடிபோற்றினேனே.

வசனம்.

அகிலாண்டகோடி பிர்மாண்ட நாயகருடைய விஷ்ணுவை தோத்தரித்து சபையிலிருக்கப்பட்டவர்களுக்கு அடியேன்வந்தனம்



### தேவேந்திரன் தேசவிசாரணை.

வந்தனஞ்செய்த மாதலிவாறாய்
மானகந்தன்னில்மழை

சிந்தையிலன்பா தினதினம்பெய்து
க்ஷேமமாய்வருகின்றதா
தேவாலயங்கள் பூசைகளோரி
செழிப்பாய் வருகின்றதா
ஆவலாயெனக்கு அரியவேதீங்கள்
அதையுரைமந்திரியே
அந்தணர்ஓமம் யாகாதிகர்மம்
அதில்யாது குரவுமுண்டோ
விந்தையுமரிய விபறமதாக
விளக்குவாய் மாதலியே
பாரில்பயிர்களோங்கி பகுதியும்கட்டி
பண்பாய் தினம்தினமும்
கூறுவாயரிய குவலையத்தரசர்
கொடுங்கோல் செய்கின்றாறு

## தேவேந்திரன் கவி.

பாரினில்செழிப்படைந்து பகுதியும்நமக்குவந்து
மீரியேவருவதாலே மேன்மைசந்தோஷமானேன்
சூரர்கள்செய்யும்கஷ்டம் சொல்லவும்நாவெனக்கு
தேறவுமில்லைமந்திரி சிவன்பாதம்காணசெல்வோம்.

## வசனம்.

வாருமப்பாமாதலி நாம் நமது நகரமெங்கும் செழிப்படைந்த படியால் சந்தோஷமாகினோம் இப்பவும் அந்த சூரர்கள் சூரபத்மன் சிங்கமுகன் வானுகோபன் செய்கிற உபத்திரவம் தாங்கமுடியவில்லை நாமனைவரும் கையிலாயம் நாடியேகுவோம் வாரும் தேவர்களே.

## தரு.

வாருங்கள்தேவர்களே
வண்மைபெருங்கயிலை
சேருவோம்
சிவன்பாதம்போற்றிட
காடுமலைகுன்று
காறுரெல்லாம்தாண்டி

இப்போ
நாடிசெல்ல
அனைவருமேயினி
சித்தமதாய்
வணுந்திரம்
நாம்நடப்போம்

பெருமயிலினங்கள் வனந்தனில்
பேசுதுபாரிதோ மீசனைப்போல்
கண்டோம்கயிலைநகற் தேவர்களே
காளியோடாடிய மீசனைநாம்

### பொது வசனம்.

இவ்விதமாக தேவராஜன் கைலாயநாடு போகிறபோது சத்தியலோகாதிபதியாகிய பிர்மதேவன் சபைக்குவருகிறார்.

### பிரம்மா கவி.

மாலவர்வுந்திதன்னில் வண்மையாயுதித்தசீலன்
ஞாலமாம்புகழ்படைத்த நற்குணமிகுந்தகோலன்
காலத்தில்சிருஷ்டிதொண்டு கருவதைபடைத்தமாறன்
ஆலத்தையுண்டோன் மருகன் அயனுமேவந்தின்றாரே.

### தரு.

சத்திமருகனை புத்திஅறிவுமான
சதுர்முகதேவன்வந்தார் கொலுவைவனடி
பத்திபுரியும்ஞானம் பரிவாதருகுமோனம்
சரு பாரில்சிருஷ்டியும் தொழில்புரிபவர்
பரிகண்டுமே சாரிவருபவர் சத்
தரித்தபூணூலிலங்க தாவடமேல்குலங்க
விரித்தஅன்னத்திலேறி விகடலெங்குமேறி
சரு வேளதேசமுஞ் சந்திரத்தியே
காணவெவர்களும் நத்திநர்தியே சத்
வாணிசமேதான் வைய்யப்புகழ்தற்பரன்
பாணாக்குபிவன்நேசன் பரமன்தனக்குபாசன்
சரு பத்திபுத்தியும் உந்தமணிவர்
வெத்தியாகவே நத்திபெரிவர் சத்
ஆமோகனமாலே அணியும்புசங்கள்தன்ன
பாரில்யெவருங்கண்டு பயந்துபாதம்பன்ன
சரு பாசமாகவே விசுமணிமுடி
கூசிடயெவர் கண்டிட கெடி. சத்

பிரம்மா சபைவணக்கம் கவி.

திருவெனுமாதுதன்னை தேவியைமார்பணிந்த
பரம்பொருளான விஷ்ணு பதமதைபணிந்தேன்யானும்
சிருவனும்வரதநாஸன் சேயனைபாதுகார்த்து
வரமது தருகவேண்டும் வந்தனம்சபையோருக்கே.

வசனம்.

திருவாகிய இலக்ஷ்மியை மார்பணிந்த ஸ்ரீமானுடைய பதத்தை போற்றுகின்ற வரததாஸன்மேல் கிருபை கூர்ந்து அருள் பலிக்கும் படி இச்சபையாருக்கு வந்தனம்.

தேவர் தரு.

சத்தியலோகவாசா நேசா ஒரு
சங்கதிசொல்வேன் கேளும்பிரகாசா
நத்தியேயுந்தன்பாதம் நருமலர்பணிந்திட்டேன்
பத்தியேஒருசேதிசொல்ல நான்மகிழ்ந்திட்டேன்

பிரம்மா தரு.

என்னசேதியது இந்திராநீயும்
எனக்கதைசொல்லுமிப்போ சுந்திரா
வன்னமாபுகலுவாய் வருணனுக்கெசமானே
இன்னதென்றெந்தனுக்கு யெடுத்துரைதேவர்கோனே

தேவேந்திரன் தரு.

சொல்லவும்நாவெனக்கு வல்லையே இந்த
சூழலைசொல்வந்த தொல்லையே
அல்லல்படவும்விதி அரக்கரால்நேர்ந்துதே
வல்லவாயெந்தன்மனம் மகிழ்ந்திடசோர்ந்துதே

பிரம்மா தரு.

இதற்குநாம்யென்னவிதம் செய்யலாம்நீயும்
எடுத்துரைவிள்ளவே நையலாம்
அதற்கொருதந்திரம் அரனிடத்தில்செல்ல
பதமதாயேகுவோம் பாரில் சூரரைவெல்ல

தேவேந்திரன் கவி.

அப்படியானால்நாமும் அரனவரிடத்திற்சென்று
பொற்பதந்தனைபணிந்து புலமதைசொல்வோம்வாரீர்

பிரம்மா கவி.

சொற்படிதேவர் தன்னை சுந்திராசேனைகூட்டி
இப்பவேநாமெல்லாரும் இந்திராயேகுவோமே

பிரம்மா ஓரடி தரு

தேவர்களே வருவீரே அந்த
சிவன்பாதங்கண்டு நாமும்நேரே

தேவேந்திரன் தரு.

தாவும்புகழ் சத்தியவாசா இனி
தடையில்லாவருகிறேன் நேசா

பிரம்மா தரு.

சுரரால்துன்பப் படலானோம் அந்த
சுந்திரர்பதங் காணவேணும்

தேவேந்திரன் தரு.

தாரார்புகழ்படைத்த மன்னா அந்த
சங்கரன்பதிசேர்வோம் முன்னால்

பிரம்மா கவி.

இந்திரபதியைவிட்டு யிமையவர் அனேகங்கூடி
வந்துநாம்கையிலைசேர்ந்தோம் வனமேசேர்யின்றாநாமும்

தேவேந்திரன் கவி.

சிந்தனைவந்ததாலே நீவினையகற்றவேண்டி
குந்தகம்நமக்குண்டாமோ குறையதைபோக்குவாரே

பொது வசனம்.

இவ்விதமாக பிரம்மா தேவர்கள் கூடி கையிலையைநாடி வருகிற போது அப்போது பரமசிவன் நிஷ்டையிலிருந்த வருகிறார்.

பரமசிவன் கவி.

வேதத்தை தமுடிவாய்கொண்ட விளங்கிய ஞானஸ்ரூபன்
நாதமேசங்குசேகண்டி கலைமுடன் முழங்கவிண்ணோர்
பாதத்தைபக்தர்போற்ற பார்வதிபிடபால்நிற்க
நீதமாய்பரமன்தானும் நிஷ்டையும்புரியவாறர்

பரமசிவன் தரு.

பரஞ்சோதியாகிநின்றவர் பரமஞானி
பத்தருக்கருள் தந்தவர்
அருமைநந்தியும் சூழவே ஆசாரமூப்பில்
அன்பாகவந்து தாழவே
திருமாலுக்கன்புகொடுத்தவர் தேவர்கண்காண
செகத்தில்முத்தி தந்து விடுத்தவர்
மங்கையும்பார்வதி கூடவே மலர்கள்தினம்
மகிழ்வாய்சூதாமரம் போடவே
யெங்குங்கொடி கொண்டாடவே யிவரைபோற்றி
சங்குசேகண்டி பாடவே
பரமன்தனக்குநேசனும் கொஞ்சிகுப்பம்வாழ்
பாலன் நமைசாமி தாசனும்
அருமைபாதத்தைதேடியே வரததாசன்
அன்பாகவே பாடினார்
வித்தையும் புத்தியும்பெருபவர் மெஞ்ஞானசோதி
வேணவரமுந் தருபவர் பரஞ்சோதியாகி

பரமசிவன் கவி.

வாசலுக்கதிகாரியான வண்மைசேர்நந்திகேளாய்
பூசியதிரேகந்தன்னில் பூதியும்வாடைவீச
பேசியமுனேகர்சூழ பெருமையாய்கூடியிங்கு
நேசித்துநாமெல்லாரும் நிஷ்டையும்புரிகுவோமே.

வசனம். வாருமப்பா நந்தி காவலனே.

தரு.

நிஷ்டைபுரிந்தார் பரமன் நெடுநாளாக
இஷ்டமதாகவேதான் இன்பம்பெருகவே
ஞானமந்திரமோதி நாவினைல்யேற்றி
ஓம்நமோ சிவாயாவென்று உண்மையாய்வாழ்த்தி
மெய்யெங்கும்விபூதிபூசி மெஞ்ஞானபோதன்
ஐயமில்லாமல்பேசி ஆடினார்நாதன்
கையில்ருத்திராக்ஷமாலை கருத்தினில்லொன்றி
வைபோகத்துடன்யோகம் வைத்தனர்வேண்டி.

தேவேந்திரன் கவி.

இப்படியாய்சிலநாளில் பரமன் தானும்
இன்பமுடன் நால்வருக்கு அருள்போதிக்க
செப்பமுடன்யோகநிலை நிஷ்டைதன்னை
செய்யவேநினவுகொண்டார் அந்தவேளை
சொர்ப்பமுடன்தேவர்களுங் கூட்டங்கூடி
சுருதிமுனிபிரம்மாவும் அவரைநாடி
ஒப்பரியபரமஞானி யென்றுபோற்றி
உருகுவார்மனம்வாடிக் குருகுவாரே.

* பிரம்மதேவன் தரு.

பரம்பொருளாகவந்ததேசிகரே ஐயோதேசிகரே
உந்தன்பதமலர்க்கபயமே தேசிகரே

தேவேந்திரன் தரு.

அரம்பொருளின்பம்நான்கும் தெரிந்தவரே
ஐயா தெரிந்தவரே வுந்தன்
அடிமலர்க்கபயமருள் புரிந்தவரே

பிரம்மதேவன் தரு.

க்ஷர்த்தருள்புரியவே வேண்டுமையா சிவனே
வேண்டுமையா உன்னை
தோத்திரம்செய்தோம் அரவம்பூண்டமெய்யா

தேவேந்திரன் தரு.

பூர்த்தவுடலமெல்லாம் வாடிநொந்தோம் சிவனே
வாடிநொந்தோம் உந்தன்
பொன்னடியைதொழுதிட ஓடிவந்தோம்

பரமசிவன் நோட் தரு.

நிஷ்டைப்புரியுங்காலே பக்ஷமாகயிந்தவேளை
நீங்கள்வந்தசேதியென்ன சொல் சொல் சொல்
கஷ்டமாகஎந்தனிடம் கருத்துமிககோணியே
காரணத்தையேயுரைக்க நில் நில் நில்

பிரம்மா தேவேந்திரன் தரு.

நில்லுமென்று சொல்லுகின்றீர் — வல்லவரேஎங்களிட
நினைவுமாரியேவந்தோம் — பார் பார் பார்
சொல்லப்பயமாகுதே — அல்லலாகிவந்திடவும்
சொர்ப்பெருஞ்சுடரேநீர் — கார் கார் கார்

பரமசிவன் தரு.

கார்ப்பதென்கடனென்று — தோர்ப்பாவசனங்கூறி
கழரும்வசனமேதோ — புல் புல் புல்
பார்ப்பார்நகைப்பாரென்று — பாரெங்குமரியவே
பரிவாயுரைத்திடளே — வெல் வெல் வெல

பிரம்மா தேவேந்திரன் தரு.

உரைப்போமென்றெடுத்தாலே — உள்ளமுருகிவாடி
ஓடியேவந்தோமையா — மெய் மெய் மெய்
அரக்கர்குலத்தில்வந்த — ஆ ்மையுள்வசூரபத்மன்
அவதிசெய்கின்றான்வதை — செய் செய் செய்

பரமசிவன் கவி.

அபயமேபுரிந்துவந்த அயனேநின்தேவரேகேள்
உபாயமாயோககாலம் உருதியுமிருக்குதின்னம்
தபமதுமுடிந்துதானல் சங்கரித்திடவேபாலன்
கபடமாயனல்கொன்று உங்கள்கவலையைத்தீர்ப்பேனனே

வசனம். வாருந்தேவர்களே கேளும்பிரம்மனே.

பிரம்மா தரு.

பொங்கரவமணிந்த — அய்யா அய்யா இனி
பொய்வருகிறோம் நாங்கள் — துய்யா துய்யா

பரமசிவன் தரு.

சங்கையில்லாகீர்த்திபெற்ற — அயனேபிரம்மா நீ
மங்களகரமாயேகுவீர் — நீங்கள்சும்மா

பிரம்மா தரு.

யெங்கள்குறைதீர்க்கவுன்னலாகும் — ஆகும்
மிங்கிர்தமாயசுரரைகொன்றால் — துயரேபோகும்

பரமசிவன் தரு.

அப்படிநான்செய்வதற்கு தடையேதுண்டு
சுவல்பகாலமிருக்குதுவாரீர் நீங்கள்கண்டு

பிரம்மதேவன் கவி.

பரமனேவுந்தன் பாக்கியமேதோ
திருவடிகண்டோம் சேவித்துகொண்டோம்
ஒருமையாய்சூரரை ஒழித்துமேநீரும்
மருமமுமெல்லாம் மகிழ்ந்தின்பம்தருவீர்.

பரமசிவன் கவி.

யெத்திசைபுகழுங்கீர்த்தி எனக்குமேகாவலான
உத்தமாநந்திவாருய் ஒருசேதிசொல்வேனின்று
பத்தியாமனைக்கிசென்று பார்வதிதன்னைநீயும்
நத்திநாமழைத்தோமென்று நங்கையையிட்டுவாருய்

வசனம். வாருமம்பா குண்டோதரனே.

பார்வதி கவி.

அரனவர்தானழைக்க அம்மைபார்வதியுங்கேட்டு
சரசரென்றெழுந்திருந்து தையல்நல்பணியுடுத்தி
திரமுள்ளதாதிமார்கள் சிருள்ளகவரிவீச
ஒருமையாய்காணவேண்டி உத்தமிவருகின்றளே.

தரு.

திருமாலின்தங்கையான பெருமைதருகுமாது
அரனிடதேவியான அம்மணிவந்தாள்
யெத்திசைப்புகழும்மாதா புத்தியுந்தரும்பார்வதா
உத்தமியானதேவி ஒடியேவந்தாள்
சந்திரஒளியைப்போல விந்தையாய்முகந்துலங்க
பைந்தொடியாள்பார்வதியும பாவையும்வந்தாள்
கடககங்கணங்கையில் களிப்பாயொளியுந்துலங்க
திடமுடனெழுந்துமாதா சீக்கிரம்வந்தாள்
தேவருக்குமூவருக்கும் யாவருக்குமுத்திதரும்
பாவலர்புகழ்ந்துபோற்ற பைங்கிளிவாருள்
வஞ்சமில்லாசாத்தநகர் மிஞ்சும்புகழ்பெற்றவரதன்
சஞ்சலமகற்றுந்திவ்விய தாயிதோவாருள்

பார்வதி சருணத் தரு.

சருணம்சருணஞ் செய்தேன்தேவாயென்னை
தர்க்கார்த்து ரக்ஷியுமகானுபாவா
கருணைகடலேயுந்தன் கடிமலர்சொரிந்தேனே
ஒருபொருளாகிய உத்தமாபுரிந்தேனே

பரமசிவன் தரு.

பதமலர்பணிந்திட்டமாதே நீயும்
பரிவாகவாழ்ந்திருக்க தோதே
சதாகாலமென்றுமே சங்கரியேயுனக்கு
விதமுடனருள்பெற மெல்லியரேதனக்கு

பார்வதி தரு.

யென்னையழைத்த விதந்தானேயன்று
யெடுத்துரைசெய்ய வேண்டுங்கோனே
சொன்னாலேமாதெனக்கு தோகைநான் அவ்விதமே
கன்னியாள்யானுங்கேட்டு களித்திருக்கபதமே

பரமசிவன் தரு.

களிப்புடனிருந்திடுமானே உன்னை
கவனமாயழைத்த சேதிதானே
அளிக்கவேயாருக்கும் அன்னமேவரமது
சலிப்புயில்லாமலே தையலேகேளமுர்தே

பார்வதி கொச்சகம்.

அயன்காணபராபரனே அடிமலரையான்புகழ்ந்தேன்
சுயஞ்சோதியனே என்னை சுருக்கினில்வரவழைத்த
நயம்பெறவேயின்று தினம் நங்கையர்க்குவேதத்தை
யியம்பினால்நான்கேட்டு யேந்திழையுமனமகிழ்வேன்.

வசனம்.

சருணம் சருணம் பரம தயாநிதியே அடியாளை இங்கு வரவழைத்ததை தெரிவிப்பீர்.

பரமசிவன் கொச்சகம்.

பக்ஷத்துடனருகிருக்கும் பார்வதியேகேளடிநீ
இஷ்டம்பெறயின்று தினம் என்வேதனைகேட்டு
நஷ்டம்வராதிருந்தால் நாயகியேயோகஞ்செய்து
த்க்ஷணமேநான்வருவேன் தையலேபின்னிருந்திடாயே.

வசனம்.

கேளும் பெண்ணே பார்வதா நீ இன்று நாளில் யென் சமீப மிருந்து நான் சொல்வதைக் கேள்.

பார்வதி தரு,

ஓதுமறையுணர்ந்தநாதா வுன்வார்த்தைக்கிசைந்தேனே
வேதமதையுரைக்கபாத மலரர்ச்சித்தேன்னுனே
சரு உத்தமரே பத்தியுடன்
நத்திவந்தேன் யித்தலத்தில் ஓது

பரமசிவன் தரு.

அன்னநடைமாதரசி மின்னலொளியான யெந்தன்தேவி
கன்னியரேயின்னிமிஷம்வின்னமில்லா வேதஞ்சொல்வேன் ஆவி
சரு ஆசையெந்தன் மாமயிலே
பேசுங்கிளி தேன்குயிலே அன்ன

பார்வதி தரு.

வேதமுறைரயைகேட்டுபூதலத்தில் நான்மகிழ்ந்தேன்நாதா
சாதுடனேபிள்ளைநால்வர் சங்கரனேநமக்கிருக்கபோதா
சரு சங்கரனே அங்கரனே
பொங்கமுடன் பெற்றெடுத்த வேத

பரமசிவன் தரு.

உள்ளபடியுந்தன்வாக்குதெள்ளுமணி மாதரசேநானே
பிள்ளைவேலனையழைக்ககள்ளமில்லா மகிழ்ந்திட்டேன்மானே
சரு ஓசையுள்ள மாமயிலே
பேசுங்கிளி தேன்குயிலே உள்ள

பரமசிவன் வசனம்.

கேளும் பார்வதா இப்பவும் நமதுமகன் சிவசுப்பிரமணியனை அழைத்து வரவேண்டும். வாருங்குண்டோதரா நீ மனைக்கி சென்று நமது குமாரன் சிவசுப்பிரமணியனை அழைத்து வாராய்

சுப்பிரமணியர் கவி.

சரஹணப்பொய்கைதனில் தனையனுயுதித்தபாலன்
அரம்பொருளின்பம்நாலும் ஆறுய்ந்தவுணர்ந்தசீலன்
ஒருபொருளானதந்தை உத்தமிதாயும்என்னை
காமுடன் அழைக்ககேட்டு கதிர்வடிவேலன் வாரான்.

த ரு.

வந்தாரேகதிர் வடிவேலன் நல்ல
வண்மைபெருந்தாய்தந்தை அழைத்திடவேசீலன்
சிந்தையதுதான் மகிழும்பாலன் வெகு
சிங்காரமாகவே நடையுடைபலோலன்
விந்தையுடன்பல பணிகள்மின்ன நல்ல
வேணதொரு ஆடைகளும் பளபளவென்றுதுன்ன
இன்றுநால்யெந்தனை யழைக்கயேதோ
யிபனுடன்பதமதை கண்டுமேசெழிக்க
பண்டுமாமலர்தனை சாற்றி வேண
பரிவானபுஷ்பத்தால் அர்ச்சிப்பேன்நேற்றி
சரஹணப்பொய்கையில் யுதித்தேன் இவன்
சாஸ்திரமறைமுதல் தன்னையும்படித்தேன்
ஆருமுகமான பொருள்சோதி இவர்
அன்பர்களாவர்க்கும் யின்பமானநீதி
பத்தியுமுத்தி பெரும்பாலன் சபா
பதியின்றவரதனெனும் பேர்கொண்டசீலன்
உத்தமனைகார்க்கும் வெகுமாரன் நல்ல
உம்பர்முதல்தேவருக்கு அனுகூலதீரன் வந்

சுப்பிரமணியர் சருணம் தரு.

சருணஞ்செய்தேன் தந்தையரே தாளினைபோற்றி
தற்கார்த்தென்னை ரக்ஷிப்பாய்நீ தயவுடன்யேற்றி
சரு தாப்பருவுன்பாதமலர் அற்புதமாயான்பணிந்தேன்
யிப்புவியிலெனையழைக்க நற்பதத்தைநான்கணிந்தேன்

பரமசிவன் தரு.

சருணமென்றுதாள்பணிந்த தனையனேவாழி
கருணைபெற்றுநீயும் யெக்காலம்நீடூழி
சரு கந்தமிகுஞ்சுந்தரனே விந்தையுடன்வேலா
எந்தனிடபதம்பணிந்த பந்தமிகும்பாலா

சுப்பிரமணியர் தரு.

அண்டர்முதல்தேவர்போற்றும் அன்னையேயுன்பாதம்
தெண்டனிட்டுபோற்றிநின்றேன் சிறுவனம்மாநீதம்

சரு சேவடியையர்ச்சித்தனே பாபவினைபோக்க
யேவலினால்வந்தேனம்மா யென்னருளும்வாக்க

பார்வதி தரு.

யெந்தன்கலிதீரவந்த யென்னருமைபாலா
கந்தனென்றுபெயர்கொண்ட கதிர்வடிவேல்கிலா
சரு கண்ணனிடமருமகனே புண்ணியனேவேலா
மண்ணிலுள்ளவரையில்நீயும்வாழ்ந்திருப்பாலோலா

சுப்பிரமணியர் வேறு தரு.

தந்தைதாய்உந்தனிரு விந்தைபதமேற்றினேன்
தனையனையழைத்த விதமறியேனே நான்
கனிவாயறிந்துரைக்கப் புரியேனே

பரமசிவன் தரு.

கந்தனேகடம்பனே கதிர்வடிவேலா
கடிகியழைத்த விதமுரைப்பேனே பாலா
படியிலரசர்களு மகிழ்ந்தோனே

சுப்பிரமணியர் தரு.

சத்தியுருவாய்வந்த தையலரேஎன்தாயே
தனையனுக்கருள்புரிய வேண்டுமம்மா நீயும்
கனிவாய்மொழியுரைக்க காணுமம்மா

பார்வதி தரு.

ஆருசாஸ்திரம் சதுர்வேதமுறைதான் கற்ற
அப்பனேயுனையழைத்த சேதிதன்னை நான்
இப்புவிதானறிய சொல்வேன்முன்னே

சுப்பிரமணியர் தரு.

தேடரியபாடக சாலையிலிருந்தென்ன
சிறுவனையழைத்தவிதம் சொல்லுமையா நீ
அரியவேயுரைத்திட நில்லுமெய்யா

பரமசிவன் தரு.

அப்பனேகண்மணி ஒப்பில்லாயென்பாலா
ஐந்துவயதாச்சுதே விளையாடவே யினி
இந்தாவறமுந்தந்தேன் நீபோகவே

சுப்பிரமணியர் தரு.

அன்னையும்பிதாவுமே முன்னறிதெய்வமெனவே
அகிலத்தில்யுரைப்பாரே யெந்தன்தாயே நான்
மகிழ்வதாய்போவதெங்கே சொல்லுவாயே

பார்வதி தரு.

சேயனேவேலவா ஞாயத்தைப்போலவே
சீருள்ள தந்தையரை கேட்டுசெல்வாய் அப்பா
பெரும்புகழுங்கீர்த்தி பெற்றிடுவாய்

பரமசிவன் கவி.

கண்மணியானயெந்தன் கதிர்வடிவேலாபாலே
உண்மையதாகநீயும் உந்தனுக்குகைலைதன்னில்
வண்மையாயிடம்போதாது மைந்தனேகந்தமாதனம்
நன்மையாய்போகநீயும் நல்வாக்குவுரைத்திடாயே.

வசனம்.

வாருமப்பா செலவனே உன்னையழைத்தவிதம் யாதென்றால் உனக்கு விளையாடும்படி ஆக்கினையிட்டார்

சுப்பிரமணியர் கவி.

தந்தைதாயுரைக்கக்கேட்டு சரஹணபவனெழுந்து
கந்தமாதனமேபோக கடிகியேகாவல்சூழ
அந்தமாம்பணிகளாரம் ஆடையும்பரிமளிக்க
சிந்தையில்நவவீரர்சூழ சிவசுப்ரமண்ணியர்வாறார்.

சுப்பிரமணியர் தரு.

தந்தைதாய் விடையளிக்கவே வடிவேலன் தானும்
கந்தமானந் தன்னைநாடினா
சிந்தையுமகிழ்ச்சியாகவே சிவசுப்பிரமண்ணியர்
சீராய்காவலர் நெருங்கிசூழவே
அந்தபுரந்தன்னைநாடியே ஆறுமுகவேலன்
அதிகதுருசாய் வந்தாமேவினார்
சத்துருசங்காரலோலனும் சண்முகவேலன்
தந்தைதாய் யிடத்தைவிட்டாரே

புத்தியுமனம்அன்புகூறியே போரும்நவ
சத்திக்கியுருவாய்வந்தவர் வெற்றியுடன்
வடிவேலன் தானும் வீரர்சூழவே
சரஹணபவனும் வந்துசேர்ந்தனர் தந்

பொது வசனம்.

இவ்விதமாக சுப்பிரமணியர் கந்தமாதனத்தில்வர இப்பால் பிரம்மா யேதென்று சொல்லுகிறார்.

பிரம்மா கவி.

எத்திசைப்புகழ்படைத்த யென்மந்திரிமாரேகேளீர்
பத்தியுமகிழ்வதாக பரிவதாவசனமொன்று
வெற்றியாமனைக்குச்சென்று வீருடன்யெனதுதேவி
நத்தியேசரஸ்வதியாள் தன்னை நலமுடனழைத்துவாரீர்

வசனம். வாருமப்பா மதியூக மந்திரி.

சரஸ்வதி கவி.

தாமரைமலரின்மீது தையலாள்வுதித்தாள்நல்ல
பூமகளாகவந்த பொர்க்கொடியானமாது
நேமமாயதாதிமார்கள் நெருங்கியின்சூழ்ந்துநிற்க
க்ஷாமரம்துதிகள்பேச சரஸ்வதி வருகின்றாளே.

சரஸ்வதி தரு.

தாவும்பூங்கிளியான கூவும்குயிலினம்போல்
சரஸ்வதிமாதுவந்தாள் கணவன்பக்கல் சர
மேவும்பிராணேசர் ஒதிவிரவிலழைத்தசேதி
சரு வித்தகியருளிய வுத்தமிமாது
சத்தியவசனியாள் பத்தியாதோது தாவு
அன்னநடையெனவே சொர்க்கிளிபோலான
மின்னும்பூஷணவதி வர்னசிலையாள்ரதி
சரு மேகரஞ்சித சாகசமாகவே
போகமனதுடன் தோகையும்வாராள் தாவு
பாடகங்கள்தண்டை கூடியமாதரண்டை
பக்கம்நெருங்கிவர பரிவாய்தாம்பூலந்தர
சரு பாவையுமானவள் ஆவலுமாகவே
தாவியசபைதனில் மேவியேகவே தாவு

சத்தியவாசனென்னை — சரசமாயழைக்குமுன்னே
புத்தியும்அன்புமீரி — பூவையும்வந்தாள்தேரி
சரு பொற்கொடியானவள் — மிக்கவேகாரணி
தக்கதோமென்றிட — வந்திட்டாள்பூரணி — தாவு

சரஸ்வதி சருணம் தரு.

சருணம் சருணமையா — சத்தியதீரா
கருணைவைத்தாளவேண்டும் — வெற்றிமாரா
சரு காதலனே — நீதமுடன்
பேதமில்லா — மாதரசி — சரு
உலகந்தனைசிஷ்டிப்பு — உண்டுசெய்தாய்
உள்ளமகிழுயென்னை — கொண்டுநீதான்
சரு உத்தமனே — பத்தியுடன்
சித்தமகிழ் — நத்தினேனே — சரு
கணவனென்றுலென்றும் — கல்லாகும்
மணவனென்றுலென்றும் — மணமாகும்
சரு வாசனையும் — பூசமலர்
நேசமுடன் — வீசினேனே — சரு
கந்தங்கதம்பமலர் — கருததினில்கொண்டு
செந்தாமரைபதத்தில் — வைத்தேனின்று
சரு சீருடனே — கோரினனே
பாரரிய — தேரினனே — சரு

கொச்சகம்.

விஞ்சநகர்தனையாளும் வேந்தேயுன் திருவடிக்கி
பரிந்துவந்துபாதம்பணிந்தேன் பாவலர்கள் தினந்துதிக்கும்
அரிந்தென்னையழைத்தவிதம் யாவருமேதான்மகிழ
தெரிந்துரைக்கவேண்டுமென்று திருவடிக்கேயான்சருணம்.

வசனம். சருணம் சருணம் பிராணநாயகா.

பிரம்மா ஓரடி தரு.

கன்னியரேசரஸ்வதியே — கேளும் கேளும்
கடிகியுன்னையழைத்தவிதம் — நாளும் நாளும்

சரஸ்வதி தரு.

என்னவிதமெந்தனுக்கு — ஓதும் ஓதும்
பன்னரியயெந்தனுதா — நீதம் நீதம்

பிரம்மா தரு.

அரியும்படியாகசொல்ல — பெண்ணே பெண்ணே
சரியாககேளடிநீ — கண்ணே கண்ணே

சரஸ்வதி தரு.

கேளுமென்றுசொன்னபிராண — நாதா நாதா இந்த
நாளினிலுரைக்கவேண்டும்பிரக் — யாதா வேதா

பிரம்மா கவி.

பசுங்கிளியானயெந்தன் பாவையேசொல்லக்கேளாய்
அசலில்லாதேவலோகம் யான்சென்றுவருவேன்பெண்ணே
தசகுரவில்லாமல் தையலேவிடையளித்து
நிசமதாயனுப்பவேண்டி நேரிழையுரைசெய்வாயே.

வசனம். கேளாய் பெண்ணே பிராணநாயகி.

சரஸ்வதி தரு.

இந்தவசனம் சொல்லவோ — என்னையழைத்தீர்
முந்திபோவது நல்லதோ
கந்தமலரணியும் — கார்வண்ணன்சுதனுரே
எந்தவுலகத்திர்க்கு — யேற்குமேபதமேலே

பிரம்மா தரு.

அரிவேன் அரிவேன்போடிநீ — ஆகாததுஷ்டி
தெரிவேன்தெரிவேன்போடிநீ
பரியாசமாகபேசி — பனுக்காதேகுலுக்காதே
நெரியாகபோகவேண்டும் — நீயென்னைகலக்காதே

சரஸ்வதி தரு.

கலக்கவுமில்லைநாதனே — உந்தன்மனதை
நிலக்காதுசொன்னேன் — வேதனே
அலைகடலுலகெல்லாம் — அயனென்றுபேர்படைத்தீர்
மலைக்காதேயினிசும்மா — மங்கையாள்நானும்சொன்னேன்

பிரம்மா தரு.

சொன்னேனென்றுமரிக்குராய் தோகையேவாது
முன்னேவந்து குதிக்குறாய்
இன்னிலந்தனிலுள்ள யெனக்குபெரியோருண்டோ
விண்ணமாகபேசவந்த மெல்லியேமடிப்பேன்கண்டோ

சரஸ்வதி வேறு தரு.

நித்திரையில்கண்ட சொர்ப்பனம்பழுதாமோ
உத்தமிசொல்தள்ளி நா தா நா தா
உதாசினம்பேசாதே வேதா வேதா

பிரம்மா தரு.

கண்டசொர்ப்பனமிது உண்டோவதுவென்றால்
நன்றாயறிந்திட மானே மானே
நங்கையேயுரைசெய்யும் தேனே தேனே

சரஸ்வதி தரு.

உரைத்திடுவேனுதா மறைநான்குதனைகற்ற
கருத்துமிகுன்றி மன்னு மன்னு
கதியடைத்திடகண்டேன் சொன்னேன் சொன்னேன்

பிரம்மா தரு.

கதிவந்துநேருமோமதிமுகமாதே நீசொல்லும்சொல்லும்
விதியதுதப்பியேவிண்ணினில்நடவாதுசெல்லும்செல்லும்

சரஸ்வதி கந்தார்த்தம்.

மண்ணிலனேகம்பேர்கள் மங்கையாள்வார்த்தை
குண்ணியேவாடினுரே கொத்தவாநீயதுபோல்
கன்னியென்சொல்லைத்தட்டி கனத்திடுந்தேவலோகம்
அன்னிதமாகச் சென்றால்

சரஸ்வதி தரு.

அபகீர்த்திநேரும் அருமுகனல்.
இபம்வந்துசேரும்
கபடமாயுந்தனை கடிகிசிரசில்கொட்டி
தபமதுயழிந்திட சிரையிடுவார்கெட்டி

பிரம்மா கந்தார்த்தம்.

முன்வந்துமொழியுரைக்கும் மொய்குழலாளேகேளும்
அன்னிதம்நேருமென்ருய் அரியாதசிறுவனுலே
தன்மையையரியவேண்டி சங்கரன் சுதனென்மேலோ
வண்மையாயென் சமர்த்தால்.

பிரம்மா தரு.

வருகிறேன்போடி அவனுலின்பம்
பெருகுவேன்வாடி
வருகதடையுமில்லை மனைசேர்ந்திருயிரு
உருகவும்வேண்டாமே உத்தமிபொருபொரு

சரவஸ்தி கவி.

அய்யய்யோயென்னுசெய்வேன் அருவையென்தாதிமாரே
நையவேமனதுவாடி நான்மெலிந்திடவேமன்னன்
உய்யவேதேவலோகம் உண்மையாயபோகின்ருரே
பைய்யறவணிந்தயிசா பரமனேயென்னுசெய்வேன்

சரஸ்வதி தரு.

என்னுசெய்குவேனடி தாதிமாரே இனி
ஏங்கினுன்வாடுரனே தாதிமாரே
மன்னன்யெந்தனைவிட்டு தாதிமாரே அவர்
மங்கைசொல்தள்ளிபோரார் தாதிமாரே
சென்னசொல்பிசகுமோ தாதிமாரே என்
சொர்ப்பனம்வீணுகுமோ பாங்கிமாரே
ஆலமுண்டோன்மைந்தனுல் தாதிமாரே அவற்கு
அபிமானம்வந்திடுமோ பாங்கிமாரே
காலமிப்படியாச்சே தாதிமாரே என்சொல்
கடந்துநடந்திட்டாரே பாங்கிமாரே
சின்னஞ்சிருவனென்று தாதிமாரே வேலனை
சிந்தையில்நினைந்திட்டாரே பாங்கிமாரே
கன்னியாள்பார்வதிக்கு தாதிமாரே வந்த
கதிர்வடிவேலனுச்சே பாங்கிமாரே
பின்னம்வந்தாலுமினி தாதிமாரே அம்மா
பேனதநானென்னசெய்வேன் பாங்கிமாரே என்

பொது வசனம்.

இவ்விதமாக சரஸ்வதி துயரப்பட்டிருக்க இப்பால் பிரம்ம தேவர் கந்தமாதனம் வருவது.

பிரம்மா ஓரடி தரு.

வாருங்கள்தேவர்களே கூடி
வண்மைபெருங்கந்த மாதனமே

தேவேந்திரன் தரு.

சேருவோம்சத்திய வாசகரேநாமும்
சிவனிடவார்த்தையின் படிகடக்க

பிரம்மா தரு.

ஆதிகுழுலகமெல்லாச் தாண்டி
அதிதுருசாகவே நாமும்வந்தோம்

தேவேந்திரன் தரு.

நாழிகையாகுமுன்னே இந்த
நகர்தாண்டிவந்திட கண்ணில்கண்டேன்

பிரம்மா தரு.

வேண அதிசயம்பார் யிந்திரா
வெகுவிதநாடுகள் கடந்திடவே

தேவேந்திரன் தரு.

பாணர்வெகுவாய் கூடியிருந்திடும்
பாலன்வடிவேலன் தன்னைப்பாரும்

பிரம்மா தரு.

அரியாசிருபைய்யலே நாமும்
அவனையும்பார்த்திட ஞாயமோதான்

தேவேந்திரன் தரு.

சரியோநீ சொல்லுமொழி பிரம்மா
சண்முகன்பாதத்தைப் போற்றிவாரேன்

பிரம்மா கவி.

பரிவானமொழியுரைக்கும் பாவலர்துதிக்குமிந்த்ரா
அரியாதபையல்தன்னை அவனைநான்பணியலாமோ
சரியானசிருஷ்டிசெய்யும் சதுர்முகனென்பேர்சொன்னால்
திரிலோகமெவருமஞ்சி திகைத்திடகாண்பார்தானே.

தேவேந்திரன் தரு.

வந்தனமேகந்தாவுந்தன் மதரடியையான்பணுந்தேன்
சுந்திரஞ்சேர்அரனீன்ற சுதனேவேலா புகழ்கனிந்தேன்

சுப்பிரமணியர் தரு.

இந்திராணிசமேதரா யின்பமுடன்சுகித்துவாழி
வந்துபதம்பணிந்துநின்ற வண்மையாம்நீடூழிவாழி

தேவேந்திரன் தரு.

அத்திபுரிதான் தரித்த அரனரிடபாலகனே
நத்தியுந்தன் தாள்பணிந்தேன் நாதாவடிவேலவனே

சுப்பிரமணியர் தரு,

சூத்தமில்லாதேவயிந்த்ரா கூறிடுவாய்வந்தசேதி
உத்தமனர்பணிந்திடாமல் ஒண்டிபோருன்கண்டுரைப்பீர்

தேவேந்திரன் கவி.

தேவாகள்கூடி தினம்தினம்வுன்னை
ஆவலாய்பணிய அன்புடன்வருவோம்
நாவலால்சொல்ல நாங்களென்செய்வோம்
மேவியபிரம்மன் விடிதிக்கிபோருன்:

வசனம்.

கேளும் வடிவேலனே நாங்கள் தினம் தினம் வந்து பணிவோம் அதோபோரவன் அயனுகிய பிரம்மதேவனுகும்.

சுப்பிரமணியர் தரு.

ஆரையாபோரது நில்லு இந்த
அரியாசிறுவன்முன் சொல்லு
ஊரும்பேருமிப்போ யுகந்துநீசொன்னுலே
சாரியாயரிந்துமே சாற்றுவேன்பின்னுலே ஆரை

பிரம்மா தரு.

உரைத்திடுவேனப்பா வுனக்குமே நான்
உண்மையரிந்திட தனக்குமே
மரைப்பொருல்லேயே லாகஞ்சத்தியலோகம்
தெரியவுரைத்தேனே வைபோகம் உரை

சுப்பிரமணியர் தரு.

யென்னதொழிலது சொல்லுவாய் நீ
யெனக்குவரிந்திட விள்ளுவாய்
சின்னஞ்சிறுவனென்று சிந்தையிலெண்ணாதே
வன்னவசனம்பேசி வார்த்தையால்பன்னாதே யென்

பிரம்மா தரு.

உலகத்தில்ஜீவனந் தன்னையே நான்
உள்ளதுயாவையும் உன்னிய
நலமதாயெரும்புடன் நானேசிஷ்டிப்பேனே
விலங்கினம்யாவையும் வேணதுபக்ஷிப்பேன் உல

சுப்பிரமணியர் தரு.

கர்த்தனென்றுசொன்னாய் மன்னவா நீ
கண்டுவுரைத்திட்டாய் முன்னவா
உத்தரதுவரியசொல் உலகமும்உற்பத்தி
யெடுத்ததால் வந்தது யெடுத்துரைநற்பதி கர்த்த

பிரம்மா தரு.

யெடுத்துசொல்வேன் மறைவேதத்தால் யிவ
வுலகமும்வந்தது நாதத்தால்
தடுந்துப்பேசவேண்டாம் சங்கரன்பாலனே
அடுத்துயென்பதிபோரேன் அறுமுகவேலனே யெடு

சுப்பிரமணியர் தரு.

யெந்தவேதத்தி லுலவதுபிரம்மா
யெடுத்துநீசொல்லுவா யிப்போது
அந்தவிதஞ்சொல்லி அப்புரம்சென்றிடு
சிந்தைமகிழாவிட்டால் திசைமுகாநின்றிடு யெந்த

பிரம்மா தரு.

அசவில்லாதருக்கு வேதமே இந்த
அகிலமும்படைப்பது நீதமே
வகையில்லாசொன்னேனே மைந்தா ஆறுமுகா
பிசகில்லைபதிபோரேன் பின்னால்பாருமப்பா அச

சுப்பிரமணியர் கவி.

பூவுலகம்படைத்திட்ட பிரம்மதேவா
புல்லரிவாய்சொன்னதெல்லாம் பிரித்துநன்ருய்
யேவலிடப்படிநீயும் சொல்லிவிட்டாய்
யெந்தன்மனமகிழ்ந்துநான் யிசைந்துகொண்டேன்
பாவலர்கள்தானரியப் பாலன்தானும்
பரிவாகஒருவசனம் சொல்லிவாரேன்
ஆவலுடன்உலகத்தில் தலைமையான
அரியாதமூலப்பொருள் உரைத்திடாயே.

வசனம்.

கேளும் பிரம்மதேவனே இப்பவும் நீ சொன்னதெல்லாங் கேட்டு மகிழ்ந்தேன்.

பிரம்மா கவி.

அரியாதசிறுவனென்று அச்சமுற்றிருந்தேன்யானும்
புரியாதவசனம்சொன்னல் புலஞ்சொல்லயென்னுலாமோ
தெரியாதபுத்தியாலே சிக்கினேனிவனிடத்தில்
பரியாசம்செய்யவேண்டாம் பாலனேநான் போயிவாரேன்.

வசனம்.

ஆ! ஆ! இதென்ன மோசம் நான் இவனை அரியாத பிள்ளை யென்று நினைத்தேன்.

சுப்பிரமணியர் கந்தார்த்தம்.

எந்தனையுமறியாத விதத்தினலே
இருமாப்புகொண்டவுந்தன் செருக்கினுலே
அந்தமுள்ளவசனமது நீயும்சொன்னய
அயனென்றுயுந்தனையும் மெச்சியிப்போ
சிந்துலகம்படைத்தவனென் றெண்ணிநீயும்
சிறுவனும்நான்மூலப்பொருள் தன்னைக்கேழ்க்க
இந்தவிதந்தெரியாமல் விழித்ததாலே.

தரு.

யெவருமரியக்கட்டினேன் சிறையில்வைத்து
தவறுமல்சிரசில் கொட்டினேன்

பருவமன தில்வைத்து — பரியாசமாயிருக்தாய்
அவமரியாதைசெய்த — அயனைநான்விடுவேனோ

சரு ஆகட்டும்ஆகட்டும் — போக்கிரிபையலே
யேகமாவந்தது — யென்சேதிதெரியலே

பிரம்மா புலம்பல் கவி.

பூமியில்பிறந்தகாளாய் பிரியமாயராசுதன்னை
காமியமெலாந்தெரிந்து கடவுளென்பேர்படைத்து
ஆமிதுமெய்தானென்று அவனில்சிஷ்டிசெய்தேன்
தாமிதமில்லாயென்னை நயங்கவும்சிறைவைத்தானே.

தரு.

யென்னசெய்குவேனையோ — அன்னவாகனனென்று
இவ்வுலகம்படைத்தேன் — தெய்வமே
சின்னஞ்சிறுவனாலே — சிறையிருக்கவிதியோ
தீவினைக்கென்செய்வேன் — தெயவமே
புத்தியில்மிகுத்திடும் — உத்தமியென்தன்தேவி
போகவேண்டாமென்றாள் — தெய்வமே
இத்தலத்தில்யாருமென்னை — நகைக்கலாச்சே
தேவியிதையறிந்தால் — ஆவிவாடுவாளய்யோ
சித்தமகிழ்வேனோநான் — தெய்வமே
அரியாசிறுவனென்று — பரியாசமாயிருந்தேன்
ஆகாததுன்பம்வைத்தான் — தெய்வமே

பொது வசனம்.

இவ்விதமாக பிரம்மாவை சுப்பிரமணியர் சிறையிட இப்பால் நாரதமுனி கையிலாயம் நாடி பரமசிவனை தேடிவருகுறார்.

நாரதர் கவி.

திரிகாறம்கண்டஞானி திசைமுகன்மைந்தனான
வருங்காலமறிந்துரைக்கும் மாதர்களாசைவிட்டு
பரியாசமாகவேலன் பார்புகழ்பிரமன்தன்னை
அருமையாய்சிறையில்வைக்க அன்புநாரதர்வந்தாரே.

தரு.

வந்தார்பிரம்மஞானி — வேதர் வருங்காலமும்
நன்றாயறிந்துணர்ந்த — போதர்

வந்தார்பிரம்மஞானியும் யிந்தவுலகம்சுற்றி
அந்தமுள்ளவேலனும் அயனைசிரைவைக்கநததி வந்
காவிக்காஷாயமீ தணிந்துகடவுளான
மேவிசிவனைநிதம் பணிந்து
தேவிசரஸ்வதிக்கு சிறுவனுவிதித்த
தாவிநடைகடந்து சடைமுடியுந்தரித்த வந்
இடையில்புலித்தோலாடை மின்ன எங்கும்பிரகாசம்
குடையுங்கரந்தனில் துன்ன
விடைமீதிலேறிவரும் வெள்ளியம்பலத்தானைபோற்றி
அடரவேதினம்தினம் அரகரா வென்றுயேற்றி
இந்தநாளில் கலகமில்லை யென்றுமனதா
விந்தையரிய மனநொதால்லை
கந்தனிடமேகாட்டி சிந்தைமகிழுபுகட்டி
அந்தவிதமேமேட்டி ஆகாதென்றுஓட்டி வந்

கவி.

அரிதானபரமன்பாதம் அன்புடன் துதித்துபோற்றி
பெரிதானபரமஸ்ருப பித்தனேஉன்தாள்போற்றி
நரிபரியாக்கிவைத்த நாதாவுன்திருவடிக்கி
யெரிமழுசூலமேந்தும் யீசனேபோற்றிபோற்றி.

வசனம். அரகரா மகாதேவா உன் பாதற்திற்கு நமஸ்காரம்

பரமசிவன் தரு.

பதம்பணிந்த நாரதனே
நிதமும்வாழ்வாய் போதனே
சுரு பத்தியுடன் இத்தலத்தில்
உத்தமனே நித்தியனே பதம்

நாரதர் தரு.

வாழ்வாயென்ற சங்கரனே
ஊழ்வினைபோச்சே யிங்கனமே
சுரு வாசனுர் மைத்துனரே
பாசமுடன் உத்தமரே வாழ்

பரமசிவன் தரு.

திரிலோகமுஞ் சுத்தியேநீ
பரிவாய்வந்தாய் நத்தியேதோ
சரு தேடியெனை நாடிவந்தாய்
வாடிமனம் கூடியினி திரி

நாரதர் தரு.

ஓடிவந்தேன் பரமனே நான்
உன்சுதன்சேதி யறிகிலாயோ
சரு ஃடல்லாசனே சொல்லவும்நாவு
வல்லையினி தொல்லைவரும் ஓடி

பரமசிவன் வேறு தரு.

நாவுவரவில்லையென்ற நாரதனேசேதிஎன்ன
கூறும் நன்றாய் கூறும்
ஆவதும்அழிவதுமே அல்லாம்அரியும்நன்று
பாரும் கண்டு தேரும்

நாரதர் தரு.

அரியுமென்றாய்பரமனாரே தெரியாதுஎந்தனுக்கு
போரேன் யினி சேரேன்
மரியாதவார்த்தைசொன்னால் மல்லுவரும்பின்னாலேநான்
கூரேன் வழி நேரேன்

பரமசிவன் தரு.

வழிகண்டுபோரவனும் வந்ததுஎந்தனிடம்
யேது உந்தன் சூது
பழியேத்துகொள்ளாதடா பாலகனாலேநீயும்
ஓதும் நன்றாய வாதும் வழி

நாரதர் தரு.

வாதுமல்லசூதுமல்ல மைமந்தன்வேலவன்வார்த்தை
ஐயா மலர் கையா
யேதுமரிக்திடாத வேந்தனையேசிரை
வைத்தான் கெடி பெத்தான் வா

பரமசிவன் கவி.

ஆகாகாயிதென்னமோசம் அரியாதபிள்ளைசெய்த
பாகானபிரமன்தன்னை பரிவாகசிரையில்வைத்தான்
நோகாமல்நீயும்சென்று நொடிதனில்அயனைமீட்டு
வேகமாய்திரும்பியிங்கு விடுதிவந்துரைசெய்வாயே.

வசனம். வாருமப்பா நாரதனே.

நாரதர் தரு.

| | |
|---|---|
| கங்கையணிந்த | சிவன்வார்த்தை |
| காதில்கேட்டுஅந்த | நாரதரும் |
| மங்கைபார்வதியின் | மைந்தனை |
| மகிக்ஷியாதேடியே | ஓடிவாரார் |
| கந்தமாதன பர்வதம் | யெங்கையோ |
| கண்டுரைப்போம்கதிர் | வேலவனை |
| யெந்தைதன்னை | விட்டிடாமலேநான் |
| யெத்துசெய்வேன் தந்திர | வித்தைசெய்வேன் |
| சந்தோஷங் | கொண்டிடவேஅந்த |
| சண்முகனுர் | வடிவேலனை |
| வாரூர்அந்த | நாரதமுனிவரும் |
| வடிவேலன்தன்னையே | கண்டிடவே |
| சிறுயிந்தபுணமு | மெச்சவே |
| சிறுபிள்ளையின்பழுங் | கொண்டிடவே |

கவி.

பிரணவமாய்நின்றபரஞ் சுடரேபோற்றி
பித்தனுர்தனக்குவந்த கொழுந்தேபோற்றி
அருணஉதையம்போல்திரு அருளேபோற்றி
அகாரமெனும்ஓங்கார வடிவேல்போற்றி
கருணையெனும்பிரகாச ஒளிவேபோற்றி
கரைகடலேகடாக்ஷிம்வைத் தருள்வாய்போற்றி
இருசமையமாகவந்த சுடரேபோற்றி
யீடேத்திரக்ஷிப்பாய் இறையேபோற்றி

வசனம். சருணம் சருணம் சண்முகக் கடவுளே

சுப்பிரமணியர் கவி.

அருமையாயடிபணிக்க அப்பனே முனியேவாழி
வருங்காலமுரையரிந்த வண்மைநாரதனேவாழி
திரிலோகமெங்கும்சுத்திசேதிகாண்வந்தசேதி
பரிவாகவந்ததென்ன பாங்குடனுரைசெய்வாயே.

வசனம்.

வாருமப்பா நாரதனே நீ நீடுழி வாழக்கடவது. இப்பவும் நீ என்னிடம் நாடி தேடி ஓடி வந்த காரணம் யாது.

நாரதர் தரு.

ஆகா பாமனார்தனக் குகந்தபாலா நான்
பரிவாயுரைப்பேன் கேள்சீலா
தரைபுகழ்உலகமும் தன்னைசுத்திவந்தேன்
ஒருசேதிகாணனே உருகிமனமும்கொந்தேன்

சுப்பிரமணியர் தரு.

ஓகோ உருகவேண்டா மிப்போது முனியே
உண்மையரியவே ஓது
மருமமும்வைக்காதே வந்தசேதிதன்னை
நருமணதாகவே உத்தமாசொல்முன்னே

நாரதர் தரு.

ஆகா தந்தையைசிறைவைத்த தாலே நீயும்
தயங்கவேண்டாம் அதினாலே
உந்தன்மனது உள்ளமகிழவே
ஆர்வந்தாலும்பிர்மனை வண்மைசிரைவிடாதே

சுப்பிரமணியர் தரு.

ஓகோ எத்தனைபேர்வந்தாலும் விடுவேனோ நான்
இனிசிரைவிடவும் உட்படுவேனோ
பித்தனார்என்தந்தை பெருமையுள்ளமாதா
சுத்திவிடச்சொன்னாலும் நான்விடேனேதோதா

நாரதர் வேறு தரு.

கந்தனேவுந்தன் பதம் தினமும்போற்றி
செந்திருவேலாபோற்றி நான்போய்வாரேனே

சுப்பிரமணியர் தரு.

வாரேனென்றுரைத்திடவே நாரதமுனி
மகிழ்கொண்டுபுகழ்ந்திடவே தவமுனியே

நாரதர் கவி.

தபமுனி என்றுரைத்த சண்முகவேலா
சடிதியிலேசென்றுவாரேன் சிறைவிடாதே

சுப்பிரமணியர் தரு.

சிறைவிடேனென்றுரைத்தால் தந்தையினிடம்
சிரசரண்டாபோகுமப்பா உனக்குரைத்தேன்

நாரதர் கவி.

அய்யய்யோமோசம்மோசம் அறுமுகவேலாகேளும்
பையறவணிந்தயீசன் பகலில்யானுஞ்சென்று
உய்யவேயுந்தன்சேதி ஒன்றுமேகலகஞ்செய்யேன்
தையல்பார்வதியின்பாலா சடிதியில்சென்றுவாரேன்.

வசனம். கேளும்சுப்பிரமணிக் கடவுளே.

நாரதர் தரு.

ஆறுமுகவேலன் தன்னையே நாரதமுனி
வேறுகலகம் செயதுநடந்தார்
கூறும்பரமன்யிடத்தைதேடியே நாரதமுனி
கொஞ்சமஞ்சுருவாக நாடினார்
வீசும்புனுகுவாசங்களபமும் மெயயினிலிட்டு
விளங்கவெண்ணீர் துலங்கபூசியே
இந்தகலகம்கலகமல்லவே யீசனிடத்தில்
யின்னம்வேணகலகஞ் செய்வேனே

நாரதர் வேறு தரு.

அய்யா அய்யா அரவம்பூண்டகையா
அடிபணிந்தேன்மெய்யா அம்பலத்தாடுந்துய்யா

பரமசிவன் தரு.

பொய்யாமறையுணர்ந்த அயன்பாலா
போனசேதிசிலா புகலவேண்டும்லோலா

நாரதர் தரு.

சேதிகளொன்றுமில்லையே கேளும்நாதா
செப்புவேன்சடைபோதா திகழும்பொர்ப்பாதா

பரமசிவன் தரு.

ஓதும்ஓதும்உண்மையை நாதா
உறுதியைசிரதா உள்ளமகிழபேறதா ஒ

நாரதர் கவி.

போயிநான் வந்தசேதி புகலுவேன்கேளும்நாதா
வாயினல்வுரைக்கப்போமோ வடிவேலன்நடத்தைதன்னை
தாய்தந்தைவந்திட்டாலும் தான்சிரைவிடேனென்று
நேயமாயுரைத்தான் பாலன் நீருமேசென்றுவாரீர்.

வசனம்.

ஆனால் கேளும் பரமக்கடவுளே உன்மகன் சொல்லிய வார்த்தையை நான் யென்னசொல்லுவேன்.

பரமசிவன் கவி.

அம்மம்மா கேளும் அயனிடதேவி
இம்மானிலந்தனில் யியலாகவந்த
உம்மிடநாதன் உத்தமன் தன்னையே
கம்மென்றுவேலன் கடுஞ்சிரைவைத்தானே.

வசனம். கேளுமம்மா சரஸ்வதி உம்மிட கணவனை சுப்பிரமணியன் சிறையில் வைத்திருக்கிறான்.

சரஸ்வதி தரு.

ஐயய்யோயென்னசெய்வேன் சிவசிவனே
ஆராத்துய ராகினேன்

சுருள் அங்கம்பதருதே திங்களணிசடை
மங்கைபாகனே எங்கேதேடுவேன்

பரமசிவன் கவி.

தையல்சரஸ்வதியே வாடவேண்டாம்
சண்முகனிடமே சென்று

சுருள் சத்தியவாசனை இத்தலத்தினில்
புத்திகூரியே நத்திவாயினி

சரஸ்வதி தரு.

புத்திவெகுவாய்கூரி நாதன் தன்னை
போகவேண்டா மென்றேனே
சரு பொன்னும்பூஷணம் அன்னவாகனன்
யென்னைவிட்டதால் கன்னிவாடுறேன்

பரமசிவன் தரு.

அஞ்சிநீவாடாதே அரிவையாளே
அருமுக வேலனிடம்
சரு ஆரபாரமா நேரமாகாதே
தேறியேயினி சிறையும்விடசொல்லு

சரஸ்வதி கவி.

அரனிடவார்த்தைதக்கேட்டு அம்மனும்எழுந்திருந்து
உரமுள்ளவேலன் தன்னை உண்மையையறியவேண்டி
வரமதுதன்னைக்கேட்டும் வடிவேலனிட்மேசெல்ல
பெருமையாவாணிமாது பேதையும்நடக்கின்றாளே.

தரு.

போய்வாரேன் பரமனாரே
அந்தபுண்ணியவேலவர் தன்னிடமே
சேயிழையானும் சென்றால்
அவரிடசித்த மகிழ்வாரோஉத்தமரும்
கர்மவினைவந்துதோ பிர்மனுக்குகன்னி
யென்னசெய்குவேன் அன்னவனே
வர்மமரிந்திடாமல் யெந்தனுதன்
வந்தாரேகந்த மாதனமே
தையலாளென்னைக்கண்டால் வடிவேலர்
சத்தியவாசனை சிறைவிட்டிடாரோ
மெய்யும்பதருதையோ எந்தனுக்கு
மேனியுருகு தையோ
சிந்தைதமகிக்ஷியதாய் கந்தமாதனம்
தெரிவையருங்கண்ணால் கண்டேனே
விந்தைபதம்பணிந்து வேலவனை
விட்டுவிடுவாநீயென் றுரைப்பேன்

கவி.

சங்கரர்சொற்படிக்கி தையலாள்ஓடிவந்து
பொங்கியேமனமகிழ்ந்து புண்ணியர்தன்னைக்கண்டு
நங்கையுமநாதன்தன்னை நற்சிறைவிடுவாயென்று
திங்களைத்தரித்தோன்பாலன் திருவடிபுரிகின்றாளே.

தரு.

சருணம் சருணமையா வடிவேலாயென்னை
தற்கார்த்தருள்புரியுங் குணசீலா

சுப்பிரமணியர் தரு.

கருணைபெற்றுயென்னாளும் வாழ்ந்திருக்க நீயும்
கண்டுரைப்பதென்ன சொல்சருக்காய்

சரஸ்வதி தரு.

சொல்லுமென்றெந்தனை நீகேட்டவேலா யானும்
தோகையும்வாடி வந்தேன்குணசீலா

சுப்பிரமணியர் தரு.

வாடிவந்ததென்ன சரஸ்வதியே இங்கு
வகுத்துரைக்கவேண்டுமம்மா குணபதியே

சரஸ்வதி கவி.

உரைப்பதுயென்னவென்றால் உத்தமிநன்றுரைப்பேன்
மறைப்பதுஇல்லைகண்டாய் மணவாளன்பிர்மன்தன்னை
கரைப்பதுநெஞ்சந்தன்னை கடுஞ்சிரைவைக்கலாமோ
குரைப்பதுசரியோவேலா கொத்தவாவிட்டிடாயே.

வசனம்.

வாருமப்பா ஷண்முகக்கடவுளே எனது நாதன் பிர்மதேவனை சிரையில் வைக்கலாமோ.

சுப்பிரமணியர் கவி.

சிறைவிடுமென்றுசொன்ன தேன்மொழிமாதேகேளும்
ஒருவிதவசனங்கேழ்ப்பேன் உத்தமிநீயறிந்தால்
தரைபுகழுலகத்திற்குத் தன்னீதி அரியாமூலம்
பொருளதுவரிந்திருந்தால் பூவையேசொல்விடாயே

வ ச ன ம்.

கேளுமம்மா சரஸ்வதியே நீ அந்த பிரம்மாவை சிறைவிடச் சொன்னபடியால் உனக்கு மூலப்பொருள் தெரிந்திருந்தால் அதை அறிவியும்.

சரஸ்வதி கவி,

தனைப்புகழுலகத்திற்கு ஷண்முகவேலனென்று
ஒருபொருளாயிருந்து உதாசீனமென்னிடத்தில்
பரியாசம்பேசவந்தாய் பார்சிறைவிடுகேனென்றும்
மரியாதைபோகுமுன்னே மாதுநான்சென்றுவாரேன்.

வ ச ன ம்.

கேளும் வடிவேலனே நீ என்னிடம் பரியாசம் பேசவேண்டாம் நான் போய்வருகிறேன்.

பரமசிவனிடம் சரஸ்வதி கவி.

என்னநான்செய்வேனீசா வெந்தனாலானமட்டும்
உன்னிடபுதல்வனுக்கு வுற்றதுவுரைத்துபார்த்தேன்.

பரமசிவன் கவி.

கன்னிநீவாடவேண்டாம் கணவனேயிட்டுவாரேன்
அன்னவன்விஷ்ணுதன்னை அழைத்தோடிவருகுவீரே.

வ ச ன ம்.

வாருமம்மா சரஸ்வதி நீ ஒன்று மஞ்சவேண்டாம் வாருமப்பா நந்தியே வைகுந்தம் செல்வோம்.

விஷ்ணு கவி.

அரனவரழைக்கக்கேட்டு அன்புடன்விஷ்ணுதானும்
கரந்தனில்சங்குசக்ரம் களிப்புடனேந்திக்கொண்டு
தரைதனில்புகழ்ந்துதேவர் தயித்தியர்சூழ்ந்துநிற்க
மறைமுதலயனீன்ற மாயவன்வருகின்றாரே.

விஷ்ணு தரு.

ஆலிலைமேல் பள்ளிக்கொண்டவராம்
இந்தவிஷ்ணு வானவர்
அண்டாண்டத்தை யுண்டுசெய்தவராம்

கோலமாமணி குலுங்கிபாடவே
கோதையர்தினம் ஆலம்போடவே
சிலமாமறைதுதிகள் பாடவே
சிறுவன்சாத்தகி தம்பியுங்கூடவே ஆதி

மன்னன் தசரதன் மைந்தனுய்வந்தவரும்-நல்ல
அரக்கிதாடகைமண்ணில் மடித்துமகிழச்செய்தவரும்
அன்னவன்விஸ்வா மித்திரர்யாகத்தை
அங்கங்குளிரவே செய்தனன்போகத்தை
விண்ணில்அகலியின் பெண்ணிடசாபத்தை
மிதித்துக்காலினுல் தீர்த்தனன்யீபத்தை ஆதி

அருவைஞானகிதன்னைமணந்தவராம் அந்தஅன்னைதன்னுலே
அயோத்தியைவிட்டு ஆரணியஞ்சென்றவராம்
பெருமைகுலைந்துமே பதினன்குஆண்டிட
பின்னும்சூர்ப்பநகை பங்கமுஞ்செய்திட
கரன்முதல்தூஷணர் தன்னைவதைத்திட
காகுத்தனென்றுமே போதுபோற்றிட ஆதி

ஆதியில்பரஞ்சோதியானவராம் அந்தபரமனெந்தனை
வேதகாரணமெந்தனை யழைத்திடவே
சாதிமாமலர் கொன்றையுஞ்சாத்தியே
சல்தியில்கண்டு துதித்திடநேத்தியே
வாதனையில்லா வந்தனன்வாழ்த்தியே
வையமெல்லாம்ஓர் குடையினில்தாழ்த்தியே ஆதி

விஷ்ணு கவி.

ஆதிபரஞ்சோதி அரனேயுன்பாதம்
சோதிபோல்விளங்கும் துதித்தனன்நீதன்

பரமசிவன் கவி,

பூதலமளந்த புண்ணியமாயா
நீதமாகீயும் நீடூழிவாழி

விஷ்ணு ஓரடி தரு.

மங்கையுமைபார்வதி தனக்குமே
வாமபாகமது கொண்டவரே மங்

பரமசிவன் தரு.

நங்கைதிரு வெனுமாதனை
நலமுடன்மார்பில் தரித்தவரே நங்

விஷ்ணு தரு.

சங்கையறவெந்தனை யழைத்தது
சடுதியிலுரைப்பாயே சங்கரனே சங்

பரமசிவன் தரு.

அங்கங்குளிரவவே சொல்கிறேன்
அரவமீதிலாடும் உத்தமனே அங்

விஷ்ணு தரு.

புத்திபுரிந்திட வெனக்கது
பகருவீர்வார்த்தையை புகலுவீரே புத்தி

பரமசிவன் தரு.

சித்தமதுகலங்குதே யென்செய்வேன்
சிறுவன்வடிவேலன் செய்நடத்தை சித்த

விஷ்ணு தரு.

அத்திபுரித்தணிந்தயீசா அறுமுகம்செய்த
நடத்தை யென்ன அத்

பரமசிவன் தரு.

தத்திபுரிந்திடும் பிரம்மனை
பார்சிறைவைத்தானே யென்செய்யலாம் பத்தி

விஷ்ணு கவி.

என்னனுன்செயவேனென்ற யீசாசற்வேசாகேளும்
உன்னிடமைந்தனலே வருகிவாடவேண்டாம்
பன்னியவேலன் தன்னை பரிவுடன்யானுங்கண்டு
தன்னிகரில்லாபிரம்மன் தன்னையேமீட்டுவாரேன்.

வசனம்.

கேளும்ஒய்மைத்துனு தேவரீர் வினசப்படவேண்டாம்இப்பவும் நான் உன் மகனிடம் சென்று வருகிறேன்.

பரமசிவன் கவி.

சிறைமீட்டுவருவேனென்ற தெரிவைலட்சுமிதன்நேயா
ஒருமனதாகசென்று உத்தமன்வேலனையுங்கண்டு
பரிவதாவசனம்பேசி பாருலகரியபிரம்மனை
சரிமனம்போல்நீயும் சடுதியில்மீட்டுவாருய்.

வசனம்.

வாரும்விஷ்ணுவே தேவரீர் இஷ்டப்படி எனதுமகன் வடிவேலனைக்கண்டு நல்ல வசனமாகப்பேசி பிரம்மாவை சிறைமீட்டு வாரும் ஓய் மைத்துனு.

விஷ்ணு சிந்து.

ஆனந்தங்கொண்டெழுந்தார் ஆதிவிஷ்ணு
அரனவருரைத்திட பெருமையதாய்
மானினம்விழியாளன பார்வதி
மகிழ்சியாய்பெற்றிட்ட வேலன்தன்னை
அந்தமுள்ளபிரம்மனவனும் அருமுகனை
அவமதியேதாகிலும் செய்திட்டானே
கந்தமாதனமேசென்று சண்முகனை
கடிகிசிறைவைத்த தென்னவென்றுகேட்டு
சொந்தமதைப்பாராட்டி மருமகனை
சுதனைவிடச்சொல்லினன்யிங்குவருவேன்
விந்தைமகிழ்யுடனே கந்தமாதனத்தை
வேணஅதிசயமும் வந்துமேகண்டார்

சுப்பிரமணியர் கவி.

சர்ப்பத்தின்மீதிலாடும் சாரங்கபாணிதன்னை
அற்புதமாகக்கண்டார் அருமுகவேலர்தானும்
சொர்ப்பனாளாச்சிவந்து சொகுசுள்ளமாமாவாரும்
நற்பதம்பணிந்தேனிங்கு நாடிவந்ததுவேசொல்வீர்.

வசனம்.

வாரும் வாரும் மாமாவே தேவரீர் திருவடிக்கி வந்தனம் தேவரீர் வந்தசேதியை இன்னதென்று சொல்வீர்.

விஷ்ணு காவடிச்சிந்து.

சத்திபார்வதிபெற்றமைந்தனே நீர்கேளும் இந்த
தரணியுள்ளவரைவாழ்ந்திட வேண்டுமென்னளும்

சுப்பிரமணியர் தரு.

வாழ்ந்திடதடையேது வந்ததுநீஓது இந்த
மன்னரியவேயின்னிலந்தன்னில் வந்ததுயேது

விஷ்ணு ரு.

வந்தகாரியம்சித்தைதமகிழ்ந்திட யுரைப்பேனே நீ
அந்தபிரம்மனைசிறையில் வைத்திடவந்தேனே

சுப்பிரமணியர் தரு.

பிரம்மனைசிறைவைத்திட்டால் யுனக்கென்னதிருமாலே என்
வர்மமரிந்திடமிவ்விடம் வந்தீரோசொல்வீரே

விஷ்ணு தரு.

சொல்லுவதுனக்குநான் சுதனவன்பிர்மனைவிடுவாயே என்
இல்லறந்தனில்வந்தால் என்பெண்ணை தருகிறேன்வடிவேலா

சுப்பிரமணியர் தரு.

பெண்ணுவேண்டாம்நீ கண்ணனே நான்புகழ்சொல்வேனே
அன்னவன்தனைவிடேன் அப்புறமேகியேசெல்வாயே

விஷ்ணு கவி.

அப்புறமேகுமென்றிப்பவே யுரைக்கின்றமருகோனே என்
தப்பிதமுறைப்பதுதர்மமா உனக்கிதுஅரிவேனே

சுப்பிரமணியர் தரு.

அரிவேனுனுப்சேதி அகிலத்தில்மூலப்பொருளேதுஉனக்கு
அதுதெரிந்தாலேஅயனை சிறைவிடவேதடையேது

விஷ்ணு கவி.

அகிலத்தில்தெரியாமூலப் பொருளதுகேட்டாய்வேலா
உகமையாயரிக்கதில்லே உன்னிடமேவிட்டு
தகமையாயீசன்பக்கல் தானுமேசென்றுவாரேன்
வகையுடன்வந்துசேர்ந்து மாயனுமுறைக்கின்றாரே.

வசனம்.

கேளாய் வடிவேலனே இந்த பூவுலகமறியாத மூலப்பொருள் என்னை கேட்டபடியால இப்பவும் நான் சென்று வருகிறேன்.

விஷ்ணு தரு.

சங்கரனேயுந்தன்மகன் சொன்னசேதிதான்
அங்கமதுகுன்றிவாடி மிங்குவந்தேனுன்

பரசிவன் தரு.

வந்திடவும்நொந்திடவும் அந்தசேதியால்
உந்தன்தேவிலட்சுமியை கண்டுஒதினுன்

விஷ்ணு தரு

ஓதிடவும்நீதியுடன் உன்னிடதங்கையை
உண்மையுடன்தானழைம் உரிதிமங்கையை

பரமசிவன் தரு.

உருதிகண்டுதானுரைக்கும் ஓடிநந்தியே
உத்தமிபாளள்தங்கையை அழைப்பாய்பிந்தியே

வசனம்,

வாருமப்பா நந்திதேவனே நீ வைகுந்தஞ்சென்று எனது தங்கையாகிய இலட்சுமியை அழைத்து வாருமப்பா நந்திகாவலனே.

இலட்சுமி கவி.

காளியோடாடும்பாதன் கவனமாயெனது அண்ணன்
காளிலேயெனையழைக்க நங்கைலட்சுமியாள்மாது
வேளையில்காரஞ்போமென்று வெருவிதப்பணியுமேத்தி
தாளினில்சிலம்பொலிக்க தையலும்வருகின்றாளே,

இலட்சுமி தரு.

வந்தாள் ஆதிலட்சுமிமாது மிகஒயிலான்
சிந்தைமகிழ்ந்திடவேதோது
வந்தாளதிசிங்காரி வர்னசிலை ஒய்யாரி
சுந்தங்கதம்பமார்பில் சாந்திபளபளென்ன
சரு காரணமேதோ பூரணமனதாய்
சிரணிபரமனும் நேரினிலழைக்க வந்

காலில்தண்டைகளோசைதுன்ன கன்னியுமிவள்
மேலில்பூஷணமதுமின்ன
ஆலிலைமேல்துயின்றேன் ஆதிநாராயணர்க்கு
வாலவயதுடைய வஞ்சியிவளுமென்ன
சரு மங்கையரிருபுரம் சூமரம்போட
இங்கிர்தமாகவே யிருபுறம்காட வந்
கெங்கைசடையில்வைத்தநாதன் எமது அண்ணன்
பொங்கமுடன் தானழைக்கநீதன்
அங்கங்குளிரவேதான் அரனவர்யழைத்திட
அருவைவெழுந்தவர அகிளமுந்தழைத்திட
சரு ஆசையுடனேசில வார்த்தைதகள்பேசி
தேசம்புகழ்ந்திட கொண்டுகைவீசி வந்
அகிலம்புகழுந்திவ்வியலோலன் கொஞ்சிகுப்பம்வாழ்
அருமைதுரைசாமி யெனும்பாலன்
மகிமைஅவர்பதத்தை வரதன்சிரமேல்கொண்டு
உகமையிருந்தால்குற்றம் உள்ளங்குளிரவென்று
சரு உண்மையாபார்த்துளோர் குற்றம்வையாமல்
செம்மையாய்பாடினேன் சித்தமகிழ்ந்துமே வந்

இலட்சுமி சருண தரு.

சருணம்சருணம்அண்ணு உமதுபாதம்
தருணம்பணிந்தேனண்ணு
கருணைபுரியுமுந்தன் கடிமலர்சொறிந்திட்டேன்
அருணவுதயம்போலே அருவையாள்புரிந்திட்டேன்

பரமசிவன் தரு.

பாதம்பணிந்ததங்கையே நீயென்னளும்
பரிவாய்வாழ்குவா யிங்கையே
சீதமதிவதனி சீதரனர்தனக்கு
ஓதுகிறேன்யுந்தனுக்கு உத்தமியாளேகேளும்

இலட்சுமி தரு.

வாழ்ந்திடவாமுந்தந்த மங்கையாளென்னை
மகிழ்வா யழைத்துவந்த
ஊழ்வினைபோக்கினேன் உற்றதுரையுமண்ணு
தாழ்வில்லாசம்பத்து தந்திடநீயண்ணு

பரமசிவன் தரு.

தாழ்ந்திடாவாழ்கவேண்டும் யென்தங்கையரே
தயவாயுரைப்பே னென்று
ஆழிசூழுலகமும்அயனென்று பேர்படைத்தான்
அவனைவடிவேலவனும் அருஞ்சிறையிலடைத்தான்

இலட்சுமி தரு:

சிறையடைத்திடநீதியோ ஜீவஜெந்துகள்
சிருஷ்டிக்கவந்த ஆதியை
தரைபுகழ்வுலகமும் தானாகவந்ததோ
உரைசெய்யவேநீரும் உருகுதேமனம்பாரும்

பரமசிவன் தரு.

உருகவும்வேண்டாமம்மா பிரம்மனாலேநீ
கருகவும்வேண்டாஞ் சும்மா
வரும்விதியறிந்திடும் மைந்தன்வடிவேலனை
வெருமையில்லாமலே விடுமென்றுகேளும்நீ

இலட்சுமி கவி.

அப்படிசென்றால் அருமுகவேலவனும்
யெப்படிவிடுவான் யேந்திழையறியேன்

பரமசிவன் கவி.

ஒப்பரவாகஉனக்கு பெண்ணிருப்பதால்
இப்பவேசென்றால் யின்பமாய்விடுவான்

வசனம்

கேளுமம்மா தங்கையே! அந்தவடிவேலனிடம் சென்றால் உனக்கு பெண்ணிருப்பதாக சொல்லும்.

இலட்சுமி கவி.

திங்களை தரித்த சிவபெருமானும்
அங்கங்குளிர அன்புடன்வார்த்தை
நங்கையும்கேட்டு நலமுடனெழுந்து
சங்கரனீன்ற தனையனிடம்வாராள்.

தரு.

வந்தனள திவித சுந்தரமாகவே
மங்கையாள் திருவெனும் மாதரசி
அந்திரத்தவரவர் கண்டுதுடித்திட
அருமுகவேலனை காதலுடன்
சுரு அரனவர்சொன்ன வார்த்தையினாலே
அயனையும்சிறைதனை விடுப்பேன்பின்னாலே வந்
கந்தகதம்பம் பன்னீர்வாடை
கமகமவென்று வீசிடவும்
எந்தன்மகன்அயன் தன்னையேகண்டு
இன்பங்களித்துமே பேசிடவும்
சுரு யீசனவர்சொன்ன வார்த்தையினாலே
பேசிடகண்டு புகழ்வேன்பின்னாலே

வேறு இலட்சுமி தரு ஆகாமா.

நாகாபரணமணி நாதனீன்றபாலகனே
மாதுவந்தேன் வேலவனே
ஓதுமொழிகேள் லோலனே
யேகபோகத்துடனே யின்பங்கொள்ளும்வாவாவேலவனே

சுப்பிரமணியர் தரு.

அச்சுதனுர்தனக்குவந்த அதிரூபமாமியரே
மதிமுகரூபியரே வர்மமென்னசோபியரே
உச்சிதவசனமென்ன உண்மைசொல்ஸ்ரூபியரே

இலட்சுமி தரு.

வர்மமென்னவென்றுகேட்ட மகிழும்சுந்திரபாலா
புகழுந்திவ்விய நல்லோலா
புவிதனில் வந்தசீலா
தர்மமதுயுனக்கில்லையே சாற்றிடுவேன்யுனக்குபதில்

சுப்பிரமணியர் தரு.

சாற்றுமொழியென்ன அம்மா தையலேயுரையுமம்மா
தவிர்ப்பதென்னமோ நம்மால்
காற்றுள்ளபோதேநாமும் தூத்தவேண்டுமென்பதுபோல்

இலட்சுமி கொச்சகம்.

வேண்மென்றகதிர்வேலா விண்ணப்பமொன்றுரைப்பேன்
தாண்டியுன்னைநாடிவந்த தையலருமனமுருகி
தூண்டிவந்தசேதி சுதனைபிர்ம்மனையும்
பாண்டிலேரும்யீசண்மைந்தா பாரசிறைவிடுவாயே.

வசனம். கேளும்தம்பி வடிவேலனே.

சுப்பிரமணியர் கொச்சகம்.

சிறைவிடும்நீயெனக்கேட்ட திருமாலின்தேவியரே
தரைதனில்சூழலமகமதில் தங்குமூவர்யாராலும்
உரைப்பதற்குதகுதியல்ல உந்தனுக்குஅறிந்திருந்தால்
முறைப்படியேமூலப்பொருள் மொய்க்குழலிநீயுரைப்பாய்

வசனம்.

ஆனல் கேளும் மாமியரே! நீ இப்பவும் மூலப்பொருள் தெரிந்திருந்தால் எனக்கு உரையும்.

இலட்சுமி கவி.

வேணதுயுரைத்தேனண்ண வினவியவடிவேலர்க்கு
ஜாண்பிள்ளைவார்த்தைதன்னை சகிக்கவும்கூடாதிப்போ

பரமசிவன் கவி.

காணவேநீங்களெல்லாம் கனமுடன்வீற்றிருங்கள்
தோணபார்வதியான்சென்று சுதனையும்கேட்டுவாரோம்.

வசனம்.

கேளுமம்மா இலட்சுமி இப்பவும் நீங்களனைவரும் இவ்விடம் வீற்றிருங்கள் நானும பார்வதியும் சென்று கேட்டுவருகிரோம்.

பரமசிவன் தரு.

மங்கைமலரயன்பெற்றநங்கை உந்தனுக்கென்னசங்கை
யென்னோடுகூடியிங்கே பின்னே தொடர்ந்துவாராய்

பார்வதி தரு.

நாதாநளின மலர்பாதா உமதுவார்த்தைதேதா
மகிழ்ந்தேன்குணவேதா திருவடியைப்போற்றிவாரேன்

பரமசிவன் தரு.

கண்ணேகருங்குயிலே வண்ணமுறைக்குமதி
பெண்ணேவழிநடந்து நண்ணயிதுசமயம்
நீயென்பின்னாலே நேராய்

பார்வதி தரு.

நாகாஅரவம்பூண்ட யோகாமனதுடைய
தோகையுன்பின்வருவேன் வேகமுடனேவந்தால்
வேலன்தன்னையுங் காணுவோம்

பரமசிவன் தரு.

கண்டுயுரைக்கும்பதில் விண்டுஅவனைசில
பண்டுமறையோர்போற்ற நன்றுமைமந்தனைதினம்
தொண்டுபுரி கின்றார்களே

பார்வதி தரு.

அத்தியுரிதணிந்த சத்தியுமையின்பாகா
சித்தமனமகிழ்ந்தேன் தத்திவிளையாடுநம்
புத்திரன்தன்னைப் பாருமே

பரமசிவன் கவி.

சுந்திரமதியாளான தோகைபார்வதியேகேளாய்
அந்திரத்தவர்கள்போற்றி அவனடிபுரிகின்றாரே.

பார்வதி கவி.

கந்தமாதனமேவந்தோம் கதிர்வடிவேலன்தன்னை
சிந்தையில்மகிக்ஷியாகி சிறுவனைக்கண்டிட்டோமே

சுப்பிரமணியர் கவி.

தந்தைதாய்தன்னைக்கண்டு ஷண்முகவேலன்தானும்
புந்தியில்மகிக்ஷியாகி புத்திரனன்பணிந்தேன்

எந்திடத்தன்னோடி யேதக்குவந்திரோதான்
சந்தேகமரியகன்றாய் சாற்றுவீர்போற்றுவீரே.

வசனம். சருணம் சருணம் தாய்தந்தையரே.

பரமசிவன் தரு.

வந்தனம்செய்கின்ற வடிவேலா
சிந்தைபுரிந்தோம் திவ்வியகுணசீலா
உந்தன்மனங்குளிர உள்ளமகிழ்ந்தேன்பாலா
சந்தேகமரியவே சாற்றுமொழிகேளும்லோலா

சுப்பிரமணியர் தரு.

யென்னைத்தேடியேவந்த தேதுக்கோநீங்கள்
முன்னேயரியச்சொல்வீர் வாதுக்கோ
அன்னையும்நீயுமா அவசரமாகநாடி
தன்னையரியுமபடி தாயேவந்ததென்னோதேடி

பார்வதி தரு

சரவணம்தமர்ந்த கதிர்வேலாயெங்கள்
தவ்புத்திரனாகவந்த குணசீலா
தரைதனில்வந்தசேதி சாற்றியுரைப்போமென்றால்
உருகுதேமனம்வாடி உற்றதுசொல்லநன்றாய்

சுப்பிரமணியர் தரு.

வாடிதவிப்பதென்னை தாய்தந்தையேஇங்கு
வசனிக்கும்வார்த்தையது கேள்யெந்தையே
மோடியும்செய்யவேண்டாம் ஓடிவந்தவிதத்தை
தேடிக்காணாதரியா சிவனேசொல்லும்பதத்தை

பரமசிவன் தரு

பதந்தனையரியாத கார்த்திக்கேயாநான்
விதமதையுரைக்கிறேன் நேர்த்தியாக
அதமதாயுலகமும் அகிலபுவனமெங்கும்
கெதிபெறயில்லாமல் கெட்டுதேகாலமடா

சுப்பிரமணியர் தரு.

கெட்டுப்போச்சிகால மென்றீர்கள்அய்யா
மட்டுபடாவார்த் தையால்கின்றீர்கள்
யெட்டுத்திக்குமதிக்கும் யீரேழ்புவனமெங்கும்
விட்டுச்சொன்னாலேயினி வேரேசிவனுந்தங்கும்

பார்வதி தரு.

தங்கும்ஆறுமுகன் வேலனைச்சேரீயும்
தனையனாகவந்த பாலனைச்சே
யெங்கெங்குமநாமெல்லாம் யிருந்தகெடியும்போச்சே
அங்கங்கும்யுன்னாலே அகிலமழியலாச்சே

சுப்பிரமணியர் தரு.

அழிந்ததயுலகமும் யேதம்மாயென்றால்
அரிந்துடைரைப்பாய்நீயும் சூதம்மா
ஒழிந்ததுலகமென்றீர் ஓதுவீர்தந்தையாரே
தழைத்தறயெந்தனாலே தரணியும்யெந்தையரே

பரமசிவன் கவி.

கள்ளமில்லாமல்ஞானம் காற்றமேயுணர்ந்தபாலா
உள்ளதுயுன்னிடத்தில் உருசியையுரைப்பேன்வேலா
தெள்ளுமாமறையுணர்ந்த தேசிகன்பிரம்மன்தன்னை
வள்ளலேசிரையும்நீக்கி மகனேநீவிடுவாயே

வசனம். வாராய்வடிவேலனே இப்பவும் உன்தாயும் நானும்கூடி உன்னிடம் வந்தது யேதென்றால் பிரம்மாவை சிறைவிட்டிடவும்.

சுப்பிரமணியர் கவி.

அயன்தனைவிடும்நீயென்ற அன்னைதந்தையரேவுங்கள்
நயம்பெறபாதந்தன்னை நானுமேதுதித்துப்போற்றி
செயலதுகொண்டோன்தன்னை சிரைவிடுமென்றுசொன்னீர்
பயமிலாமூலப்பொருளை பாங்குடனுரைசெய்வீரே.

வசனம். வாருமையா சுவாமி தாய்தந்தையே அந்தபிர்மாவை சிரைவிடச் சொன்னபடியால் மூலப்பொருள் சொல்லவும்.

பரமசிவன் தரு.

யேதப்பா வடிவேலா
யென்னோடுமக்கு வாதப்பா
யேதப்பாயென்னோடுமக்கு வாதுபேசவந்தாய்நீயும்
சிதரன்மருமகனே ஓதுவதுமக்கழகோ

சுப்பிரமணியர் தரு.

வாதல்லயெந்தனைப்பெற்ற அய்யா
மூலப்பொருளை ஓதுவீர்
வாதுமல்லசூதுமல்ல வண்மைபெரும்தாய்தந்தையே
மாதாவின்மேலாணைப்படி பேசமில்லாசொல்லவேணும்

பரமசிவன் தரு.

சொல்லவோசுந்திரவடிவமுள்ள கந்தனேகதிர்வேலனே
அல்லவோசொல்லுகிறேனுந்தனுக்கு அல்லலில்லாபிர்மனையும்
வல்லவாநீசிறைவிடும் ;மங்கையாளுன்தாயார்முன்பு சொ

சுப்பிரமணியர் தரு.

சிறைவிட்டேன்சந்திரசடாதரனே யிந்துயணிந்தயீசா
சிறைவிட்டேன்சிறைவிடசொன்னளவில் நிறமனதாபிர்மனையும்
சிரைபுகழுலகோர்மெச்சவும தனையனுக்கருள்புரிவீர்

பரமசிவன் கவி.

பேதகமில்லாமைந்தா பிரியமாயென்சொல்கேளும்
தீதிலாபொருளையிப்போ தெரியவேயுரைக்கவேண்டும்

சுப்பரமணியர் கவி.

காதினில்சொல்வதற்கு கைலாயம்சிம்மாசனத்தை
ஆதலாயெனக்குத்தந்து அரனேநீயலமாவாரீர்

வசனம்.

கேளுந்தாயி தந்தையே நான் பிரம்மாவை சிறைவிட்டேன் நான் அந்தபொருளை சொல்வதற்கு தங்கள் கைலாயமலையை எனக்குதந்து நீங்ளிருவரும் வலமாகசுற்றி வாருங்கள்.

பரமசிவன் தரு.

காதலனே நான்பெற்ற கதிர்வடிவேலாபாலா
ஓதுமறைதானறிந்த வுத்தமனேவேலா

பார்வதி தரு.

பால்பழமேசர்க்கரையே பாலனேயென்கண்ணே
கால்நடையாவுன்னைசுற்றி வலமேவந்தோம்விண்ணே

சுப்பிரமணியர் தரு.

சத்திபரஞ்சுடராக தானமர்ந்ததந்தை
சுற்றியெனைநீங்கள்வர சந்தோஷமானேன்விந்தை

பரமசிவன் தரு.

கனிரசமேகற்கண்டே கார்த்திகேயாவுன்னை
தனியாகசுற்றிவர தபஞ்செய்தாய்முன்னே

பார்வதி தரு.

இனியில்லாதேனமுர்தே யினிக்கும்கற்கனியே
பனிபோலமாறிவுட பதந்தருகுங்தனியே

சுப்பிரமணியர் தரு:

ஓதுகிறேன் தாப்தந்தையே உண்மையான பொருளை
பேதமில்லாகேட்டுவாரீர் பெம்மானிட அருளை

பரமசிவன் கவி.

சந்தோஷமானோம்நாங்கள் தனயனேகேளாய்ஒதான்
எந்தடவாயுனக்கு யிப்பொருள்கிடைக்கும்வண்ணம்
வசனம். கேளாய் வடிவேலனே இப்பொருள் கிடைக்கும்.

பார்வதி கவி.

அந்தமாயுலகோர்போற்ற ஆனந்தமிகவேகொண்டோம்
கந்தனே அக்கருத்தை களிப்புடனுரைசெய்வாயே.

வசனம். வாருய் செல்வனே இந்த மூலப்பொருள் தனை அறியக்கூருவாய்.

சுப்பிரம்மணியர் கவி.

கிந்தனையுலசோருக்கும் சீவன் தன்னுயிரோருக்கும்
குந்தகமில்லாயுயிர்ப்பு கொடுக்கும்மென் தந்தையாரே
விந்தையாவேதந்தன்னை வினவிய தாயின் கூந்தல்
அந்தமாஞ்சிருவண்டாகி அப்பொருளது கேட்டனே

வசனம். வாருங்கள் தாய் தந்தையர்களே யிந்த அரிதான மூலப்பொருளானது தாயின் கூந்தலில் சிருவண்டாகி கேடடேன்.

பார்வதி கவி.

என்னிருகண்ணுவந்த பெழுலானவேலாகேளும்.
உன்னிடவாய்மொழிக்கி உள்ளமுமகிழ்ந்தேனின்று
பன்னியவேதந்தன்னை மகிழுடன் திருந்தஞ்செய்தாய்
அன்னவாபேரைமாற்றி அமைதகேனுன் திருத்தணிகையென்றே,

வ-ம் ஆனால் கேளுமப்பா செல்வமே நீ யிந்த வேதத்தை அரிந்து உணர்ந்தபடியால் இந்தபேரை மாற்றி திருத்தணிகையென்று பெயரிட்டேன்-

பார்வதி கவி.

அகமதுகுளிரநீயும் அன்பாகயுரைத்தபாலா
ஜெகம்புகழ்யாவர்மெச்ச திருத்தம்நீசெய்ததாலே
பகைவர்களுனைக்கொண்டாட பாலனேயுன்னைமெச்சி
தகமையாதகப்பன் சுவாமிஎன்று சாற்றியேபெயரிட்டேனே.

வ-ம்வாரும் செல்வனே இந்த வேதங்களை திருத்தம் செய்தபடியால் உமக்கு இனிமுதல் தகப்பன் சாமியென்று பெயரிட்டேன்

பொது கவி.

அறுமுகவேலன்வாழி அயன்பிர்மன் தானும்வாழி
கருதியசரிதைதன்னை கருத்துடன்யெழுதினோர்கள்
ஒருகுரவில்லாமல் உண்மையாப்படித்தோர்வாழி
குருவினின்பாதந்தன்னை கொண்டோர்கள் நீடூழிவாழி

பொது வசனம்,

இவ்விதமாக சுப்பிரமணிய சுவாமி வேதத்தை திருத்தஞ் செயதபடியால் பரமசிவம் திருத்தணிகை யென்றும் உமாபார்வதி யம்மன் தகப்பன் சுவாமி யென்றும் பெயரிட்டு பார்வதி பரமசிவம் கைலாயம் சென்றார்கள். சுப்பிரமணியர் திருத்தணிகை ஸ்தலத் தில்வாசமாயிருந்தார் இதை யாடினோர் கேட்டோர் பார்த்தோர் சான்காம்பதவி யடைந்தார்களென்பதாம்.

பிரம்மாவை சிறைவைத்த நாடகம் முற்றுப்பெற்றது.

---

சுபம் ! சுபம் !! சுபம் !!!

# நாடகப்புத்தக விளம்பரம்.

**விற்பனையில்** ரூ.

பாண்டவர் வனவருந்த நாடகம் 1
கூலிக்குத் தாலிகட்டிய நாடகம் ,,
பிராயச்சை நலைத்த நாடகம் ,,
சுக்ருபாதேவி சரித்திர நாடகம் ,
கௌரிமோக நாடகம் ,,
கிருஷ்ணலீலை நாரதர்பக்க நாடகம் ,,
அம்பரீஷ நாரதர் பக்க நாடகம் ,,
(பெ.பிள்ளை) நாரதர்பக்க நாடகம் ,,
மாரியம்மன் உற்பத்தி நாடகம் ,
தருமர் பட்டாபிஷேக நாடகம் ,
தக்கன் வேள்வி நாடகம் ,,
பார்வதி கல்யாண நாடகம் ,,
சாரங்கதார நாடகம் ,,
மதுரை வீரப்பன் நாடகம் ,
ஸ்ரீராமயந்திர நாடகம் ,,
சவுந்திரவல்லி மோக்ஷ நாடகம் ,
ஆரவல்லி சூரவல்லி நாடகம் ,
அலங்கிரா சுந்தர சரித்திர நாடகம் ,
[illegible] சன்னடை நாடகம் 1
கெட்டதுப்பிரி நாடகம் ,
கிருஷ்ணா கெர்வபங்க நாடகம் ,,
குருமர் இமயகிரி [illegible] நாடகம் ,
[illegible] 005 ரு

[illegible] "[illegible]
சூரசம்மார மென்னும்"

## வீரவன்னியர்

## நாடகம்

**அச்சில்**

எம்பிரான் சதகம்
சந்திரன் கெர்வபங்க நாடகம்
[illegible] நாடகம்
சதியாவதி கலியாண நாடகம்
[illegible] நாடகம்
[illegible] நாடகம்
[illegible] பங்க நாடகம்
ஸ்ரீ கன்னை [illegible] நா
[illegible] மோக்ஷ நா
[illegible] கலியாண நாடகம்
[illegible] நாடகம்
[illegible] பங்க நாடகம்
[illegible] நாடகம்
[illegible] நாடகம்
திரிபுர சம்மார நாடகம்
[illegible] நாடகம்
[illegible] நீலி நாடகம்
[illegible] நாடகம்
[illegible] நாடகம்
[illegible] பட்டாபிஷேக நாடகம்
[illegible] நாடகம்
[illegible] பங்க நாடகம்
பிரம்மதேவன் பங்க நாடகம்
[illegible] பங்க நாடகம்
கல்யாண [illegible] நாடகம்
[illegible] நாடகம்
[illegible] ஆசாவ
[illegible] நாடகம்
[illegible]
[illegible] கியானம்
காம்பு [illegible] நாடகம்
[illegible] கொக்கோகம்

---

[illegible] கிடைக்கும். கேட்வாக் [illegible] இலவசமாக [illegible]

[illegible] விலாசம்:—

## C. M. தாமோதர முதலியார்,

*ஸ்ரீ [illegible] நாயக் [illegible] அச்சகம்,*

112, [illegible] கோவில் தெரு, [illegible], சென்னை-7.

உ

பரமரிடம் பாசுபதம்,
தருமரிடம் சிறைபோன

# தருமர் இமயகிரி தபசு நாடகம்.



N. M. பக்கிரிசாமி அவர்களால்

சென்னை - சூளை
ஸ்ரீ பெரியநாயகி அம்மன் அச்சகத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காபிரைட்] 1955 [விலை [redacted]

உ

கடவுள் துணை.

பரமரிடம் பாசுபதம், தருமரிடம் சிறைபோன

# தருமர் இமயகிரி தபசு நாடகம்.

விநாயகர் காப்பு.

சென்னைமா நுங்கபுரி செவ்வேளஅகத்தீசர் ஈன்றசெல்வன்
செங்கணி ஐங்கரா செல்வனே சிறுமைக்கொண்டு
தருமமே தருமம்மென்ற தருமர்தன் தபசுதன்னை
தடையது செய்திடாமல் தலைவனே காப்புத்தானே.

*தருமர் கவி—காட்டை ராகம்.*

*தர்மமே தர்மம் என்று தவர்களை செய்திடாமல்*
*தரணியில் பெயரெடுத்து தர்மத்தை விட்டேனிப்போ*
*பங்கும் பங்காளிமார்கள் பலபேர்கள் மாண்டிருக்க*
*பதைத்திட மனங்கள்குன்னி தர்மர் பகர்சபைவருகின்றேனே.*

*தருமர் வசனம்.*

*இவ்விதமாகத்தானே பஞ்சபாண்டவாளுக்கு மூத்தவனாகிய நான் நடந்த பதினெட்டுநாள் பாரதபோரிலே என் தாயாதிகள் 18 அக்ரோணி சேனைகள் மாண்டுமடிந்ததைக்கண்டு என்னிடம் இருக்கும் பஞ்சபூதங்களும் பாதிக்க நான் அதைக்கண்டு அன்று வதை செய்த குற்றவாளிகளை அதம் செய்யும்படியாக தர்மராஜன் சபைக்கு வருகிறதறிவீர்.*

*தருமர் தரு—மத்தியாவதி ராகம்—அட தாளம்.*

*தரணிமுழுதும் தர்மன்என்றவன்நான் பாரதபோரில்*
*தயங்கி மனமது தியங்கி நின்றவன்நான்*
*அனிதம செய்தோரை புனிதரென்றுமே*
*கனிதமில்லாமல் கவர்ந்தேன் அவர்களை*
*உனிதமாகவே உருகுதென்மனம்*
*உதரிபதரியே உரிமைக்கொண்டேனே (தரணி*
*நடந்தகதைகளும் நடந்துபோச்சுதென நாட்டிலுள்ளோர்*
*நகரமுழுதிலும் பகரமறிந்திடவே*
*நினைத்தால் உருகுது அனர்த்தம செய்ததை*
*குணத்தில் பொருத்தனே இனத்தோர்மாண்டதை*
*கதையால் தாக்கின கழுதைமதகிரி*
*வில்லால் மாக்கின விஜயவிபரீதன் (தரணி*
*கிட்டுகுருவிகள்சுட்டுவிழுந்தது என்சொந்தமுள்ளோர்*
*எட்டுதிக்கிலும் எரிதுடித்ததுபோல்*

செய்த துன்பத்தை சகிக்கமுடியாமல்
சிதரிபதரினேன் சிவனைகோரினேன்
சென்னை பக்கிரி சேதி தெரிந்துமே
செய்த நாடகம் ஜெகமும் தெரியவே

தருமர் வசனம்.

சேவகன்நான் சபைக்கு வந்தகாரணம்என்னவென்றால். என்தாயா தியாகிய துரியோதனன் சேனைகள் 18 அக்ரோணிகளையும் என் தம்பிமாராகிய பீமன், அர்ச்சுனன் கூடி .கொன்றுவிட்டார்கள் அதை பார்த்த என்மானப்பட்டது தீ பத்தி எரிகிறது. இவ்வளவு கஷ்டங்கள் ஏர்பட்டது. அந்த இடகுலத்தில் பிறந்த திருட்டு கிருஷ்ணனாலேதான். அவனையும், பீமன், அர்ச்சுனனையும் பழிக் குப்பழி வாங்கவேண்டும். ஆகையினால் அந்த இமையகிரிமலைக்குச் சென்று உச்சிமூனையிலேநின்று என் இடதுகால் பெருவிரலினாலே ஊணி இருகண்களையும்மூடி இருகைகளையும்நீட்டி இந்தஉலகத்தை நாட்டி என் சுவாசங்களைவெளிவிடாமல் என் அங்கத்திலேவைத்து பூட்டி அந்தபரமனை நோக்கி தபம் செய்து மூன்று வரப்பிரசாதங் கைதபெற்று வரவேண்டும். ஆகையினால் சீக்கிரம் புறப்படும் இமய கிரிமலைக்குப் போகலாம்.

தருமர் தரு—புன்னாகவராளி ராகம்: ரூபக தாளம் :

ஆதியே ஜோதியே அண்டர்போற்றும் ஐய்யா
ஆதரிக்க நீயும்வா ஓம் அரகரசிவசிவா
ஆதியே உன்பாலன் அறுமுன் னூலூசியில்
ஜோதியே உனைதொழுதேன் ஓம் அரகரசிவசிவா
தர்மமே ஜெயமென்றுதரணியில் பெயர்கொண்டேன்
தார்காக்க நீ ஓடிவா ஓம் அரகரசிவசிவா
தவினைகள் செய்யாமல் தயபரா எனைகார்த்து
தையிரியம் நீ தருவாய் ஓம் அரகரசிவசிவா

பொது வசனம்.

அன்பர்களே தருமராஜனனப்பட்டவர் இமையகிரிமலையிலே ஒரே நிலையாக தபம் செய்வதைப் பார்த்து பரமசிவன் வரப்பிரசா தம் கொடுக்க சபைக்கு வருகிற விதம் காண்க,

பரமசிவன் கவி—அராபி ராகம்.

கலைமான் கையிலேந்தி கங்கையை தலைசுமந்து
கைதனில் சூலத்தோடு கலங்கிய எழுந்திருந்து
உலகமே எரியும்தீயை உருக்கமா கையமர்த்தி
உருக்கத்தை கொண்டுதர்மன் ஊக்கத்தை தருகவாரேன்

பரமசிவன் வசனம்.

சபையோர்களே பஞ்சபாண்டவாளுக்கு மூற்றவனுகிய தர்ம புத்திர மகாராஜன் கொடூரமான கோபத்தோடு இமையகிரி மலே யிலே நின்று என்னே நோக்கி அபாரமான தபம் செய்கிருன். அந்த தபமானபட்டது அண்டத்தையே தீயிட்டு எரிக்கின்றது. ஆனதால் நான் கூடிய சீக்கிரம் சென்று, தருமராஜன் கேழ்க்கும் படியான வரத்தைக் கொடுக்கும்படியாக பரமசிவன் சபைக்கு வரு கிற விதங்காண்க.

பரமசிவன் தரு—அராபி ராகம்: சாப்தாளம்.

அண்டபுவனமெல்லாம் அளந்து படியளக்கும் நாதன்
உலகமெல்லாம் அமர்ந்தி அரிக்கைச்செய்யும் போதன்
அண்டபுவனங்களே அரகொடி தன்னில் சுற்றி
அரகரு என்றசப்தம் அனேவரும் என்னே போற்றி
தொண்டரைக்காக்க வந்த நீதன் (அண்ட)
பர்வதராஜனிடம் நான் சென்றேன் அவர் மகளே
பார்வதி அன்புவைத்து கொண்டேன்
தினம்தினம் தேவர்களும் எனே மதிக்கொண்டவர்
திகம்பரமாகவே திகொளி வருகிரேன்
ஜோதி பிரகாசமுள்ள நேசன் (அண்ட)
சென்னேயில் செல்வன்சீமான்
சிறுவன் பக்கிரிசாமி தாசன் கவியை கொண்டு
ஜெகமெங்கும் பாடிவரும் நேசன்
குற்றம் குறை இருந்தால் குருபெரியோர்களே
குற்றத்தை அகற்றுவீர் அறிவுள்ள மார்களே
ஆதரித்து அருள் செய்வீர் நீரே

பரமன் வசனம்.

அடா நந்திவாகனு அதோ என்ன இமயகிரி மலேயிலே தரும ராஜன் செய்யக்கூடிய தபமானது. என்ருல் ஒன்றும் சகிக்கமுடிய வில்லே. சீக்கிரம் தருமனுக்கு வரப்பிரசாதத்தை கொடுத்து விடு கிறேன்:

தருமர் தரு—அராபி ராகம்: அட தாளம்.

பரமனும் வரமது தரமனம் வரவில்லே ஏனே அது ஏனே
பரகதி தருமனும் பகர்ஒளி பெருவது எப்போ அது எப்போ
உனேவிட மனமில்லே உருகிட என்மனம் தானே அது வீணே
உயிரது எனேவிட் ஓக்கமும் கொள்ளுதே ஐயா இது மெய்யா
சராசர என வந்து சகலமுமரிந்திட பாரும் வரம் தாரும்
சதவித அறுமுறை பதமது தெரிந்திட தாரும் அருள் கூறும்

பரமன் தரு—அராபி ராகம்: ரூபகம் தாளம்.

தருமா தர்மா தருமா

குரையது மனமதில் நினைத்துமே
குகையென மலையது பிடித்திட
நிலையது மனமது உருகிட
களையது முகமது வாடிட.

தருமன் தரு—அடாபி ராகம்: ரூபக தாளம்.

தாங்தேன் பரமா நிரைக்தேன்
பரமனே பதமது தெரிந்திட
பரஒளி விதமது அரிந்திட
சதமென அகமது அழிந்திட
சஞ்சல வினையது ஒழிந்திட

பரமன் தரு.

இதுதானு மனம் வினு
கேட்டதை வாட்டமா தருவேனே
கீர்த்தியா பூர்திசெய் தருமனே
பார்தியா பரம்பொருள் நிறவனே
பார்தருள் பெருவது சிறுவனே

தருமன் தரு.

வேண்டும் மனம் தூண்டும்
கேட்டதை தருவீரே உனதருள்
கீர்தியும் அடைவது மனபொருள்
செய்தது பெரும்மன தபமது
சிந்தையில் தந்திடும் குணமது

பரமன் தரு—நாட்டை ராகம்: சாப்தாளம்.

கேட்டவரமது வாட்டமதை தருவேன்
தருவேன் அடட தர்ம்மா
கேட்டுநீ காட்டுமே நோட்டமதை பெருவேன் பெருவேன்
கொண்ட உரிமையை கண்டிட காட்டுவாய்
கொடுக்க எடுக்க துடுக்கா பூட்டுரேன்
நிலைக்க மலைக்க செலிக்க உனக்கு
நிரணிபரணி வாழும் தருவேன்

தருமர் தரு—நாட்டை ராகம்: சாப்தாளம்

தருவனென்றதை தகவலும் மரிந்தேன் அறிந்தேன்
ஐயனே பரமா தாருங்கள் தீருங்கள்
பாருங்களே உரிமை உரிமை
மாண்டிட்டபேர்களும் மீண்டுமே வருக
மன்னவரே நீரும் தருக பெருக
தாயாதி அண்ணனும் தம்பிகள் சேனையும்
தரணி ஆளாமல் தவரிபோனார்கள்

பரமன் தரு.

மாண்ட உயிரையும் மீண்டுவா தந்தேன் தந்தேன்

அடடதர்ம்மா மனம்போல் இனமும்
ஜனம்போல் வரும் மென்றேன் மென்றேன்
கரத்தை நீட்டி வரத்தை பிடியும்
கருத்திலுருத்தி தினத்தபடியும்
பரமன் வரமும் நிகரமாகவே
பலிக்கும் கெலிக்கும் அளிக்கும் உனக்கு

தருமன் தரு:

கொடுத்தவரத்தை எடுத்தது பிடித்தேன் பிடித்தேன்
குறையும் நீங்கிய குகைமலை விடுத்தேன் விடுத்தேன்
போரும் பரமனே காரும் பெருமானே
இல்லத்திலடைந்து சல்லோபத்துடனே
இருப்பன் மொரைப்பன் அருப்பன் நால்வரை

தருமர் வசனம்.

பரமேஸ்வரு எனக்குத் தேவையான வரம் என் தாயாதி துரியோதனன் சேனைகள் 18 அக்ஷரோணிகளுடைய ஆத்மாக்களை நான் அழைத்தபோது வரவேண்டும். நான் வைத்த வைராக்கியம் நிறைவேற வேண்டும் என் எதிரிகளுக்கு கொடுக்கும் சாபம் பலிக்கவேண்டும். நீர் நான் அழைத்தபோது வரவேண்டும். அதன் படியாக வரம் தாருங்கள் சுவாமி

பரமன் வசனம்

தருமபுத்திரா நீ கேழ்க்கும்படியான வரத்தை கொடுத்தேன். இதை பெற்றுக்கொண்டு உன் ஆசர்மம்போய் சேரப்பா.

தருமர் வசனம்.

நமஸ்காரம் நான் சென்று வருகிறேன்.

பொது வசனம்.

அன்பர்களே தருமராஜன் பரமனிடத்திலே வரம் பெற்று போவதைக்கண்ட கிருஷ்ண மூர்த்தியானவர் பயந்து பீமன் அர்ச்சுனனை அழைத்து பாதாளா பைரவியிடம் அனுப்பித்து வரம் பெற்றுவரும்படியாக எண்ணம் கொண்டு கிருஷ்ணன் சபைக்கு வருகிறவிதங்காண்க.

கிருஷ்ணன் கவி — அடாபி ராகம்:

பாருலகில் பனிக்கறமா உதித்த மன்னன்
பாரளும் மாயகிருஷ்ணன் தேவன் நானே
திருமரையாய் தேவகிக்கு உதித்த மன்னன்
திருமுகம் ஜொலிக்ககிருஷ்ண தேவரும் சபையில்வாரேன்

கிருஷ்ணன் வசனம்.

இவ்விதமாக்கத்தானே தருமராஜனென பட்டவன். என்னை வஞ்சிக்கும்படியாக எண்ணங்கொண்டு இமையகிரிக்குச்சென்று பரமசிவனிடத்திலே வரத்தைப்பெற்று வந்திருக்கின்றான் அதை என்ஞான திஷ்டியிலே தெரிந்து பீமன் அர்ச்சுனன் இடத்தில்

தெரிவிக்கும்படியாக. கிருஷ்ணபகவான் சபைக்கு வருகிற தருவிர்கள் கவலாங்களே.

கிருஷ்ணன் தரு—நாட்டை ராகம்: ஆதிதாளம்

நல்ல
மாயகிருஷ்ணன்நானே — மகிகூழி அதிகம் கொண்டு
மனதில் விதங்கள் கண்டு — தொடுத்தேன்
மகறகுண்டலம் — பதக்கி அதக்கிடுவேன்
மதிக்க எவரென்றாலும் — அதக்கிடுவேன்-நல்ல
பலங்கொண்டு — மதிகெட்ட தருமனை
வறம்பெற்று அவன்வற — காலையும் பிடிப்பேன்
துடிக்கதுடிக்க அடிப்பேன்
கண்டமாகிழிப்பேன் கதறமடிப்பேன் கவலை முடிப்பேன்
(மாய)

நல்ல
ராக்ஷதரை அதம்செய்தேன் — கைதனில் அடக்கியானும்
ரவணி பவனமெல்லாம் — பேரும் எடுத்தேன்
நித்தளத்தில் — தூதுமெத்த நானுமென்று
அடித்த துரியோதனன் — மடித்தேன் அன்று
துவண்டோடானும் — மீசூறமா தபம்செய்து
மீட்டுவிட்ட தர்மனவன் — தபத்தைப்பிடித்தான்
மோசமாக என்னைஎதிர்த்தான் — இல்லத்தை அடுத்தான் எகிரி
வரத்தை எடுத்தான் — துடித்தான் (மாய)

அழைப்பேன் நல்ல
பேயும் பீமனை — பைபிரவி தனையும் கண்டு
பாதாளத்தில் அவர்சென்று — கொடுப்பேன்
பக்கமலம் நானும் — அவள் பார்த்துதரும் வரமது
பாருளும் பைபிரவி — தோர்க்க அடிக்கும் பொல்லா
பரம்பொருளை — கேடுகெட்டு போகபோறான்
கேவலதருமனவன் — சென்னையில் வருவேன்
புலமதை நானும்தெரிவேன் — பதமுமறிவேன் பாடிடபுரிவேன்
பக்கிரி சிறுவன்

கிருஷ்ணன் கவி நாட்டை ராகம்.

ஆரடா மேவுகாறு அதிதுரிதமாக வோடி
அதிபதி அழத்தேனென்று அண்ணனு தம்பி கூட்டி
பாதாளம் செல்லவேண்டும் பயப்படவேண்டாமென்று
பதரிட பீமன்தன்னை பேடியை கூட்டிவாடா

பீமன் அர்ஜினன் கவி நாட்டை ராகம்.

அண்டமு ளண்டிசை அதிர்ந்து ஓட
ஆக்கிரமித்து இருவிழியும் பொரி பறக்க
அண்டாத கோபங்கொண்டு அண்ணனு தம்பிகூடி
மாமனும் அழைத்தசேதி மைத்துனர் காதில்கேட்டு
மதகிரிதம்பிபேடி மாயனைக் காண வாரோம்

பீமன் அர்ச்சுனன் வசனம்.

சபையோர்களே குந்தி அம்மையர் புத்திர சிகாமணிகளாகிய பீமன் அர்ச்சுனன் இருவர்களும்கிருஷ்ண பரமாத்மாவை காணும் படியாக சபைக்கு வருகிறதருவீர்கள் கனவான்களே.

பீமன் அர்ச்சுனன் தரு—மத்தியாவதி ராகம்: அட தாளம்.

| | |
|---|---|
| ராஜபோஜவிஸ்வாசன் வந்தோமே | அண்ணா தம்பி |
| ராஜபோஜ விஸ்வாசர் | வந்தோமே |
| கடகம் கடகட | வளமதாட |
| படக நடையுடன் | அழகு மெதிபட |
| திமியே திமிதிமி | திரண்டு திகத்திட |
| திரண்டு இருவரும் | பிரண்டு மெரிபட (ராஜ) |
| மகுடநெடிமுடி | மார்பிலடிபட |
| மணியும் பதக்கமும் | அணியவிரிபட |
| சூடைகள் கவிந்திட | படைகள் பிடித்திட |
| குருவும்மதித்திட | கோரி வணங்கினோம் (ராஜ) |
| அண்டரெண்டமே | அதிர்ந்து ஓடிட |
| கண்டபேர்களும் | கவர்ந்து விழுந்திட |
| ஜண்டமாருதம்போலே | மீறியே |
| தண்டம்செய்துமே தகவல் கோரியே | (ராஜ) |
| பாவிதினபடி | பக்கிரி கவிபடி |
| பகரம்மரிந்திட | பகவான் உனதடி |
| நிகரகியது நினவில் | ஒளிபெற |
| நிறையபடி பீமன்பேடி | வெளிவர |

பீமன் அர்ச்சுனன் வசனம்.

சரணம் சரணமையா பகவானே உன் கிருபையிலே எங்கள் துயரமெல்லாம் தீர்ந்து சுகஜீவியாக வாழ்ந்திருக்கும் நாளில் எங்களை அழைத்த காரணம் என்ன சுவாமி.

கிருஷ்ணன் தரு—ஆரபி ராகம்: ரூபக தாளம்.

| | |
|---|---|
| என்னசெய்வேன் | ஏதுச்செய்வேன் |
| எந்தப்பா எந்தன்உயிர் | பீமசேனா |
| அனிதமாக | பாவிதர்மன் |
| அலரிவோடிச் சென்றானேயோ | பீமசேனா |
| இமகிரியை | தானெடுத்து |
| ஏரிதபசு செய்தான்பாவி | பீமசேனா |
| பரமனவர் | தானும் வந்து |
| பாசுபதம் தான்கொடுத்தார் | பீமசேனா |
| பாசுபதம் | தன்னைபெற்று |
| பதரிதுள்ளினானே பாவி | பீமசேனா |
| கிருஷ்ணன் பீமன் | விஜயன் கீர்த்தி |
| கிழ்படிந்து போச்சதப்பா | பீமசேனா |

கிருஷ்ணன் வசனம்.

அப்பா வீமஜேனு அப்பா அர்ச்சுனு நடந்த பாரதபோரிலே நாம் மூன்றுபேர்களும் குற்றவாளியாக ஏற்படுத்தி நம்மை கொல்லும்படியாக தருமராஜன் பரமனிடத்திலே சென்று வரம்பெற்று வந்திருக்கின்றான். அதற்கு எப்படி செய்வதப்பா.

பீமன் அர்ச்சுனன் வசனம்.

பகவானே அதற்குத்தக்கன ஏற்பாடுகளை நீங்கள்தான் செய்ய வேண்டும். சுவாமி.

கிருஷ்ணன் தரு—அடாபி ராகம்: ரூபகம் தாளம்.

பாதாளத்துக்குள்ளச் செல்லுங்கள் நீங்கள்
பையிரவி சந்திடம் நில்லுங்கள்
பக்தியாய்பூமலர் சாற்றுங்கள் போற்றுங்கள்
பதமாக வரம்பெற்று பண்புடன் வாருங்கள்

பீமன் தரு—அடாபி ராகம்: அட தாளம்.

பாதாளம் ஏது வழிகூறுங்கள் இங்கே
பதமுடன் நீர்சொல்லி சேருங்கள்
பதமாகவேசென்று பையிரவி தனைகண்டு
பதம்பெற்று விதமற்று ஜெயம்பெற்று வருகிறோம்

அர்ச்சுனன் தரு.

அண்ணனும் சொல்வதுபோலே—இப்போ
கண்ணனும் போய்வாறோம் கீழே
கவலைகள் படவேண்டாம் கர்த்தனே இப்போது
கருத்தையும் கொண்டுமே வருகிறோம் தப்பாது

கிருஷ்ணன் தரு

போகின்ற வழிதனில் பாருங்கள்—கங்கா
தேவி நதிக்கரை சேருங்கள்
நதியை மதிக்கொண்டு தலையை முழுகுங்கள்
நதிவிட்டு நீர்தாண்டி பதிதன்னை சேருங்கள்

பீமன் தரு.

இன்னும்என்ன விதம் சொல்லுங்கள் சுவாமி
இருக்கும் விதம்சொல்லி நில்லுங்கள்
பதமதுகண்டுமே பக்குவமாய் சென்று
பகவதியைக்கண்டு வரம்பெற்று நான்கொண்டு

அர்ச்சுனன் தரு.

சொன்னால் அதுபோதும் ஐயனே சுவாமி
சொகுசுடன் செய்கிறோம் மெய்யனே
பாதாளத்தில் சென்று பகறங்களை கண்டு
பணிகுவோம் உனைகண்டு பகவானே உன்தொண்டு

கிருஷ்ணன் தரு.

அருந்துமே உதிரத்தை தாருங்கள் அங்கு

ஆங்கார வீரனை — பாருங்கள்
உதிரபலிதந்து — உயர்நிலை நீர்கண்டு
உறுதிகள் பெறுவீர்கள் — உத்தமரே நீங்கள்

கிருஷ்ணன் வசனம்-

அப்பா பீமசேனா, அப்பா அர்ஜுனா, பூமியின் கீழே ஏழு லோகம் இருக்கின்றது. அதில் முதல லோகம் போனமாத்திரத்திலே அங்குள்ள கன்னிகை உதிரபலி கேட்பாள். உடனே ஒரு விரலை அறுத்து உதிரமாகவுகொடுத்து, அவளை கீழ் லோகத்திற்கு வழி கேட்டால் அவள் வழிகாட்டுவாள். அதன்படியாகவே ஆறு லோகத்தையும் கடந்து ஏழாவது லோகம் போன மாத்திரம். அகோரவீரமுத்துசாமி இருக்கின்றார். அவருக்கு மிச்சமாக இருக்கக்கூடிய விரல்களை எல்லாம் அறுத்துகொடுத்தமாத்திரம், அவர் பாதாளபைரவி இருக்கும் இடத்தைக்காட்டுவார். நீங்கள் அவ்வழியாக போகிறபோது தென்திசையிலே ஒரு கங்காநதி இருக்கும் அந்த நதியிலே ஸ்நானம் செய்துவிட்டு வடதிசையாக திரும்புங்கள். அங்கே பாதாளபைரவி தரிசனம் கிடைக்கும். அந்த பைரவி இடம் இருந்து தருமனை வெல்லும்படியான வரத்தை பெற்று வாருங்களப்பா பீமசேனா.

பீமன் அர்ஜுனன் வசனம்

பகவானே நீர் தெரிவித்த சூழ்ச்சிகளை எல்லாம் தெரிந்துக் கொண்டோம். பாதாளம்போக வழி காட்டுங்கள் சுவாமிபகவானே

கிருஷ்ணன் தரு—ஆரபி ராகம்: சாபாண்டி தாளம்.

வழிதாடி பூமாதேவி — வழிதாடி பூமாதேவி
வதைக்கபோறான் — தர்மராஜன்
இமயகிரி மலைஏறி — எடுத்துசெய்தான் பெரியதபம்
எரிந்திடவும் கைலகிரி — எழுந்துவந்தார் பரமனவர்
வாசிமுனை ஊசியிலே — வரிந்துநின்ற வரம்கேட்டான்
வாஉளி வலவைத்து — வகையறிந்தார் பரமனுமே
கண்ணனையும் பீமனையும் — காண்டிபனை கொள்ளவரம்
கண்டிருந்த பரமனவர் கொண்டுவரம் தான்கொடுத்தார்
தருமனவன் வரம்வாங்கி தவிடுபொடியாய் செய்வானே
தாரணியும் வழிவிடுவாய் தைரியவான்கள் போகவேண்டும்

கிருஷ்ணன் வசனம்.

அப்பா பீமா விஜயா பூமாதேவி வழி திறந்துவிட்டாள் சீக்கிரம் பாதாளம் செல்லுங்கள்.

பீமன், அர்ஜுனன் தரு—ஆரபி ராகம்: சாபாண்டி தாளம்.

போய்வாறோம் புண்ணியரே — புவர்லோகம் கண்டுவாறோம்
புவர்லோகம் இதுதானோ — புதுமைகளை காணவாறோம்
குகைவழியும் இதுதானோ — கோரரூபி இடம்தேடி
மலைவழியும் குலைநடுங்க — மாரிகோவில் தேடிவாறோம்

கன்னிகை வசனம்.

ஓ ஹோ அடே நரசப்பசங்களே இந்த பாதாளத்தில் வந்த காரணம் என்ன சீக்கிரம் தெரிவியுங்கள்.

பீமன் வசனம்.

தம்பி அர்ஜுனா முதல் பாதாளததில் உள்ள கன்னிகை கர்ஜிக்கின்றாள் உன் கையில் இருக்கக்கூடிய விரல் ஒன்றை அறுத்து உதிரமாவு கொடு தம்பி அர்ஜுனா

அர்ஜுனன் தரு—அசாபி ராகம்: ரூபக தாளம்.

வில்லகுக்கும் பதது விரல் அண்ணா இதை
வின்னம்பண்ண லாகாதிங்கே மன்னா
கல்லடிக்கும் பதது விரல் அண்ணா இதை
கன்னம்செய்ய லாகாதிங்கே மன்னா

பீமன் தரு—அசாபி ராகம்: அடதாளம்

பாதாளம் வந்துமே பகைமெத்த பேசாதே
பாதாள கன்னியும் பார்கூறாள் நம்மையும்
மதம்கொண்டு வந்தோரை கதைகொண்டு தாக்கிடும்
பதம்பெற்ற விரலதை வதைமெத்த செய்வேனே

பீமன் வசனம்.

ஏய் மூட்டாள் பயலே எறும்புக்குச் சமானமுள்ள வில்லைப் பற்றி பயந்து விட்டாயே ஏழு யானை பலமுள்ள கெதையை எடுக்கக்கூடிய விரலை நான் எப்படி கொடுக்க முடியும் ஆகையினாலே நாம் ஒருவர்க்கொருவர் சண்டையிடாமல் நம் இருவர் விரல்களையும் அறுத்து கொடுக்கலாம் பதில் பேசாமல் விரலை அரும்பார்க்கலாம்.

அர்ஜுனன் தரு—அசாபி ராகம்: அட தாளம்.

அண்ணன் சொன்னபடி அருத்திட்டேன்
விரல்தன்னை பாரும் அண்ணா பாரும்
அருகிய உதிரமும் பெருகியே ஓடுது
ஆயாசம்கொள்ளுதே அண்ணா எந்தன் அண்ணா
பாதாள கன்னியும்பதைக்குறாள் துடிக்குறாள் அண்ணா
எந்தன் அண்ணா
பாதாளகன்னியே பாலன்படும்துன்பம் பாரும்
கண்ணால் நீரும்

பீமன் தரு அடதாளம்.

சொருவியகத்தியேஉருவியே வெட்டுரேன் பாரும் தம்பிபாரும்
குறுகிய ரெத்தமும்பெருகியேஓடுது காரும் கன்னிகாரும்
வழியது தெரியாமல்வகைகெட்டுநிர்கூறோம் தாயே கன்னிதாயே
வழியதைகாட்டுமே வலுகொண்டுஏகுறோம் சும்மா எந்தன் அம்மா

கன்னிகை வசனம்.

அடேநரப்பசங்களே இதோ இந்தமலை உரிபாரைகலலை எடுத்து அந்தபுரம் எரிந்தமாத்திரம் மேழ்லோகம்போக வழிவிடும். சீக்கிரம் செல்லுங்கள்.

பீமன் அர்ஜுனன் தரு—அடாபி ராகம்: அட தாளம்.

மலை உரி பாருங்கல்லே மன்னர்கள் தாவெடுத்தோம்
மகிஷிகள் தானும்கொண்டோமே அண்ணன் தம்பி
மங்கைஷிகள் தானும் கொண்டோமே
சுருள் குகையின் வழியது குனிந்து நுழைந்தோமே
பகைவன் தர்மனை பதைக்க வதைப்போமே(மலை
ஆறுலோகமும் கண்டு ஆறு கன்னிகளுக்கு
அறுத்து உதிரம் தந்தோமே அண்ணு தம்பி
அகோர விரனைக் கண்டோமே
சுருள் அதள விதளையும் சுதள தலாதள
சறமுசறதள மகிமை பாதாள

பீமன் வசனம்:

தம்பி ஏழுலோகத்தையும் மீண்டு வந்துவிட்டோம். இதோ கங்கைநதி இருக்கின்றது வாரும் ஸ்நானபானம் செய்துவிட்டு போகலாம்.

பீமன், அர்ஜுனன் தரு—மையாண்டி ராகம்:

பைரவியும் பாதம்காண பார்க்கஓடி தேடிவாறோம்
கங்கைநதி கண்ணில்கண்டோம் தலைமுழுகிஸ்தானம்செய்தோம்
ஸ்தானபானம் செய்திட்டை அனுஸ்டானங்கள் ஆச்சிதிப்போ
பராசக்தி பைரவியே பாலகரை காத்திடுவாய்

பீமன் வசனம்:

தம்பி அர்ஜுனா நீ இவ்விடத்திலே இரும். நான்மட்டும்போய் பைய்ரவியிடம் வரம் பெற்று வருகிறேன்.

பீமன் தரு—மையாண்டி

வரம்தாடி பைரவியே வரம்தாடி பைரவியே
வதைக்க போறான் தர்மராஜன்

பொது வசனம்.

அன்பர்களே பீமனானப்பட்டவன் பைரவியை வரம்கேழ்கும் சமையத்தில் பாதாளபைரவின் சுடானதுபட்டு பீமனை தூக்கி அடித்து விடவும் அந்த நேரத்தில் பாதாள பைரவி சபைக்கு வருகிறவிதங்காண்க.] பையிரவி கவி—நாட்டை ராகம்:

அண்டமு எண்டிசை அதிர்ந்து ஓட
ஆங்கார ரூபமாக ஆர்ப்பரித்து
கோடாலி பல் உடனே கொக்கரித்து
கோழிமுட்டை கண்களுடன் வெகுண்டுமீரி
மீரிஇங்கே வந்தவர்கள் மிரண்டு ஓட
வீரியத்தை காட்டிடவும் விறவித் தாக்கி
கொக்கரித்து கோபமாக குமரி வாட
கோரரூபி பையிரவியும் கொலுவினிலே வந்தேன் பாரீர்.

பையிரவி வசனம்.

அடா அடா. பூதகணங்களே இந்த பாதாளத்தில் அச்சமற்று வந்த இரண்டு நரகப்பசங்களை நரகபலி கொள்ளவேண்டும். அவர்களை பிடியுங்கள்:

பைரவி தரு—அடாபி ராகம்: நையாண்டி தாளம்.

வரந்தாடி என்றவனை வாட்டியுயிர் ஓட்டப்போறேன்
வரம்வேண்டும் என்றவனை வதைத்து உயிர்வாங்க போறேன்
எந்தஊரு எந்ததேசம் ஏண்டா வந்தீர் இந்திடத்தே
எடுத்திடவும் சூலமதை இருகரத்தில் சுழண்டிடவும்
ஆங்காரமா கோபங்கொண்டு ஆதிசக்தி ஆடிவாரேன்
ஆயீசெல்ல மகமாரி ஆத்திரத்தை கொண்டுவாரேன்
சூலம்கையில் சுழண்டாட சூழ்ந்தபேய்கள் சுற்றிவர
சூரியரும் சந்திரரும் சுடரொளியை காட்டமாட்டார்
சாப்பயலே வந்து இங்கே ஆலாகோலம் ஆகப்போரீர்
கறிக்கேங்கள் குடலதையும் சரகமாலே போடப்போறேன்

பைரவி வசனம்.

அடா-அடா - பூதப்படைகளே-இந்த பாதாளலோகத்திலே தேவர் மூவர் யாவரும் வழிகண்டு வரமுடியாது. அப்படி இருக்க இங்கே நரவாசனைவீசுகிறது ஆனபடியால் சீக்கிரம் புறப்படுங்கள் போகலாம்.

பைரவி வசனம்.

அடா-அடா-பூதப்படைகளே. இதோ நரகப்பயல் வந்திருக்கின்றான். அவனை பிடித்து சாப்பிடுங்கள்.

அர்ச்சுனன் வசனம்:

அம்மணி பாதாள பைரவி நாங்கள் மேல்லோகத்தில்இருந்து பாதாளலோகம் உன்னிடம் வரத்தைப் பெற வந்தோம்என் அண்ணனுக்கு ஏர்பட்ட ஆபத்தை காத்து விடும் தாயே பாதாள பைரவி.

பைரவி வசனம்.

அடே நரகா நீயோ பாதாள பைரவியை உன் உள்ளத்திலே பூஜித்து. அவனைதட்டி எழுப்பும். மூர்சி தெளிந்து விடுவான் உடனே மேல் லோகம்போய் மறுபடியும் இந்த திக்குதிரும்பி வர வேண்டாம்.

அர்ச்சுனன் வசனம்.

அம்மணி பாதாள பைரவி உன்னிடத்தில் வரப்பிரசாதம் பெறுமல் இந்த ஜென்மங்கள் போகாது. தாயே. அண்ணு சீக்கிரம் எழுந்திருப்பாய்

பீமன் வசனம்.

தம்பி அர்ச்சுனு நீ பயப்படாமல் இரும். நான் சென்று என் பராக்கிரமத்தைக்காட்டி வரத்தை பெற்று வருகிறேன்.

பீமன் தரு—அடாணா ராகம். சாபு தாளம்

வரம்தாடி பைரவியே வகையும்கெட்டு போகாதேடி
தர்மன் தன்னை தாக்கவரம் தாயேநீயும் தந்திடுவாய்
பரமசிவன் வரமதையும் பழுதுசெய்ய வேண்டுமம்மா
விடமாட்டேன் உன்னையிப்போ விரியுதோடி திரேகமெல்லாம்

பைரவி வசனம்.

அடே நரகா இந்த வீரஜாட்டியின் அடியை வாங்கி உருண்டு ஓடும். சண்டாளா.

பைரவி தரு—அடாணா ராகம். சாபு தாளம்.

வரமதுவும் தரஉனக்கு வகைகளோது நரப்பயலே
வலுஉரையால் தருமனவன் வாங்கி வந்தான்பெரியவரம்
பரமசிவன் வரமதுக்கு எதிர்வார்த்தை தருவேனடா
பதினெட்டுநாள் பாரதபோர் பண்ணபழியை தந்துபோடா

பீமன் தரு.

கதைக்கொண்டு தாக்கிடுவேன் காளியரே வரம்தாரும்
கோடிஜனம்கொள்ளைகொண்டோம் கொல்லவாறான் தர்மராஜன்
வேண்டுமென்ற பலித்தாரேன் வேண்டு வரம்தந்தனுப்பும்
வேர்பிரித்து பேசவேண்டாம் மந்தன்றனும் உனக்கபயம்

பைரவி தரு.

கதைக்கொண்டு காட்டிவிட்டால் காளிவரம் தருவேனே
கோடிஜனம கொன்றதாலே கொல்லப்போறான் தருமனவன்
வேறுபலி வேண்டாமடா வேந்தர்பழி தந்துபோடா
வேறுபட உந்தன் திரேகம் விரிபடவும் விழுந்திடுவாய்

பீமன் கவி—முகாரி ராகம்

ஐயையோ என்னமோசம் ஆகாது வார்த்தைவாங்க
அடிவயிர் துடிக்குதப்பா ஆகாயம் தூக்குதிங்கே
விரியுதே எந்தன்உள்ளம் வேகுதே அனலைப்போலே
விபரீதம் வந்துசேறும் வீட்டையும் அடைவோம்வாடா

அர்ச்சுனன் வசனம்.

அண்ணா பீமஜேனா நாம் வார்த்தை வாங்காமல் போவதற்கா. இந்த பாதளம் வந்தது அன்னாளிலே அந்த கிருஷ்ணன் எனக்கு பயந்து சாரதிதனம் செய்து இருக்கின்றார். அந்த பரமன் எனக்கு பயந்து பாசுபதத்தை கொடுத்திருக்கின்றார். அந்த 18வது நாள். அந்த துரியோதனன் உனக்கு பயந்து ஜலத்தில் ஒளிந்தபோது: அந்த கங்கைபானவள் திகில்கொண்டு துரியன் ஒளிந்த இடத்தைக்

காட்டி இருக்கின்றாள். அப்படி இருக்க அந்த பைரவியிடம் வரம் வாங்காமல் போவதா சபாஷ் நீ இவ்விடத்தில் இரும். நான் வரத்தைபெற்று வருகிறேன்.

அர்ச்சுனன் தரு—நாட்டை ராகம். ஆதிதாளம்.

அடிபாதாளத்திலே பதங்கிஇருந்திடும் பாவியே
அடிபயப்பட்டு எனக்குநீ வரமுதந்திடும்கூவியே
அஞ்சேன்உனக்கு நானும் கெஞ்சேன் உன்னையும்பாவி
பஞ்சாபறக்கடிப்பேன் பலிக்க வரத்தைதாடி
கூட்டுவேனே பலம் காட்டுவேனடி
கூவியே பைரவிநீயும் ஆவியும் பதுங்கிடாதே
கூடும் பஞ்வற்கு நாடி நடுபிறந்தோன்
நாட்டுவேனே கொடி காட்டுவேன் பாரடி

பைரவி தரு—அசாபி ராகம். சாபாண்டி தாளம்.

அடசாலோகம் நாப்பயலே வாடிபோடி என்றுசொன்னாய்
காக்கறுப்பேன் மூக்கறுப்பேன் நாடிஇங்கு கிட்டவாடா
அஞ்சேனென்றஆணவத்தை அடக்குதேன்பார்அறநொடியில்
அறிவேனென்ற ஆங்காரத்தை அரிதுசெய்தேன் ஆதிசக்தி

அர்ச்சுனன் தரு.

தேவி உன்னிடம் தாவிவந்தான் போவேனோ
அடி தேவிமுன்னையே ஆவிவிட்டுமான் சாவேனோ
பாவிஉன்னையும் இப்போ ஆவி கலக்கிடுவேன்
பார்த்து எனக்கு வரம்பூர்த்து தருகுவாயே
ஆட்டுவேனே ஙிலைகாட்டுவேனே உனை
ஆரடி பைரவிநீயும் ஆணவத்தைக்காட்டுறாய்
ஆறும் வரத்தை இன்றுதாரும் எனக்குயிப்போ
ஆலாகோலயாக இப்போ ஆட்டி படைத்திடுவேன்

பீமன் வசனம்.

அம்மணி பாதாள பைரவி உன் ஆங்காரமானபட்டது. என் தம்பியை பேச்சுமூச்சில்லாமல் செய்துவிட்டது அம்மணி. விழுந்து கிடக்கும் பாலனுக்கு உயிர்பிச்சைத் தாரும் அம்மணி. தம்பி அர்சுனா சீக்கிரம் எழுந்திரும் தம்பி.

அர்ச்சுனன் வசனம்.

அண்ணா நம்மால் வரத்தை வாங்க முடியாதண்ணா. இதற்கு எப்படி யோஜனைச் செய்யலாம்:

பைரவி வசனம்.

அடே நாப்பயல்களே உங்கள் யோசனை ஒன்றும் செல்லாது

நீங்கள் நடந்த பாரதபோரிலே துரியோதனன் உடைய 18 அக்குரோணி சேனைகளையும் நீதியில்லாமல் கொன்றதைக்கண்ட தருமர் மனம்குன்றி பரமனிடத்தில் உங்களை இம்சிக்கும்படியானவரத்தை பெற்று வந்திருக்கின்றான். அதை யாரும் அடக்கமுடியாது. நீங்கள் இருவரும் எனக்கு பலியாகாமல் மேல் லோகம் சென்று விடுங்கள்.

பீமன், அர்ச்சுனன் வசனம்:

அம்மணி பாதாள பைரவி நாங்கள் கேட்டவரம் தாரவிட்டாலும் போகுது. எங்கள் பத்து விரல்களும் வரும்படியானவரத்தை கொடும் தாயே.

பைரவி வசனம்.

அடா நரப்பயல்களே நீங்கள் எப்படி கொடுத்தீர்களோ அதன்படியே கேட்டு வாங்கிக்கொண்டு போய் சேருங்கள்.

பீமன், அர்ச்சுனன் வசனம்.

அம்மணி நமஸ்காரம் நாங்கள் போய் வருகிறோம் தாயே.

பொது வசனம்.

மகா ஜனங்களே பீமனும் அர்ச்சுனனும் வரத்தைப்பெறாமல் மேல்லோகம் வரும் சமயத்தில் தருமராஜன் கிருஷ்ணனை அடித்து மரத்தில் கட்டுவதை அறிவீர்கள் கனவான்களே.

தருமர் விருத்தம்—நாட்டை ராகம்:

வரமது பெற்றுவந்த வகையதை அறியவேண்டும்
வகையுடன் கிருஷ்ணன்தன்னை வதையது செய்வேன்பாரும்
வசுதிகள் செய்துவந்தேன் வரச்சொல்லும் எந்தன்கிட்டே
வறுமையை தீர்த்துக்கொண்டு வகையுடன் போவேன்பாரும்

கிருஷ்ணன் விருத்தம்—நாட்டை ராகம்.

தர்மமேதர்மம் என்று தலைதனை குனிந்தபையன்
தலைதனை நீட்டியிப்போ தகவலை கேட்க வந்தான்
பரமனிடத்திலே பாசுபதம் தன்னைபெற்றான்
பதைத்திட வாட்டியிப்போ பரமனிடம் ஓட்டுவேனே

தருமன் தரு—நாட்டை ராகம்: ஆதி தாளம்.

தெரியப்போகுது பாரடா அடட கிருஷ்ணு
தெரிந்து கொள்ளுவேன் தோடா
குறும்புடன் உன்னைபார்த்து குதிக்குறான் மெதிக்குறான்
குட்டக் கலக்கியும் குலத்தையும் ஒழித்தாயே
சுருள் கொடியபாவி நீமடியப் போகுறாய்
கொளாகள் தீரவும் அரைய போகுதேள்

கிருஷ்ணன் தரு—நாட்டை ராகம்: ஆதி தாளம்

தர்மமேதர்மம் என்றாயே அடட தர்மா
தலைதூக்கி தடைகள் என்றாயே
முட்டுகட்டையப்போலே ஏண்டா நீ முழிக்குறாய்
கொட்டி தலைதனில் எட்டி உதைத்தேன்பாராய்
சருள் பாசுபதமது பறக்கப்போகுது
தபசு தவமும் தவறி போக்குது

தருமர் தரு.

குண்டுணி வேலைகள் செய்தாயே அடட கிருஷ்ணா
குலையத்தில் பெயர் எடுத்தாயே
மட்டிஇடப்பயலே மார்க்கத்தை தெரிந்தேனே
கிட்டிபோட்டுமே உன்னை எட்டி மடக்கினேன் பார்
சருள் ஓங்கிகுத்தினேன் ஏங்கி ஓடடா
உருண்டு சாகடா பிரண்டு ஓடவே

கிருஷ்ணன் வேறு தரு—அடாபி ராகம்: நையாண்டி தாளம்.

மோடியப்போல் உருண்டோடி ஆடியிங்கே தான்விழுந்தேன்
மோசம்வரும் என்றுநானும் நாசக்காரன் நம்பலியே
நஞ்சமென்ற தர்மனவன் வஞ்சம் செய்தான்படுபாவி
பஞ்சவர்கள் நல்லோரென்று பாதுகாப்பு செய்துவந்தேன்
பரமனவர் வரமதும் பலித்ததையோ எந்தனுக்கு
பாதாளத்தை தேடிபோன பீமன்பேடி காணலியே

தருமர் தரு—அடாபி ராகம். அட தாளம்.

குட்டைக் கலக்கிநீ பறந்துக்குஇறைபிட்ட பாவி கெட்டபாவி
கூட்டமழிந்துபோக கொடுமைகள்செய்தாயேபாவி கெட்டபாவி
தாயாதி வர்கங்கள் தரணியில் இல்லையேபாவி கெட்டபாவி
தாத்துமாத்துகள் சொல்லிதவிடாமொழித்தாயேபாவி கெட்டபாவி
இருகரம பிடித்துன்னை இருக்கி கட்டினேன்
இருவர்கள் வருமட்டும் இருந்திடும் கட்டுக்குள்

பீமன், அர்ச்சுனன தரு—நாட்டை ராகம்: சாப் தாளம்.

பாதாளம தன்னைவிட்டுமே அர்ச்சுனன் பீமன்
பகவானையும் பார்க்கவாரோமே அர்ச்சுனன் பீமன்
கிருஷ்ணன் சொன்னவார்த்தை கேட்டுமே
கெட்டுநொந்து கிட்டவாரோமே அர்ச்சுன பீமன்
தர்மர்வந்து என்னசெய்தாரோ எங்கள் அரிகரியை
தாண்டிபார்க்க ஓடிவாரோமே எங்கள் முறஅரியை

கிருஷ்ணன் தரு—முகாரி ராகம்: அட தாளம்.

கட்டுக்குள் அகப்பட்டுகலங்கிடகின்றேனே ஓ பீமசேனா

கடவுள் பரமனாலே கட்டுக்குள் கலிருதென்ஓ விஜயபூபா
பாவிதருமனவன் பரிதாபம்பார்க்காமல் ஓ பீமசேனா
பாருலகமீதில் பங்கமுபோகுதே ஓ விஜயபூபா

பீமன் கவி—முகாரி ராகம்.

ஐயையோ தெய்வமேயிந்த அவதிக்கு என்னசெய்வேன்
ஐயனை பிடித்துக்கட்டி அதமது செய்துவிட்டார்
கட்டின கட்டவற்று கடவுளை பிட்டுகொண்டு
கடுகென போகவேண்டும் கட்டையும் அவர்பாம் வாடா

தருமர் கவி—காட்டை ராகம்.

ஆரடா பயலேகேங்கள் அஞ்சாமல் யிங்குவந்து
ஆட்டையும் பவுண்டில்கட்ட கட்டையும் அவுக்கவந்தீர்
ஆட்டுக்கு சொந்தக்காரர் அதிகாரி மாட்டிக்கொண்டீர்
ஆட்டுவேன் உங்களைநான் அதம்செய்து ஓட்டுவேனே

தருமர் தரு—அடாபி ராகம்: அட தாளம்.

ஆட்டுக்கதிகார வீரரே உங்களை அதம்செய்து ஓட்டுவேன் நீரரே
தாயாதிசேனையை நமையாக மேந்தீர்கள்
தலையை தரித்துதள்ள தபம்செய்து வந்தேனே

பீமன் தரு—அடாபி ராகம்: அட தாளம்.

தபமது என்னசெய்யும் அண்ணனே பெற்ற
தபத்தையும் பார்க்குறோம் மன்னனே
அண்ணனென்று சொல்லி அஞ்சினேன் இந்நேரம்
அதம்செய்து உந்தனை அடித்துயர் வாங்குறேன்

அர்ச்சுனன் தரு.

மூத்தவர்என்றுமே போற்றினோம் உந்தன்
முன்மொழி உரைக்கேட்டு தூற்றினோம்
கடவுள் கண்ணனவர் கட்டுக்குள் எகப்பட்டார்
கதைக்கற்ற தர்மனே வகைகெட்டு போச்சுதா

தருமர் தரு

பீமன் பேடி இருவர்கூடி யிப்போ பிதர்பட்டுபோவீர்கள் ஓடி
கெட்டே கெருவமே கெட்டுகள் பேசீர்
கீர்த்திகள் அழிந்திட ஆமையாய் போவீர்கள்

பீமன், அர்ச்சுனன் தரு.

பேபபேபபேபபேப பேப
பேபபேபபேபபேப

பேபபேபபேபபேபேபபேபபேப
பேபபேபபேபபேபபேபபேபபேப

தருமர் தரு—அட தாளம்.

இப்போசண்டைசெய்ய வாங்கள் உங்களை
இருங்கிட கட்டினேன் போங்கள்
கட்டினகட்டோட கடந்துமேச வுங்கள்
கன்னியாள் கண்ணிட்டு கலங்குறான் பாருங்கள்

தருமர் வசனம்.

சபாஷ் என் வஞ்சகரை பிடித்து கட்டிவிட்டேன் என்னை பெற்றதாய் ஒருவள் இருக்கின்றாள் அவளையும் ஒருதகை பார்த்து விடுகின்றேன். வரட்டும் பார்க்கலாம்.

பொது வசனம்.

அன்பர்களே மூன்று நபர்களையும் பிடித்துக் கட்டி தருமர் எதிர்பார்க்கின்றபோது குந்தியம்மை சபைக்கு வருகிறதறிவீர்கள்.

குந்தி கவி—ஆனந்தபைரவி ராகம்:

ஸ்ரீ அரிகிஷ்ணு எந்தன் ஸ்ரீ அரிவாசுதேவா
சிந்தனை எல்லாம் தீர்த்த தேவனே தேவகண்ணு
நல்லவனும் மூத்தபிள்ளை தருமனை பார்க்கவேண்டி
தையலும் குந்திதேவி பகர்சபை வருகின்றேனே

குந்தி வசனம்.

இவ்விதமாகத்தானே ஐவருக்கு மூத்தவனாகிய தரும புத்திர மகாராஜனை காணும்பொருட்டாக. குந்தமாதேவி சபைக்கு வருகிற தருவிர் கனவான்களே.

குந்தி தரு—முகாரி ராகம். அட தாளம்.

பாண்டுமகாராஜன் தேவி பஞ்சவரை யீன்றருபி
பாரில்உள்ளோர் தான்மதிக்க பத்தினி வாரேன்
அன்னநடை இடைஉடையாள் யானைதும்கொடிஉடையாள்
அகிலமெங்கும் மதிப்புஉடையாள் அம்மணி வாரேன்
கொடிமுடியின் யிடையில்சேலை கோதையாளும் விட்டுகட்டி
கொழுந்தோடி குலவிளங்க பேர்தையாள் வாரேன்

குந்தி வசனம்.

சேவகன் என் குழந்தை தருமபுத்திரனை பார்க்கும்படி வந்திருக்கின்றேன் எங்கே தரும புத்திரன்:

தருவர் தரு — அராபி ராகம்: அட தாளம்.

பிள்ளை என்றுசொல்லி பெருமையா வந்திட்ட
பேபேநீ அப்புறம் போப்போ எட்டி போபோ
தந்தையைவிட்டுநீ தாசியா போனாயே
தாய் என்றுசொல்லவும்போமோ பாவி போமோ

குந்தி தரு—காம்போதி ராகம்: ஆதி தாளம்

தாசியென்று வேசியென்று தர்மனான்னை சொல்லவேண்டாம்
தங்கி துருவாசருக்கு பொங்கிமனம் பூஜைசெய்தேன்
அன்றுமே நானும்ஐந்து உபதேசம்பெற்றேன் கண்டுமே

தருமன் தரு

கலியுக காலத்தில் கற்றதை ஓதினால்
கதைகளும் மேவாது பாவி கெட்டபாவி
உபதேசம் பெற்றுநீ வேசியா போனதை
உருதியை சொல்லிவா பாவி கெட்டபாவி

குந்தி தரு.

ஐந்து உபதேசம்பெற்று ஐவரையும் பின்பெடுத்தேன்
அந்தவிதம் உந்தனுக்கு சிந்தைநொந்துசொலலிவாரேன்
கேளப்பா நானும் அறிவில்லா நடந்தவிதம் பாரப்பா

தருமர் தரு.

அறிவு இல்லையென்று அழும்பாக சொன்னதை
அறிவாளிகளுக் குமே ஏர்க்குமா பாபந்தீர்க்குமா
வேசியா போனதால் வீட்டுக்குள் உன்னையும்
வேந்தர்கள் இப்போது சேர்பாரு முகம்பார்ப்பாரு

குந்தி தரு.

தாய்சொல்லிய மந்திரத்தை நடுத்துஎன்னை பேசவேண்டாம்
தாயெனக்கு கோபம்வந்தால் தந்திடுவேன் உந்தனுக்கு
சாபமேஇப்போ தடுத்திடமுடியாதிங்கே கோபமே

தருமர் வசனம்

ஏ வஞ்சகி நீ பத்தினி பதிவிரதையாக இருந்து நீ எனக்கு சாபத்தை கொடுத்தால் பலிக்கும் நீயோ என்தந்தையாகிய பாண்டு மகாராஜனை விட்டு ஐந்து பேர்கள் இடத்தில் வேசியாகபோய் என் தந்தைக்கு அவமானத்தை ஏற்படுத்தியவள். நீயோ எனக்குத்தாய் இல்லை நீ என் தகப்பனை துரோகம் செய்ததால் இதோ உனக்கு சாபத்தைதந்தேன். இந்த சாபமானபட்டது நீ உலகமெல்லாம் சுற்றி அன்ன ஆகாரமில்லாமல் அலைந்து பல இம்சைகளைபட்டு

வரும் சமயத்தில் உன்னைபார்வந்து தொட்டாலும் அவர்களும் பைத்தியம்பிடித்து ஆடவேண்டும் சீக்கிரம் இவ்விடத்தை விட்டு போய் தொலையும். சேவகன் வாரும் பாமினிசோக்கி தபம்செய்யலாம்

குந்தி தரு—அராபி ராகம்: கையாண்டி தாளம்.

தர்மனவன் தந்தசாபம் தாய்எனக்கு பிடித்திடவும்
தவர்நிலைகள் செய்ததாலே தந்தான்தர்மன் எனக்குசாபம்
கணவரையும் நானும்விட்டு கண்டவரை சேர்ந்ததாலே
கட்டினோரை கலக்கவைத்து வாட்டையிடர்ந்து ஓடிவாரேன்
புருஷனென்று என்னைமேலே போய்தொலைந்தேன் வேசியாக
புவனமெல்லாம் தான்சிரிக்க பொற்கொடியாள் ஆடிவாரேன்
என்னைபோலே பெண்டுகள் இந்தகெதி ஆகாதீர்கள்
எண்ணிடுங்கள் என்கெதியை இம்மைசவந்து சோரதம்மா
புருஷனவர் தெய்வமென்று போற்றிசெய்து இருக்கவேண்டும்
கணவனையும் கடவுளென்று கால்பிடித்து பூஜைசெய்வீர்
கண்கொழுப்பு கண்மறைக்கும் கோலகூத்து ஆடவேண்டாம்
உலகில்உள்ள பெண்டுகளும் உத்தமியா இருந்திடுங்கள்
உலகமெல்லாம் ஓடிவாரேன் ஒருவர்துணை இல்லாமலே
மூன்றுபேரு கூடியிங்கே முழிக்கின்றது ஏண்டாபாவி
முழுங்கப்போரேன் மூன்றுபேரை மூர்க்கமான குந்தியம்மை

கிருஷ்ணன் தரு—அராபி ராகம்: கையாண்டி தாளம்

கொடுமைபட்டு நானிருக்க குந்திவந்து தொட்டதாலே
கொள்ளைவெறி என்னைவந்து கூடிஎன்னை பிடித்ததம்மா
கோபால கிருஷ்ணனம்மா கோலகூத்து ஆடிவாரேன்
கோபிகளை செய்தகோலம் கொடுமைவந்து சேர்ந்ததம்மா
பஞ்சவர்க்கு தூதிருந்து பட்டபாடு போதுமையா
ஐவருக்கு தூதிருந்து ஆடல்பட்டு சாகுரேனே
தர்மராஜன் தந்தசாபம் தலையைசுற்றி ஆட்டுதுபார்
தர்மன்தம்பி பீமன்பேடி தவிக்குறார்கள் கட்டுண்டே

குந்தி தரு:

என்மகனே பீமசேனா என்னமன கஷ்டமோடா
என்னையுந்தான் வெறிபிடிக்க ஏங்கவைத்தான் தர்மராஜன்
உங்களைநான் பெற்றகுறை உருகுதடா எந்தன்நெஞ்சம்
உங்களுக்கு வந்தகுறை உத்தமனே சொல்லிவாடா

பீமன் தரு.

அம்மாஎன்னை தொட்டதாலே ஆச்சுதம்மா எனக்குவெறி
அண்ணன்தர்மன் அன்னிதமா செய்தேனென்று கட்டிவிட்டார்
துரியனிடசேனைகளை துடிதுடிக்க கொன்றேன் என்று
துன்பம்வந்து சேர்ந்ததம்மா துர்புத்தியால் எந்தனுக்கு

தம்பி யவன் அர்ச்சுனனும் தவிக்கின்றான்பார் கட்டுகுள்ளே
தாயேநீயும் தவிக்கும்கோலம் தம்பிதன்னை பாருமம்மா

குந்தி தரு.

நடுபிறந்த நாயகமே நானும் வந்தேன் குந்தியம்மை
நாடுதேசம் சுற்றியல்லோ நடுத்தெருவில் நின்றுவிட்டேன்
ஆத்தாளென்று அரியாமலே ஆடும்சாபம் தந்தான் தர்மன்
அம்மாளென்று அரிந்திடாமல் ஆடிசாக சாபம்தந்தான்

அர்ச்சுனன் தரு—அடாபி ராகம்: சையாண்டி தாளம்

கட்டிமுத்தம் தந்ததாலே கண்டுபைத்தியம் கொண்டுதம்மா
எட்டிமுத்தம் இட்டதாலே எனக்கும்வெறி வந்துதம்மா
பங்காளிகள் கொலையதாவும் பண்ணுதம்மா குடும்பத்தையும்
தாயாதிகள் தவறினதால் தலைக்குதிம்பு வந்துதம்மா
நால்வருமா நடுத்தெருவில் நாடிகூத்து ஆடிவாரோம்
நாவறண்டு போகுதம்மா நாடிபோகலாம் தர்மரிடம்

பொது வசனம்.

அன்பர்களே நான்குபேர்களும் வெறிபிடித்து. ஆடிவரும் சமயத்தில் இந்த கோலங்களைக்கண்ட பரமசிவன் நந்தியைவிட்டு பார்வதியை அழைக்கவும் பார்வதிஅம்மை பராசக்தி உருவங் கொண்டு வருகிற விதங்காண்க

பராசக்தி கவி—நாட்டை ராகம்.

அண்டமும் அகிலமும் அதிர்ந்துஉடஆர்பரித்து
ஆண்டவனும் அழைத்தாரென்று நந்தி சொல்ல
செஞ்சடைய தான்விரித்து கொக்கரித்து
சிப்பமது சீரிடவேசிவசக்தி சபையில்வாரேன்

பராசக்தி வசனம்.

அடா அடா பூதப்படைகளே ஆஜராக இருக்கின்றீர்களா. சபாவ் நடந்த பாரதபோரிலே ஏற்பட்ட குற்றவாளிகள் பைத்தியம் பிடித்து ஆடி வருகிறார்கள். அதை எனக்கு தெரிவிக்கும்படியாக பரமன் என்னை அழைத்திருக்கின்றார். ஆகையால் சீக்கிரம் புறப்படுங்கள் போகலாம்.

பராசக்தி தரு—மத்தியாவதி ராகம்: அட தாளம்.

பராசக்தி உருவங்கொண்டவள்நான் பாஞ்சாலியாக
பஞ்சஜனரை பாது காத்தவள்நான்
சுருள் பகவதிதவிச்சகலம் தெரிந்தவள்
பரமனிட விதநடனம் புரிந்தவள்

பவன புவனங்கள் பகற மறிந்தவள்
பதைக்க துரியனே வதைக்க செய்தவள் (பரா)
பரைகளடிபட பாவி ஜொலித்திட
படீடம் மிடும் நடைகபடம் அறிந்திட
களிக்க கவரிகள் பளிக்க பறந்திட
கறுக்கு முறுக்குடன் ஒளிகள் பாவிட (பரா)
டாளுடக்கையும் டமறம்மடித்திட
டவுலுமுரசுடன் டங்க மிடித்திட
பக்கிரி சாமியின் பதங்கள் படித்திட
பாவி உலகமும் பகற மறிந்திட

பராசக்தி தரு—அடாணா ராகம்: ஜாயாண்டி தாளம்.

ஓடிவாரும் பேய்கணமே ஓடிபரமனே தேடிடலாம்
ஆடிவாரும் பேய்கணமே ஐயன்பரமனே கண்டிடலாம்
பரஒளியே மிகசருணம் பார்வதியாள் நான்சருணம்
பத்தினியாள் பார்வதியை பரமனுரே அழைத்ததென்ன

பரமன் தரு—மத்தியாவதி ராகம்: அட தாளம்.

பராசக்தியின் உருவங்கொண்டவளே பார்வதியாளே
பரமனிட பாகம்பாவி நின்றவளே
சருள் பகரம் மறிந்திட பழிகள் தெரிந்திட
பதைத்த தருமனும் அடித்து தபம்செய்ய
பாவிபரமனும் பார்த்து வரம்தர
பதரி தருமனும் சிதறச் செய்கிறான்

பராசக்தி தரு—மத்தியாவதி ராகம். அட தாளம்.

பொறுத்ததருமனும் இருந்தபார்த்தவனே தருமனத்தன்
வெறுத்து மனமது உருத்தம் கொண்டவனே
சருள் கவலைபட்டுமே கண்ணன் அழுகிறான்.
கலங்கி பீமனும் நடுங்கி ஒடுங்குறான்
குறையை எண்ணி குந்தி நடுங்குறாள்
குறுகிகுன்னிய விஜயன் பதங்குறான்

பரமன வேறு தரு—அடாணாராகம்: அட தாளம்

வாடிவாடி சத்திஓடி அந்த வகைகெட்டதர்மனை நாடி
சருள் வெறியது கொண்டுவே வேதனை கொள்கிறார்
நெறியோடு நாம்சென்று பரிகாரம் செய்யலாம்

பராசக்தி தரு—அடாணா ராகம்: அட தாளம்.

பரிகாரம் செய்வதனாலே அவர்கள்
பதைத்து துடித்திட வேறும்

சுருள் முன்செய்த தீவினை மூண்டுதே யிப்போது
முன்வரும் என்காதா கண்முன்பா பார்க்கலாம்

பரமன், பராசக்தி தரு—நாடடை ராகம்: சாப் தாளம்.

கையிலங்கிரி தன்னைவிட்டுமே பார்வதி யீசர்
கருணை வைத்து காணவாரோமே பார்வதி யீசர்
தருமனர்தன் தவதிலிரகுமன் எங்களை வேண்டி
தருமன் தகவல் அறியவாரோமே பார்வதி யீசர்
பகரதிகரம் அறியவேண்டியே பார்வதி யீசர்
பார்க்க ஓடிதேடிவாரோமே பார்வதி யீசர்
உருகிநின்ற தருமன் தன்னையே பார்வதி யீசர்
உறுதிமொழிகள் அறியவாரோமே பார்வதி யீசர்

தருமன் தேவாரம்:

ஓம் சர்வஜோதிநீயே உலகத்தை ஆண்டயீசா
உமையவள் சித்திவாசா உதவியும் செய்வீர்கள்நீங்கள்
தயாபராஅருளே என்தன் தவத்திற்கிரங்கி நீவா
தார்விஷம் உண்டயீசா தார்கார்க நீங்கள் வாரும்

தருமர் தரு—நீலாம்புரிராகம்: ரூபக தாளம்.

கையிலங்கிரிவாசா கருணை அருளீசா
காத்திட நீரோடிவா ஓம் அரகரசிவவா
இமயகிரிவந்து ஏந்தி எனை தாக்கி
இறக்கிஎன்னையும் காத்தாய் ஓம் அரகரசிவசிவா
வேண்டும் என்றவரம் தாண்டவா நீர்தந்து
ஆண்டவா நீ அளித்தாய் ஓம் அரகரசிவசிவா
நினைத்தபோது வந்து நிர்மலா நீநின்று
நிஜமாயும் காப்பேனென்றாய் ஓம் அரகரசிவசிவா

பரமன் தரு - அடாணா ராகம். ரூபகதாளம்

தருமனே நீபாரும்கண்மணி அவள்
தபம் செய்யும்சிறது பெண்மணி
சுருள் ஒருநிலை தபமது செய்திட
அருள்நிலை பரமனை கண்டிட
திருநிலை உருதிகள் கொண்டிட
அருள் மலை ஆண்டவன் கண்டிட

பராசக்தி தரு -அடாணா ராகம்: ரூபக தாளம்:

ஓ ஓ இது என்ன ஆச்சர்யம் தருமன்
ஓங்கிதபம் செய்யும் மீசர்யம்
சுருள் மாமனே தருமனை பிடித்திடும்
பகர்மொழி உயிர்தனை கொடுத்திடும்
உயிரது போகாமல் தடுத்திடும்
உண்மையின் நன்மைகள் தெரிந்திடும்

பரமன் தரு—ரூபகம்

தருமனே நீ அஞ்சிவேண்டி என்னை
தபம் செய்து தாண்டினாய் வேண்டி
சருள் தபமதை விலக்கிடும் தருமனே
தகவலை உரைத்திடும் சிறுவனே
கருத்தினில் நினைத்திட்டான் வருவேனே
கவனித்து பதமது தருவேனே

தருமன் தரு—ரூபகம்

முன் தந்தவரத்தால்ஐயனே நானும்
முடித்திட்டேன் வைராக்கியம் மெய்யனே
சருள் கண்ணனும் கலங்கிட மனமது
அன்னையும் அலைந்திட தினமது
பீமனும் பெருமைகள் குலைந்திட
பேடியும் உருகிய நிலைபட

பரமன் தரு—அடாபி ராகம். அட தாளம்.

வாரும் வாரும்தர்மா வதைகளை பார்க்கலாம்
வதைமெத்த செய்ததை வழிமெத்த கேழ்களாம்

தருமர் தரு—அடாபி ராகம்: அட தாளம்.

பாரும் பாரும்பரமா பையித்தியம் கொண்டவர்
பகைவெறி பையித்தியம் கொண்டவர் சுத்துறார்

பராசக்தி தரு

பார்க்கும்போதுமனம் பதைத்திட செய்யுது
பாருங்கள் பரமனே பலதுன்பம் கொள்ளுது

பரமன் தரு.

வாய்மூடி பேசாமல் வகையுடன் இருந்திடும்
வகைகெட்டு மதிவிட்டு விதிகெட்டு துலைந்திடும

கிருஷ்ணன் தரு—அடாபி ராகம்: கையாண்டி தாளம்.

பாருங்கள் பரமனே பலதுன்பம் கொள்ளுதே

பரமன் தரு.

வாய்மூடி பேசாமல் வகையுடன். இருந்திடும்
வகைகெட்டு மதிவிட்டு விதிகெட்டு துலைந்திடும்

கிருஷ்ணன் தரு—அடாபி ராகம்: கையாண்டி தாளம்

பஞ்சவர்கள் என்றுசொல்லி பழியை ஏற்றி கொண்டேனையா
ஏழைஎன்று எண்ணியாலும் ஏற்றிகொண்டேன் பித்துவெறி
பரிதாபம பார்த்தாலே பாடுவந்து சேர்ந்ததையோ
பார்த்தவர்கள் தான்சிரிக்க பங்கம்மெத்த போகுதையா

குந்தி தரு.

பெண்ணாக பிறந்ததுரை பேய்பிடித்து ஆடுரேனே
மண்ணாக பிறந்திருந்தால் மாநிலத்தில் தங்கிடலாம்.

உண்ணசோறு இல்லாமலே உறங்கிவாரோம் தர்மனிடம்
தின்னசோறு இல்லாமலே திரிந்துவாரோம் காடுசெடி

பீமன் தரு.

தம்பியென்று பாராமலே தவிக்கசெய்தார் தர்மனந்தன்
தரணியெல்லாம்பேரெடுத்து தயங்குரேனே
பங்காளியை பண்ணகோலம் பங்கப்பட்டு சாகுரேனே
தாயாதியை செய்தகோலம் தட்டுபட்டு தான்விழவும்

அர்ச்சுனன் தரு,

நாங்கள்படும்துயபங்களை நாட்டில் உள்ளோர்தானறிவீர்
நாட்டுமக்கள் நீங்களெல்லாம் நன்மையுடன் இருக்கவேண்டும்
சொத்துக்காக ஆசைப்பட்டு சூருண்டுசெத்தார் கோடிஜனம்
அத்துக்காக ஆசைப்பட்டு அருதிசெய்தோம் அல்லோரையும்
துரியோதனன் துடித்ததாலே துன்பம்வந்து நேர்ந்திடவும்
துரியனிட சேனையெல்லாம் துடித்ததாலே பாவமிது
பண்ணுத கோலங்களை பண்ணிவந்தோம் பங்காளியை
பார்த்திருந்து பண்ணுதீர்கள் பங்காளியை இந்தகோலம்
பங்காளியை கொடுமைபண்ணு கோலகூத்து ஆடுவீர்கள்
தாயாதியள் தத்தளிக்க தவிக்கசெய்ய வேண்டாம் நீங்கள்
தாயாதிகள் வாழ்ந்தாருனல் தலையெடுத்து தண்ணிவார்ப்பார்

தருமன் கவி—நாட்டை ராகம்-

பார்த்திடுங்கள் பரமன்சத்தி பாதகர்கள் படும்துன்பத்தை
பாவி இவர்நால்வரையும் பதைத்திடவே சொல்வீராகுல்
உந்தனிட வரத்தினுலே உயிரதையும் வாங்கசெய்வேன்
உத்தமரே உருதிவாக்கு ஊக்கமுடன் தருவீரையா.

பரமன் கவி—அராபி ராகம்.

ஆத்திரத்தை அடக்கும்தர்மா அமர்களமு செய்யவேண்டாம்
ஆதரவால் அடித்துகொன்ருல் அவர்கதிபோல் உனக்குநேரும்
சட்டத்தைப்போலே தர்மா சாதிக்கவேண்டு மிப்போ
சட்டத்தை மீறிசெய்தால் சங்கடம் வந்தேதீரும்

பரமன் வசனம்:

அப்பா தர்மராஜனே உனக்கு வரம்தந்து விட்டேனென்
அதிக ஆங்காரம் கொள்ளவேண்டாம். முன்னதாக என்வரத்தைப்
பெற்று ஆங்காரத்தை கொண்டவர்கள் அடைந்த கதிகளைப்பார்
துமே நீயோ பின்னுல் குற்றவாளியாக வேண்டாம். ஜாக்கிரதை அ
போக இதோ வெரிபிடித்து ஆடக்கூடிய நால்வர்களும் என்னகுற்
றம் செய்தார்கள் எதற்காக இப்படி சாபத்தை கொடுத்து: ஆட
வைத்திருக்கின்றாய் அந்த குற்றத்தை என்னிடம் தெரிவியும். நான்
அவர்களை சட்டப்படி தண்டிக்கின்றேன் தர்மா.



தர்மர் வசனம்:

பரமேஸ்வரா என் தாயார் குந்தி அம்மையார் என் தகப்பனார் பாண்டுமகாராஜனைவிட்டு எமன், வாயு, இந்திரன், அஸ்வனிஇவர்களைச்சேர்ந்து எங்கள் ஐவரையும் பெற்றுவளர்த்து துரியோதனன் இடம்போய் சொத்தை பகிர்ந்துகொடு என்று கேட்டால் துரியோதனன் எப்படி மனம்வந்து எங்கள் ஐவருக்கும் பாகத்தைக்கொடுப்பான். இதைப்போலவே நாட்டுமக்களிடம் நடந்தால் மக்கள் ஒற்றுக்கொள்வார்களா. ஒருவரும் ஒற்றுக்கொள்ளமாட்டார்கள். அதைக் கண்ட துரியோதனன் ஐவர்களையும் அரக்குமாளிகையில் தள்ளி கொளத்துணிந்தது ஞாயம்தான் அதுபோக கிருஷ்ணனுக்கு குந்தியம்மை நடந்த வேசிதனங்கள் தெரிந்தது: பீமனுக்கும் அர்சுனனுக்கு பலஉபாயங்களை சொல்லி வழிகாட்டிவிட்டான் கிருஷ்ணன் அதைக்கேட்ட இரண்டுமண்கள் பீமனும் அர்ச்சனனும் கூடி துரியோதனாதிகூட்டம் 18 அக்குரோணி சேனைகளையும் உயிரை போக்கி இருக்கின்றார்கள் இதுகளுக்குசட்டத்தை ஏர்படுத்தி அவர் அவர்களை தண்டிக்கவேண்டுமையா சுவாமி.

பரமன் வசனம்.

தரும புத்திரா குற்றவாளிகளை குற்றத்தை நிரூபிக்கின்றேன் கேள். கொண்ட புருஷனைவிட்டு கண்ட புருஷனைச்சேர்ந்த குந்தமாதேவி முதல் குற்றவாளி அதுபோக குந்தமாதேவி அவுசாரியாக போய் ஐந்துபிள்ளைகளைப் பெற்ற சூழ்ச்சிகள் தெரிந்து. துரியோதனனை பாகம் கேழ்க்கும்படிச்செய்து: பாரதபோராக நடத்தினது. கிருஷ்ணனுடை சூழ்ச்சிகளை கண்டறியாமல் 18 அக்குரோணிசேனை

களையும் கொன்ற பீமனும் அர்ச்சுனனும் மூன்றுவது குற்றவாளி இவர்களுக்கு ஜென்மாந்திர சிஷ்டை என்று சட்டம் தெரிவிக்கின்றது. தருமபுத்திரா. குற்றவாளியை தண்டிக்கப்போகுன்றேன். இன்னும் ஏதேனும் குற்றம் இருந்தால் தெரிவிப்பாய் தருமபுத்திரா

தருமர் வசனம்.

பரமேஸ்வரா ஒன்றைமறந்துவிட்டேன். மன்னிக்கனும். ஆரூவது நாள் அர்ச்சுனன் தபசு மரம் ஏறி 18 அக்குரோணிசேனைகளையும் கொல்லவேணும் என்று பாசுபதம் கேட்டபோது அதற்கு தடைச்சொல்லாமல் பாசுபதத்தை கொடுத்திரே நீர் குற்றவாளி அல்லவா பரமேஸ்வரா.

பரமன் வசனம்.

தருமபுத்திரா நீர்கேட்டது ஞாயந்தான் அதை கவனித்து பார்த்தால் எல்லோரைவிட நசன்தான் பெரிய ருற்றவாளி சட்டம் என்பது எல்லோருக்கும் ஒரே சட்டம்தான் சிரைச்சாலையைத் துறந்து எல்லோரையும் சிறைக்குள் அடைந்துவிடும் தர்ம புத்திரா மன்னிப்பு வேண்டாம்.

தருமர் தரு—அராபி ராகம்: அட தாளம்.

காவல்காரவீரா வாரும் ஓடி வாரும்
கைதிகளகப்பட்டார் பாரும் கண்ணால் பாரும்
கடவுளைமுன் கட்டுகட்டுங்கள் அந்த
கண்ணனை பின்கட்டுகட்டுங்கள்
குந்தியை முன்கட்டுகட்டுங்கள் அந்த
குந்தியின் மக்களை கொட்டுங்கள்
பீமனை முன்கட்டுகட்டுங்கள் பின்னே
பேடியை பின்கட்டுகட்டுங்கள்
சிறைக்குள்ள திரைக்கட்டி தள்ளுங்கள் அவரை
சிலுக்க சிலுக்ககுத்திகொல்லுங்கள்
தாயாதி சேனையை கூட்டுங்கள் இந்த
தகவலறிந்திட காட்டுங்கள்
அரியன்சேனைகளா வாருங்கள் உங்களை
தண்டித்த பேர்களை பாருங்கள்

18 அக்குரோணி சேனைகள் துரியோதனன் வசனம்

அண்ணா தருமபுத்திரமகாராஜனே நமஸ்கரிக்கின்றேன். என் சேனைகள் அல்லோருடைய ஆத்மா ஜீவகாடிகளை வாவழைத்து உன் முக தரிசனத்தை காட்டினாய். எங்கள் பாக்கியம்: எங்கள் ஆத்மாவை எதற்காக அழைத்தாய் அண்ணா.



தருமர் தரு—மோகனராகம்: அட தாளம்.

அலையும் உயிர்தனை அண்ணனைமைத்தனை அரிந்துபாருங்கள்
அண்ணன்முகமதை அன்புபுரிந்திட ஆசைதீருங்கள்
செத்துமடிந்துமே சிறந்திரே எந்தன் சேனைகளா
ஜெகததில் உங்களைஎப்போபார்ப்பேனே எந்தன் சேனைகளா
தாயாதிகளை தனிக்கவிட்டேனே எந்தன் சேனைகளா
தயங்கிமனமது தியங்கலாகினேன் எந்தன் சேனைகளா
பங்காளிகளை பதரவிட்டுமே எந்தன் சேனைகளா
பருதேசியப்போல் பாதவிக்கிறேன் எந்தன் சேனைகளா
உங்கள்உயிர்தனை வாங்கினவர்களை எந்தன் சேனைகளா
உருக்கிஉருக்கிய சிறையில்போட்டேனே எந்தன் சேனைகளா
கண்ணால்பார்த்து மோகவலைதீருங்கள் எந்தன் சேனைகளா
காலாகாலமும் வருஷவாரியா எந்தன் சேனைகளா
சொல்லைப்போலவே என்னை இரைக்குரேன் எந்தன் சேனைகளா
சொல்போல் பக்கிரிகவியர்எழுதினர் எந்தன் சேனைகளா

தருமர் வசனம்

தம்பிதுர்யோதனா உன்னுடைய 18 அக்ரோணி சேனைகளையும் உயிர்வதைச்செய்த பகைவர்களை தெரியியும் தம்பி கேழ்கின்றேன்.

துரியோதனன் வசனம்.

அண்ணா தரும புத்திரமகாராஜனே எனக்கு முதல் விரோதி என் சிறியதாயார்தான். ஏனென்றால் என் சிறியதாயார் என் சிறிய தகப்பன் பாண்டுமகாராஜனுக்கு உங்கள் ஐந்து பேர்களையும் பெற்று

எடுத்துவந்து.என்னை பாகத்தை கேட்டிருந்தால் நான் ஞாயபடியாக பங்கு பாகத்தை கொடுத்திருப்பேன் ஆனதால் அவள்செய்த பக்கம் பொருக்காமல்: உங்களை பல இம்சைகளை படுத்தியது வாஸ்தவம் தான். அதுபோக என்சிறிய தாயார் செய்த சூழ்ச்சிகளைக்கண்ட அந்த இடப்பயல் கபடமார்க்கமாக இருந்து 18 நாள் பாரதபோர் நடத்தினன் அந்த மடையன் இரண்டாவது குற்றவாளி அதுபோக எங்கள் 18 அக்குரோணி சேனைகளையும் கொல்லும்படியாக பாசுபதம் கொடுத்தாரே பரமசிவன் அவர்மூன்றாவது குற்றவாளி பீமன் அர்ச்சுனன் கூடி அந்தபாசுபதம் பெற்ற கர்வத்தால் கொன்றுஇருக்கின்றார்கள். அவர்கள் நான்காவது குற்றவாளிகள் அண்ணா.

தருமர் வசனம்.

தம்பிதுரியோதனா நீ தெரிவித்த குற்றவாளிகளை எல்லாம்: பிடித்து அடித்து முன்பதாகவே சிறையில் அடைத்து வைத்திருக்கின்றேன். அந்த கைதிகளைநீங்கள் கண்ணால்பார்க்கும்படியாக வரவழைத்தேன் அவர்களை கண்ணால் பார்த்து இன்றோடு உங்கள் கவலையைவிட்டு போய் சேருங்கள் துரியோதனா.

துரியோதனன் வசனம்.

அண்ணா உலகத்தில் நீர்தான் உத்தமன்;என்னையும் என்சேனைகளையும். கருவருத்தசண்டாளர்களை சிறையில் அடைத்ததைக் கண்டு, நாங்கள் யாவற்றமானபேர்களும்பார்த்து சந்தோஷித்தோம் ஆனல் ஒரு முக்கியமான விஷயம் எங்கள் ஆத்மா ஆனப்பட்டது.





அடைந்திருக்க இடமில்லாமல் பாதவிக்கின்றது. ஆனதால் எங்கள் ஆத்மாக்களை சிவன்பதவிக்கு ஆளாக்கவேண்டும் அண்ணு தருமபுத்திரமகாராஜனே.

தருமர் வசனம்:

துரியோதன நீங்கள் யாவற்றமானபேர்களும் சற்றுநேரம் இருங்கள் யிதோ பாரசக்தி ஆலாகோலமாக ஓடி வருகிருள். என்னவென்று கேழ்க்கலாம்.

பாரசக்தி தரு—அராபி ராகம்' அட தாளம்.

ஐயையோ இது என்ன மோசம் அந்த
பரமனைச்செய்தால் நாசம்
தருமனே பரமனை சிறைவிட்டு விலக்கிடும்
பரமனும் மீண்டாலே பாரினில் இருக்கலாம்

தருமன் தரு—அராபி ராகம். அட தாளம்.

னம்மணிஎந்தன்மேல் கோபமா அந்த
பரமனை சிறைவைத்த ஸ்தாபமா
முன்செய்த தீவினை மூண்டுதே இப்போது
முறஅரி அவருடன் முழிக்குறான் தப்பாது

பாரசக்தி தரு—அட தாளம்.

அதோபாரும் உலகமேஇடியுது அங்கே
அண்டமே தீபத்தி எரியுது
தேவர்கள் முனிவர்கள் திகைதப்பி அழுகுறார்
திறந்துவிடும் ஜெயில் ஜெகதீசன் வருகட்டும்

தருமர் தரு— அட தாளம்.

பொய்என்று நான்பார்த்தேன் அம்மணி அங்கே

பூலோகம் எரியுதே நன்மணி
அங்குமு தீபத்தி அணைவிட்டு எரியுதே
ஐயன்பரமனுரே சிறைவிட்டு வாருங்கள்

பரமன் தரு—அட தாளம்.

வஞ்சனை செய்தநாயமா தர்மா
வகைகெட்டுபோவது உபாயமா
என்னைவிட்டதுபோலே அவர்களைவிடச் செய்யும்
ஏளிதம் செய்வார்கள் இருந்திடும் என்மக்கள்

பராசக்தி தரு.

பரமனும் சொல்வதுஉச்சிதம் இது
பறவனி செய்தது கச்சிதம்
சட்டவிரோதம்மாகும் திட்டத்தை எண்ணிப்பார்
சட்டம் தவறினுலே சகலரும் மதியார்கள்

தருமர் தரு.

பராசக்தி உருவத்தைமாத்தம்மா இப்போ
பாஞ்சாலி சுயரூபம் காட்டம்மா
சத்திருதி இவர்களும் சரணம் அடையட்டும்
சகலரும் உலகினில் சவிஸ்தாரம் தெரியட்டும்

பராசக்தி தரு.

துர்கியின் உருவத்தைமாத்தினேன் இங்கே
துரோபதா உருவத்தை ஏற்றினேன்
எல்லோரும் அரிந்திட எடுத்தேனே சுயரூபம்
ஏற்றுவார் போற்றுவார் தூற்றுவார் எனை இப்போ

கிருஷ்ணன் தரு.

பாரததேவியும் நீயம்மா இந்த
பாலரை காத்திடும் ஞாயமா
பார்வதி மகிமையை பாரினில் அரிந்தோமே
பாதமே கதியென்று பாதத்தில் விழுந்தோமே

தருமர் தரு.

தயாதிகூட்டங்கள் பாரம்மா அவரை
தாயேநீ உன்பாதம் சேரம்மா
பரமனே நீர்வரம் தாருங்கள் தீருங்கள்
பரமபதம் காட்டி பக்தனு சேருங்கள்.

பீமன் அர்ச்சுனன் வசனம்.

அண்ணு நாங்கள் செய்த குற்றத்தை மன்னித்து நமது தாயாதிவர்க்கங்களை உயிர்கொடுத்து உலகத்தில் உலாவச்செய்யுங்கள் அண்ணு. நாம் எல்லோரும் ஒன்றுபட்டு வாழலாம் அண்ணு.

துரியோதனன் வசனம்.

தம்பி பீமா அர்ச்சுனா நாங்கள் உயிருடன் வாழும்படியா உரிமை கேட்டிரே இதுவே எங்களுக்கு போதுமானது. இனி நாங்கள் அரசாள்வது ஞாயமில்லை. நீங்கள் சந்தோஷமாக அஸ்தினாபுரிபட்டணத்தை அரசாண்டு சுகஜீவியாக வாழ்ந்திருங்கள். நாங்கள் பரமன்பாதம் போய்சேருகிறோம். தம்பிமார்களே பரமேஸ்வரா எங்கள் ஆத்மாவை உன் பாதநீர் துளியாக சேர்க்கவேண்டும் சுவாமி

பரமன் வசனம்.

அப்பா துரியோதனா நீங்கள் சந்தோஷமாக பரம சொர்க்க வாசல் போய் சேருங்கள். அப்பா கிருஷ்ணா நீ இன்று முதலாக நல்ல அறிவை பயன்படுத்தி உன் சுயநிலைமை காப்பாற்றிக்கொண்டு சுகஜீவியாக வாழ்ந்திருப்பாய். அப்பா பீமா அர்ச்சுனா உங்கள் வீர பராக்கிரமத்தை அடக்கி அரசாண்டுவாருங்கள்: அம்மா குந்தம தேவி நடந்த ஐயோக்கியதனங்களை மறந்து உன் மக்களோடு சுகஜீவியாக வாழ்ந்திருப்பாய் அப்பா தர்மபுத்திரமகாராஜனே உனக்கு இன்று முதலாக வீடுவாசல் பணம் பாக்கியம் மக்கள்மனிதர் ஆசைகளை இன்றோடு மறந்து என்னுடன் புறப்பட்டு கைலங்கிரிக்கு வாரும் தர்ம புத்திரா.

பரமன் பார்வதி தரு—கையாண்டி தாளம்.

கையிலங்கிரி விமானமும் கடவுள் சொற்படி வருகுதுபார்
கைலைவிட்டு கடுகஓடி காணவருகுது கண்ஜொலிக்க
மல்லிகைப்பூ மருக்கொழுந்தாம் மணக்குதுபார் அழகுடனே
முல்லைரோஜா முத்துமாலை மணமுகொண்டு வருகுதுபார்
தேவர்களும் மூவர்களும் தாங்கிவாரார் விமானத்தை
தரணிஎல்லாம் பெயரெடுத்த தர்மராஜன் காக்ஷியானர்
சென்னைநுமக பாக்கம்பூமி செப்புங்கவி பக்கிரிசாமி
செய்துவைத்த நாடகத்தை சிறப்புடனே நடத்திவந்தோம்
நாடகத்தை பார்த்தவர்கள் நானிலத்தில் நலம்பெறுவார்
நாடுவும் நன்மையுடன் நல்லமழை பொழிந்திடுமாம்

தருமர் இமகிரி தபசு நாடகம் முற்றிற்று.

பெரியநாயகி அம்மன் அச்சகம், சூளை-சென்னை-7.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
| --- | --- | --- | --- |
| 1 | 35 | சுடடுவிழுந்தது | சுட்டுவிழுந்ததுபோல் |
| 3 | 35 | எனைவிட் | எனைவிட்டு |
| 5 | 8 | | பிடித்தேன் ஐயனே பரமா |
| 6 | 22 | பேயும் | பேடியும் |
| 6 | 27 | போகபோனான் | போகபோறான் |
| 7 | 8 | வனமதுநட | கவனமதுநட |
| 7 | 33 | இமகிரியை | இமகிரி |
| 7 | 38 | பதரிதுள்ளினானே | பதரிதுள்ளினான் |
| 8 | 2 | விமஜேனா | பீமஜேனா |
| 8 | 21 | கண்ணனும் | கண்ணனே |
| 10 | 9 | வில்லகுக்டிம் | வில்லடிக்கும் |
| 11 | 26 | வதைக்கபோறான் | வதைக்கப்போறான் |
| 15 | 3 | வநத்தை | வரத்தை |
| 15 | 36 | போகுறேள் | போகுறேன் |
| 16 | 32 | | கேட்டுமே அர்ச்சுனடியன் |
| 18 | 7 | கண்ணீனன்கண்ணரீட்டு வுங்கள் - சாவுங்கள் | கண்ணனும் [கண்ணீரிட்டு |
| 18 | 30 | குலவிளங்க | குலம்விளங்க |
| 18, 21 | 1, 18 | போதையாள், பாரிசக்தி | கோதையாள், பராசக்தி |
| 22 | 26 | அழுபிறான், | அழுகிறான் |
| 22 | 32 | கொண்டுவே | கொண்டுமே |
| 25 | 6 | | சாகுரேனே தரணியிலே |
| 25 | 6,33 | அவடந்த | அடைந்த |
| 26,27 | 13,14 | மண்கள், என்பறு | மண்டுகள், என்பது |
| 28,30 | 14,14 | என்னை, னம்மணி | எள்ளு, அம்மணி |
| 31 | 5,33 | செய்து. பக்தனா | செய்வது. பக்தரு |
| 32 | 7 | ஆதமாவை | ஆத்மாவை |

# எமது புதிய நாடக விளம்பரம்.

## சமூக நாடகங்கள்.

*மணம் செய்வதை மறுத்த மணப்பெண்ணை கொலை செய்த வஞ்சகன் நாடகம் (அச்சில்)*

*தமிழ் ஆஸ்திகன் நாஸ்திகனை பிரிந்து ஆதிகாலத்து தமிழன் தெய்வ பக்தியை பறித்த திராவிட சக்தி நாடகம் (அச்சில்)*

*பள்ளிக்கு சென்ற பெண்ணை விலைக்கூறி கோவில் சொத்தை அபகரித்து விட்டு நிலத்தை இல்லை என்ற மோசக்காரன் பொய் சத்திய நாடகம் (அச்சில்)*

*வெள்ளையரை வென்று செட்டிப்பெண்ணை மணம் செய்த வன்னிய வீர நாடகம் (அச்சில்)*

*குடும்பத்தில் துன்பத்தால் ஐந்துபேர் தூக்குமாட்டி உயிர்விட்ட அழுத கண்ணீர் நாடகம் (அச்சில்)*

*பாக்கிஸ்தான் சண்டையால் ரிவால்வரினால் சுட்டுக்கொன்ற காந்தி நாடகம் (அச்சில்)*

*கொண்டவனே குலதெய்வம் என்னும் கணவன், காலில்விழுந்த காக்ஷி நாடகம் (அச்சில்)*

## புராண நாடகங்கள்.

*அண்ணாமலையார் வண்ணாரப் பெண்ணை சிறைகொண்ட கிருஷ்ண கெருவ பங்க நாடகம்.*

*மம்மதையால்மதியிழந்து மகனிடத்தில்உயிர்துறந்த கெட்டதம்பிநாடகம்.*

*பரமரிடம் பாசுபாதம், தருமரிடம், சிறைபோன, தருமர் இமயகிரி தபசு நாடகம்.*

*சத்தியா முத்தியா என்னும் கணவன் காலில் விழுந்த காக்ஷி நாடகம் (அச்சில்)*

*மைந்தனால் அன்னை தந்தை மோக்ஷம் என்னும் பக்த சாந்த லிங்கம் நாடகம் (அச்சில்)*

*இரணியனுக்கு காக்ஷிகந்த கிரணிய நாடகம் (அச்சில்)*

*ஸ்ரீ கருகாத்தாள் கற்கோடி என்னும் ஸ்ரீ அகத்தீஸ்வார் அசலாத்தம்மன் சண்டை நாடகம் (அச்சில்)*

நாடகம் ஒன்றுக்கு 12-அணா.

---

*விலாசம் :—*

**N. M. பக்கிரிசாமி,**

நெ. 6|10, மேலண்டை மாடவீதி,

தங்கம்பாக்கம்—சென்னை 6.

உ

ஸ்ரீராமஜெயம்

# கவிரத்தின காளிதாசர் சரித்திர நாடகம்

இஃது

கூடலூர்தாலுக்கா தேவனாம்பட்டணம்

ம-ா-ா-ஸ்ரீ, T. R. ராஜகோபால உபாத்தியாயர் மாணாக்கனாகிய

K. மாணிக்கபடையாட்சியின் வேண்டுகோளின்படிக்கு

ஷெ உபாத்தியாயர் மாணாக்கனும்

புதுப்பாளையம் M. நடேசபடையாட்சி குமாரனுமான

ம-ா-ா-ஸ்ரீ,

**N. காத்தமுத்து படையாட்சியாரால்**

இயற்றியதை

சின்னகாரக்காடு ம-ா-ா-ஸ்ரீ

V. நாராயணசாமி படையாட்சியாரால்

பரிசோதிக்கப்பட்டு,

திருவள்ளுவர் புத்தக நிலையம்.
139. மூர்மார்க்கட், சென்னை-3.

**அ. முத்துவடிவேல் முதலியாரால்**

**பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்**

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை

**1939**

இதன் விலை] (ரிஜிஸ்டர் காபிரைட்) [ -8-0

# ரிஜிஸ்டர் அறிவிப்பு

இதனால் சகல அச்சுக்கூடத்ததிபர்கட்கும் மற்றவர்களுக்குந் தெரியப்படுத்துவதுயாதெனில், ம-ள-ள-ஸ்ரீ, புதுப்பாளையம் N. காந்தமுத்து படையாட்சியாரால் இயற்றிய "கவிரத்தின காளிதாசர் சரித்திர நாடகம்" ஆகிய இப்புத்தகத்தை ஷெயாரிடம் சகல சுதந்தரமும் பெற்று அடியிற்கண்ட என்னால் அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளேன். இப்புத்தகத்தை மகாகனம்பொருந்திய கவர்ன்மெண்டார் அவர்கள் சட்டப்படி காபிரைட் செய்திருக்கின்றேன். ஆகையால் இப்புத்தகத்தை என்னுத்தரவின்றி யாரும் அச்சிடக்கூடாது.

இப்படிக்கு

**அ. முத்துவடிவேல் முதலியார்.**

24, தாண்டவராயப்பிள்ளை வீதி சென்னை.

ஸ்ரீராமஜெயம்

# கவிரத்தின காளிதாசர் சரித்திர நாடகம்

## விநாயகர் துதி

விருத்தம்

ஆதிஓம்பிரணவப்பொருளாய்வந்த ஐங்கரதேவாபோற்றி
பாதிமதிசிரமணிந்தபரமன்தன் மைந்தாபோற்றி
நீதியாய்காளிதாசனிட சரித்திரம்தனைபாட
தீதொன்றும்வருகாமல் சிறுவனைக்காத்திடாயே.

## மகேந்திரராஜன் வருகிற விருத்தம்

அவனியெல்லாம்ஒருகுடையின்கீழ் ஆளும்வேந்தன்
அமைச்சர்கள் அருகினில்சூழ்ந்துநிற்க
கவனமுடன்மறையோரெல்லாம் ஆசிர்வதிக்க
கனத்ததோர்முத்துமாலை மார்பிலாட
நவமணிகள்வைத்திழைத்த முடியும்மின்ன
நால்வகைச்சேனைகளும் எதிரேஓட
குவலயமெல்லாம் போற்றும்தீரன்
கொலுநாடிமகேந்திரன் வருகின்றானே.

மகேந்திரன் தரு

மண்டலத்தோர்களெல்லாம் கண்டுதினம்பணியும்
மகேந்திரராஜன்வந்தேன் கொலுமண்டபம்நாடி மகே

சண்டமாருதம்போலே தாளம்கிண்ணரிபாட
தம்பூருவீணைசத்தம் யிந்திரலோகம்நாட

சுருள் சர்ச்சனர்வந்துமே மெச்சிடும்லோலன்
உச்சிதமாகிய இச்செகபாலன் மண்

முத்துரத்தினம்வைத்த முடியும்பளபளென்ன
மேளவாத்தியம்பாடவே தொனிமிகுந்த மேள

எத்திசைமன்னரெல்லாம் என்னடிபணிந்துபோற்ற
இன்னிலமாண்டிடும் மன்னவனென்றுயேற்ற

சுருள் ஏவலர்காவலர் ஆவலாய்சூழ
நாவலர்வந்துமே நற்கவிபாட மண்

சுற்றிலும்மாதர்கள்வந்து நித்தமும்கவரிவீச
சுந்திர ஆரங்கள்மின்னவே ஒளிமிகுந்த சுந்தி
நாற்றிசைமன்னரெல்லாம் நாடியேகப்பணம்கட்ட
நாகசுரபேரிகை நானிலமெங்குமெட்ட
சுருள் நங்கையர்வந்துமே சாமரைவீச
பொங்கமதாகவே பூவையர்பேச மண்

மகிஷபுரிதன்னையாளும் மனுநீதிதவராமலே
மகிழ்ச்சியாய்யாண்டுவந்தேன் கெம்பீரமாக மகிழ்
வளைகபலமாதரெல்லாம் வாழ்த்தயிருபால்நின்று
வஞ்சியர்வந்துதினம் அஞ்சலிசெய்துபோக
சுருள் வாலைவராகியை பாலனுமெண்ணி
சீலமதாகவே சிறப்புடன்நண்ணி மண்

மகேந்திரன் கவி

மனுநீதிதவராளந்தன் மந்திரிசொல்லக்கேளாய்
இனிமையாய்நமதுநாட்டில் யிருக்கின்றகுடிகளெல்லாம்
சென்னலும்செழித்தோங்கி செழிப்புடன்அவர்களுமே
கனத்தமேதார்அருள்பெற்று களிப்புடன்வாழ்கின்றாரா.

மகேந்திரன் கவி

என்னிடதவத்தால்வந்த யிளவஞ்சிவித்யாரத்னம்
மன்னவர்புலவரையும் மாபெருங்கல்வியால்வென்றாள்
கன்னிதனைமணம்முடிக்கக் கணவனும்யாரோகாணேன்
தன்மையில்மிகுந்தகவிங்கரை சடுதியாய்அழைத்துவாரீர்.

## கவிங்கர்கள் வருகிற கவி

அரசனும்எங்களையின்று அழைக்கவேகாதில்கேட்டு
திறமையாய்அனைவர்கூடி சிந்தையும்மகிழ்ச்சியாகி
சரமுத்துஆரமாட சரிகைவேஷ்டியும்பூண்டு
கருந்தமிழ்தனைக்கற்ற கவிங்கரும்வருகின்றார்களே.

கவிங்கர்கள் தரு

கல்விபொருள்களெல்லாம் களங்கமறஉணர்ந்த
கவிங்கர்கொலுவாய்வந்தனர் அரசன்முன்னே
கவிங்கர்கொலுவாய்வந்தனர்
எல்லையிலுள்ள மன்னர் எங்களைப்பணிந்துநிற்க
சுருள் இருகரம்தன்னிலே புராணமுமேந்தி
அறமறைமறவா அரசனைக்காண கல்வி

திரேகமெல்லாம்விபூதி சிவனைநினைந்துபூசி
சிரசினில்முத்துமுடி தினகரன்போலேவீசி

சுருள் திரமாகநாங்களும் ராஜனைக்காண
பிரபலமான பெரியவர்வேண கல்வி

பட்டுபீதாம்பரமும் பணிகள்பளபளென்ன
கட்டுவமாடும்பெண்கள் நாடியருகில்பன்ன

சுருள் நங்கையர்வந்துமே சங்கீதம்பாட
இங்கிதமாகிய மங்கையராட கல்வி

நீதிநெறியுணர்ந்த ராஜன்சமுகம்நாடி
பாதிமதியணியும் பரமன்பதமேபாடி

சுருள் பாவலர்நாங்களும் ஆவலாய்வாரோம்
நாவலர்புகழும் நற்சபைபோரோம் கல்வி

மகேந்திரன் தரு

வேதமுணர்ந்தசிலரே உங்கள்பாதம்
வேந்தன்பணிந்தேன் லோலரே
ஆதாவாகயிப்போ அல்லும்பகலுமாக
தீதுகளில்லாமலே செல்வன்யான்பணிந்தேனே

கவிங்கர் தரு

வந்துபாதம்பணிந்தமன்னு வையகத்தில்
வல்லமையாய் வாழ்ந்திருப்பாய்முன்னு
அந்தரதேவர்புகழ் அரசனேஎங்களையும்
குந்தகமில்லாமலே கூறுவாய்யழைத்தசேதி

மகேந்திரன் தரு

அருந்தவத்தால்வந்தஎந்தன்செல்வி பாரினிலே
ஆடவரைசெயித்தாளவள் கல்வி
கோரும்மணம்முடிக்க கோமன்யாரோஅறியேன்
பாருலகம்தன்னிலிப்போ பார்த்துநீரழைத்துவாரும்

கவிங்கர் தரு

அழகானசிவிகையொன்றுநீரும் அதைஎடுக்க
ஆள்களுமேதந்துயிப்போ பாரும்
வழுவாமல்சென்றுநாங்கள் வஞ்சியர்க்கேற்றநாதன்
பழுதுகளில்லாமலே பாருலகில்பார்த்துவாரோம்

மகேந்திரன் கவி

அருங்கவி தனையுணர்ந்த ஐயரேசொல்லக்கேளீர்
திரமதாய்சிவிகையானும் தேவனே தந்தேனிப்போ
மருமலர்வதனமுள்ள மங்கைஎன்செல்விக்கேற்ற
சரிவர தமிழ்கற்றக்கவிங்களை அழைத்துவாரீர்.

கவிங்கர் கவி

அரசனார்சமுகம்விட்டு அனைவரும்ஒன்றுகூடி
திரமாகநம்மைவென்ற தேன்மொழிதனைகெடுக்க
உரபலகல்விஞானம் ஒன்றுமேஅறியாதவனை
நிர்மூடன் தன்னைத்தேடி நேசமாய்யேகுவோமே.

கவிங்கர் மூடனைத்தேடி செல்லும் வண்ணத் தரு

மூடவாலிபன் தன்னைத்தேடி முக்கியமாய்வாராரே
காடுமலைவனமும்தாண்டி கடிகியிப்பேவாராரே

கவிங்கர்களைஜெயித்துவந்த கன்னியாள்மதமடக்கவே
புவிதனில்மூடனைத்தேடி புண்ணியரும்வாராரே

அன்பத்தாறுதேசம்தன்னில் அடவுடனேதேடியே
மன்னவனும்காணுதாலே மயங்கியிப்போவாராரே

அடவியாகியவனத்தில்தேடி அவசரமாய்வாராரே
தடைபடாமூடனைத்தேடி தயங்காமலேவாராரே

பொது வசனம்

இவ்விதமாக கவிங்கரெல்லாம் மூடனைத்தேடிக் காட்டின்மார்க்கமாகச்செல்ல, அந்த சமயத்தில் அரிதரபுரத்திலுள்ள அனந்தநாராயண ஐயருக்கு புத்திரனாகிய அரிகாரனவன் அதிக மௌடிகத்தனமாக யிருக்கக்கண்ட அனந்தநாராயண ஐயரானவர் நீ குடும்பத்திற்கு யோக்கிதையற்றவனென்று, காளன் என்று பெயர் மாற்றிவைத்து ஆடுமாடுகளை மேய்த்துவரும்படியாக திட்டம் செய்ய, அதன் பிரகாரம் காளன் என்னும் அரிகரன் ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு காட்டின் மார்க்கமாக வருகின்றான்.

## காளன் என்னும் அரிகரன் வருகிற கவி

மெய்தனில்கந்தைபூண்டு மீறியேமாட்டையோட்டி
ஐயமில்லாஆடுதன்னை அணைத்துமேதோளில்தூக்கி
துய்யதோர்வனம்தன்னிலே துரிதமாய்மேய்க்கவேண்டி
கைதனில்கோலுமேந்தி காளனும்வருகின்றானே.

காளன் தரு

காட்டில்மாடாடுமேய்க்க தாட்டிகமனத்துடன்
காளன்கொளுவாய்வந்தனன் கானகம்தேடி
காளன்கொளுவாய்வந்தனன்

நாட்டிலுள்ள ஆடுகளை நானேமேய்த்திடும்தீரன்
சுருள் நாடியேகானகம் ஓடியேவாரேன்
தேடியகூளியர் நாடியேவர காட்

தோளில்கம்பளிவைத்து சுருண்டமயிரிலங்க
சுத்தமாய்கையில்கொம்பு பக்தியாகத்துலங்க
சுருள் தோளினில்ஆட்டு குட்டிமேதூக்கி
பாளிதம்பல்லாவில் பாங்குடனேந்தி காட்

ஆட்டுமந்தைகள்தன்னை அடித்துதூரத்திஓட்டி
அடவாய்கானகம்போக அனைத்துமிகவேகாட்டி
சுருள் அங்கத்தில்கோணி பொங்கமாய்பூண்டு
இங்கிர்தமாகவே சங்கையும்விண்டு காட்

கொம்புத்தடியும்கொண்டு கோணப்பாகையும்பூண்டு
தெண்புடன்கானகம்போக சீராய்வருகயின்று
சுருள் தீரனும்பலயாதவர் கூட
வானரம்மிகுந்திடும் வனமதைநாட காட்

காளன் கவி

அந்தமாய்வனத்திலின்று ஆடுமாடுகள்மேய்க்க
குந்தகமில்லாமலிப்போ குவலயம்தானறிய
சொந்தமேதார்பசுக்களையும் துருசுடன்ஓட்டிக்கொண்டு
சிந்தையும்மகிழ்ச்சியாகி சீர்வனம்வருகுவேனே.

காளன் மாடுமேய்க்கும் தரு

(தங்கரத்தின மெட்டு)

நான்வளர்க்கும்மாடுகளா நாடிவனம்வந்தீர்களா
தானுகமேய்ஞ்சிடுங்கோ என்ஆட்டுகுட்டிகளா நீங்க
தயங்கியிப்போநில்லாதிங்கோ என்ஆட்டுகுட்டிகளா

சின்னம்சிறுகன்றுகளா சிறுன ஆடுகளா
சொன்னேனிப்போஉங்களுக்கு என்ஆட்டுகுட்டிகளா நீங்க
சீக்கிரமாய்மேஞ்சிடுங்கோ என்மாடுகன்றுகளா

பொழுதுபோகும்நேரமாச்சு பொசித்திடுங்கோபுற்களையும்
வழுவாமல்வீடுசென்று என்ஆடுமாடுகளா நான்
வைத்திடுவேன்தீனியுமே என்மாடுகன்றுகளா

விறகுவெட்டவேணுமென்று வேகமாகநுனிமரத்தில்
திரமாகயேறியிப்போ அடிமரத்தையும் நான்
திட்டென்றுவெட்டுவேனே ஜல்தியாகவே

கவிங்கர் கவி

ஆரையாஎன்னைச்சேர்ந்த அருங்கவிவாணரேவாரீர்
பாரையாஅதோஒருவன் பாங்குடன்நுனிமரத்தில்
நேரதாய்குந்தியவன் நேசமாய்அடிமரத்தை
தீரமாய்வெட்டுகின்ற செல்வனேநமக்கேற்றவன்.

வசனம்

அடடா சபாஷ் அதோ பார்த்தீர்களா யாரோ ஒருவன் நுனி மரத்தில் அமர்ந்து அடிமரத்தை வெட்டுகிறான். அவன் மூடத் தனத்தை என்னவென்று சொல்வது. அவனே நமதெண்ணத்திற்கு யேற்றவன். அவன யார் என்பதாக விசாரிக்கலாம் வாருங்கள் கவிங் கர்களே.

கவிங்கர் தரு

ஆரடாநீயுமேஅச்சமின்றி யிப்போதே
அடிமரம்தன்னைவிட்டு நுனிமரத்திலே அமர்ந்து
அடிமரத்தைவெட்டுவதால் அபாயம்நேருமே

காளன் தரு

ஆரையாஎனக்குமே அபாயம்வருமென்று
ஆசையாகசொல்வதெல்லாம் நம்பலாகுமா அதை
அறியஉரைத்தாலதை நம்பலாகுமே

கவிங்கர் தரு

கிளைமுறியும்போதுகீழேநீ விழுந்துமே
தலைவேறுகால்வேறுக சாகுவாயே அப்போ
தாளாகவலையுடன் நோகுவாயே

காளன் தரு

கிளையதுமுரிந்தால் கீழேநிற்பவர்நீங்கள்
கோரியதுஉங்கள்மீது விழுந்துவிடுமே நான்
கூறினேன்யிப்போதே சென்றுவிடுமே

கவிங்கர் தரு

அடாதவார்த்தைகள் பேசாதேயினிமேலே
ஆரடாமரத்தைவிட்டு யிறங்குவாயே உன்னை
பாரடாபஞ்சுபோலே ஓட்டுவோமே

காளன் தரு

ஐயமாரேஎந்தனை அலட்டாதீர்யித்தி
பையலுமிறங்கமாட்டேன் ஐயமாரே நீரும்
பகரவேண்டாம்எந்தனிடம் யேகுவீரே

கவிங்கர் தரு

பாதகாஉந்தனைபரலோகம் சேர்க்கவே
ஆதனனேவெகுண்டுவந்தோம் யிப்போதே நீயும்
அந்தமரம்தன்னைவிட்டு யிறங்குவாயே

காளன் தரு

சாமிநான்யிறங்கவே தடையொன்றுமில்லையே
பூமனேயிறங்கிவந்தேன் ஐயமாரே என்னிடம்
புகலுவீர்வந்தசேதி சொல்லவேண்டுமே

கவிங்கர் கவி

அடர்வனம்தன்னில்வந்து ஆடுமாடுகள்மேய்க்கும்
திடம்பெரும்பாலனே செப்புவாய்குலமும்பேரும்.

காளன் கவி

நடம்பெரும்நாராயண ஐயர்நற்செல்வனாகவந்த
கடலுலகம்தானறியும் காளனும்என்பேரையா.

கவிங்கர் வேறு தரு

எங்கள்பின்னேவாருமப்பா காளதேவனே அப்பா காளதேவனே
இடர்ஒன்றும்நேர்ந்திடாது காளதேவனே
நன்னயமாய்உந்தனுக்கு காளதேவனே அப்பா காளதேவனே
நற்காலம்வந்ததோடா காளதேவனே

சுருள் நலமாகநீயுமே கலவரமில்லாமல்
சலையாமல்யித்தி குலையாமல்வாரும் எங்

காளன் தரு

என்னைஎங்கழைக்குதீர் ஐயமாரே சுவாமி ஐயமாரே
எடுத்துரைப்பீர்எந்தனுக்கு ஐயமாரே
உன்னிதசேதிதன்னை ஐயமாரே சுவாமி ஐயமாரே
உரைத்திடுவீர்யானறிய ஐயமாரே

சுருள் ஒளியாமல்அதனை தெளிவாமாக
நளினமாகவே நவிலுவீரையா என்

கவிங்கர்கள் தரு

கல்யாணமுனக்குசெய்ய காளதேவனே அப்பா காளதேவனே
கன்னியாளும்பார்த்துவந்தோம் காளதேவனே
எல்லைஎல்லாம்புகழும் காளதேவனே அப்பா காளதேவனே
இவ்வூர்ராஜன்மகளுக்கு காளதேவனே

சுருள் இத்ததிஉந்தனே நத்தியேவந்தோம்
சித்தமாய்எங்கள்பின் பக்தியாய்வாரும் கல்

காளன் தரு

திருமணமென்றபோதே ஐயமாரே சுவாமி ஐயமாரே
சீக்கிரம்பின்னேவாரேன் ஐயமாரே
நறுமலர்அணியும்மாதை ஐயமாரே சுவாமி ஐயமாரே
நானுமேபார்க்கவேண்டும் ஐயமாரே

சுருள் நங்கையாள்சமுகம் பொங்கமாய்யானும்
சங்கையுமின்றி தங்காமல்வாரேன் திரு

கவிங்கர் கவி

அந்தமாய்காளன் தன்னை அழைத்துமேவீடுசென்று
விந்தையாய்சுத்திசெய்து விளங்கிடகவிங்கரைப்போலே
குந்தகமொன்றில்லாத குவலயம்ஆளுகின்ற
சிந்தைமகிழ்ராஜனிடமேக சீர்பணிபூட்டுவோமே.

கவிங்கர் தரு

அலங்கிர்தம்செய்தனரே காளனுக்கு
அலங்கிர்தம்செய்தனரே

அலங்கிர்தம்செய்தாரே அருங்கவிவாணரைப்போல
விலையில்லாபணிகளும் வேகமாய்பூட்டினார் அல

சந்தனம்புனுகுடனே சவ்வாது அத்தர்களும்
அங்கம்மிகுத்திட அதிகமாய்பூசினோம் அல

பட்டுபீதாம்பரமுடன் பலவித ஆடைகளும்
கட்டும்சரப்பளி கழுத்தினில்பூட்டினோம் அல

வச்சிரக்கல்லிழைத்த மெச்சும்கடுக்கன்களும்
உச்சிதமாகவேகச்சை யணிந்திட்டோம் அல

கவிங்கர் தரு

அரசனேகவிவாணர் தன்னையே நாங்கள்
அழைத்துவந்தோம்பாரும் முன்னையே

திரமாகஅந்தந்த தேசங்கள்சுற்றியே
கரமாகஅழைத்துமே கர்த்தனேவந்தோமே

மகேந்திரன் தரு

வித்தையில்மிகுத்திடும்ஐயரே அவரை
விரைவினில்கொண்டுவாரும் மெய்யரே
கற்றதோர்கல்வியை கன்னியாள்என்மகளும்
சுத்தமாகயிப்போ சோதித்திடுவாளே

கவிங்கர் தரு

எல்லேஎல்லாம்புகழ்ராஜனே கவிங்கரை
இட்டுவந்தோம்பாரும் நேசனே
அல்லலில்லாமலே அழைத்துமேசெல்வியை
கல்வியையறியவே கர்த்தனேசோதிப்பீர்

மகேந்திரன் தரு

சந்தோஷம்கொண்டேனேயானும் மந்திரி
சடுதியாய்ச்சென்றுமே தானும்
எந்தன்மகள்வித்யா ரத்தினம்தன்னையே
இந்தமோர்சமூகமும் யிட்டுமேவருகுவீர்

## வித்யாரத்தினம் வருகிற கவி

ஆதிநூல்நான்குவேதம் ஆய்ந்துமேஉணர்ந்தசெல்வி
நீதியாய்தந்தைதானும் நேசமாய்அழைக்கயின்று
சோதிசேர்வடிவமுள்ள சுந்தரிவித்யாரத்தினம்தான்
சேதியும்அறியவேண்டி சேயிழைவருகின்றாளே.

வித்யாரத்தினம் தரு

வித்தையில்புகழ்பெற்ற யித்தலமெல்லாமேற்ற
வித்யாரத்தினமாதுவந்தாள் தந்தையின்பக்கல் வித்
முத்துரத்தினம்வைத்த மோகனமாலைமின்ன
சுருள் மொக்குழல்மாதர்கள் பக்கத்தில்சூழ
பக்குவமாகிய பாவையர்தாழ வித்தை
பாடகம்தண்டைகொலுசு பீலிகலகலென்ன
பாவைசிகாமணிவந்தாள் வேடிக்கையாக பா
தேடும்வராகிபாதம் தினமும்மறவாசெல்வி
சுருள் திருமுகமதிலே திலர்தமுமிட்டு
கருங்குழலழகிய கன்னியர்விட்டு வித்தை

ஆதிசூழுலகம்தன்னில் அரிவையாள்எனைஜெயிக்க
ஆருமேஇல்லையே அருந்தமிழ்கற்ரோர் ஆரு
பாரிலுள்ளமன்னரை பலவரையான்கெலித்தேன்
சுருள் பத்தினியானுமே எத்திசையறிய
இக்ஷணம்தன்னிலே ஒக்கவேதெரிய வித்தை

தந்தையழைத்ததொரு விந்தையறியவேண்டி
தையல்சிகாமணிவந்தாள் எழில்மிகுந்த தை
அந்ததேவநகரில்வாழும் ஆர். ராஜகோபால்சீடன்
சுருள் அன்பனும்காத்த முத்தையன்கவியை
இன்னிலமறியவே கன்னியும்பாடி வித்தை

வித்யாரத்தினம் தரு

தந்தையேஉன்பாதமலர் போற்றி போற்றி யிப்போ
தையலாள்பணிந்தேன்புஷ்பம் சாற்றி சாற்றி

மகேந்திரன் தரு

எந்தன்பாதம்பணிந்த அம்மா அம்மா நீயும்
என்னாளுமேவாழ்ந்திருப்பாய் சும்மா சும்மா

வித்யாரத்தினம் தரு

என்னையழைத்தவிதம் ஐயா ஐயா அதை
இன்னதென்றுதானுரைப்பீர் மெய்யா மெய்யா

மகேந்திரன் தரு

கவிவாணரொருவர்வந்தார் கண்ணே கண்ணே அவரிடம்
கல்வியையுரைத்திடுவாய் முன்னே முன்னே

வித்யாரத்தினம் கவி

தந்தையும்விடையளிக்க தையலும்சந்தோஷமாகி
வந்தோர்கவிங்கரிடத்தில் வஞ்சியும்எதிரேநின்று
அந்தமாய்தெய்வமிலை அனைத்துமேஒன்றேஎன்று
சுந்தரஓர்விரலை தோகையும்காட்டிநின்றாள்.

காளன் கவி

அதிரூபவஞ்சியாளென் னருகினில்வந்துநின்று
துதிபெறஓர்விரலை தோகையும்காட்டிடவே
சதிருடன்யானுமிப்போ சரேரென்றெழுந்து
கதிபெருர்ரிருவிரலை காளனும்காட்டிநின்றான்.

மகேந்திரன் தரு

அருமறைஆய்ந்தறிந்த கலிங்கர்களே யிப்போ கலிங்கர்களே
அறிவிப்பீர்இதன்விபரம் கலிங்கர்களே
தெரியவேஎந்தன்செல்வி கலிங்கர்களே ஓகோ கலிங்கர்களே
ஒருவிரலைகாட்டிநின்றாள் கலிங்கர்களே

சுருள் உத்தமகலிங்கரும் சித்தமும்மகிழ்ந்து
மெத்தவேயிரு விரலையும்காட்டினார் அரு

கலிங்கர் தரு

ராஜருக்குராஜரான ராஜதீரனே அரசே ராஜதீரனே
நாடியந்தசேதிசொல்வோம் ராஜதீரனே
போஜனேஉனதுசெல்வி ராஜதீரனே அரசே ராஜதீரனே
பொந்தியில்நினைந்ததுதான் ராஜதீரனே

சுருள் பேருலகம்தன்னில் தெய்வமென்றென்று
ஒருவிரல்தன்னையே உத்தமிகாட்டிற்று ராஜ

மகேந்திரன் தரு

சரிசரிசம்மதித்தேன் புலவர்களே ஓகோ புலவர்களே
சாமியார்காட்டினதென்ன புலவர்களே
ஒருமையாய்எந்தனுக்கு புலவர்களே ஓகோ புலவர்களே
உரைப்பீரதையிப்பொழுதே புலவர்களே

சுருள் உள்ளம்மகிழ்ந்துமே கள்ளமில்லாமலே
விள்ளுவீரையா வள்ளலைப்போலே சரிசரி

கலிங்கர் தரு

சத்திசிவன்யிரண்டென்று ராஜதீரனே அரசே ராஜதீரனே
சாமியார்உரைப்பதாக ராஜதீரனே
பத்தியேயிருவிரலை ராஜதீரனே அரசே ராஜதீரனே
பாவலரும்காட்டிநின்றார் ராஜதீரனே

சுருள் பாசமாய்செல்வியை நேசமாய்கேட்டுமே
ஆசையாய்சேதியை அறிகுவீர்அதனை சத்தி

மகேந்திரன் வேறு தரு

எந்தன்தவமதிலேவந்த அம்மா வந்த அம்மா பதில்
யேற்றதீதாயிவ்வார்த்தை சும்மா யிது சும்மா

மூந்துமறையுணர்ந்த மொய்க்குழலேசொல்லும்
சிந்தையும்வாடாமல் செல்வியேகில்லும் எந்

வித்யாரத்தினம் தரு

ஆசையாய்என்னையீன்ற ஐயா யீன்ற ஐயா அவர்
அறிவித்தவார்த்தையே மெய்யா இது மெய்யா

பாசமாய்எந்தனை பாவலர்தமக்குமே
நேசமதாகவே திருமணம்செய்குவீர் ஆ

மகேந்திரன் தரு

கருந்தமிழ்கற்றதோர் கன்னியே எந்தன் கன்னியே உந்தன்
கருத்தினில்இஷ்டமோ உன்னியே இவர் உன்னியே

வருத்தங்களில்லாமல் வஞ்சியேசொல்லுவாய்
திருத்தமதாகவே சீர்மணம்செய்குவேன் கரு

வித்யாரத்தினம் தரு

எந்தனுக்கிசைந்ததோர் நாதனே யிவர் நாதனே என்னை
இசைந்துமணம்செய்வீர் போதனே திவ்ய போதனே

கந்தமலரணிந்த கன்னியாள்உரைத்தேனே
சுந்திரா திருமணம் துருசுடன்செய்குவீர் எந்த

மகேந்திரன் கவி

சீர்மேவும்கவிங்கரே சீக்கிரம்கேளுமிப்போ
பேர்புகழ்எனதுசெல்வி பேதைவித்யாரத்தினத்தை
நேரதாய்திருமணம்செய்ய நிச்சயித்தேன்கவிங்கருக்கு
ஆதரவானமுகூர்த்தம் அன்புடன்வைத்திடீரே.

கவிங்கர் வசனம்

ஆனால் கேளும் ராஜனே நாளையதினம் சுக்கிரவாரம் நல்ல சுப தினம்தான். ஆகையால் யிருவருக்கும் கல்யாணம் செய்யலாம் மகேந்திரராஜனே.

மகேந்திரன் தரு

திருமணம்செய்தனரே மகேந்திரராஜன்
திருமணம்செய்தனரே

திருமணம்செய்தாரே செல்விவித்யாரத்தினத்தை
கருந்தமிழ்கற்றதோர் கவிவாணர்தமக்குமே திரு

அரசாணிகால்நாட்டினார் அம்மிவைத்து
அரசாணிகால்நாட்டினார்

அரசாணிகால்நாட்டி அதற்குமுழம்சீலைகட்டி
சரசமாகசாலும் காரகமிகக்கூட்டி திரு

மணப்பொங்கல்வைத்தனரே ஓமம்வளர்த்தி
மணப்பொங்கல்வைத்தனரே
மணப்பொங்கல்வைத்துமே மணிப்பூனூல்தொட்டாரே
குணமானவேதியர் குறித்தநேரத்திலே திரு

அம்மியைமிதித்தனரே மாங்கல்யம்சூட்டி
அம்மியைமிதித்தனரே
அம்மியைமிதித்துமே அருந்ததியைக்கண்டாரே
கொம்மைவடிவமுள்ள குழந்தைஎன்மகளும் திரு

மகேந்திரன் கவி

திருமணம்முடித்துக்கொண்ட மருகனேகேளுமிப்போ
தெரிகிறபள்ளியறைக்கு சீக்கிரமாகச்செல்லும்
அருமையாய்எனதுசெல்வி அவ்விடம்வருவாள்சொன்னேன்
உரமாகநீயுமிப்போ உத்தமாயேகிடாயே.

(பள்ளியறையைப்பார்த்து சொல்வது)

காளன் கவி

பள்ளிஅறைக்குள்வந்து பார்க்கவேஎனதுமனம்
உள்ளதோர்பலகாரத்தை உத்தமன்கண்டுமேதான்
கள்ளமில்லாமல்அருகேசென்று கலவரமிகவேசெய்து
விள்ளவேஅதன்சேதியை விபரமாய்உரைத்திடுவேனே.

காளன் தரு

(நாடகம் போடவே என்ற மெட்டு)

என்னவேடிக்கைபிது இந்ததோர்வீட்டைபோலே
எங்கிலும்கண்டதில்லையே இதன்விந்தையை
என்னுலுரைக்கப்போமோ தொல்லையே

சுற்றிலும்படங்களுமே மிக்கவேதொங்குதே
திக்கிலும்கண்டதில்லையே இதைப்போலவே
எக்காலமும்பார்க்கவில்லையே

பக்குவகட்டிலொன்று தக்கவேகுலோப்புகளும்
சித்திரம்மிகக்காணுதே இதனழகை
மிக்கவேபார்த்ததில்லையே

ஆடெங்கமாடெங்க அல்லாமும்காணுமே
தேடாமல்நித்திரைசெய்வேனே இதன்மேலேநான்
பாடாமல்உறங்குவேனே என்ன

வித்யாரத்தினம் கவி

(பள்ளியரைக்கு வருதல்)

எந்தனைமணந்தோர் எழில்பெரும்மணவாளன் தான்
சுந்திரபள்ளியரைக்கு துருசுடன்சென்றிருக்க
அந்தமாய்பக்ஷணங்கள் அனைத்துமேகரத்திலேந்தி
விந்தைசேர்பள்ளியரைக்கு வேகமாய்யேகுவேனே.

வித்யாரத்தினம் தரு

(சுருளிமலை என்ற மெட்டு)

நாதன்யிருக்கும்விடம்தேடி யிப்போ
நங்கையும்காணப்போறேன் ஓடி
நாணிலமாதரைவிட வேணவிதபணிகள்பூண்டு
போறேன் யிப்போ வாரேன்

பண்டுபலகாரங்கொண்டுவாரேன் எந்தன்
பத்தாவைகாணவேண்டி போறேன்
பாவலர்கள்நாவலரை ஆவலாய்ஜெயமடைந்தேன்
நானே அன்று தானே

சுந்திரம்மிகுந்தமனைவந்தேன் எந்தன்
துணைவரும்நித்திரைசெய்ய கண்டேன்
தூக்கமேனோஉந்தனுக்கு நோக்கமாகஎழுந்திடுவீர்
நாதா பிராண போதா

வித்யாரத்தினம் வேறு தரு

(சுந்திரநாயகா தூக்கமேனோ என்ற மெட்டு)

ஆசைக்குகந்தஎந்தன் பிராணநாதா
அதிகதூக்கங்களேனோ எந்தன்நாதா
எந்தன்மேல்கோபமோதான் பிராணநாதா
எழுந்துமேகிட்டவாரும் எந்தன்நாதா
பன்னீரத்தரைக்கொண்டு பிராணநாதா
பாவையாள்வீசினேனே எந்தன்நாதா
இத்தனைகோபமேனோ பிராணநாதா
ஏரெடுத்துபார்க்காதேனோ எந்தன்நாதா

வித்யாரத்தினம் கவி

ஆசையாய்நாதன்தன்னை அரிவையாள்எழுப்பிப்பார்க்க
நேசமாய்நித்திரைதானும் நீங்காமலிருந்ததாலே
வாசனைமிகுந்திடும்தம்பலம் வஞ்சியாள்மென்றுயிப்போ
பாசமாய்வாயினில் பாவையும்உமிழ்ந்திட்டேனே.

காளன் கவி

என்னடாயிந்தஆடு என்னேரமாகயிப்போ
அன்னிதசாணம்தன்னை அரும்வாயில்போட்டதாலே
உன்னிதகழியினலே ஓரடியாய்யடித்து
சின்னபின்னங்களாக சீக்கிரம்செய்குவேனே.

வசனம்

ட்ரே ட்ரே என்னடா யிந்த ஆடுங்க ஏ வாயிலே சாணியை போடுதுங்கோ இப்ப பாரு ஒன்னென்னு அடிச்சி போறேன் பாரு.

வித்யாரத்தினம் கந்தார்த்தம்

ஆரடாபடுபாவி அறிகிலேன்நான்உந்தனையும்
கூரடாஉந்தன்குலமும்பேரும் கொப்பனஎந்தனுக்கு
சீரடாசொல்லாவிட்டால் சீக்கிரத்தில்யானுமேதான்
பாரடாவாளினலே,

தரு

பதைக்கஉந்தனைக்கொல்லுவேன் சினம்மிகுத்து
பதைக்கஉந்தனைக்கொல்லுவேன்

திசைஎங்குமறிய செப்புவாய்குலமும்பேரும்
சுருள் சிந்தைகலங்காமல் விந்தையதாகவே
உன்னிடகுலத்தை முன்னமேசொல்லுவாய் பதை

காளன் கந்தார்த்தம்

அடிக்கவேவேண்டாம்பெண்ணே அரிவையேசொல்வேன்கேளும்
படிதனில்புகழ்பெற்றபாவையே அரிகரபுரத்தேவாழும்
திடம்பெறும்அனந்தநாராயணன் செல்வனகவேவந்த
மூடமதியினலேஎன்னை,

தரு

மொய்க்குழலேகாளன்என்பார்கள் உலகம்தன்னில்
மொய்க்குழலேகாளன்என்பார்கள்

ஐயையோவேதியரும் அழைத்துஎந்தனைவந்து
சுருள் ஆசையாய்திருமணம் நேசமாய்செய்தார்
வாசகியேவேறு வகையுமில்லையே மொ

வித்யாரத்தினம் புலம்பல் தரு

என்தலையில்பிரமதேவன் எழுதினதீவினையோ
என்னநான்செய்வேனையோ கௌரி மகா கௌரி

அருந்தமிழ்கற்றோரை நான் அவமானம்செய்ததாலே
ஆடுமேய்ப்பவன்வாய்த்தான் கௌரி மகா கௌரி
புலவர்கள்செய்தசூதை பேதையாள்என்னசொல்வேன்
பெண்புத்தியாலேகெட்டேன் கௌரி மகா கௌரி
வாலைகாளிகையே வஞ்சகம்செய்தாய்நீயே
வகையொன்றும்கானறியேன் கௌரி மகா கௌரி

காளி அசரீரியவாக்கு வசனம்

அம்மா வித்யாரத்தினம் நீயாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம். யிப்போதே உன் புருஷனை என் ஆலயத்திற்கு அனுப்பினால் அவனுக்கு பீஜாக்ஷரமந்திரம் உபதேசம்செய்து புவனம்போற்றும் புலவனாகச்செய்கிறேன் சீக்கிரம் அனுப்பும்.

வித்யாரத்தினம் தரு

அஞ்சவேண்டாம்எந்தன்நாதா யானும்
அரைகுவேன்கேளுமே வேதா
கொஞ்சியேமேற்குதிசை கொற்றவாசென்றாலே
அங்கேபுவனேஸ்வரி ஆலயம்காண்பாயே

காளன் தரு

கண்டுமேஎன்செய்வேன்பெண்ணே அந்த
காரணத்தையுரைப்பாயே கண்ணே
விண்டலம்போற்றிடும் விமலியைக்கண்டுமே
மண்டலம்மதித்திடும் மங்கையேஎன்செய்வேன்

வித்யாரத்தினம் தரு

காளிகோவிலுக்குள்சென்றுமே நீயும்
தாளிட்டுக்கொள்வாயே யின்றுமே
தேவியும்வந்தாலே திறக்காமல்யிருப்பாயே
நாவினில்மந்திரம் நலமாகப்பதிப்பாளே

காளன் தரு

சென்றுவாரேன்எந்தன்தேவி உந்தன்
திருவாக்கைக்கொண்டுமே மேவி
இன்றுமேற்குதிசை இன்பமாய்நாடியே
கண்டிடகாளிகை கோவிலைத்தேடியே

காளன் கவி

அரிவையும்உரைத்தவாக்கு ஆசையாய்கேட்டுமேதான்
தெரியவேகாளியம்மன் சீர்பெருமாலயம்வந்து

திரமாகபுவனேஸ்வரி சென்றுமேயிருக்கக்கண்டு
உரமாகஉள்ளேசென்று உத்தமன்தாளிட்டானே.

பொது வசனம்

இவ்விதமாக காளன் காளியம்மன் ஆலயத்திற்குச்சென்று பார்த்தபோது அம்மன் வெளியில் சென்றிருக்க காளனனவன் உள்ளே சென்று தாளிட்டுக்கொள்ள அந்தசமையத்தில் வேட்டைக்குச்சென்றிருந்த காளியம்மனனவள் ஆலயத்தை நாடிவருவது.

## காளியம்மன் வருகிற விருத்தம்

அடவினில்வேட்டையாடி அலச்சலுமானதாலே
திடம்பெருமாலயம்நாடி தேவியும்போகவேண்டி
வெடிபடபக்கத்தினில்மெல்லி பூதகணங்கள்சூழ
கடிகியேசூலமேந்தி காளிகையும்வருகின்ருளே.

காளியம்மன் தரு சிந்து

வந்தாளே ரணபத்ரகாளி — இந்த
வையகம்தன்னிலே கண்கொண்டநீலி

நந்தகோவிந்தனிடதங்கை — அந்த
நந்திமேலேறிடும் யீசனிடமங்கை

பம்பைமுரசுதாளம்போட — நல்ல
பலவிதபேய்பூதம் வந்தெதிராட

சூலம்கத்திவாளுமேபிடித்து — உலகில்
துர்க்கையாகவேவந்தேன் பற்கடித்து

சிங்கவாகனமீதிலேறி — இந்த
ஜெகமதில்பேர்பெற வந்திடும்வீரி

வல்லாளக்கண்டனிடபாரி — அவளை
வதைசெய்துஉடலை கிழித்தவேதார்நாரி

மகிடாசூரனேயும்கொன்றேன் — உலகில்
மக்களேக்காக்கவே வந்துமேநின்றேன்

வேட்டையாடிமனமிளைத்துயின்று — அதி
வேகமாகவேவாரேனே களைத்து — வந்

காளி கவி

தேவியும்வெளியேசென்று திரும்பியேவந்துபார்க்க
தாவியேஆலயம்தானும் சாத்தவேபட்டிருக்க
கூவியேஉள்ளிருக்கும் குழந்தைநீயாரென்று
மேவியேகாளிகாதேவி மெல்லியும்கேழ்க்கலுற்ருள்.

காளி தரு

ஆரடாநீயுமேஆலயத்தின் உள்சென்று
ஆண்மையாய்கதவுதன்னை தாளிட்டவன் அதை
தாண்மைகளில்லாமலே சொல்லுவாயே

காளன் தரு

தாயாரேஉன்னிட தாள்மலர்தன்னிலே
தனையனும்போற்றிசெய்தேன் அன்னையாரே என்னை
தற்காத்துரக்ஷிப்பாயே முன்னையாரே

காளி தரு

மனதினில்யிருந்திடும் மர்மங்களென்னமோ
மங்கையறியும்படி சொல்லுவாயே நீயும்
தங்காமலெந்தனிடம் விள்ளுவாயே

காளன் தரு

தாயாரேவித்தைகள் தனையனுமறியவே
தந்தருளவேண்டுமம்மா அன்னையாரே உந்தன்
தாளிணைப்பணிந்துநின்றேன் முன்னையாரே

காளி தரு

வித்தைகளளிக்கவே விமலியால்முடியாது
வேகமாய்கதவையிப்போ திறப்பாயே நீயும்
பாகமாய்வெளியினில் வருவாயே

காளன் தரு

மூடினகதவையும் முடியாதுதிறக்கவே
தேடிமந்திரம்தாரும் அன்னையாரே என்னை
யீடேற்றநாவினில் வரைவாயே

காளி தரு

நாவதைநீட்டினல் நங்கையாள்யானுமே
பாவலனாகஉன்னை பண்ணுவேனே இந்த
நாவலர்புகழ்ந்திட விடுப்பேனே

காளன் தரு

கதவுதன்வழியால் காளனும்யானுமே
இதமாகநாவையிப்போ நீட்டினேனே நீயும்
சதமானமந்திரத்தை ஊட்டுவாயே

காளி கவி

கதவுதன்வழியால் காளனும்நாவைநீட்ட
பதமாகசூலத்தாலே பாலகன்நாவிலிப்போ
நிதமானபீஜாக்ஷரம் நீலியும்எழுதிவிட்டேன்
நிதொன்றும்வருகாது செல்வனே தாளை திறப்பாய்.

வசனம்

ஆனால் பாலகா உன்னை யான் வித்யாரத்தினத்தின் புருஷனென்று அறிந்தேன். நீ இந்த கதவின் துவாரவழியாக நாவை நீட்டியபடியால் இதோ என் சூலாயுதத்தால் உன் நாவில் பீஜாக்ஷரமந்திரத்தை எழுதினேன் இனி உனக்கு சரியொத்த புலவர்கள் உலகில் யாருமே கிடையாது. பயப்படாமல் சீக்கிரம் கதவைதிறந்து வெளியில்வாரும் பாலகா.

காளன் தரு

தாளை திறந்துமேவந்தேனே அம்மா
சங்கரிஉன்பாதம் கண்டேனே
கலையாமல்எந்தனை கடைத்தேரவைத்தாயே
சலையாமல்உன்தாளை தனையனும்பணிந்தேனே

காளி தரு

எந்தன்பாதம்பணிந்தபாலனே நீயும்
என்னாளும்வாழ்குவாய் சீலனே
கந்தமலரணிந்தகன்னியாள் உனக்குமே
சுந்திராகாளிதாசபேருமே தந்தேனே

காளிதாஸ தரு

ஆனந்தசந்தோஷம் கொண்டேனே யிப்போ
அரண்மனைசெல்லவே விண்டேனே
பானுமதிவழகிபாலகன் போகவே
தாமதமில்லாமல் தனையனையனுப்புவாய்

காளி தரு

சென்றுவாரும் எந்தன்பாலனே யிந்த
ஜெகமதில்பேர்பெறும் லோலனே
மன்றுகளில்லையே மாளிகையேகுவாய்
எண்ணாளும்எந்தனை எண்ணினால்வருவேனே

காளிதாஸ் தரு

சந்தோஷமாகயிப்போ வாரேன் வாரேன் அந்த
தையலாளரண்மனைக்கு போறேன் போறேன்

காளிஉபதேசம்பெற்று வாரேன் வாரேன் யானும்
கன்னியரைக்காணவேண்டி போறேன் போறேன்

வித்தைவழிமார்க்கம்சொன்ன மாது மாது அந்த
மெல்லியரைப்பணிவேனின்று சாது சாது

வந்துமனைதன்னையிப்போ கண்டேன் கண்டேன் உள்ளே
வாகுடனேசெல்லஎண்ணம் கொண்டேன் கொண்டேன்

வித்யாரத்தினம் கவி

விந்தைசேர்என துநாதன் விமலியாம்காளியிடம்
சுந்திரவித்தைபெற்று சொகுசுடன்வருவதையானும்
சந்தேகமறியவேண்டி தையலாள்கதவுதன்னை
எந்தனின்மனம்போலே யிருந்திடசாத்தினேனே.

காளிதாஸ் தரு

கதவைதிறப்பாய்யம்மணி நான்
காளிஉபதேசம்பெற்று நேசமாகவந்தேனிப்போ கதவை

சதமாகஉந்தன்வார்த்தை தையலேகேட்டதாலே
நிதமானகாளியாலே நோய்வாழும்பெற்று

சுருள் நேசமதாய்உந்தனை பாசமாய்தேடி
ஆசையதாகவே அரண்மனைநாடி கத

இன்னும்காமதம்யேனம்மா நீயும்
இப்படியிருப்பதுவும் தப்பிதமல்லவோ இன்னம்

கன்னியேவித்தைகள்கற்று களிப்புடன்வந்தேனிப்போ
நன்னயமாகவேநான் நங்கையரேநீயுமின்று

சுருள் நாடிகதவைவந்து ஓடியேதிறப்பாய்
மோடிகள்வேண்டாம் தேடியேவருவாய் கத

வித்யாரத்தினம் கந்தார்த்தம்

அந்தமாய்நாதன்தானும் அழைக்கவேகாதில்கேட்டு
சிந்தையும்மகிழ்ச்சியாகி திறந்தனள்கதவையிப்போ
சிந்தினைசிரமணிந்த சிவனார்தன்தேவியிடம்
குந்தகமில்லாமந்திரம்,

தரு

கொற்றவாபெற்றதென்ன அதனையிப்போ
கற்றவாசொல்வாய்மன்ன

நாற்றிசையோரறிய நாயகாஅதனையும்
சுருள் நங்கையாளும்மென் சங்கையறவே
இங்கிர்தமாகவே பொங்கமாய்விள்ளும் கொ

காளிதாஸ் கந்தார்த்தம்

அரனார்தனதுவிழியாலெரித்த அனங்கனார்தேவியைப்போலே
உருவத்தில்மிகுந்தமாதே உத்தமிகேளுமின்று
திரமாககோவிலுள்சென்று திறந்திடாமல்தாளைமூடி
கரமாகயிருந்தேனம்மா,

தரு

காளியும்வந்தாள் பீஜாக்ஷரத்தை
நீலியும்தந்தாள்
கேலிசெய்யாமலே கேட்டுமேவந்தேனே
சுருள் கெங்கையணிந்திடும் சங்கரன்பாரியும்
இங்கிர்தகாளிதாச பேர்தந்தாள் கா

வித்யாரத்தினம் தரு

சந்தோஷம்கொண்டேனே நாதா யிந்த
தையலாலுன்மேலே வேதா
மங்காமல்என்னிட மையலைதீர்ப்பாயே
இங்கிர்தம்மிகுந்திடும் எந்தனின்நாதனே

காளிதாஸ் தரு

வித்தைக்குவழிமார்க்கம் தாயே எனக்கு
செப்பிகொடுத்தவள் நீயே
பத்துமாதம்சுமந்து பெற்றதாயும்நீயே
சித்தம்கலங்குதே எட்டநில்லுவாயே

வித்யாரத்தினம் தரு

கல்வியைகண்டுமே நானும் உன்மேல்
கனமோகம்கொண்டேனே தானும்
அல்லலில்லாமலே அரிவையாள்என்னுடன்
சல்லாபமாகவே சாமியேயிருப்பீரே

காளிதாஸ் தரு

கல்விபொருள்வழியம்மா எனக்கு
காண்பித்துகொடுத்தவள் நீயம்மா
மெல்லியேஉன்னிட மெதுவடிதன்னிலே
சொல்லிபணிந்தேனே சுந்தரிவேண்டாமே

வித்யாரத்தினம் தரு வேறு தர்க்கம்

ஆசைக்கிசைந்த நேசனே உந்தன்மீது
அரிவைமோகம்கொண்டேனே வாசனே

வாசகிளந்தனையும் வதுவைசெய்துபோகலாமோ
பாசமிகவேகொண்டேன் பாவையாளைசேர்ந்திடுமே ஆ

காளிதாஸ் தரு

அருமறைஆய்ந்தறிந்தமாதே இந்தவார்த்தை
அரையவந்தாய்நீயுமிப்போதே
தெரிவையரேஉந்தன்பாதம் தேசிகனும்போற்றிசெய்தேன்
கார்குழலழகியகன்னியரே வேண்டாம்தாயே அ

வித்யாரத்தினம் தரு

திருமணம்செய்தஎந்தன் நாதா எனைவெறுத்து
திடமாகபேசலாமோ வேதா
மருவுகதம்பம்சூடும் மங்கையாளும்உந்தன்மேலே
வரியும்படர்ந்தமங்கை வஞ்சியாளும்ஆசையானேன் தி

காளிதாஸ் தரு

கல்யாணம்செய்தேனென்றாய் யம்மா உந்தனாலே
காளிதாசனாகவந்தே னம்மா
அல்லலில்லாகல்விகளை ஆதிசிவன்தேவிதந்தாள்
உள்ளம்மகிழ்ந்தேனம்மா உத்தமியேவேண்டாம்தாயே கல்

வித்யாரத்தினம் தரு வேறு தர்க்கம்

என்னசொன்னபோதிலும் எந்தனுக்கேற்காது
உன்னைவிடுவதுண்டோ எந்தன்நாதா நீரும்
இந்தவிதம்பேசலாமோ சுந்திரமாரா

காளிதாஸ் தரு

மன்றுகள்வேண்டாமே மாதாவேசென்றிடு
நன்றல்லவோநானுனக்கு எந்தன் தாயே யிப்போ
சொன்னேன்நான்யிந்தவேளை விந்தைச்சேயே

வித்யாரத்தினம் தரு

அந்தமிகுந்திடும் எந்தன்நாதாநீரும்
குந்தகம்செய்யவேண்டாம் பிராணநாதா என்மேல்
கோபமேனோஉந்தனுக்கு அருள்போதா

காளிதாஸ் தரு

தாயாரேஎன்னிடம் தடுத்துமேபேசாதே
தனையன்நான்உந்தன்வார்த்தை கேழ்ப்பேனோ இதனால்
வினைகள்வந்துநேர்ந்திடுமே பழிப்பாரே

வித்யாரத்தினம் கொச்சகம்

ஆசை துரைமன்மதரே அரிவையாள் என்னிடத்தில்
பாசமதைவெறுக்கலாமோ பாவையாள் என்னசெய்வேன்
மோசங்கள்செய்திடாமல் முத்தம்தந்துநீரும்
வாசகிஎன்றுடன் கூடி வாழ்ந்துமேயிருந்திடீரே.

காளிதாஸ் கந்தார்த்தம்

பிடிவாதமாகபேசும் பேதையாள் தன்னிடத்தில்
கடிகியேவார்த்தையாடிடாமல் காளிதாசனுமெழுந்து
சடுதியில்அரண்மனை தன்னையேவிட்டுயிப்போ
துடியுடன்வேறுதேசம்நாடி,

தரு

தோகைமயங்கவுடினன் ஊரைவிட்டு
தோகைமயங்கவுடினன்

தோகைமயங்கிடவே வேகமாயானுமிப்போ
பாவலர்கள் கண்டுஎந்தன் பாதமதில்தான்பணிய

சுருள் பாவையாள்வித்தியா ரத்தினம்வாடிட
ஆவலாகயிப்போ காவலர்தேடிட தோ

வித்யாரத்தினம் புலம்பல் தரு

(அப்பாமகனேபாம்பு என்ற மெட்டில் யீரடிசந்தம்)

ஐயையோஎந்தன்நாதா அலையவிட்டீரேநீரும்
அரிவையாள் என்னசெய்வேன் நாதா நாதா நாதா
சின்னம்சிறுவயதில் என்னைமணம்புரிந்து
சீர்குலையவிட்டீரையோ நாதா நாதா நாதா
தையலாள்உந்தனையும் சதமென்றிருந்தேனையோ
தயங்கவிட்டீரேநீரும் நாதா நாதா நாதா
எங்குநீர்சென்றீரையோ யேந்திழைஎன்னசெய்வேன்
ஏங்குதேஎன்மனது நாதா நாதா நாதா
உந்தன்மேல்மோகம்கொண்ட எந்தனைமோசம்செய்து
ஓடிநீர்போனீரையோ நாதா நாதா நாதா
அன்னையாளென்றுஎன்னை ஆலிங்கனம்செய்யாமலே
அரைந்துமேநடந்தீரையோ நாதா நாதா நாதா
கல்விபொருள்களெல்லாம் கானும்மார்க்கத்தைசொல்லி
கன்னிதனியளானேன் நாதா நாதா நாதா
எப்போதுகாணப்போறேன் எந்தன்கணவன்தன்னை
எவ்விடம்சென்றீரையோ நாதா நாதா நாதா

வித்யாரத்தினம் கவி

நாதனும்என்னைவிட்டு நாடியேவெளியில்போக
பாதகிஎந்தன்மனம்பதத்துதே என்னசெய்வேன்
சாதகமாகயிப்போ சங்கரிதன்னிடத்தில்
வேதனையானசேதி வித்தகிஉரைத்திடுவேனே.

(வித்யாரத்தினம் காளியம்மனிடம் முறையிடுதல்)

வித்யாரத்தினம் கொச்சகம்

திகிரியும்கையிலேந்தும் திருமாலின்தங்கையான
மகிடாசூரனையும் மார்புபிளந்துஉயிர்குடித்த
ஞெகிழியதுகாலிலாடும் நேரிழையேசிறுமியாள்
எகியதுவைந்துயிப்போ இன்பமாய்யான்பணிந்தேன்.

காளி கொச்சகம்

சதுர்வேதபுராணமெல்லாம் சரிவரகற்றுணர்ந்த
பதிபுகழ்ராஜனுக்கு பாலகியாய்வந்துதித்த
கதிபெறஎந்தனாளும் கன்னிகையேசுகித்துவாழி
நீதியாய்வந்தசேதி நீஎனக்குரைத்திடாயே.

வித்யாரத்தினம் தரு

தாயேஉந்தன்அருள்பெற்று நாதன்
தனியாய்எனைவிட்டி சென்றாரம்மா
நீயேயிதற்குபதில் யிப்போ
நீவியரோஅம்மா தானுரைப்பாய்

காளி தரு

அஞ்சிநீவாடவேண்டாம் கண்ணே
அவனைஉன்னுடன் சேர்த்துவைப்பேன்
மிஞ்சிஒன்றும்போகவில்லை யம்மா
மெல்லியரேஅச்சம் கொள்ளவேண்டாம்

வித்யாரத்தினம் தரு

எந்தன்நாதனுடன் நானும்
ஈஸ்வரியே சேர்ந்துவாழ
மந்தங்களில்லாமல் தாயே
மங்கைஎனக்குமே தாருமம்மா

காளி தரு

தந்தேனம்மாதாசிஉரு உனக்கு
தாராககாரம்நீயும் சென்றிருந்தால்

உந்தன்நாதன் அங்குவந்து அம்மா
உத்தமிஉந்தனை கூடிடுவான்

விதயாரத்தினம் தரு

சந்தோஷம்கொண்டேனம்மா தாயே
தையலாளெந்தன் பேருமென்ன
விந்தையாய்எந்தனுக்கு அதை
விளம்பிடவேண்டுமே என்தாயாரே

காளி தரு

வித்யாரத்தினமென்ற பேரை
வித்தகியேமாற்றி யானும்
விசாலவதிஎன்று பேரு
விளம்பினேன்உந்தனுக்கு சென்றுவாரும்

## விசாலவதி வருகிற கவி

சத்தியும்தாசிவடிவம்தந்துமே எனக்குபேரு
சித்தமாய்விசாலவதிஎன்று திருநாமம்கொடுத்தாளென்னை
பத்தியாய்தாராநகரம் பாசமாய்போகச்சொல்ல
உத்திரவின்படியேயிப்போ ஓடியேவருகின்றேனே.

விசாலவதி தரு

தாராநகரைநாடினேன் விசாலவதி
தாராநகரைநாடினேன்

தாராநகரைநாடி தாசிஉருவாகஓடி
சுருள் தையலாள்யானுமே வையகமாகிய
ஐயமில்லாமலே மைவிழிமாது தாரா

நீண்டஜடையுமாடவே செவியில்வேணை
நீலக்கம்மலும்ஜாடவே

தாண்டிநடைநடந்து தாராநகரைதேடி
சுருள் தாசியேயின்றுமே பாவையும்வாரேன்
காளியின்பாதம் கன்னியும்மறவேன் தாரா

பொதுவசனம்

இவ்விதமாக விசாலவதியானவள் தாராநகரம்சென்று ஓர்வீட்டை சுவாதீனம் செய்துக்கொண்டு காளிதாசர் வரவை எதிர்பார்த்தவளாய் யிருக்க யிப்பால் அந்த தாராநகரத்தரசனுகிய போஜராஜன் கொலு நாடி வருகின்றான்.

## போஜராஜன் வருகிற கவி

சிரமதில்மகுடமது தினகரன்ஒளிக்குமிஞ்ச
கரமதில்தனுவாளேந்தி கனத்ததோர்பணிகள்கொஞ்ச
திரமதில்மிகுதியுற்ற சிற்றரசர்கப்பங்கட்ட
புரமனதில்வாவேந்தன் போஜராஜன்வருகின்றானே.

போஜராஜன் தரு

ராஜராஜர்க்குநல்ல ராஜகெம்பீரம்பெற்ற
ராஜன்கொலுவதாகினன் போஜராஜன்
ராஜன்கொலுவதாகினன்

பாசமுடனேமந்திரி பரிவாய்அருகில்சூழ
சுருள் பலபலவாத்தியம் பேரிகைபாட
கலகலவெனை பணிகளுமாட ராஜ

பச்சைவைடூரியம்முத்து வைத்தபுஜங்கள்தன்ன
இச்செகத்தோர்களெல்லாம் எந்தன்பாதமேநன்ன
சுருள் இன்னகரமதை யாண்டிடும்ராஜன்
பென்னகர்மெச்சிடும் உன்னிதபோஜன் ராஜ

தாளம்கின்னரிபேரி டவிலும்முரசடிக்க
மேளவாத்தியசத்தம் மூவுலகம்தான்மிடிக்க
சுருள் மொய்க்குழல்மாதர்கள் பக்கத்தில்சூழ
பக்குவமாகிய பாவலர்தாழ ராஜ

புதுப்பாளையம்தன்னிலே சதிருடனேவாழும்
துதிபெறும்காந்தமுத்து சொற்பெரும்கவிபாடி
சுருள் சுந்தரமாகவே இந்தேதோர்சமுகம்
விந்தையதாகவே அந்தமாய்வந்தேன் ராஜ

போஜராஜன் கவி

சிங்காரவதனமுள்ள சீர்பெரும்மந்திரிகேளாய்
பொங்கமாய்நமதுதேசம் புகழ்பெறமும்மாரிபெய்து
சங்கடமில்லாகுடிகள் தழைத்துமேவாழ்கின்றாரா
திங்களணியீசன்பாதம் சிந்தித்திருக்கலாமே.

பொது வசனம்

இவ்விதமாக போஜராஜன் தர்பாரில் அமர்ந்திருக்க இப்பால் காளிதாசரானவர் அனேகராஜாக்களிடம் சென்று யானை குதிரை பலவித ஆடையாபரணங்களை வெகுமானம் பெற்றுக்கொண்டு கடைசியாக போஜராஜனைக் காணவேண்டி தாராநகரத்தை நாடிவருகின்றார்.

காளிதாஸ் தரு

வித்தியாரத்தினமென்னும் மெல்லியரைவிட்டுமேதானும்
வேகமாகவந்துமேவினன் தகராநகர்
பாசமாகவந்துமேவினன்

முடிபூண்டமன்னரிடம் சடுதியாய்சென்றுயானும்
கடிகியேயாணையும்பெற்றேனே அவர்களிடம்
வடிவுள்ளபரியும்கொண்டேனே

பட்டுரும்மாலைகளும் பணிகள்மிகவும்பெற்று
சட்டமாகவந்துமேவினர் தாராநகர்
திட்டமாகவந்துமேவினர்

காத்தமுத்துதாசனேயும் கருத்தினில்எண்ணிக்கொண்டு
இத்தளத்தோர்போற்றும்தீரனும் போஜராஜன்
இன்பசமுகம்வந்துமேவினர்

காளிதாஸ் கவி

ஆரடாகாவல்கார்க்கும் அன்புசேர்மந்திரிவாராய்
கூரடாராஜனிடம் குவலயம்துதியும்பெற்ற
நேரடாகாளிதாசர் நின்னேயும்காணவேண்டி
பாரடாவந்தாரென்று பாங்குடன்உரைத்திடாயே.

போஜராஜன் தரு

காளிதாசப்புலவரே சரணம் யானும்
களிப்புடன்பணிந்தேனிப்போ தருணம்

நாளினில்என்சமுகம் நாடிவந்தசேதிஎன்ன

சுருள் நவிலுவீர்அதனை பழுதகளில்லாமல்
புவிதனில்புகழும் புண்ணியவானே காளி

காளிதாஸ் தரு

சுந்திராபாதம்பணிந்த மன்னனே நீயும்
சொகுசுடன்வாழ்ந்திடுவாய் சொன்னேனே

குந்தகமில்லாமலே குவலயமெல்லாம்சுற்றி

சுருள் கொற்றவாஉன்னிடம் இத்ததிவந்தேன்
மாற்றுமின்னொரு மார்க்கமில்லையே சுந்

போஜராஜன் தரு

உந்தனேப்போல்கவிங்கர்களே தாசரே யிந்த
உலகத்தில்கண்டதில்லே நேசரே

எந்தன்சமஸ்தானத்தில் யிருந்துமேநீங்களும்
சுருள் இருக்கின்றகவிங்கர்கள் தனக்குமேமேலாய்
பரிவுடன்யிருந்துமே சரிவரபார்ப்பீர் உந்த

காளிதாஸ் தரு

இஷ்டம்போல்நானிருக்க ராஜதீரனே யிப்போ
எந்தன்மனம்சம்மதித்தேன் போஜதீரனே

கஷ்டங்கள்கொள்ளவேண்டாம் காலமுள்ளளவும்
சுருள் கார்த்திடஉந்தனே நேசமும்கொண்டேன்
பார்ப்பவர்மகிழ்ந்திட பாசமுமுண்டேன் இஷ்

போஜராஜன் கவி

ஐயனேகாளிதாசரே அடியவன்மீதுநீரும்
மெய்யனேசரபகவி மேன்மையாய்பாடவேண்டும்
நையாமல்அதனையும் நானுமேஅறியும்படி
துய்யனேகவிதன்னை துரிதமாய்பாடுவீரே.

வசனம்

ஆனால் காளிதாசரே நீர் என்மீது ஓர்மரணகவி பாடுங்கள் என் காதார கேழ்க்கவேண்டும்.

காளிதாஸ் கவி

எந்தனை ஆதரித்த எழில்பெரும்மன்னனேகேளும்
உந்தன்மேல்மரணக்கவி உத்தமன்பாடமாட்டேன்
சிந்தினைசிரமணிந்த சிவனார்தன்சாக்ஷியாக
மந்தங்களானகவி மன்னவாசொல்லமாட்டேன்.

வசனம்

ஆனால்கேளும் போஜராஜனே முக்கண்படைத்த பரமன் சாக்ஷியாக உமதுமீது நான் மரணக்கவி பாடவே மாட்டேன் இது நிச்சயம்.

போஜராஜன் வசனம்

ஆனால் காளிதாசரே நீரே என்மீது மரணகவி பாடும்படி செய்யாவிட்டால் என்பெயர் போஜராஜனை பார்க்கிறேன் சமஸ்தானத்தில் யிருந்துவாரும் தாசரே.

பொது வசனம்

இவ்விதமாக காளிதாசர் போஜராஜன் அரண்மனையில் யிருந்துவர ஒருநாள் தாசரானவர் பொழுதுபோகும் நேரத்தில் வீதிகளை சுற்றிக்கொண்டு வர இவரைக்கண்ட விசாலவதியானவள் யாதென்று சொல்வது.

விசாலவதி கவி

ஐயாதங்களிட அரவிந்தபாதம்தன்னில்
தையலாள்மலரைக்கொண்டு தான்பணிந்தேன்நீருமேதான்
மெய்யவேஊரும்பேரும் மெல்லியாள்அறியும்படி
பொய்புமேயில்லாமல் புகலுவீர்எந்தனுக்கு,

காளிதாஸ் கவி

அரவிந்தம்பணிந்துநின்ற அரிவையேசுகிக்துவாழி
திரமாகஎனதுதேசம் தெரிவிப்பேன்மகிஷபுரிதானே
கரமாகஎந்தன்பெயர் காளிதாசபுலவரென்பார்
தெரிவித்தேன்உந்தனுக்கு சீருடனறிகுவாயே.

விசாலவதி சிசபத்தியம்

ஆசைக்கிசைந்ததோர் அந்தணரேஉந்தன்மேல்
அரிவையாள்மோகமது கொண்டேனிப்போ
வேசியென்றெண்ணிடாமல் வேதங்கள்கற்றுணர்ந்த
வேதியரேஎந்தனையும் சேர்ந்திட்டாலே
காசினிதன்னிலே கதிர்மதியுள்ளளவும்
கந்தன்வள்ளிபோலேநாம் வாழ்ந்திடலாம்
நேசமாய்அரண்மனைக்கு நேரிழைஎன்னுடனே
நீருமேவந்துயின்று சேர்ந்திட்டாலே

முடுக்கு நீலமேகனும்லக்ஷிமி போல்நாமும்
காலனைவென்றசங்கரன் தேவிபோலே
வேலவன்கொட்டிவேதன் கலைமகள்போலே
காலமுள்ளளவும் கலந்துமேவாழலாமே

காளிதாஸ் தரு

ஆசைகொள்ளவேண்டாம்பெண்ணே அல்லடி. இது காசினியோர்நகைப்பார் மல்லடி.
நாசகியே இதனாலேமோசம்வரும் நானடி யிப்போ சொன்னேனிப்போ தானடி

விசாலவதி தரு

அல்லவென்றுசொல்லுவது நாதரே ஞான நல்லதல்லஉந்தனுக்கு போதரே
வல்லியரும்உன்னைத்தேடி வாருமே இன்பம் வாடியேநானிருந்தேன் தாருமே

காளிதாஸ் தரு

வாருமென்றுசொல்லியிப்போ வாதடி
வம்புசெய்யவேண்டாம்பெண்ணே நீதடி
வரும்
நருமலர்சூடுகின்ற நானடி
நங்கையரேபோறேனிப்போ தானடி
அங்கு

விசாலவதி தரு

போறேனென்றுசொல்லுவது புண்ணியா
வீரமல்லஉந்தனுக்கு கண்ணியா
எந்தன்
கார்குழலழகிய கர்த்தரே
கன்னியரும்வாடலாமோ சித்தரே
அருள்

காளிதாஸ் வேறு தரு

ஆசைக்கிசைந்தபெண்ணே அரிவையரேஉந்தனையும்
நேசமாய்சேர்ந்திடுவேன் நான் நான் நான்

விசாலவதி தரு

சந்தோஷம்மிகக்கொண்டேன் தாசரேயானுமிப்போ
எந்தன் அரண்மனைக்குள் வா வா வா

காளிதாஸ் தரு

அந்தமதன்கணையால் சிந்தைமிகமெலிந்து
உந்தனுடன்வந்தேனடி நான் நான் நான்

விசாலவதி தரு

மங்கையின்கையிரண்டை செங்கரத்தால்நீரும்பற்றி
சங்கையில்லாமல்முத்தம் தா தா தா

காளிதாஸ் வேறு தரு

சேர்ந்துநாமும்சுகித்தமோடி தெரிவையரேகேளுமடி
சோர்ந்திடாராஜனிடம் தோகையரேபோறேனடி

விசாலவதி தரு

போவதாலேஒன்றுமில்லை புண்ணியரேஎந்தனிடம்
ஆவலாகஅனுதினமும் அன்புடனேவந்திடுமே

காளிதாஸ் தரு

உந்தனைபிரியமனம் எந்தனுக்குவந்திடாது
சிந்தையும்உந்தன்மேலே தேவியரேயிருக்குமடி

விசாலவதி தரு

ஆனால்சந்தோஷம்ராஜன் அரண்மனைக்குசென்றுநீரும்
வானோர்புகழும்நாதா வந்திடுவீர்எந்தனிடம்

பொது வசனம்

இவ்விதமாக காளிதாசர் விசாலவதியின் வீட்டிற்கு போக்குவரத்தாயிருக்க இதனையறிந்த அரண்மனைபுலவர்கள் காளிதாசன்மீது பொருமைக்கொண்டு இச்சமாசாரங்களை போஜராஜனிடம் தெரிவிக்க வேண்டி தர்ப்பார் வருகின்றார்கள்.

## புலவர்கள் வருகிற கவி

அருமறைபுராணமெல்லாம் ஆய்ந்துமேஉணர்ந்தசிலர்
கரியுரித்தணிந்தோன்பாதம் கருத்தினில்தினம்துதித்து
பொறுமையில்மிகுதியுற்ற போஜராஜன் தன்னைக்காண
திரமானபுலவர்கள் சீர்சபைவருகின்றாரே.

புலவர்கள் தரு

புகழும்உலகமெல்லாம் நிகழும்தமிழைகற்ற
புலவர்கள்கும்பலாக புகழ்ச்சியாய்வாரார்
பட்டுவேஷ்டிகளாட பணிகள்பளபளென்ன
திட்டமாய்யரசன்பக்கல் திடமுடன்வாரார்
முப்புரிநூல்மார்பிலாட மொய்க்குழலாள்மாதர்பாட
இப்புவியோர்தானறிய இன்பமாய்வாரார்
காளிதாசபுலவன்தன்னை கலகம்செய்துதுலைக்கவேண்டி
வேளியமனமுடனே வேதியர்வாரார் புக

புலவர்கள் தரு

அரசேஒருசேதி வாருமே அதை
அரையமனம்வல்லையே பாருமே
திரமானகாளிதாசன் செய்கின்றகாரியம்
உரைக்கவேநாவது உத்தமாவல்லையே

போஜராஜன் தரு

என்னகாரியம்செய்தார் சொல்லுமே நீங்கள்
இசைந்துமேஎன்னெதிர் நில்லுமே
அன்னிதகாரியம் அவருமேசெய்தாரோ
நன்னயமாகவே நவிலுவீர்யிப்போது

புலவர்கள் தரு

என்னவென்றுசொல்வோம் ராஜனே யிப்போ
எங்கள்மனம்வாடுதே நேசனே
பண்ணுதகாரியம் பாவலன்செய்தானே
இன்னிலமறிந்தாலே யிழிவாகசொல்லுமே

போஜராஜன் தரு

உள்ளசேதியதை சொல்லுமே நீங்கள்
ஒன்றுக்குமஞ்சாதீர் வின்னுமே
கள்ளத்தனங்கள் தானும் காளிதாசன்செய்தானே
வின்னுவீரிப்போது வேந்தனறியவே

புலவர்கள் தரு

ஆகாதகாரியம் செய்தானே யிந்த
அரசைவீணுகவே கெடுத்தானே
பாகர்மொழியுள்ள பாவையொருத்திமேல்
மோகங்கள்கொண்டுமே மூழ்கினுன்தாசனும்

போஜராஜன் தரு

அந்தமோர்பெண்மணி யாரு அதை
அறியவேகானுமே கூறு
கந்தமலரணியும் காரிழையின்பேரை
சுந்திரபுலவரே சொல்லுவாய்யிப்போது

புலவர்கள் தரு

விசாலவதிஎன்னும் தாசி அவளை
விரும்பினுன்தாசனும் பேசி
மாசில்லாமனமுள்ள மன்னனே அவளையும்
தாசனும்சேர்ந்துமே தார்வேந்தேயிருக்கிறுன்

போஜராஜன் தரு

அப்படிஅவனுமே செய்தானு நீங்கள்
அறியஉரைத்ததும் மெய்தானு
தப்பிதமில்லாமல் தாசனும்வந்தாலே
இப்பவேஅவனையும் ஓட்டுவேன்சென்றிடீர்

மந்திரி வசனம்

அரசே! அதோ அந்த காளிதாசரும் வருகிறுர் பாருங்கள்.

(போஜராஜன் காளிதாசனைப் பார்த்து கோபிப்பது)

போஜராஜன் கவி

ஆரடாகாளிதாசா அருகினில்வாருமிப்போ
யேரடாகொர்வம்கொண்டு யிறுமாப்பானகாரியம்
பாரடாசெய்ததாலே பண்புசேர்சமுகம்விட்டு
சீரடாநீயுமிப்போ சீக்கிரம்யேகிடாயே.

பொது வசனம்

இவ்விதமாக காளிதாசனை போஜராஜன் கோபித்து வெளியில் அனுப்பிவிட அந்தசமையத்தில் போஜராஜன் தேவியாகிய லீலாவதி தர்ப்பார் வருகின்றது.

## லீலாவதி வருகிற கவி

சந்திரன்ஒளியைப்போல தையலாள்முகமிலங்க
சுந்திரபாங்கிமார்கள் சூழ்ந்துமேகவரிவீச
கந்தமும்கதம்பம்அத்தர் கன்னியாள்மேலணிந்து
சிந்தையும்மகிழ்ந்துலீலாவதி சேயிழைவருகின்றாளே.

லீலாவதி தரு

பலபலபணிகள்மின்ன நலமிகும்ராணியோவென்ன
பாவைலீலாவதிவந்தாள் நாதனைக்காண
பாவைலீலாவதிவந்தாள்

அலங்கிர்தமாகயானும் ஆடைகதம்பம்பூண்டு
சுருள் ஆசைமிகுந்திடும் ராஜனைக்காண
வாசனைதிரவியம் பூசியேவேண பலபல

கொண்டையில்மலராது குமுகுமுகுமுவென்ன
அண்டையில்சேடியர் அடவாய்வரவேபின்ன
சுருள் அன்னநடையை பின்னிடசெய்யும்
கன்னியர்வந்துமே சங்கீதம்உய்யும் பலபல

சந்திரன்வொளியைப்போல சரிகைபட்டாடைமின்ன
சுந்திரபாங்கிமார்கள் சொகுசாய்ஓடவேமுன்னே
சுருள் சுத்தமாய்நாதனை பக்தியாய்காண
உத்தமியானுமே இத்தருவேண பலபல

நடராஜன்யின்றதொரு நற்செல்வனும்காத்தமுத்து
திடமானகவியதை செப்புவேன்மனமொத்து
சுருள் சித்திரஒட்டி யாணமும்துன்ன
பக்கத்தில்சேடியர் பத்தியாய்பன்ன பலபல

லீலாவதி தரு

மன்னுஉன்னிருதாள்மலர்கள் போற்றி போற்றி மலரைசாற்றி
உன்னிதமாகவே கன்னியாள்பணிந்தேன்
இன்னிலமறியவே எந்தனின்நாதா மன்

போஜராஜன் தரு

அன்னமேபாதம்பணிந்தசொர்னமேநீ வாழி வாழி நீடூழியாக
நன்னயமாகவே நங்கையேபணிந்ததால்
தின்மைகளில்லாமல் தேவியேவாழ்ந்திடு அ

லீலாவதி தரு

காளிதாசகவிங்கரும் எங்கே எங்கே கழருவாயிங்கே
வாலேவயதுடைய வஞ்சியாள் அறியவே
தாமதமில்லாமல் தார்வேந்தேசொல்லும் காளி

போஜராஜன் தரு

சுந்தரியேஎந்தன்சமுகத்தை விட்டு விட்டு யேகும்படி
அந்தமதாகவே அனுப்பிவிட்டேன்யானும்
முந்தியுரைத்தேனே எந்தன்கண்மணியே சுந்

லீலாவதி வேறு தரு

என்னகுற்றம்செய்தாரவர் நாதா வெளியில்
யேகும்படிசெய்தீரிப்போ வேதா

அன்னிதங்கள்செய்தாரோ அரிவையாள் அறியவே
மன்னவா அதனையும் மகிழ்ச்சியாய்உரைப்பீர் என்

போஜராஜன் தரு

விசாலவதிதாசியை பெண்ணே தாசன்
விரும்பியேசேர்ந்ததாலே பெண்ணே

பாசாபாசமுடைய பாவையேயிதனாலே
தாசனைவெறுத்துமே தையலேஅனுப்பினேன் வி

லீலாவதி தரு

இப்படியும்செய்யலாமா நாதா அவர்
இருக்கும்போதுசபைதனிலே வேதா

அப்பணியீசனும் அம்மைபார்வதிபோலே
செப்பினார்உலகினில் சீருள்ளமன்னனே இப்

போஜராஜன் தரு

தகாதகாரியத்தாலே மாதே யானும்
தாசனைவெறுத்துவிட்டேன் கோதே

பாகார்மொழியுடைய பாவையேபுலவர்களும்
ஆகாதவார்த்தைகள் அரைந்தாரேஎன்னிடம் தகா

லீலாவதி கவி

மன்னவா தகுதியல்ல் மாபெரும்கவிவாணரால்
இன்னிலம்புகழ்கீர்த்தி யேகமாய்வந்திருக்க
உன்னிதமூலபொருளறியா உன்மத்தபுலவர்தம்மால்
அன்னிதவார்த்தைகேட்டு அனுப்பிடலாமோநாதா.

போஜராஜன் கவி

ஆமிது உண்மைதான் அரிவையேஉந்தன்வார்த்தை
நேமமாய்அழைத்திடுவேன் நேரிழையேசென்றிடும்
தாமதமில்லாமலந்தகாளிதாசனை அழைத்துக்கொண்டு
காமநிகர்அழகுடைய கவிங்கரேவந்திடுவீரே.

புலவர்கள் தரு

(காளிதாசரைக்கண்டு அழைப்பது)

காளிதாசபுலவரே உம்மை அரசன்
கனவேகமாய்அழைத்தார் செம்மை

காளிதாஸ் தரு

வருகிறேன்உங்கள்பின்னே யானும் யிப்போ
வாரும்ராஜன்சமுகம் தானும்

புலவர்கள் தரு

முன்னேநீர்செல்லுமையா சுவாமி நாங்கள்
பின்னடிவந்திடுவோம் நேமி

காளிதாஸ் தரு

வந்தேன் ராஜன்சமுகம் நாடி மன்னு
வாகுடன்அழைத்ததென்ன தேடி

போஜராஜன் கவி

பாதிமதியணிந்தயீசன் பாரியாள்அருளைப்பெற்ற
நீதிசேர்தாசரேயானும் நின்னையும்வெறுத்தேனென்று
வாதுசேர்கோபம்வேண்டாம் வளர்சபைதனிலிருந்து
தீதுகளில்லாமல் சிறுவனைக்காத்திடீரே.

பொது வசனம்

இவ்விதமாக போஜராஜன் காளிதாசனை சமஸ்தானத்திற்கு அழைத்துக்கொள்ள இதனையறிந்த புலவர்கள் மறுபடியும் காளிதாசனை துலைக்கவேண்டி அனைவரும் ஒருங்கேகூடி யோசனை செய்வது.

புலவர்கள் கவி

என்னுடன்யிருக்குமெந்தன் எழில்பெரும்தோழமாரே
மன்னனும்காளிதாசரை மகிழ்ந்துமேஅழைத்துக்கொண்டார்
இன்னகர்தன்னைவிட்டு எழில்பெரும்தாசனைநாமும்
உன்னிதமாய்ஒட்ட உபாயமும்சொல்லுவீரே.

வேறு புலவர் வசனம்

அடே அப்புசாஸ்திரி அதற்கு ஒருயோசனை தோன்றுகிறது. அது என்னவென்றால் நமது ராஜனுக்கு யேவல் பணிவிடைகளை செய்யும்படியான அம்புஜத்தினிடம் நாம் கொஞ்சம் பொருள் கொடுத்து ராஜன் நித்திரைசெய்யும் சமயத்தில் காளிதாசனானவன் இரவில் பெண்உடைபூண்டு அந்தப்புரத்தில் வந்துபதினம் தினம் லீலாவதியுடன் சேர்ந்து போவதாக கூவினால் இதைக்கேட்ட ராஜனானவர் உடனே காளிதாசனை அழைத்து தேசபிரஷ்டம்செய்து விடுவார் இதுதான் தக்கயோசனை புலவர்களே.

புலவர் வசனம்

சரிசரி வாருங்கள் அம்புஜம் வீட்டிற்கு போகலாம்.

## அம்புஜம் வருகிற கவி

புலவர்கள்அழைத்தசேதி பூவையாள்காதில்கேட்டு
பலபலபணிகள்பூண்டு பாதத்தில்தண்டைகொஞ்ச
நலமிகும்வதனமுள்ள நறுமலர்சிரமணிந்து
அலரியமுகமுடைய அம்புஜம்வருகின்றாளே.

அம்புஜம் தரு

அன்னரதியைப்போல — சின்னயிடையுடைய
அம்புஜம்என்னும்மாது — அரிவையும்வாரேன்

தாராநகர்மன்னனுக்கு — தகுந்தபணியாளுமான
பேராய்யம்புஜமென்னும் — பேதையும்வாரேன்

கவிங்கர்கள்என்னையின்று — களிப்புடன்அழைக்கக்கேட்டு
தாவியமனதுடைய — தையலும்வாரேன்

பட்டுபுடவைபூண்டு — பாதத்தில்தண்டைகளாட
திட்டமாய்நடைநடந்து — தேன்மொழிவாராள் அன்

அம்புஜம் தரு

அந்தணரேஉங்கள்பாதம் — அரிவைபணிந்தேன்நீதம்
எந்தனிடம்வந்தவிதம் — எடுத்துரைப்பீர்பதம்

புலவர்கள் தரு

அம்புஜமேபாதம்பணிந்த அன்னமேநீசுகித்துவாழி
செம்மையானசேதியொன்று சேயிழையேவந்தோமம்மா

அம்புஜம் தரு

உன்னதசேதிதன்னை உத்தமரேஎந்தனுக்கு
இன்னதென்றுரைக்கவேண்டும் யேந்திழையாளறியவே

புலவர்கள் தரு

காளிதாசபுலவனவன் கன்னியந்தலீலாவதியை
நாளினிலேபெண்ணாய்வந்து நடுஜாமத்தில்சேர்ந்தானென்று

அம்புஜம் தரு

இந்தசேதிதன்னையாரும் இயம்புவதுயாரிடத்தில்
குந்தகங்களில்லாமலே கூறுவாய்எந்தனுக்கு

புலவர்கள் தரு

போஜமகாராஜனவர் புசித்துக்கண்ணுரங்கும்போது
ஜாலம்செய்யாமலே தையலரேசொல்லவேண்டும்

அம்புஜம் தரு

ஐயையோபெரும்மோசம் அந்தணரேவந்துசேரும்
நையுதையோஎன்மனது நானுமேசொல்லமாட்டேன்

புலவர்கள் தரு

ஆடைபணிவேணபொருள் அனைத்துமேதந்திடுவோம்
நடையழகியிந்தவார்த்தை நவிலுவாய்ராஜனிடம்

அம்புஜம் கவி

அப்படியேசொல்வேனையா அருமறைஆய்ந்தறிந்தவரே
செப்பியபொருளைஎல்லாம் சீருடன் தருகுவீரே.

புலர்கள் கவி

இப்பவேதந்தோமம்மா இதனைநீபெற்றுக்கொண்டு
தப்பிதம்செய்யாமலே தையலேஉரைத்திடாயே.

போஜராஜன் கவி

ஆரடியேவல்காரி அம்புஜம்அருகில்வாடி
நேரடியானுமிப்போ நித்திரைசெய்யப்போறேன்
தேரடிஎனக்குநீயும் தெரிவையேவெண்சாமரம்
சீரடியின்றுமேதான் சீக்கிரம்வீசிடாயே.

போஜராஜன் தரு

போஜராஜன்

நித்திரையாகினேனே
நித்திரையாகினேனே
நித்திரையாகினேனே — சித்திரக்கட்டிலின்மீது
வெற்றிவிருதணியும் — உத்தமராஜனும் நித்
சுற்றிலும்கண்ணாடிவைத்த — ரத்தினபஞ்சணை தன்னில்
இத்திசையோர்கள்போற்றும் — இன்பமாய்ராஜனும் நித்
சிங்கத்தின்முதுகினிலே — சேர்ந்தகட்டிலின்மீது
பங்கம்வாராநித்திரையும் — பொங்கமாகசெய்குவேனே நித்
கெங்கையணிசங்கரனே — சங்கரிஉமைபாகனே
இங்கிர்தமானநித்திரை — யிடர்வாராமலேகாரும் நித்

அம்புஜம் தரு

ஐயையோஇதுவென்ன மோசம் — உலகில்
அடுக்குமோதாசன்செய்த நாசம்
தையல்லீலாவதியை — தாசனும்சேர்ந்தானே
நையவேஉலகினில் — நகைத்திடுவாரே

போஜராஜன் தரு

என்னவார்த்தைசொன்னாய் மாதே — நீயும்
எந்தனையறியாமல் கோதே
மன்னவன்அறியவே — மங்கையேஉரைத்ததை
உன்னிதமாகவே — பண்ணுவாயிப்போது

அம்புஜம் தரு.

தாசனும்பெண்வேஷம் கொண்டுமே — யிரவில்
தையல்லீலாவதியைக் கண்டுமே
நேசமாகச்சேர்ந்து — நித்தமும்போனானே
காசினியுள்ளவர் — கண்டால்நகைப்பாரே

போஜராஜன் தரு

இந்தப்படிதாசன் செய்தானா — நீயும்
இயம்பினவார்த்தையும் மெய்தானா
விந்தையாய்தாசனும் — இந்தசபைவந்தாலே
இந்தஊரைவிட்டு — யேகிடசெய்வேனே

மந்திரி வசனம்

அரசே யிதோ அந்த காளிதாசபுலவரும் வந்துகொண்டிருக்கிறார் பாரும் அரசே.

போஜராஜன் கந்தார்த்தம்

அடட ரபடுபாவியுனே அருங்கவிவாணனென்று
திடமாகஎன்னியிருந்தேன் தேவியாள்தன்னைநீயும்
தடைபடாமோகத்தினாலே தையல்போலஉருவுகொண்டு
நடுஜாமத்தில்சேர்ந்தபாவி,

தரு

நாடிஊரைவிட்டு ஓடுவாய் — என்முகத்தில்
தேடிவிழிக்காதே நாடுவாய்
பாடும்புலவனென்று — பார்த்துமேயிருந்தேனே
கூடிமருவிநீயும் — குலத்தைகெடுத்த துரோகி
சருள் கூறினேனஊரை — வேறாவிடுத்து
தேரிடவேறு — ஊருமேசென்றிடு நாடி

காளிதாஸ் வசனம்

அப்படியே தங்கள் வார்த்தைபிரகாம் போய்விடுகிறேன் அரசே.

(விசாலவதியை கண்டு சொல்லுதல்)

காளிதாஸ் கவி

கண்ணுக்குள்மணியைப்போலே கருத்தினில்விளங்கும்மாதே
திண்ணமாய்போஜராஜன் தெரிவையேஎந்தனையும்
இன்னகர்விட்டுயானும் யேகிடவாக்களித்தார்
சின்னதோர்யிடையினாளே சென்றுநான்வாரேன்பெண்ணே.

விசாலவதி தரு

என்னைவிட்டுமன்னாநீரும் — யேக மனம் நோக
சொன்னசொல்சரியோநாதா — சூதோ யிது வாதோ
சருள் சுந்தராநீருமே — சென்றிடாமலே
கந்தமலர்க்குழல் — காரிழைசொன்னேனே என்னை

காளிதாஸ் தரு

அன்னரதிதன்னையொத்த — மாதே மட மாதே
இன்னகர்மன்னன்வார்த்தைதன்னை யேற்று மனம் வேற்று
சருள் இந்ததோர்நகரை — விட்டுமேயானும்
முந்தியேபோறேன் — நிந்தனைவேண்டாம் அன்ன

விசாலவதி தரு

செய்தகுற்றம்என்னநாதா — சொல்லும் பதில் விள்ளும்
தையலாள்என்னைவிட்டு — போக யானும் நோக
சருள் தாமரையிலைநீர் — தவிக்குமாப்போலே
நேமமாய்யானுமே — நித்தமேரவாடுரேன் செய்

காளிதாஸ் தரு

அழகுடையபெண்மயிலே ஆகாதே சொல்ல போகாதே
வழுவாமல்யானுரைக்கும் வார்த்தை தன்னை கேட்டு
வஞ்சகமென்றுநீ எண்ணிடாமலே
சுருள் செஞ்சொல்மொழியுடைய வஞ்சியேயிருப்பாய் அழ

விசாலவதி வேறு தரு

உன்னைவிட்டுஅரைநாழி என்னவிதமாயிருப்பேன்
நாதரே பிராண போதரே
எந்தனுவிபொருளெல்லாம் உன்னதேஎன்றறியும்
நாதரே அருள் வேதரே

காளிதாஸ் தரு

மெல்லியரேஎந்தன்தேவி நல்லதல்லயிந்தவார்த்தை
வேண்டாமே சொல்ல வேண்டாமே
அல்லலில்லாராஜன்மொழி அரிவையரேமீறலாமோ
அல்லடி வரும் தொல்லடி

விசாலவதி தரு

தொல்லைகள்வருமென்றீர் வல்லவரேஉம்மைவிட்டு
பிரியேனே மனம் தரியேனே
எல்லைஎங்கும்புகழ்படைத்த என்னிடபிராணநாதா
வேண்டாமே போக வேண்டாமே

காளிதாஸ் தரு

மனக்கவலைகொள்ளவேண்டாம் மங்கையரேசென்றுவாரேன்
நில்லடி இங்கு நில்லடி
கனமுள்ளமாமயிலே கன்னியேகலங்கவேண்டாம்
வாரண்டி சென்று வாரண்டி

பொது வசனம்

இவ்விதமாக காளிதாசர் விசாலவதியிடம் விடைபெற்றுக் கொண்டு தாராநகரத்தைவிட்டு போய்விட அந்த சமயத்தில் போஜ ராஜன் லீலாவதியைப்பார்த்து கோபிப்பது.

போஜராஜன் கவி

அடிவாடிபடுநீலி ஆகாதகாரியங்கள்தான்
சடிதியில்செய்ததாலே தையலேஉந்தனையும்
படிதனில்எவருங்காண பாவையேகொன்றிடுவேன்
துடியுடன்நடந்தசேதி தோகையேஉரைத்திடாயே.

லீலாவதி புலம்பல் தரு

என்னகுற்றம்செய்தேனையோ பிராணநாதா நீரும்
எந்தன்மேல்கோபிக்கலானீர் பிராணநாதா
அன்யாயம்செய்யவில்லை பிராணநாதா என்னை
அடுக்குமோகேழ்க்கும்வார்த்தை பிராணநாதா
சுருள் அலருதேஎன் மனம் நலமுள்ளநாதனே
பலபலவார்த்தைகள் பகரவும்வேண்டாம் என்ன

போஜராஜன் தரு

படுபாவிகொடுநீலி பாசாங்குசெய்யாதே
பாருலகம்தன்னில் நகைப்பாரேஎந்தனை
கடுமோகம்கொண்டுமே காளிதாசன்தன்னை
காதலுடன்சேர்ந்த துரோகியே
சுருள் கன்னியேஉந்தனை சின்னங்கள்செய்வேன்
நன்னயமாகவே பன்னுவாயிப்போது படு

லீலாவதி தரு புலம்பல்

ஒன்றும்நானறியேனே பிராணநாதாயிப்போ
ஒப்புமோஎன்மனது பிராணநாதா
சென்னியில்பிர்மதேவன் பிராணநாதா எனக்கு
செப்பிஎழுதினானோ பிராணநாதா
சுருள் சிந்தைகலங்குதே யிந்தவார்த்தையால்
நிந்தனையாகுமே வந்ததில்லையே ஒன்

போஜரான் தரு

அன்றுமேஒருநாள் அருங்கவிவாணனை
சென்றிடவெளியினில் செப்பிவிடுத்தேனே
மன்றுகளாடியே மங்கையேதடுத்தாயே
மன்னவன்மேல்யிச்சை கொண்டதினாலே
சுருள் மங்கையேஉந்தனை நங்கைபோல்வந்து
இங்கேசேர்ந்ததால் பொங்குதேகோபம் அன்று

லீலாவதி கவி

ஐயையோபிராணநாதா அரிவைமேல்பழிசுமத்த
நையுதேஎனதுமனம் நானென்னசெய்வேனையோ
தையலாள்பாகனான சங்கரன்சாக்ஷியாக
மெய்யதையுரைத்தேனிப்போ மெத்தவேகடினம்வேண்டாம்.

வசனம்

ஆனால் கேளும் பிராணநாதா முக்கண்படைத்த பரமசிவம் சாக்ஷியாக அந்த காளிதாசனானவர் ஓர்நாளாகிலும் இவ்விடத்திற்கு வந்

தவே இடையாது. அவரை யான் பார்த்ததே இடையாது. நான் அவரிடத்தில் வார்த்தை யாடினதும் இல்லையாது. அப்படியிருக்க தாங்கள் சொல்வார் வார்த்தையைகேட்டு இப்படி கோபிக்கலாமா தவிரவும் எவ்வித பரிசோதனை செய்யவேண்டுமாறுலும் செய்துக் கொள்ளுங்கள் பிராணபதி.

போஜரான் கவி

இப்படியாய்ச்சொல்லக்கேட்டு யிருவிழியும்பொறிபரக்க
தப்பிதம்செய்தளந்தன் தையல்லீலாவதியேகேளாய்
கொப்பன இந்தஅக்கினியில் குதித்துமேவந்தாயாறுல்
செப்பினேன்எந்தன்பக்கல் சேர்த்துமேகொள்ளுவேனே.

லீலாவதி தரு

(அக்கினியில் யிறங்குதல்)

ஆதிகைலாதாளந்தன்
சோதிபிறையணிந்தசுவாமி
மஞ்சளாடைதானணிந்துளந்தன்
அஞ்சாமல்அக்கினியில்விழ
ஒன்றிரண்டுமூன்றுதாம்சுற்றி
குற்றங்களிருந்தாலுமேசுவாமி
சிந்தைமகிழ்ச்சியாகியாலும்
குந்தகங்கள்யில்லாமலேஎன்னை

ஆண்டவனுர்சொற்படியே
சுந்தராஅக்கினியில்இறங்கவந்தேன்
மணவாளரைமனதிலெண்ணி
அரிவையாள்யானுமேவந்தேனேயோ
உத்தமியானுமேவந்தேனிப்போ
கோதையாளெனை தண்டிப்பீரே
வந்துகுதித்திட்டேன் அக்கினியில்
குமரேசன்தந்தையேகாப்பீரே

காளி அசரீரியவாக்கு வசனம்

பொறும் பொறும் போஜமகாராஜனே! இப்பெண்மணியின்மீது யாதொரு குற்றமும் இடையாது. உன் அரண்மனையில் யிருக்கின்ற புலவர்களின் சூக்ஷியிது காளிதாசனும் ஒன்றும் அறியாத நிரபராதி. நீ அவனை தேசபிரஷ்டம் செய்யத்தகாது. இப்போதே உன் மனை யாட்டியை அழைத்துச்சென்று சுகமாகயிரும் போஜமகாராஜனே.

(சுருளிமலை என்ற மெட்டு)

போஜராஜன் தரு

பாழும்புலவர்தன்னுல் பெண்ணே
படுமோசம்போனனேடி. கண்ணே
பாவையரேநீயுமிப்போ
மானே
யானும்
ஆவலாகவந்திடுவாய்
தேனே
செழும்

லீலாவதி தரு

உந்தன்மொழிப்படியே நாதா
உத்தமியாளும்வந்தேன் வேதா
யிப்போ

உத்தமரேநாமுமிப்போ பக்தியாய்மனைக்குசெல்வோம்
வாரும் நாதா வாரும்

போஜராஜன் தரு

ஆருயிரானஎந்தன் கண்ணே
அரண்மனைசென்றிடலாம் பெண்ணே நாமும்
திருமகள்வதனமுள்ள தேவியரேஎந்தன்பின்னே
வாரும் மனம் தேரும்

லீலாவதி தரு

சிந்தைமகிழ்ந்துநாமும் மன்னா
சீர்மனைசென்றிடலாம் முன்னா நம்மிட
சீக்கிரமாய்உந்தன்பின்னே பாக்கியவதியானும்வந்தேன்
நாதா பிராண போதா

போஜராஜன் கவி

என்னுடன்யிருக்குமெந்தன் எழில்பெரும்மந்திரிகேளாய்
உன்னிதபட்டணத்தை உத்தமாயாதுகாப்பீர்
கன்னல்வில்மதனையொத்த காளிதாசரையழைத்துயானும்
நன்னயராஜ்யத்தை நாடியேவருகுவேனே.

பொது வசனம்

இவ்விதமாக போஜராஜன் தன்பட்டணத்தை மந்திரிவசம் ஒப்பித்துவிட்டு காளிதாசரை கண்டுபிடிக்கவேண்டி தன் ரூபத்தைமாற்றி செட்டியாக மாறுவேடம்பூண்டு வருகின்றார்.

## போஜராஜ செட்டி வருகிற கவி

என்னிடகொலுவைவிட்டு யேகியதாசன் தன்னை
மன்னனும்காணவேண்டி மாபெரும்ரூபம்மாற்றி
உன்னிதவர்த்தகன்போலே ஒளிபெரும்பாகைபூண்டு
தன்னிடதேசம்விட்டு தாண்டியேவருகின்றாரே.

போஜராஜ செட்டி தரு

முத்துமணிகள்விற்கும் வர்த்தகன்போலேயானும்
சித்திரபாகையும்பூண்டுமே ராஜசெட்டி
இத்தளத்தோர்காணவாராரே

விலையுயர்ந்தபவளமாலை விற்றிடும்வர்த்தகனை
கலைமகள்பாதம்போற்றியே ராஜசெட்டி
கனவேகமாய்வந்துமேவினார்

காளிதாசபுலவரையும் கண்டுபிடிக்கவேணுமென்று ராஜசெட்டி
தோளினிலேமூட்டைவைத்துமே
துரிதமாகதேடிவாராரே
வனமாய்வனம்கடந்து வந்தேநானிந்தவனம்
கனமுள்ள தாசரெங்கே எந்தன்மனமும் முத்து
கலங்குதேநான்என்னசெய்குவேன்.

பொது வசனம்

இவ்விதமாக போஜராஜ செட்டியானவர் காளிதாசரைத்தேடி ஆங்காங்குஞ்சுற்றி கடைசியாக ஓர் கானகமாகவர இப்பால் அந்த வனத்தில் ஓர் மரத்தடியில் படுத்திருந்த காளிதாசரானவர் செட்டியைப்பார்த்து கேழ்ப்பது.

காளிதாஸ் தரு

நீரும்
எந்தஊர்செட்டியாரே வாரும்
எங்கிருந்துயிங்குவாரீர் கூறும்

போஜராஜசெட்டி தரு

யானும்
இருப்பதுதாராநகரையா
வியாபாரம்செய்யப்போறேன் மெய்யா

காளிதாஸ் தரு

இப்போ
அந்தஊர்குடிகளெல்லாம் சுகமா
அரைகுவீர்நானறிய நிஜமா

போஜராஜசெட்டி தரு

அதை
சுந்திராகுடிகளெல்லாம் சுகமே
கூறினேனுந்தனுக்கு நிஜமே

காளிதாஸ் தரு

நீரும்
போஜமகாராஜனவர் சுகமா
புகலுவீர்நானறிய பதமா

போஜராஜசெட்டி தரு

அதை
அந்தசேதிசொல்லமனம் வல்லையே
அறிவித்தால்வந்திடுமே தொல்லையே

காளிதாஸ் தரு

அந்த
தொல்லைகள்சேர்ந்திடாது சொல்லுமே
அல்லலானசேதியென்ன புல்லுமே

போஜராஜசெட்டி தரு

யானும்
நேற்றியதினமவர் மாண்டார்
நேரினில்சொன்னேனிப்போ கண்டாய்

காளிதாஸ் புலம்பல் ஐம்பை தரு

ஐயையோபோஜதீரா ஆவியதை தூரந்திரையோ
நையுதையோஎன்மனது நாமெனப்போகாணபோறேன்

தாராநகர்பட்டணத்தை தனியரசு ஆண்டுவந்தீர்
நேராகஎன்னைவிட்டு நீர்மட்டும்சென்றீரையோ

அன்றுமேமரணக்கவி ஆசையாகபாடச்சொன்னீர்
மன்றுகளாயானும் மாட்டேனென்றுரைத்தேனையோ

இன்றுமேமரணகவி யிசையுடனேபாடுவதற்கு
கண்டுமகிடன்தன்னைகொன்ற காளிகையேவந்திடுவாய்

(போஜராஜன்மீது மரணகவி பாடுவது)

காளிதாஸ் கவி

ஆசுமாமதாரக்கலை பொய்த்ததே
தேசச்சந்திரன் செங்கதிர்மாய்த்ததே
மாசில்லாமகாகவி வாழ்ந்திடும்
போஜராஜபுரந்தரன் போகவே.

போஜராஜசெட்டி கவி

தாசனும்மரணக்கவி தானுமேஉரைக்கயிப்போ
நேசமாய்எனதுஆவி நில்லாமல்போகுதையோ
பாசமாய்கொங்கையணி பரமனேயென்னசெய்வேன்
கூசாமல்வந்துஎன்னை கொப்பனகார்த்திடாயே.

காளிதாஸ் கவி

நானுமேசரபகவிநவிலவே ராஜன்மீது
தானுமேஎதிரேயிருந்த தயாபரன்விழுந்ததென்ன
தோனவேகிட்டிவந்து சுந்திரன்ஆழியைக்கண்டு
காணவேபோஜனென்று கருத்தினில்மெலிகின்றானே.

வசனம்

அடடா என்ன ஆச்சரியம் நாம் போஜராஜன்மீது சரபகவிபாட அதைக்கேட்டிருந்த செட்டியாரானவர் திடீரென்று கீழேவிழுந்து யிறக்கவேண்டிய காரணம் என்ன அருகில்சென்று பார்க்கலாம் இதென்ன கணையாழி ஆதெய்வமே போஜமகாராஜன் தான் மாறுவேடமாகவந்து என்மனதை சோதித்தார். என் அருமைசினேகிதா ஆதியில் சொன்ன சபதத்தின் பிரகாரம் செய்துவிட்டீர். என்ன செய்வேன் இனி உன்னை எப்போது காண்பேன் தெய்வமே.

காளிதாஸ் புலம்பல் தரு

அருமைஎன்தோழனே அன்னீதவார்த்தைதசொல்லி மன்னு
ஆவியைதூரந்தீரையோ
இனி என்ன செய்வேன் முன்னு
உண்மையைகூறுதாலே உந்தனைசெட்டிஎன்று பாட
உன்மேல்சரபகவி
எனைநாட உயிர்ஓட பதிதேட
போஜராஜனென்றாலே புகழ்ச்சியதிகமுண்டு இல்லை
பொய்யோநான்சொல்வதெல்லாம்
அதுதொல்லை அந்தஎல்லை ராஜனில்லை
தேவியேஉந்தனையும் தாவிதினம்துதித்தேன் வாரும்
தேரும்வரம்தருள
முகம்பாரும் எனைகாரும் உயிர்தாரும்

காளி கவி அசரீரியவாக்கு

அப்பனேகாளிதாசா அழுதுமேபுலம்பவேண்டாம்
இப்பவேமுன்சொன்ன எழில்பெரும்கவியைத்தானும்
கொப்பனசீர்திருத்தி கூசாமல்பாடினாலே
தப்பிதமில்லாமல்ராஜன் தனையனேஉயிர்பெறுவான்.

காளிதாசன் போஜராஜனை எழுப்பும் ஆசி கவி

ஆசுமாமதுரக்கவி பூர்த்தமே
தேசச்சந்திரன் செங்கதிர்சூழ்ந்ததே
மாசில்லாதமகாகவி வாழ்ந்திடும்
போஜராஜபுரந்தரன் வருகவே.

(போஜராஜன் உயிர்பெற்றெழுந்து சொல்வது)

போஜராஜன் தரு

அந்தணரேஉந்தன்பாதமிப்போ அடியவன்யானும்போற்றிசெய்தேன்
எந்தன்சபதமதையானும் யீடேற்றினேன்பின்னேவாருமையா

காளிதாஸ் தரு

மன்னனேஆசிர்வதித்தேன்நீயும் மகிழ்ச்சியாகவேவாழ்ந்திடுவாய்
இன்னிதம்புகழ்படைத்தவாயிப்போ எந்தனையேமாற்றவந்திட்டாயே

போஜராஜன் தரு

போனதுபோகட்டும்நீரும் புண்ணியரேதேசம்வாருமையா
கானகம்தன்னைவிட்டுநாமும் காளிதாசரேசென்றிடலாம்

காளிதாஸ் தரு

தேசயாத்திரைசெய்துமன்னு திரும்பியேஉன்னூருக்குவந்திடுவேன்
போஜமகாராஜேந்திரனே புறப்பட்டுநீருமேசெல்லுமையா

போஜராஜன் கவி

ஸ்ரீமோரிதேசயாத்திரை அடவுடன்செய்தாலும்
மையாமல்ஏனதுதேசம் நாடியேவருவீரே.

காளிதாஸ் கவி

மெய்யனேகிலேசம்வேண்டாம் மெத்தவும்மகிழ்ச்சியாக
பொய்க்காமல்உனதுதேசம் புகழ்பெறவருகுவேனே.

பொது வசனம்

இவ்விதமாக காளிதாசர் போஜராஜனை அனுப்பிவிட்டு அனேக தேசங்களை எல்லாம் யாத்திரைசெய்து கடைசியாக ஏகாசிலாபுரத்தின் மார்க்கத்தின் மார்க்கமாக வந்துகொண்டிருக்க யிப்பால் அந்த தேசத்தில் வாசம் செய்யப்பட்ட செண்பகவல்லி என்னும் தாசி அனேக நாட்களாக காளிதாசர்மீது ஆவல்கொண்டு தர்ப்பார் வருகின்றாள்.

## செண்பகவல்லி வருகிற கவி

ஆதிலகூஷிமியைப்போல அழகினில்சிறந்தமாது
சோதிசேர்பணிகள்பூண்டு மாதாகைமாரதிசெபிக்க
காதினில்கொப்புகம்மலும் கனகப்பிரகாசமாட
சாதிமல்லிகைசூடி செண்பகவல்லிவருகின்றாளே.

செண்பகவல்லி தரு

வந்தாள்செண்பகவல்லிமாது — அதிஒயிலாய்
வாராள்செண்பகவல்லிசாது
செந்திருவதனமுள்ள — தேஜஸைப்படைத்தரூபி
சுருள் சித்திரபுலாக்குடன் — நத்துமேதுன்ன
கொத்துடன்சரப்பளி — முத்துமேமின்ன — வந்

தங்கஒட்டியாணம்பூண்டு — செவியில்வேனா
தரித்தகம்மலுமொளிவேண்டு
கெங்கையணிபரமன்பாதம் — கிளிமொழிதினம்துதிக்க
சுருள் கிண்ணாரிஆர்மோணியம் — தம்பூருவீணை
பண்ணதில்மிகுந்திடும் — பாவையரான — வந்

காப்புகொலுசுகளுமாட — விலையுயர்ந்த
கந்தம்கதம்பம்மேலேபோட
தாலிபதக்கமுடன் — சரிகைசேலையுமாட
சுருள் சந்தணகளபம் — பொங்கமாய்வீச
இங்கிர்தமாகிய — நங்கையர்பேச — வந்

வங்கிகடகங்களும்மின்ன — யிருகாத்தில்
தங்கவளையலது துன்ன

சங்கீதம்பாடிவேண | தாதிமாருங்கில்சூழ
சுருள் செண்பகவதிஎன்னும் | மங்கையும்வந்தேன்
தண்பெரும்சபைக்கு | வந்தனம்தந்தேன் வந்

செண்பகவல்லி கொச்சகம்

என்னிடபாங்கியரேஎன்ன நான்செய்வேனம்மா
மன்மதன்விடுங்கணையால் மங்கையாளும்மெலிந்துவாடி
எண்ணமதுகொண்டிருக்கும் எழில்பெரும்தாசரைநான்
கண்களினாலேஎப்போ கன்னியான்காண்பேனையோ.

வசனம்

அடி தோழிகாள் என்னடிசெய்வேன் என் எண்ணமெல்லாம் காளிதாச பெருமான்மீதே நாடுகிறதடி அவரை எப்போது என் கண்களினால் பார்க்கப்போகிறேன். அது தவிரவும் படுபாவி மன்மதன் விடும் பஞ்சபாணங்களால் என் தேகமானது இளைத்துவாடி. காளிதாசர் ஞாபகமாகவே இருக்கிறதடி அடியா நான் சற்றுநேரம் நித்திரை புரிகின்றேன். நீ ஜாக்கிரதையாக காவல்புரிந்து யாராகிலும் புது மனிதர்கள் நமது வீதியின் மார்க்கமாகச்சென்றால் உடனே என்னை எழுப்படி.

காளிதாஸ் தரு

ராஜனிடம்விடையும்பெற்றுமே | காளிதாசர்
நாடிதேசம்சுற்றிவாராரே | தந்தானத்தான
கொச்சிதேசம்குடகுதேசமும் | சென்றுவேண
குணமானகாசிதேசம்தாண்டியே | தந்தானத்தான
குந்தளதேசம்மந்தளதேசம் | கண்டுயிப்போ
கூசாமல்தேசம்பார்க்கவாராரே | தந்தானத்தான
ஏகாசிலாபுரத்தின்வீதியில் | காளிதாசர்
ஏகபோகமாகவாராரே | தந்தானத்தான

தோழி வசனம்

அம்மணி எழுந்திரு அதோ வீதியினிடமாக யாரோ ஒருவர் போகின்றாரே அவர் யாரம்மா.

செண்பகவல்லி தரு

ஐயரேசரணம்உமதுபாதம் | மெய்யரேசரணம்
ஐயரேமெய்யரே | அருள்தரும்துய்யரே
தையலாள்யானுமே | தாளிணைபணிந்தேனே ஐய

காளிதாஸ் தரு

மங்கையேவாழிஎன்னாளுமே | மகிழ்ச்சியாய்நீடூழி
மங்கையேநங்கையே | இங்குமேவந்ததை
குந்தகமில்லாமல் | கூறுவாய்வந்ததை மங்

செண்பகவல்லி தரு

மையலும்கொண்டேன் உந்தன்மேலே ஐயரேகண்டேன்
மையலும்கொண்டேனே மருவிசுகம்தந்துமே
வெய்யவன்வதனுளன் விரகம்தனைநீக்கும் மை

காளிதாஸ் தரு

நீதியுமல்லஇந்தவார்த்தை நீயுமேசொல்ல
நீதியறிந்தாலுலகில் நிந்தனையாகுமே
பாதகமாகவே பகரவேண்டாமிப்போ நீதி

(அந்தமிகுந்திடும் முகுந்தன் முருகோனே. என்ற மெட்டு)

செண்பகவல்லி தரு

ஆசைக்கொண்டேன்உன்மேல் மோசம்செய்யாமலேநீ
வா வா நீ வா வா நீ வா வா
அன்புடன்எந்தனை யின்பமாய்சேர்ந்திட
வா வா இங்கு வா வா இங்கு வா வா

காளிதாஸ் தரு

மைவிழிமாதே நையுதேஎன்மனம்
போ போ எட்ட போ போ எட்ட போ போ
மல்லுகள்செய்யாதே மாதேஎட்டநீயும்
நில் நில் எட்ட நில் நில் எட்ட நில் நில்

செண்பகவல்லி தரு

சுந்திரநாதனே எந்தன்மோகமதை
தீரும் நீரும் தீரும் நீரும் தீரும்
சுத்தமாய்மோக்ஷம் நித்தம்கிடைக்குமே
வாரும் நீரும் வாரும் நீரும் வாரும்

காளிதாஸ் தரு

என்னநான்சொன்னாலும் உந்தனுக்கேற்காது
செல்லும் நீயும் செல்லும் நீயும் செல்லும்
என்மனம்உன்மேல் சொன்னேன்அறுகாது
நில்லும் எட்ட நில்லும் எட்ட நில்லும்

செண்பகவல்லி கொச்சகம்

அருள்மிகும்தாசரே அடியவள்எந்தனையும்
மருவியேசேர்ந்துஎந்தன் மாளிகையில்யிருந்துநீரும்
திரமாகஎந்நாளும் தேவரீர்காலம்தள்ள
புரமனதில்லாமலே புண்ணியாயிருந்திடீரே.

காளிதாஸ் கொச்சகம்

நயமானவார்த்தையாலே நங்கையேஉனக்கிசைந்து
பயமில்லாமலிருக்க பாவையேஎண்ணங்கொண்டேன்

கயல்விழிமாதேயானும் கண்ணன்மைந்தன்பாணத்தாலே
மயங்கியேதயங்கலானேன் மருவிமுத்தம்தந்திடாயே.

பொது வசனம்

இவ்விதமாக காளிதாசன் ஏகாசிலாபுரத்தை யடைந்து செண்பக வல்லி என்னும் ஓர் தாசிவீட்டிலிருக்க யிப்பால் தாராநகரத்து அரசனாகிய போஜராஜன் மந்திரியைப்பார்த்து சொல்லது.

போஜராஜன் கவி

பேர்பெரும்மந்திரிகேளாய் பிரியமாய்சேதியொன்று
ஏர்பெறகாளிதாசர் இன்னமும்வரவேகாணேம்
சீர்பெரும்உலகம்தன்னில் திரிகின்றாரோஅறியவேண்டும்
கார்பெரும்தூதர்களை களிப்புடன்அழைத்துவாரீர்.

## தூதர்கள் வருகிற கவி

தலையினில்பாகைபூண்டு தாண்டியேகொக்கரித்து
விலையில்லாசெங்கோலேந்தும் வேந்தனைகாணவேண்டி
நலமிகும்கத்திகட்டாரி நாங்களும்கையிலேந்தி
துலைவினில்செல்லும்தூதர் துரிதமாய்வருகின்றாரே.

தூதர்கள் தரு

தூதர்வந்தாரே குலக்கார
தூதர்வந்தாரே
தூதரும்வந்தாரே தீரமதாகவே
பாருலகம்தன்னில் நேராகச்சென்றிடும் தூத
மன்னனழைத்ததோர் மார்க்கமதைகாண
நன்னயமாகவே நாங்களும்வேண
உன்னிதமாகவே உடைகளும்தோண
இன்னிலமறிந்தாலே யிப்போதேநாண தூத
தாராநகராளும் ராஜனுமெங்களை
நேராய்யழைத்ததோர் நீதியைகாணவே
கூரானநல்ல கத்திகட்டாரியும்
சீராகக்கொண்டுமே சிறப்புடன்வந்தோம் தூத
இந்தஉலகம்தன்னில் எங்களைவெல்லுவோர்
விந்தையதாகவே இல்லையேசொன்னோம்
அந்தம்மிகுந்திடும் அரசனைக்காணவே
குந்தகமில்லாமல் கூடியேவந்தோம் தூத

தூதர்கள் தரு

அரசேஉன்பாதமலர் போற்றி நாங்கள்
அன்புடன்பணிந்தோமிப்போ சாற்றி
திடமாய்எங்களையின்று தேவாஅழைத்தசேதி
உரமாகஅத்தனையும் உரைத்திடவேண்டுமே

போஜராஜன் தரு

எங்கன்பாதம்பணிந்த தூதரே நீங்கள்
என்னாளுமேவாழ்ந்திடுவீர் நீதரே
விந்தையாய்அழைத்தசேதி விளம்புவேன்உங்களுக்கு
சிந்தைமகிழ்ந்துநீங்கள் செய்துமுடிக்கவேண்டும்

தூதர்கள் தரு

சீக்கிரம்சொல்லுவீரே ராஜமன்னா நாங்கள்
செய்துமேமுடிக்கிறோம் போஜமன்னா
பக்குவமாகயிப்போ பலருமறியும்படி
திக்கெல்லாம்புகழும்தீரனே சொல்லவேண்டும்

போஜராஜன் தரு

அப்படியேசொல்லுகின்றேன் கேளும் யிப்போ
அறியவுலகமெல்லாம் நாளும்
கொப்பனவேநீங்களுமே கும்பலாகவேசென்று
செப்பியமொழிப்படி செய்துமேவாரும்

தூதர் கவி

இந்ததோர்நகரையாளும் எழில்பெரும்மன்னாகேளும்
அந்ததோர்சேதிசொன்ன அறியவேளங்களுக்கு
குந்தகமில்லாமலதை கூறினால்யிப்பொழுதே
சிந்தையும்மகிழ்ந்துநாங்கள் சீருடன்செய்துவாரோம்

போஜராஜன் கவி

ஆரடாதூதமாரே அறியவேசொல்வேனிப்போ
பாரடாயிதிலிருக்கும் பாதிகவிதன்னைத்தானும்
பேரடாபிற்பாதியை பிரியமாய்முடிப்போருக்கு
கூரடாநாட்டில்பாதிஎன்று குவலயம்அறியத்தானே.

தூதர்கள் தரு சிந்து

ராஜனுரைத்தமொழிகேட்டு இந்த
நலமுள்ளதூதரும்தான்நடந்தார் மாட்டு
ஓலையைகரத்தினில்பெற்று நாங்கள்
ஓடியேவாரோமே நானிலமற்று
காணுதஉலகமெல்லாம்காட்டி யிப்போ
கனவேகமாகவேபுகழையும் நாட்டி
சீரானநாடெல்லாம்சுற்றி நாங்கள்
சிந்தைகலங்காமல்வந்தோமே நத்தி
இந்தஊரில்வாழும்ஜனங்களா இதில்
எழுதியிருக்கும்கவிக்கு பிற்பாதியை

விந்தையாய்வரைந்துமேதந்தால் ராஜன்
வேணபொருள்தேசம்பாதிதருவதாய் சொன்னர்
ஓலையைபிரித்துமேபாரும் இதில்
உள்ளதோர்கவிகளே இன்னதென்றுகூறும் ராஜ

பொது வசனம்

இவ்விதமாக தூதர்கள் போஜராஜன்தந்த ஓலையைப்பெற்று அந்தந்த தேசங்களிலும் காண்பித்து முடிவில் ஏகாசிலாபுரத்தை நாடிவர அந்த சமயத்தில் காளிதாசர் செண்பகவல்லியை பார்த்து சொல்வது.

காளிதாஸ் கவி

அருமைஎன்பெண்ணே கண்ணே அற்புதமயிலேகேளும்
தெரிவையேபகலில்நித்திரை தேசிகன்செய்யப்போறேன்
பிரியமாய்அருகிருந்து பேதையேகால்கரத்தை
சரிவரபிடித்திடுவாய் தையலேநித்திரைபோறேன்.

காளிதாஸ் தரு

சித்தம்மகிழ்ந்துமே உத்தமதாசரும்
நித்திரையாகிறூரே பஞ்சணைமீது நித்
உத்தமிசெண்பகவல்லி பக்கத்தில்கால்பிடிக்க
இச்சிசையோரறியா மெத்தபஞ்சணைமீது நித்

செண்பகவல்லி தரு

கால்பிடித்தேனேமன்னுஉனக்கு கைபிடித்தேனே
பலவிதபுராணங்கள் பலவகையறிந்தவா
வல்லியாளிப்போது வணங்கிஉன்னிட கால்
எல்லைஎல்லாம்புகழும் இறைவரேயிப்போது
சல்லாபநித்திரைசாமியே வரும்படி கால்

தூதர்கள் கவி

இந்தநோர்நகரில்வாழும் எழில்பெரும்மாந்தர்களே
விந்தையாய்ஓலையிலுள்ள விளம்பியபாதிகவிக்கு
சிந்தையும்மகிழ்ந்துபாதி செப்புவேன்வரைந்தோருக்கு
அந்தநோர்நாட்டில்பாதி அளிப்பதாய்மொழிந்திட்டாரே.

செண்பகவல்லி தரு

என்னடாதண்டோரா இங்ஙனம்போடுநீர்
இன்னதென்றறியும்படி சொல்லுவீரே அதை
நன்னயமாய்எந்தனுக்குப் புல்லுவீரே

தூதர்கள் தரு

அம்மணிசேதியை அறைகுவேன்கேளுமே
இம்மையில்சீட்டிலுள்ள பாதிகவிக்கு மிச்சம்
இயற்றிடவேண்டுமே ராஜனுக்கு

செண்பகவல்லி தரு

பாதிகவிதன்னைபார்த்துமே முடித்தாலே
பாராளுமன்னரவர்என்ன தருவார் அதை
பகருவீர்நானறிய விந்தைதூதரே

தூதர்கள் தரு

அரசனிடநாட்டில் அளிப்பதாம்பேர்பாதி
அறியஉரைத்தேனம்மா எந்தன்தாயே யிப்போ
தெரிவையேசென்றுவாரோம் விந்தைசேயே

செண்பகவல்லி கவி

தூதர்கள்காண்பித்த சுந்தரிஅரைக்கவியை
தீதரக்கற்றுவந்து தேவனும்நித்திரைசெய்யும்
காதலாய்ஓடிவந்து கால்மாட்டின்சுவற்றில்நானும்
நீதியாய்அரைக்கவியை நேரிழைவரைந்திட்டேனே.

காளிதாஸ் கவி

நித்திரைதெளிந்துதாசர் நேரினில்நிமர்ந்துபார்க்க
சித்திரம்போல்சுவற்றில் தெரியவேஅரக்கவிதானும்
புத்தியும்மகிழ்ந்துஅதை பூர்த்தியேசெய்துபின்பு
நத்தியேகாளிதாசன்நானுமே உறங்குவேனே.

செண்பகவல்லி கந்தார்த்தம்

கவியுமேமுடிந்திருக்கக் காரிழையும்கண்டுகளித்து
தாவியேகாளிதாசனை தையலும்கொல்லஎண்ணி
மேவியேகாத்தில்வாளை மெல்லியும்ஓங்கியிப்போ
ஆவியும்துடித்துவாட,

தரு

அறுத்தேன்சிரத்தையானுமே நொடிக்குள்ளே அரு
அறுத்தேன்சிரத்தையிப்போ அருங்கவிவாணனே
திருத்தமாய்ஓலையில் வரைந்தேன்முழுக்கவியை
சுருள் சித்திரதாரா நகரத்தைநாடியே
உத்தமியானுமே ஓடுவேன்தேடியே அரு

செண்பகவல்லி வேறு தரு

தாராநகரைத்தேடிநடந்தாள் செண்பகவல்லி தாரா
தாராநகரைத்தேடிதையலும் மிகவேஓடி
பூராய்புலகமாளும் போஜனைக்காணநாடி
சுருள் புந்தியில்சந்தோஷம் விந்தையாய்கொண்டு
சுந்திரஓலையை தந்திடகண்டு தாரா

இந்தநேர்கவியைக்காட்டியே ராஜனிடம்
யேற்றிடபாதிநாட்டை தாட்டியே

சிந்தைமிகமகிழ்ந்து தெரிவைபாளும்வாரேன்
சருள் சித்திரகவமணி வைத்தோர்பணிகள்
எத்திசையறிய உத்தமிவாரேன் தாரா

செண்பகவல்லி கவி

இந்தநல்தேசமாளும் எழில்பெரும்ராஜனுக்கு
சுந்திரமந்திரியாரே தோகையாள்யானுமேதான்
அந்தோர்பிற்பாதிகவியை அரிவையாள்முடித்துவந்தேன்
சிந்தைமகிழ்ராஜனிடம் சீருடன்காட்டுவீரே.

மந்திரி வசனம்

ஆனுல் அரசே தங்கள் தண்டோரா மூலியமாக பறைசாற்றிய முற்பாதிகவிக்கு யாரோ ஒரு பெண்மணியானவள் பிற்பாதிகவியை முடிவுசெய்துகொண்டு வந்திருக்கிறது பாரும் அரசே.

போஜராஜன் கவி

அரிவையாள்தந்தசீட்டை அமைச்சரேபார்த்தேனிப்போ
சரிவரயிருந்ததாலேசந்தேகம் அதிகம்கொண்டேன்
தெரிவையாள்யின்னுரென்று சீக்கிரம்அறியவேண்டும்
உரமாகஅவளையிங்கு உத்தமா அழைத்திடாயே.

செண்பகவல்லி தரு

அரசனேஉன்பாதம் போற்றி யிப்போ
அரிவையாள்பணிந்தேனே மலர்சாற்றி

திரமானகவிதன்னை சேல்விழியானுமே
சரிவாஎழுதியேதையலாள் வந்தேனே

போஜராஜன் தரு

இந்தோர்கவிதன்னை மாதே சரிவர
எழுதிமுடித்தாயோ கோதே

சுந்தரியேநீயும் சொல்லுவாய்யிப்போது
சிந்தைகலங்காதே சேல்விழியேதப்பாது

செண்பகவல்லி தரு

எழுதிமுடித்தவள் நானே மன்னு
இயம்பினேன்யிப்போது தானே

வழுவாமல்நீர்சொன்ன வார்த்தையின்படிக்கு
பழுதுகளில்லாமல் பாதிநாட்டைத்தாரும்

போஜராஜன் தரு

என்னடிபுளுகுகிறாய் மாதே நீயும்
உள்ளதைசொல்லுவாய் யிப்போதே

நன்னயவார்த்தையை நம்பவும்முடியாது
கன்னத்தனமாக பன்னுறாய்யிப்போது

செண்பகவல்லி தரு

உள்ளதைசொன்னேனே மன்னா — என்னை
உதைக்கவேண்டாமிப்போ முன்னா
கள்ளமில்லாமலே — காரிழைபுரைத்தேனே
வள்ளலேஎந்தனை — வதைசெய்யவேண்டாமே

போஜராஜன் தரு

கவியின்கருத்தைகூரடி — யிப்போ
கன்னியேகொல்லுவேன் பாரடி
புவிதனில்போற்றிடும் — புண்ணியன்காளிதாசன்
எழுதியகவிபோல — யிருக்குதேயிப்போதே

செண்பகவல்லி கவி

ஐயையோஎன்னசொல்வேன் அருங்கவியின்கருத்தை
தையலாள்தானறியேன் தவிக்குதேஎனதுமனம்
பொய்யில்லாகாளிதாசர் புதுப்பித்தகவியேயாகும்
மையவேஅவரைக்கொன்று தற்கவிகொண்டுவந்தேன்.

போஜராஜன் புலம்பல் தரு

என்னருமைத்தோழனேஎன்னசெய்வேன் அப்பா என்னசெய்வேன்
எப்போதுனைக்காண்பேனடா — யேங்குதேமனம்
காட்டிலேகண்டுயானும் — தோழனே எந்தன் தோழனே
நாட்டிற்கழைத்தேனேடா — என்தோழனே
மாளவேசென்றாயோடா — தோழனே எந்தன் தோழனே
மன்னனும்காண்பதெப்போ — என்தோழனே
சரபகவியும்பாடி — தோழனே எந்தன் தோழனே
நானுமேயிறந்தபின்பு — என்தோழனே
ஆசிகவியும்பாடி — தோழனே எந்தன் தோழனே
அரசனைஎழுப்பிவிட்டாய் — என்தோழனே
விபசாரிகையால்மாள — தோழனே எந்தன் தோழனே
வேதனவன்எழுதினனோ — என்தோழனே

போஜராஜன் கவி

தாசரைக்கொன்றதோர் தையலேஅவரைஎங்கு
நேசமாய்புதைத்தயிடம் நேரிழையேநானறிய
பாசமாய்சொல்லிடுவாய் பாவையேசொல்லாவிட்டால்
கூசாமல்வாளினாலே கொல்லுவேன்உந்தனைத்தானே.

(காளிதாசனை புதைத்தயிடத்தை காட்டுதல்)

செண்பகவல்லி கொச்சகம்

தாராநகரையாளும் தார்வேந்தேயிவ்விடத்தில்
பாராதியுலகம்போற்றும் பாவலன்தன்னையானும்

சீராககொண்டுபுதைத்து சேயிழையாள் அவ்விடத்தில்
நேராககவியைக்கொண்டு நேசமாய்வந்திட்டேனே.

போஜராஜன் வசனம்

அடேதூதர்காள் இந்தயிடத்தைவெட்டி சோதித்துப் பாருங்கள்.

தூதர்கள் வசனம்

ஆனால் அரசே தங்கள் ஆக்கினை பிரகாரம் பூமியை வெட்டி சோதித்ததில் நமது காளிதாசரின் தலை வேறாகவும் உடல் வேறாகவும் கிடைக்கப்பட்டது அரசே.

போஜராஜன் காளிதாசரின் தலையை கரத்திலெடுத்து புலம்பல் தரு

தோழனே என்னசெய்வேன் துடிக்குதேஎந்தன் திரேகம்
துண்டம்துண்டமாயானாய் தோழனே எந்தன் தோழனே
உடல்வேறாய்தலைவேறாய் உத்தமாஆனதோடா
உன்னைநான்எப்போகாண்பேன் தோழனே எந்தன் தோழனே
ஈடில்லாபுலவனென்று எங்குமேதானறிய
இங்குவந்திறந்தாயோடா தோழனே எந்தன் தோழனே
பாழும்புலவர்கள்சொன்ன படுவார்த்தைதன்னைகேட்டு
பாவலாயுனையிழந்தேன் தோழனே எந்தன் தோழனே

போஜராஜன் கவி

ஆரடாதூதமாரே அனைவரும்வாருமிப்போ
பாரடா இவள் தாம்நம் பாவலன் தனைக்கொன்றாள்
கூரடாகத்தியாலே கோதையாள் தன்னைவெட்டி
நேரடாவந்துநீங்கள் நேசமாய்உரைத்திடீரே.

காளிதாசன் தலைமட்டும் பேசுதல் கவி

அப்பனேபோஜமன்னா அரிவையைக்கொல்லவேண்டாம்
இப்பவேவினைப்பயனால் வேந்தனேயானும்மாண்டேன்
தப்பிதம்செய்யவில்லை தையலைவிட்டிடுவாய்
செப்பினேன்நீங்களெல்லாம் சீருடன்யேகுவீரே.

விசாலவதி புலம்பல் தரு மாரடி ஜம்பை

மாண்டீரையோமாண்டீரையோ மன்னவரேஎன்னைவிட்டு
தாண்டியேஇங்குவந்து தையலாளால்மாண்டீரையோ
மூடனாகயிருந்தஉன்னை மொய்குழலாள்மாலையிட்டு
தேடஉலகம்தானறிய தாசனாகசெய்தேனையோ
காளிகையின்உபதேசத்தால் காளிதாசபுலவராக
நாளினிலேஉன்னைப்போற்ற நற்கவிவாணரானீர்
கல்விக்குவழிமார்க்கம் காரிழையுரைத்ததாலே
அல்லலில்லாதாயாரென்று அரிவையாளைவிட்டுவந்தீர்

உந்தன்மேல்மோகம்கொண்டு உத்தமிகாளியாலே
சிந்தையான தாசிரூபம் வேல்விழியாள்யானும்பெற்று
தாராநகர் தன்னில்வந்து தாசரையும்சேர்ந்திருந்தேன்
மாராப்புகழ்தான்படைத்த மன்னவரேஎன்னசெய்வேன்
எப்போதுனைக்காண்ப்போறேன் எந்தனின்பிராணநாதா
கொப்பனவேயிங்குவந்து கோதையாலேமாண்டனரையோ
உந்தனுடன்வந்திடவே உத்தமியாள்சக்தியாலே
சிந்தைகொண்டேன்வெட்டிக்கொள்ள தேவியரேகார்த்திடுவாய்

காளி தரு

பத்தினிபோறும்போறும் நில்லு யிதோ
பராசத்திவந்தேனே சொல்லு

உத்தமியேநீயும்சித்தங் கலங்காதே
செத்தபேர்நாதனை இத்ததிஎழுப்பினேன்

காளிதாஸ் தரு

மகிடனைக்கொன்றதோர் சத்தியே உந்தனை
மைந்தனும்பணிந்தேனே நத்தியே

அகிலஉலகம்போற்றும் அன்னையேஉன்னாலே
உயிரைப்பிரிந்ததோர் உத்தமன்வந்தேனே

விசாலவதி தரு

தாசிஉருதந்த அம்மணி உன்பாதம்
தையலாள்பணிந்தேனே விண்மணி

காசினியோர்போற்றும் கன்னியேஉன்னாலே
வேசியால்மாண்டதோர் வித்தகர்வந்தாரே

போஜராஜன் தரு

நடனம்புரிந்ததோர் அம்மணி யிப்போது
நாடிபணிந்தேனே விண்மணி

விடையேறுமீசனின் யிடபாகம்அமர்ந்தாயே
கடையேனுக்குமே காக்ஷியும்தந்தாயே

காளி தரு

செந்திருபாதம்பணிந்த பக்தரே நீங்கள்
சீருடன்வாழ்குவீர் சித்தரே

அந்தம்அழகுள்ள அரிவையேநீயுமே
சுந்திரதாசனுடன் தோகையேவாழ்குவாய்

காளிதாஸ் தரு

எங்கேநான்யிருப்பது தாயே அதை
எந்தனுக்குரைத்திடாய் நீயே

மங்காமனிப்போது மைந்தனும்மறியவே
தங்காமல்சொல்லுவாய் தாசனெனக்குமே

விசாலவதி தரு

உலகத்தோர்வணங்கிடும் தாயே நான்
உத்தமியெங்கிருப்பது நீயே
நலமான திருவாயால் நவிலுவாய்யிப்போது
கலவரமில்லாமல் கன்னியுமறியவே

போஜராஜன் தரு

எந்தன்சமஸ்தானத்தி லம்மணி யிருவரை
யிருந்திடசொல்லுவாய் விண்மணி
சுந்தரியேஇனிமேலே குற்றங்கள்நேராது
கந்தமலர்வதனி கலகங்கள்வராது

காளி கவி

அப்பனேகாளிதாசா அரிவையேவித்யாரத்தினம்
இப்பவேபோஜராஜன் இன்பமாய்அழைப்பதாலே
தப்பிதம்நேர்ந்திடாது தாசனேயிருவருமாய்
எப்போதும்போலவே யிருந்திடவாழ்த்தினேனே.

வசனம்

ஆனல் கேளுமப்பா காளிதாசா இப்பெண்மணிதான் வித்யாரத்தினம். நீ அவளைவிட்டு பிரிந்தபடியால் அவள் என்னிடத்தில் வந்து முறையிட நான் தாசிரூபம் தந்து தாராநகரம் சென்று உன்னைகூடி வாழும்படியாக செய்தேன். இதோ அவள் ரூபத்தைமாற்றி முன்னிருந்த வடிவத்தை உண்டாக்கினேன். இனி பேதகம் எண்ணமல் படிக்கு போஜராஜனுடன் சென்று சிலகாலம் அங்கிருந்து முடிவில் என்பதவிக்குவந்து சேருங்கள்.

பொது வசனம்

இவ்விதமாக காளிதாசன் வித்யாரத்தினம் போஜராஜன் மூவரும் தாராநகரம்சென்று சுகமாக வாழ்ந்து வந்தார்கள். இந்நாடகம் பாடினேரும், பதிப்பித்தவரும், ஆடினேரும், காதினல் கேட்டவரும், காளிகாதேவியின் அருளால் சாலோக சாரூப சாமீப சாயுச்ய மென்னும் நான்காம்பதவி சேரக்கடவது. சுபம் சுபம் சுபம்.

கவிரத்தின காளிதாசர் சரித்திர நாடகம்

முற்றிற்று.

---

பூமகள்விலாசம் பிரஸ், சென்னை:—1939.

மகாலிங்கமென்னும் கிருஷ்ணாவதார முடிவுடன்

# பாண்டவர்

# வைகுந்த நாடகம்



திரு. C. V. ஜெகந்நாத முதலியார் குமாரர்.

## C. ஸ்ரீ. தாமோதர முதலியாரவர்களது

சென்னை-ஜீ.டவுன், பெரியநாயகியம்மன் அச்சகத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காபிரைட்] [விலை ௨ ரூபாய்

உ

சிவமயம்.

மகாவிந்தமென்னும் கிருஷ்ணாவதார முடிவுடன்

பாண்டவர்

# வைகுந்த நாடகம்.

இஃது

கூடலூர் தாலுக்கா தொண்டமாநத்தம் வன்னிய வீதியிலிருக்கும்

மா. சீ. குமாரசாமி படையாட்சியார் குமாரரும்

சங்கொலி குப்பம்

ஙா. இரங்கசாமி நாடார் மாணவருமாகிய,

மா. கு. கோவிந்தசாமி படையாட்சியாரால்,

இயற்றியதை,

ஷை யூர், கு. ஜம்புலிங்க படையாட்சியாரால்,

பரிசோதிக்கப்பட்டு:

சித்துக்காடு

வே. மீனாக்ஷிசுந்தர முதலியாரவர்களால்

சென்னை, சூளை,

" பெரியநாயகியம்மன் " அச்சுக்கூடத்தில்,

பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர்காப்பிரைட்

விலை ] 1939 [ [illegible]

உ

சிவமயம்.

ஏகதந்தவிநாயகதண்டாயுதபாணி துணை:

மகாவிந்தமென்னும் கிருஷ்ணவதார முடிவுடன்

# பாண்டவர்

# வைகுந்த நாடகம்.

காப்பு வஞ்சி.

பாண்டவர்வைகுந்தம் பாரினில்சொல்ல
ஆண்டவனை ஐங்கரன்காப்பு.

ஏகதந்த விநாயகமூர்த்தி துதி.

நாகமேஅணிந்தயீசன் நற்சுதனைதோன்றி
ஆகமபுராணசாஸ்திரம் அன்புடன்முதல்துதிக்க
பாருள்ளஓங்காரத்தில் பண்புடன்அமர்ந்தஎந்தன்
ஏகதந்தாயனின்தன் இருபாதம்வணங்கினேனே.

சுப்பிரமண்யர் துதி.

ஒருமயிலாயிருபெண்ணு மூன்றுநான்கு
உகந்தகையாயைய்ந்துமுகன் தனையாயெங்கள்
அருமுகவாசத்திசுதா அத்திமுகன்
சோதரனே அருவைபேழு
பெருமுலைபா லுண்டவனே
புகழெட்டுதிசை போற்றும்புனைகூர்வேலா
கருமலைபோலொன்பதுபேர் துணைவாபுந்தன்
கழலாறபதம்போற்றி காப்பாய்தானே.

பலதேவர் துதி.

திருமகள்வளருமார்பன் ஸ்ரீகிருஷ்ணன் பாண்டவாளும்
சரியுள்ளவைகுந்தத்தை சார்ந்தநாடகமுறைக்க
கரிமுகன்கந்தன்யீசன் கருணைசெய்யுமையாளோடு
அரிகலைவாணிபாதம் அன்புடன்வணங்கினேனே.

குரு வணக்கம்.

கங்கையெனும்சரவணையில் பிறந்துவந்தோன்
கழலடியையனுதினமும் மறவாபோற்றும்

சங்கொலிபின்குப்பம்வாழ் ரெங்கசாமி
தாஸிநொடுசேடகர் தில்லைகண்ணும்
மங்களமாய் தொண்டநத்தம் ஜம்புலிங்கன்
மாகுருவாம்இவர்களின் தன்பாதம்போற்றி
எங்குபுகழிக்கதையை பாடிவைத்தேன்
இதிலிருந்தால் குற்றமதுபொருப்பீர்போற்றி.

நூல் துவக்கம் கிருஷ்ணன் வருகிற கவி.

அரசரிடகுலந்தனிலே யுதித்துவந்து
ஆயனிடகுலந்தனிலே வளர்ந்தபோதன்
வரிசையடன்கௌரவரின் குலமழித்து
வாக்கதுபோல்பூமிபாரந் தன்னைதீர்த்தோன்
சரசமதாய்சராசந்தன் கம்சனொடு
சாய்த்திட்டோன் சிசுபாலன் தன்னையுந்தான்
முரசுடனே அவதாரம் சிலநாளென்று
முகுந்தனுமே மனதிலெண்ணி வருகின்றனே.

பல்லவி.

கௌரவகுலகாலன் காளிங்கசிர்த்தனலோலன்
கண்ணனென்பதும்நான் தானே ஆயரிடத்தில்
என்னும்வளர்ந்தவன் தானே

அநுபல்லவி.

சவுரியமாய்கம்சனால் சார்ந்தசூரரைவென்றேன்
சங்கரித்தேபூதகி சதிராய் பாலையுமுண்டேன்
சாதனுநானே பூமிபாரந்தீர்த்த வேதனுந்தானே
கருள் சத்தியவசுதேவர் புத்திரனேன்
மெத்தவேயசோதையின் முத்தத்தில்வளர்ந்தேன் கௌ

சரணங்கள்.

துரியன்சொல்லின்படிக்கு துர்ச்சாதனவனும்
துணிந்துதுகிலுரியவே பாஞ்சாலிதுயரதுசொன்ன துணி
அரிந்துதுகிலளித்து ஐவரையும்காத்தேன்
அன்பர்பாண்டவரின் தன் துயரனைத்தும்கெடுத்தேன்
அன்னமும் காட்டில் துருவாசர் முன்வமேகேழ்க்க
சுருள் ஐவரும்கண்டென்னை மெய்யதாய்துதிக்க
நய்திடபசியிலா செய்துமேதீர்த்தேன் கௌ
பஞ்சவர்கவெந்தவே பாவித்துரியனிடம்

பார்த்தனுக்குனுப்ப பனைகூட்டினேன்தானே பார்
அஞ்சாமல்பதினெட்டு அருஞ்சமரும்வைத்தேன்
அதிலேவிதுரன்வில்லை எடுக்காமலேகெடுத்தேன்
அரவத்தைகர்ணன்ஒருகணைக்குமேல் சரம்விடுக்காமல்பண்ணேன்
சுருள் அன்புடன்பதினெட்டு நாளையில்கவுரவர்
கொன்றுமேதருமர்க்கு கன்றெனமுடிவைத்தேன் கௌ
காந்தாரியும்எனக்கு கடியசாபம்கொடுக்க
கண்டுவாங்கினேன்தானே மனதில்கபடதைநினைத்து கண்டு
சாந்தகுணமுடைய தரணிபாரத்தைதயினி
சடுதியில்தீர்த்துமே தங்கிவனத்தில்நாலும்
சாருவேன்தானேவைகுந்தம்' சேருவேன்நானே
சுருள் சரியுள்ள அவதாரம் சிலநாளேயென்று
பரிவுள்ளஐம்புலிங்கன் கவியைதமகிழ்ந்து கௌ

கிருஷ்ணன் கவி,

பலதிசைமன்னர்வாழ்த்தும் பரிமளமிகுதியுற்ற
நலம்பெரும்கொலுக்கூடத்தில் நன்னிதிசெலுத்திவந்தோம்
தொலவியவிசாலமுள்ள துவாரகாபுரியனைத்தும்
பலவரும்க்ஷேமந்தானு பகருவீர்பகருவீரே.

கிருஷ்ணன் வசனம்.

நமது துவாரகா புரியில் யாதொரு குறைவின்றி நடந்தேறி வருகின்றதா? மந்திரி! தாரகா.

தாரகன் வசனம்.

அப்படியே யாதொரு குறைவின்றி சுபேட்சமாக நடந்தேறி வருகின்றதாசே.

கிருஷ்ணன் வசனம்.

அப்படியானால் சிலதுநேரம் உல்லாசமாக கொலுவிலிருப்போம்.

பொது வசனம்.

இப்படியாக பகவான் இருக்கானும்பொருட்டு ரிஷிகள்வருவது.

ரிஷிகள் வருகிற கவி.

சடைதரித்துருத்ராட்ச மாலையாட
சர்வாங்கம்விபூதி புலித்தோலும்சாற்றி
இடைதனிலேகாவியும் தெண்டும்கொண்டு
இன்பமுடன்வியாகர் மதங்கர்கண்ணுவரோடு

கடையுடனேநாரதர் பராசர்பர்வதமுனியும்
நாராணரைகாணவே தான்யோம்விட்டு
திடமுடனே துவாரகை வசாசனை
ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திடம் வருகின்றாரே.

தரு.

ஆகமத்தில்சிறந்த யோகந்தனிலமர்ந்த
அருந்தவரிஷிகள்வந்தார் தபோதரான அருந்தவ
நாகமீதில்துயிலும்நாராயண பூரணவென்று
ஏகமனதாய்விண்டு எட்டிநடந்துகொண்டு ஆக
பரனே அரனேயென்று மர்வதமுனியுடனே
பத்தியாய்பராசன் கண்ணுவருடனே அக
நித்தமும்துதிசெய் உத்தமவியாசமுனி
நிகயல்லாஜெமதக்னி பதங்கரிஷியுடனே ஆக
அகலம்செடியில்சுற்றும் அன்பன்நாபதமுனி
அனைதவிம்தலம்விட்டு ஒருமையுடனேகூடி ஆக

ரிஷிகள் பகவானை தோத்திரஞ்செய்வது தரு.

காரணதனசரணம் வைகுந்தவாசா
பூரணியேசரணம்
காரணபூரண காருயவஸ்துவே
ஆரணனேஉந்தன் அடியேனை சார்ந்தருள் கார

ரிஷிகள் கவி.

ஆதிமூலமேயென்ற ஆனைபைக்கார்த்தமாயா
பாதமேதெண்டம்போற்றி பாலிப்பீர்தெண்டந்தானே.

கிருஷ்ணன் கவி.

வீதியாய்தவமேசெய்து விண்ணவர்மகிழவந்த
ஆதிலா இருடிகளே சுகசீவியாகவாழி.

ரிஷிகள் வசனம்.

அரிகரிநாராயண கோவிந்தா வசுதேவபுத்திரா ருக்மணிமனோகரா தங்கள் பாதபங்கம பொக்பாகமலங்களுக்கு நமஸ்தே நமஸ்து.

கிருஷ்ணன் வசனம்,

ஆசீர் ஆசீர்வாதம் சுகசீவியாக வாள்வீர்கள் வந்ததென்ன உரைபீர்கள் தவமினிவர்களே.

ரிஷிகள் தரு.

செப்புவதேதுசுவாமி வைகுந்தம்
சென்றிடவேணும் சாமி
எப்போதும்இவ்விடத்தில் இருப்பதுஞாயமோ
இறைவனேமறைமுதல் அரியாப்பரம்பொருளே

கிருஷ்ணன் தரு.

நல்லதுஇருடிகளே நீங்கள்சொல்லும்
நலமான வார்த்தைகளே
அல்லதுவைகுந்தம் அமரச்சொன்னீரிப்போ
அவ்விடம்போகாவிட்டால் அதனால்பழுதுண்டோ

ரிஷிகள் தரு.

இந்திரர்தேவர்முதல் வைகுந்தம்
வந்துவந்தனம் செய்திடவே
வந்துவந்துபார்த்து நொந்துவிசாரமிட்டார்
எந்தலோகமாயமாகி நின்றபொருளே

கிருஷ்ணன் தரு.

நம்பினயாதவரை விட்டுவிட்டு
நான்வர ஞாயமுண்டோ
தம்பிசாத்தகியும் தமையனையும்விட்டு
வறகம்மிடமணதில் விலகாடுமோநடாது

ரிஷிகள் கந்தார்த்தம்.

காடாதுயென்ன ஞாயமேசுவாமி
கூடாதுஇவ்விடம் கோபாலாநீரும்
காடானுங்காங்கள் கர்த்தனேயுரைத்தோம்
சாடவும் விட்டு.

தரு.

சுவாமிநீயேகுவீர் வைகுந்தம்
தாமிஷம் போகுவீர்
காமிகள்போலாயர் கன்னிவலையிற்சிக்கி
தாகமீறிஇருப்பது தகாதுதகாதுசுவாமி

கிருஷ்ணன் கந்தார்த்தம்.

தகாதுயென்ற சற்குணரிஷியே
ஆகாதபேரை அனர்த்தமேசெய்தேன்

போகவேணுமென்றால் அய்வர்பொல்லாப்பு
ஆளவை குந்தம்.

தரு.

அங்காவல்லே இவ்விடந்தன்னில்
எங்குமே தொல்லை
மங்கிமடிவார்கள் மன்னர் அய்வர்களும்
அவனியைவிட்டிகான் அவ்விடம்போவதில்லே

ரிஷிகள் கந்தார்த்தம்.

வரமதையளிக்கும் வைகுந்தவாசா
ஜெகமதில்பாரம் தீர்ந்ததுவும்மால்
சுகமுடன்பலராமர் சேர்வில்லை அய்வர்
நினைவதை விட்டு.

தரு.

நீருமேசேர்வீர் • தேவர்களே
காரும்கிருபை பாரீர்
போர்புரிந்துஇந்த பூமிபாரந்தீர்த்தீர்
புண்ணியதேவனே எண்ணவைகுந்தனே

கிருஷ்ணன் கந்தார்த்தம்.

சேருவீர் என்று செப்பினபடியே
யாவையும்விட்டு அவ்விடம்போக
காரியமொன்று என்கருத்தினில்உண்டு
தீரமாய் சொல்வேன்.

தரு.

சிந்தையில்கேளும் என்தன்வார்த்தை
வந்திட்டீர் இன்னும்
பந்தமுள்ளபூமி பாரந்துலையவில்லை
எந்தவிதமாக ஏகுவேன்வைகுந்தம்

• ரிஷிகள் கவி.

ஆதியிலே கிருஷ்ணவதாரங்கொண்ட
அச்சுதனே அந்நாள்முதலதாக
நீதியுடன்ஆண்டுநூற் றிருபத்தஞ்சு
நிறைந்தது உன்வயது ஆனதாலே
சோதியென நீயிருந்து பூமிபாரம்

தொலைத்திட்டீர் இனிபூமிபாரமேது
விதியுள்ள வைகுந்தம் சேரவீர்யென்றால்
விகல்பமுடன் நீருரைத்த விபரம்சொல்வீர்.

(வ-ம்.) ஏ வைகுந்தவாசா! நீர் இந்த கிருஷ்ணவதார மெடுத்தும் முடைய வயது நூற்றிருபத்தஞ்சும் ஆனதாலே இனிவரதடையேது வல்லையென்ற காரணத்தை சொல்வீர் சுவாமியே.

கிருஷ்ணன் கவி.

மாதவரிஷியேகேளீர் மனதிலோர்கிலேசமுண்டு
யாதவர் நாலாயிரம் அக்ரோணிக்கதிகமாய்இருப்பதேதலே
சாதனைகொல்லாவிட்டால் தரணிபாரந்தீராது
நீதியாய்சேர்வீர்நீங்கள் நிமிஷத்தில்சென்றுவாரேன்.

(வ-ம்.) கேளும் ரிஷிகளே! துவாரையில் இருக்கப்பட்ட யாதவாளை வரையும் இன்னும் சிலதுநாளில் கொன்று வருகிறேன் நீர் செல்லும்.

(ரிஷிகள்-வ-ம்.) அப்படியே தங்கள் உத்திரவு.

(பொ-வ-ம்.) இந்தப்பிரகாரமாக ரிஷிகள் பகவானிடம் விடைபெற்று துவாரையிலுள்ள சாசனதீர்த்தந்தில் தாகந்தீர்ந்து இருக்க அப்போது யாதவர் அவர்களை சோதிக்க வருவது.

யாதவர் கவி.

துவாரகாபுரியில்சென்று செங்கண்மால்சமுகந்தன்னில்
விவகாரம்பெசிவந்த வெகுகோடிரிஷிகள்தன்னை
கவனமாய்வருங்காலத்தை கண்டுமேஅரியுஞ்சேதி
அவமானம்செய்வோமென்று யாதவர்வருகின்றாரே.

தரு.

யாதவர் வந்தாரே — துவாரகைவாழ்
யாதவர் வந்தாரே
யாதவர் வந்தாரே — ஆனந்தமாய்கூடி
நீதியாய்எல்லோரும் — நேராய்விளையாடி யாத
நெத்தியில்நாமமிட்டு — நிறைந்தசங்குகள்கட்டி
உத்தரியம்தோளிலிட்டு — ஒசந்ததடிபிடித்து யாத
கையில்குடுவைகொண்டு — கம்பளிதோளிட்டு
அய்யன்கிருஷ்ணரைதினம் — அன்புடன்மனதில்வைத்து யாத
அருமுனிகளிடம் — ஒருமொழிகண்டறிய
தருசுடனேகடை — துள்ளிநடைகடந்து யாத

யாதவர் கவி.

அண்ணமாரே தம்பிமாரே யாதவகூட்டத்தோரே
என்றும்மனதிலொன்று இயம்புவேன்கேளுமிப்போ
மன்னவர்கிருஷ்ணனிடம் மறைமுனிவந்துபோனார்
சின்னமுஞ்செய்வோமிப்போ சீக்கிரம்போவோம்வாரீர்.

(வ-ம்) அடே! காத்தா, கருப்பா, அண்ணமாரே, தம்பிமாரே, உப்போ நம்ம கிருஷ்ணமூர்த்தியிடம் வந்துபோனுங்களே முனிவர் அவங்களுக்கு நாலுகாலமும் தெரியுமாம். எறந்து போனவங்களை எழுப்புடுவாங்களாம் இண்ணு சொல்லி நம்ம ஊர்ஜனம் அல்லாம்கும் முடுராங்கடா நாம்மொள்ளமா சோதனை பண்ணிவிடணும்டா இண்ணு எப்படி? நம்ப சாம்புவந்தன் இருக்கானே அவன்ரொம்ப கேலிகாரன் அவனைகெர்ப்பமுள்ள பெண்போல வேசம்போட்டு இட்டுகினு முனி கிட்டபோய் இந்தபொம்பளை என்னபிள்ளைபெறுகு மென்றுகேட்டால் தெரிந்துவிடுது (ஆமாண்டா அதுதாண்டாசரி) அப்படியே வேசம் போட்டுவிட்டோம் போய்சோதிப்போம் வாங்கடா.

யாதர் தரு.

| | |
|---|---|
| அகடவிகடம்செய்ய | யாதவகூட்டங்கள் |
| அனைவரும்வந்துமேவினார் | ரிஷிகளிடம் |
| விகடமும்செய்ய | மேவினார் |
| சுகமுடன்பிரிதிகந்த | குமாரன்சாம்பன்தன்னை |
| சூலானபெண்ணாக | சுந்திரவடிவாக்கி அக |
| பத்துமாதகெர்பம் | பாவனைபோலாக்கி |
| பக்குவம்பேசியிரு | பக்கமும்கைகொடுத்து அக |
| முனிவர்கள்ரிஷிகள் | முன்பாகவேவந்து |
| முதிர்ந்தகெர்ப்பம்போல | துவண்டுதுவண்டுக்கொண்டு அக |
| மெல்லமெல்லநடை | கள்ளத்தனமாய்நடந்து |
| தள்ளிதள்ளிசாம்பன் | சரசம்பேசிக்கொண்டு அக |

யாதவர் கவி. (கெர்பமாக வேஷம்போட்டு கேட்பது.)

வந்திரிவ்விடந்தன்னில் வனரிஷியோர்களேகேள்
தந்திடசிவனருளால் தையலாள்கெர்பமானாள்
சுந்திரப்பெண்ணோஆணோ சுவாமிநீயறிந்துஇப்போ
எந்தனுக்குரைசெய்வீரே இருபாதம்போற்றிபோற்றி.



(வ-ம்.) ஏ மகானுபாவர்களே! இந்தசமயம் தாங்களும்வந்தது கள் புண்ணியகாலந்தான் இந்தபெண்ணே வெகுநாள் குழந்தையில்லாமல் இருந்து இப்பொழுது பரமசிவனருளால் கெற்பமாகஇருக்கிறாள் அது ஆணோ பெண்ணோ வென்று தெரியும்படியாகா சொல்ல வேண்டும் ரிஷிகளே.

ரிஷிகள் கந்தார்த்தம்.

யாதவர்கிடம்பேச அருமுனிகோபமாகி
குறிகேபேசவந்தீர் சொற்பமென்றெண்ணிநீங்கள்
மாதவர்ிங்கமற்ற மகாஜனகூட்டமாக
சாதனை யாலேமாள.

தரு.

| | |
|---|---|
| சாபமுதைநாங்கள் தருவோம் | உங்கள்குலம் |
| தாஜைசயாகவீணாய் | மடிய |
| யேனைமதிகெட்டீர் | இவ்விடம் |
| எங்கள்முன்னேவந்து | தந்தமொழிக்கி |
| கல்லது ஆயர்களே | உங்கள்குலம் |
| நாசமடையநாங்கள் | சாபந்தருவேன் |
| துள்ளாதயாதவர்களே | உங்கள்குலம் |
| சகமடையவைப்பதில்லை | அகமதுகொண்டீர் |
| எல்லையுள்ளசேனையெல்லாம் | காலன்வந்து |
| இழுத்துபிடித்துபோக | பிடிபடாசாபம் |

ரிஷிகள் கவி.

கெற்பமும் ஆண்பெண்ணென்று கேட்டநிறைலேயின்று
அற்பமாய்போவதில்லை அவன்வயிற்றிருபுலக்கை
கற்றவபலத்தால்வந்து நாசமே அடைவீரித்தால்
உற்றதைசொன்னோம்நாங்கள் இருப்பிடமேகுவோமே.

(வ-ம்.) ஏ யாதவரே! நீங்கள்சோதிக்கயெண்ணி வேஷம்போட்டு இப்படி கேட்டபடியால் இதுசும்மாபோகாது அவன்வயற்றில் இருப்புலக்கைபிறந்து அதனால்நாசமடைவீர் இதோஇருப்பிடம்செல்கின்றோம்

யாதவர் கவி.

யாதவ அண்ணமாரே அவர்சேதிபிளாங்கிசாச்சி
சாதனமானகெர்ப்பம் தையலாள்யென்றுரைத்தார்
ஆதினமுள்ளபேர்கள் அனைவரும்பூசித்தாரே
பார்த்திரோரிஷிகள்வாக்கியம் பவுஷிகள்கெட்டதிப்போ.

(வ-ம்) அடே அண்ணமாரே! விளையாட்டாக வேஷம் போட்டுக் கொண்டுவந்துகேட்டால் பெண்தான்கெற்பமென்று ஏதோசொல்கிறார்கள் இப்படி முனிதான் உலகிலிருப்பவர் அவர் பவுசு கெட்டது வாங்கப்போவோம்.

சாம்பன் கவி.

மதியதுகெட்டுஅந்த மாமுனிஇடத்தில்சென்று
சதியதாய்பேசஅவர் சாபமேதந்ததினாலே
விதியதோயென்வயர்தான் வேதனையாகுதிப்போ
பதியதுவிடவேவந்த பழிக்குநான்யென்னசெய்வேன்.

(பொ. வ-ம்) இந்தப்பிரகாரமாகயாதவர்ரிஷிகளிடம்சாபம்பெற்று சாம்பன் வயர்வலிபட அப்போது வசுதேவர் வருவது.

வசுதேவர் வருகிறகவி.

தேவகியைமணந்துமேதான் கம்சன்தன்னால்
சித்திரவதைவெருவாக தானும்பட்டு
ஆவலுடன்யெழுசிறுவர் பரிகொடுத்து
அரியவரைசுதனாக யீன்றநாதன்,
பாவியந்தயாதவர்கள் தன்னாலிப்போ
பழுததுவும் வந்திருக்க குலந்தனக்கு
மேவியேதான்சேதிதனைகாணவென்று
மேன்மையுடன்வசுதேவர் வருகின்றாரே,

தரு.

வடமதுரைக்கதிபன் வானோர்புகழ்நிதிபன்
வசுதேவராஜன் வந்தேன் நல்ல
வாத்தியகோஷ்டங்கள் எத்தியேமுழங்க
சாத்தியேஅரிநாமம் நேத்தியாய்வழங்க வசு
திடமுள்ளசூரசேனன் செல்வனாகயுதித்தேன்
தேவகியைமணந்து ஸ்ரீகிருஷ்ணனையும்பெற்றேன்
சருண் தீரர்கள்சூரர்கள் பாரினில்கூடிட
நேரில்மந்திரி சாரியாய்நாட வட
பாவிகம்சனைமேல பட்டேனனேகதுன்பம்
கூவியவனுயிரை கொன்றேன்கிருஷ்ணனாலே
சருண் கோதையர்தேவகி மாதுமேமகிழும்
நாதனுமாகிய வேதனும்சீலன் வட
அஷ்டயோகரிஷி அனைவரும்சென்றிட
துஷ்டப்பிள்ளைகளவர் தூயசாபம்பெற்றிட
சருண் சுந்திரமுசலமும் வந்துபிறக்க
விந்தையாய்முனிவர்கள் தந்தாரேசாபம் வட
பலவிதமாகசாபம் பாலர்பெற்றதைகேழ்க்க
அலையுதேமனமது ஐய்யோநானென்னசெய்வேன்
சருண் அரிகரிநாதன் திருவருளெதுவோ
சரிவிதம்தெரியாமல் குமறியேமனமும் வட

யாதவர் கவி.

தாத்தாவேயரசேயுங்கள் தாளினைதன்னில்போற்றி
நேத்தியாய்தவங்கள்செய்யும் நின்னையமுனிவர்சென்றார்
காத்திரசாம்பன்தன்னை கர்ப்பமாய்செய்துகேட்க
பார்த்துமேசாபந்தந்தார் பரதவித்தழுகின்றானே.

(வ-ம்.) கேளும் தாத்தாவே நாங்கள் வேடிக்கையாகமுனிவரிடத்தில் சாம்பனை கெர்ப்பம் போல் செய்து விளையாடினோம் இப்போது சாம்பன் வயர்வலிவந்து அழுகிறான் தாத்தாவே.

வசுதேவர் கவி.

கேடுகள்பின்னுலென்றால் கெட்டிடுமதிமுன்னென்ற
காடிவாக்கியத்தை நன்றாகசெய்துவைத்தீர்
கூடிநீரழுதபோதம் குருமுனிசொல்லப்போகா
தேடியேகிருஷ்ணன்தன்னை தெரிந்துநான்வருவேன்செல்வீர்.

(வ-ம்,) கேடுபின்னால் என்றால் முன் மதிகெடும் என்றபடி தேடி வைத்தீர் சமாச்சாரம் தெரிந்து கொண்டேன் நீங்கள்போங்கள் கிருஷ்ணனைக்கண்டு வருகிறேன்.

கிருஷ்ணன் கவி.

தந்தையேபாதம் தனையனன்போற்றி
வந்ததோர்விதத்தை வழுத்துவீர்சாற்றி.

வசுதேவர் கவி.

மைந்தனேவாழி மாமுனிதன்னால்
வந்தயாதவர்சாபம் வகற்றிடவேணும்

கிருஷ்ணன் கவி.

என்னசொல்சொல்லவந்தீர் இருமாப்புகொண்டுபெற்ற
வன்னமாமுனிவர்சாபம் வகற்றிடநம்மாலாமோ
நன்னயதவங்கள்செய்யும் நலமுள்ளபரமன்பக்தர்
சொன்னிடும்சாபந்தன்னின் சுருபத்தைநீக்கப்போமோ.

(வ-ம்.) ஏ! தந்தையே அது சொல்லாதீர் இருமாப்பு கொண்டு பெற்றமுனிவர் சாபத்தின் சொரூபத்தை நம்மால் நீக்கமுடியாது.

வசுதேவர் கந்தார்த்தம்.

சாபத்தைநீக்க சர்க்குணஉன்னால்
ஆகாதோதுரோபதை அருந்துகில்கார்த்தீர்
திராதபகைவரை தீர்த்துமேஜவரை
பாரான வைத்த.

த ரு.

| | |
|---|---|
| பாக்கியலோலா | யாதவரை |
| கார்த்திடும் | பாலா |
| வாக்கால்வசனித்த | மாமுனிவர்சாபத்தை |
| தீர்க்கதயவுவையும் | செப்பாதேவென்றும் |

கிருஷ்ணன் கந்தார்த்தம்.

சங்கையில்லாமல் சாபத்தைநீக்க
இங்குதான்வந்து இயம்புராயந்த
மங்கையர்சாபமும் மாமுனிச்சாபமும்
திங்கள்சூடியோனலும் விலக்க.

த ரு.

தேவராயாகாது அவர்கள்சாபம் வாராமிற்காது
ஆவிபதரிட அழுதாலும் என்செய்வோம்
போகாதுபோகாதுபுலித்தோல் உடையோன்சாபம்

வசுதேவர் கந்தார்த்தம்.

போகாதுயென்ற புத்திராகேளும்
ஆகாதகாலம் அகலிகைகல்லாய்
பாகாகசாபம் பரிவுடன்கௌதமர்
வாகக்க கொடுக்க.

த ரு.

வந்துதீர்த்தாரே ஸ்ரீராமர்
முந்திதீர்த்தாரே
அந்தவிதமிருந்தும் ஆகாதுயென்றாமே
சிந்தையில்கபடதாய் தெரிவிப்பதானன்றோ

கிருஷ்ணன் கந்தார்த்தம்.

பக்ஷமாயகலிகை பாதமேபணிந்து
அக்ஷணம்கேட்க அவர்மருசாபம்
உச்சிதம்தந்தார் உடனதுதீர்ந்தது
இக்ஷணம் தீர்க்க.

த ரு.

எவர்களால்ஆமோ அவர்கள்சாபம்
கிலையில்லா பேசமோ
கிலையாகசெப்பினேன் நீபோகும்அரண்மனை
அணைகடைந்தவெள்ளம் அதற்கென்னசெய்குவோம்

(பொ. வ-ம்.) இந்தப் பிரகாரமாக கிருஷ்ணபகவான் சாபத்தை நீக்கமுடியாதென்று சொல்ல வசுதேவர் போய்விட மறுநாள் சாம்பன் வயர்வலிபட்டு இரும்புலக்கையை பெற்றுவிட யாதவர் வசுதேவரிடம் சொல்ல அவர் அதைராவிகடலில்கொட்டும்படியாகசொல்ல அப்போது அவர்கள் ராவி கொட்டிவிட அவைகளெல்லாம் கடலில் கோரையாகத் தானே முளைத்திருக்க வழக்கப்படி கடல் மஹோற்சவத்துக்குப்போக கிருஷ்ணபகவான் பலராமரை அழைக்க சபைக்கு வருவது.

பலராமர் வருகிற கவி.

சிரசினில்மகுடந்துன்ன சித்திரபதக்கமின்ன
வரிசையாய்ஆரமாட வையகம்தனில்துதிக்க

கரங்களில்கலப்பைகொண்டு கண்ணனும்இன்றுநம்மை
பரிவுடனழைத்தாரென்று பலராமர்வருகின்றாரே.

தரு.

பார்மன்னரும்வணங்க நேரில்மந்திரிதுலங்க
பலராமரிதோவந்தனர் அதிமதிகிரமுள்ள
அரிசகோதரரும்வந்தார்
திரைகடலுலகுக்கு ஒருவரேபலம்பெற்று
மருவிலாதர்மநீதி மனதில்மிகவேவைத்து
சுருள் மன்னவயாவரும் தன்னைகண்டு
எண்ணமாகியே நின்றுபணிந்திட
தம்பிகிருஷ்ணனம்மை சந்நிதியிலழைத்த
தென்புடனேயரிய துருசுடனேநடந்து
சுருள் தேவசுதன் தன்னைகண்டுமே
மேவியேசேதி விபரமரியவே

கிருஷ்ணன் கவி.

அண்ணனேபோற்றிபோற்றி அலைகடல்தனக்குசென்று
பண்டிகைநடத்தவேண்டும் பரிவுடன்வருகுவீரே.

பலராமர் கவி.

உன்னிடமொழியைப்போலே உத்தமாவந்தேன்நானும்
பின்னிடஆயரெல்லாம் புறப்பட்டுசெல்லுவோமே.

பலராமர் கவி.

அய்யய்யோகிருஷ்ணாயென்ன அனியாயம்யெந்தனின்தன்
கைதனில்கலப்பையோடு கனரதம்தானுமிப்போ
வையகம்தன்னைவிட்டு வானுறவுயர்ந்துதானே
மெய்யாகசென்றதப்பா மேதினிலென்னசெய்வேன்.

(வ-ம்.) ஏ கிருஷ்ணா என் கலப்பை ஆயுதமும் ரதமும் ஆகாய மார்க்கமாகபோகுதே என்னசெய்வேன்.

கிருஷ்ணன் தரு.

பாரும்பாரும்எந்தனண்ணா பலராமர்யென்றிடும்வண்ணா
நேராய்சங்குடனே நின்னையசக்கரம்
கூராயேகெருடனும் கூடியேபோகுதே

(ப-வ-ம்.) தம்பி நாம் எப்படிசெல்வது ஏதோ இதுவும் சாபமாகத்தான் இக்கிறது.

(கி-வ-ம்.) ஏதோ இதுவும் காலக்கொடுமைதான் நாம் என்ன செய்வது நடந்துதான்போகவேண்டும்.

கிருஷ்ணன் கவி.

ஆழியில்வந்துசேர்ந்தோம் அன்னமும்பதார்த்மாச்ச
நாழியில்பொசித்துநாமும் நல்விளையாட்டுமாடி
தாழியின்தயிர்பாலுண்டு சஞ்சரித்திருந்துபின்பு
தோழர்களுடனே நாமும் சேருவோம்துவாரகைக்கே.

போஜனம் செய்வது தரு.

போஜனம்செய்வோம் நாமெல்லோரும் போ
வாசனையாகிய வடையும்தோசையுடன்
வண்டக்காய்கறியுடன் வாழக்காய்பொறியலும்
உண்டுஇளைப்பாறி நன்றாகசென்றிட போ
அவரைக்காய்பொரியுடன் ஆமைவடைலட்டு
அதற்குசரியாக நெய்தயிர்பால்விட்டு
கவனமாயிதுவரை கண்டதில்லையென்று
கண்ணனுடனே தான் கடல்கரையினின்று போ

பலராமர் கவி.

சாமளவர்ணகிருஷ்ணா தம்பியென்சொல்லக்கேளாய்
நாமுமேபோஜனங்கள் நன்மையாய்வுண்டோமிப்போ
தாமுமேயிவ்விடம்நில்லும் தவஞ்செய்யவனத்தைசென்று
காணுமேவருவேன்தானே நலமுடன்விடைதாராயே.

(வ-ம்.) நாம் என்ன போஜனங்கள் செய்துவிட்டோம் இனி எல்லாம்போய்விட்டது நான் வனத்தைச்சென்று தபஞ்செய்து வருகிறேன் தம்பி.

(கி-வ-ம்.) அப்படியே தங்கள் இஷ்டம் அண்ணா.

யாதவர் கவி.

அண்ணமாரே தம்பிமாரே அனைவருமுண்டதாலே
கண்ணைதான்மயக்குதிப்போ கனவெறிதலைக்குயேறி
மன்னவர்போலேநாமும் வாதங்கள்மிகவுண்டாகி
உன்னிதமாகசண்டை உகந்துமேசெய்குவோமே.

(வ-ம்.) இப்போதென்ன மதுவுண்டு மத்தியானத்தில் சாப்பிட்டபடியால் வெறியானது கண்ணை மயக்குகிறது ஆகையால் நாம் அரசர்போல் ஒருவருக்கொருவர் வாதம் செய்து மல்லு சண்டை செய்வோம் அண்ணமாரே.

(யாதவர் மல்லுசண்டை) தரு சிந்து.

ஒருவர்க்கொருவர்யெதிர்த்து சண்டைகள்-ஓங்கியே அடிக்கலுற்றார் தாக்கியேகையால்-இருதறத்தாரும்சேர்ந்து-கால்களால் - இடிக்கலுற்றார்மயிரை பிடிக்கலுற்றார்-கீழ்வுடன்மேல்விழுந்து - வலயிடமாய் கீழேபிரளலுற்றார்மீறிகோபமாய்-மீறியதேதானே-பூர்வமுனிவர்-சாபம் மேவிட்டு கோபமீறி ஆனுவமாய் -ஒருவர்க்கொருவர் பிடித்தார் -புசமதில்-ஒத்திக்கொண்டார் தலையை முட்டிக்கொண்டார்- கையாலும்காலாலும்-ஒருவர்க்கொருவர்-கட்டிக்கொண்டார் காலால்முட்டிக்கொண்டார் தன்தினம்தனதனனு.

யாதவர் கவி.

வில்லடா அண்ணமாரே நீங்கள்வாருங்கள்இப்போ
வில்லுமே அம்புகையில் வேந்தன்போவில்லாதாலே
கல்லதுகோரை தன்னை காமுமேயிழுத்துக்கொண்டு
மல்லுகள்செய்துநாமும் மகிழுவோம் அண்ணமாரே.

(வ-ம்.) நமக்கு வில்லம்பு இல்லாத படியால் இந்தகோரையைப் பிடுங்கி வில்லம்பாக சண்டைசெய்துக்கொள்ளுவோம் அண்ணமாரே.

யாதவர் தரு (ஒருவர்க்கொருவர் அடித்து இறப்பது.)

ஒருவர்க்கொருவர்மயக்கமீறியே கோபங்களாகி
ஓடி ஓடி அடித்துகொண்டாரே
இருவர்கையில் ஆயுதங்களும் இல்லாததாலே
இழுத்துக்கொண்டார் கோரைதன்னையே
ஒருவர்மீது ஒருவர் அடிக்கவே அடிகள்பட்டு
உடனேவுயிர் போயும்மாளவே
கடியாதவர்கொடிக்குள்ளே தானேஉயிர்கள்விட்டு
கடல்தனிலே விழுந்துமடியவே

(பொது-வ-ம்,) இவ்விதமாக ஆயர்கூட்டத்தில் தாருகனும் பப்ரவாகனனும் தவிசு எல்லோரு மடிந்துவிட கிருஷ்ணமூர்த்தி தாருகனை விஜயனுக்கு சேதிசொல்லி அனுப்பிவிட அப்போது அங்குவந்தஒரு வேடன் பப்ரவாகனன்மேல் விளையாட்டாக கோரையை மேல் போட அவனும் மடிக்துவிட கிருஷ்ணன் சொல்வது.

கிருஷ்ணன் கவி.

பகருமுனிகாந்தாரி சாபம்போல
பாலர்களும்ஆயர்களும் மடியக்கண்டேன்

சகமுடைய தாருகனை விஜயனுக்கு
சொல்லிடுகவே தியதும் அனுப்பிவைத்தேன்
ஜெகமதனில்பலராமர் எந்தனின் தன்
சித்தமுள்ள ஆயுதம்தேர் மறையக்கண்டேன்
யுகமுடிவும்வந்ததினி வசுதேவர்க்கு
உரைத்துமேதான்கானகம்நாம் நடக்கலாமே.

(வ-ம்.) யாதவாளும்மடிந்தார் அண்ணனும் வனஞ்சென்றார் இனி நாம் இருக்கலாகாது வசுதேவருக்கு உரைத்து சொல்லவேண்டும்.

கிருஷ்ணன் தரு (சோமசேகரனும் என்றமெட்டு.)

தந்தையேஉன்னிருபாதத்தில் நானேநானே
இந்த-தனயன்கிருஷ்ணன்பணிந் தேனேதேனே

வசுதேவர்.

வந்தமைந்தாநீயுமிக வாழிவாழி
சென்றவல்லமைந்தர் ஆயபொங்கின் ஞழிஞழி

கிருஷ்ணன்.

அய்யனேஞன்என்னசொல்வேன் இப்போஇப்போ
அந்த அலைகடலிடத்தேமாண்டார். மெய்ப்பாமெய்ப்பா

வசுதேவர்.

உண்மையோடாகண்ணேநீயும் சொல்லு சொல்லு
அய்யோ-ஓகோஎன்னமாய்மடிந்தார் நில்லு நில்லு

கிருஷ்ணன் கவி.

தந்தையேயென்னசொல்வேன் தாபன்பெண் ஆயுதம்தேர்
வித்தையாய்கடலுக்கே வெளிப்பட்டுபோதேபோச்சு
சுந்திர அண்ணன்தானும் சனமுடன் தனதனதைச்சென்றார்
பித்திதான்மதுவெறியால் பிள்ளைகளடித்துமாண்டார்.

வசுதேவர் தரு.

இந்தவிதிக்குகாணோஇங்குவந் துதித்தீர்கள் பாலரே பாலரே
எந்தகாலத்திலுங்கள் இனியமொழி கேட்பேன் பாலரே பாலரே

கிருஷ்ணன்.

பாரிலழகுடையபாரவாகன் மாண்டான் தந்தையே தந்தையே
கூயமாண்டோரைசொல்ல குமருந்தளன்வயர் தந்தையே தந்தையே

வசுதேவர்.

தந்தைதந்தையென்றுதவித்துஅழுகும் என்கிஷ்டனேகிஷ்டனே
வந்தசண்டையென்னவகையுடனேசொல்லும் மைந்தனே மைந்தனே

கிருஷ்ணன் தரு.

மைந்தர்மதுவெரியால்மயங்கியலர்கள்தானே அய்யனே அய்யனே
அந்தசாத்தகியுடன் அடிக்கான்கிருதவன்மன் மெய்யனேமெய்யனே

வசுதேவர்,

மெய்யசண்டைதன்னைசெய்யாதடுத்தாலென்ன கிஷ்டனேகிஷ்டனே
ஒய்யாரமாய்பார்த்துசும்மாப்போல்வந்தாயோ கிஷ்டனேகிஷ்டனே

கிருஷ்ணன்.

கிஷ்டனுன்னென்செய்வேன்து ஸ்டப்பிள்ளைகள்செய்தால் அய்யனே அ
கஷ்டப்பட்டழுதாலும்கண்ணில்காணபதண்டோ மெய்னே மெய்

வசுதேவா கவி.

கலமுள்ளபாலர்மாள கன்றுசபார்த்துவந்தாய்
பலராமன்காணஞ்சென்றேன் பஷ்டமாயெங்களுக்கு
உலகினில்யென்னதானும் உரைத்துமேசென்றப்பா
இலகியேயெங்களுக்கு எடுத்துரைசெய்குவாயே.

கிஷ்ணன் கந்தார்த்தம்.

தவமதாய்தவங்கிடந்த தனயனல்பெற்றதந்தை
பவமதையொழிக்கஅண்ணன் பலராமர்சென்றாரிப்போ
கவனமாய்காணும்சென்று கடுகெனபார்த்துவாரேன்
மௌனமாய் இருக்கவேண்டாம்.

தரு.

மைந்தன்தனையனுப்புமே அண்ணனைக்காண
சிந்தைமகிழ்ந்தனுப்புமே
மைந்தனையனுப்புமே மாண்டோர்தமையெண்ணி
தந்தையேநீயுமே தயங்கிடவேண்டாமே

(வ-ம்.) அண்ணன் ஒன்றும் யெல்லவில்லை என்னை அனுப்புக்கள் சீக்கிறம் சென்று அழைத்துவாரேன்.

வசுதேவர் கந்தார்த்தம்.

அஷ்டபாரிகள்தன்னோடு அன்னையுமாயர்மாதர்
கஷ்டமாய்யென்னைவிட்டு கடும்வனம்நீயும்சென்றால்

இஷ்டமாய்யெங்களை தான் இவ்விடம்தன்னில்காத்து
பஷ்டமாய் இருப்பாராரோ.

தரு.

பார்த்துசொல்லுவாய்கிஷ்டனே எந்தனிக்கிப்போ
தீர்த்துசொல்லுவாய்க்கிஷ்டனே
கோர்த்தியாய்போகவேண்டாம் நீரெங்களை காப்பாயே
வேர்த்துவார்த்தைகள்சொல்லி வேறெண்ணம்கொள்ளாதே

கிருஷ்ணன் கவி,

தந்தையரேயானுமேதான் சொல்லக்கேளும்
தாருகனும்விஜயனுமாய் வருவாரிப்போ
விந்தையுடன்துவாரகைரை விஜயனாலெ
விதமுடனேகாத்திருப்பீர் இன்னஞ்சொல்வேன்
எந்தையரேயிவ்வூரு ஏழுநாளில்
இதமுடனேமூழ்கிடும் சொன்னேன்நானும்
அந்தமுள்ள அண்ணனையும் காணவேடி
அருங்கானம்யானுமினி நடக்கலாமே.

(வ-ம்) கேளும் தந்தையே தாருகன் விஜயனை அழைத்து வருவான் விஜயனால் இந்த ஊரை காத்திடுங்கள் இந்த ஊரும் இன்னும் ஏழுநாளில் கடலில் மூழ்கிடும். நீ இரும் நான் அண்ணனை அழைத்து வாரேன். ஆரடி தாதிகளே! நீங்கள் ஓடி சத்தியபாமாவிடம் சொல்லி ருக்மணியையும் யோடி வரும்படியாக சொல்லும் தாதிகளே.





### சத்தியபாமா கவி.

பத்தவதார நாதன் பாரினிலழைக்தாரென்று
மெத்தவேசேதிகேட்டு மெல்லியும்யெழுந்திருந்து
சுத்தமாயரிவோமென்று தோகையும்பணிகள்பூண்டு
சத்தியபாமாமாது தையலும்வருகின்றாளே.

### சத்தியபாமா வருகிற பல்லவி.

சத்தியபாமாயிதோவந்தேன் வெகுவடிவினிலழகிய
உத்தமிமாதும்நோ வாறேன்

### அநுபல்லவி.

அத்தர்புனுகுடனே அழகாய்சவ்வாதுபூசி
அணிந்துகப்மல்சிமிக்கி அகிலந்தில்மிகநேசி
நெத்திதன்னில்குங்குமம் நெடிவிழிமைபூசி
நேருங்கிருஷ்ணனுக்கு நிகர்ந்தமாதுப்பிரகாசி
சுருள் நீதியுடனழைத்த சேதியரிவோமென்று
தாதியுடனேகூடி சோதியிவளோவென்ன சத்

### சரணங்கள்.

எந்தநாதற்குகந்த எட்டுபட்டஸ்திரீதன்னில்
எனைவிடமிருந்தவள் உண்டோஅதிலேயன்னில்
விந்தையாய்யெந்தனை ஏனோஅழைத்தார்முன்னில்
விரைவினில்சென்றுநானே நானேகாணுவேன்கண்ணில்
சுருள் வீசிஉலகப்பிரகாசி காதனையிப்போ
நேசமுடனேகாண வாகமுடனெழுந்து சத்
பத்தவதாரநாதன் பாரிலழைத்தசேதி
பணிந்துஅவரைக்கண்டு தெரிவேனின்னமும்நீதி
சித்தமுடனேவெகு சேர்ந்துகூடிடதாதி
சேலோவிழியிதென்று தெரிந்தோர்மிகவேவோதி
சுருள் தேங்ககூந்தற்குமஞ்சு யேங்கஉலகமீதில்
நீங்கதொடைக்குவாழை தாங்காதெனவேசொல்ல சத்
பாரில்முனிவரிடம் பட்டார்மிகவேசாபம்
பாலர்யெல்லோரும்தானே மாண்டார்ஐயய்யோபாபம்
சிராயிதனையெல்லாம் சிந்தித்தால்வருஞ்சோபம்
சிறந்தயிலவம்பஞ்சில் இட்டாப்போலாச்சேதீபம்
சுருள் சேடியெண்ணினல்யென்ன வாடிஇந்தநாடகம்
பாடிகோவிந்தசாமி ஆடஉலகிவிட்டார் சத்

சத்தியபாமா கவி.

கங்கையேதாதிவாடி காதனாமைத்ததாலே
பொங்கமாய்சென்றுகாமும் பூசித்துகாணவேண்டும்
மங்களமாகசென்று மாதுருக்மணியாள் தன்னை
இங்கனமழைத்தோமென்று இவ்விடமழைத்துவாரீர்.

ருக்மணி கவி.

மிக்கவேதாதிமார்கள் மேதினிதன்னில்நாதன்
அக்கணமழைத்தசேதி அருவையும்காதில்கேட்டு
திக்கெல்லாம்மதித்துபோற்ற தேவியும்பணிகள்பூண்டு
ருக்மணியம்மன்தானும் துருசுடன்வருகின்றாளே.

ருக்கமணி வருகிற தரு.

தாரணிபுகழ்ப்பிரகாசி நாரணன்தனக்குநேசி
தையல்ருக்மணிவந்தாள் நாதனைகாண தையல்
சீராய்மாதர்களெல்லாம் சோர்துகவரிவீச
சுருள் சித்தினியேயிவள் பத்தினியோவென்ன
உத்தமியாகிய நித்தியபூரணி தார

அன்னநடையுடைய கன்னிவெகுபேர்கூட
மின்னல்வொளியோவென்று மேதினியோர்மயங்க
சுருள் மிஞ்சிடும்ரஞ்சித வஞ்சியாம்மாது
கஞ்சமலர்வதனம் துஞ்சிடும்சாது தார

அரையில்பட்டாடைமீது அணிந்துஒட்டியாணந்தன்ன
நிரையகழுத்தில்மாலை நீதியுடனேமின்ன
சுருள் நிகரில்லாசகமீது பகலொளிமாது
அகமதில்மாந்தரை கார்த்திடும்சாது தார

ஏதோநாதனுமின்று எண்ணியழைத்தசேதி
சாதாவாகியவெகு தையலுடனேகூடி
சுருள் சாமியின்சேதியை பூமியில்கண்டு
தாமிசமின்றியே நேமியேவருக தாரணி

(ரு. வ-ம்.) அக்கையேயெங்கனம் வாரும் நாதனை கண்டு வருகலாம்.
(ச. வ-ம்) அப்படியே செல்லுவோம் வாரும்.

சத்தியபாமா கொச்சகம்.

வையகத்துமன்னருடன் வானவர்கள் தான்பணியும்
அய்யனெனும்நாதனேயுன் அடியிணைக்கேயான் சரணம்.

ருக்மணி கொச்சகம்.

மெய்யாசிசுபாலன் மேதினிகம்சன்கொன்ற
ஐய்யனேயுன்பாதமலர் தோகையாளும்யான்பணிந்தேன்.

(இ. ல-ம்.) எழுந்திரும் உரைக்கிறேன்.

சத்தியபாமா தரு.

காதாவந்தனம்தந்தேன் எனதுபிராண கா
காதாவந்தனம்தந்தேன் சூதாயெந்தனக்கார்க்க
ஏதோ அழைத்தசேதி வாதாயோதுவீர்தானே கா

கிருஷ்ணன் தரு.

மாதேவாழ்குவாய்தானே எனதுபிராண
கோதேவாழ்குவாய்தானே
மாதேவாழ்குவாய்தானே தோதாயழைத்தசேதி
சாதாவுடனேசொல்வேன் நீதமுடனேகேழ்ப்பீர் மா

ருக்மணி தரு.

செப்புவீர்எந்தனுதாஎனக்கரிய ஒப்புவீர்எந்தனுதா
செப்புவீர்யென்னசேதி இப்போகடல்தனிலே
கொப்பெனமாண்டோரகண்டு தப்பிதமில்லாமல்வந்தோம்

கிருஷ்ணன் தரு.

சொல்லுவேன்நீயும்கேழ்ப்பாய் எனதுமாதே
சொல்லுவேன்நீயும்கேழ்ப்பாய்எல்லோரும்மாண்டார்தானே
மெல்ல அண்ணனைக்கண்டு கல்லாவருகநானும் சொ

சத்தியபாமா கவி.

உன்னிட அண்ணன் தானும் உகந்துபேகானஞ்சென்றார்
பின்னிட வருவாரிப்போ புறப்பட்டுநீரும்செல்ல
என்னதான்மதியோநாதா இவ்விடம்சொல்லவந்தீர்
கண்ணனேசெல்லவேண்டாம் காரிழைஉரைத்திட்டேனே.

கிருஷ்ணன் தரு.

போடிபயித்தியக்காரிஇங்கே புத்திசொல்லவந்தாய்மீறி
ஏடகூடமாகயென்ன சொன்னபோதும்
காடிகானகஞ்சென்று நான்காணயிருப்பேனே

சத்தியபாமா தரு.

என்னயெண்ணம்கொண்டீர்நாதா எங்களையேமாத்தருதா
பண்ணுநீர் ஆழியில் பாலர்மடிந்திட
கண்ணாலேகண்டுநீ கழலிடலாகுமோ

கிருஷ்ணன் தரு.

மாதேதயிதுவென்னபேச்சு மாண்டாலதுவறைபோச்சு
ஏதோ அவர்காலம் அப்படியாச்சுது
வாதாநீசொல்வது வருகிறேன்போய்நானும்

ருக்மணி தரு.

சாம்புவந்தனோடுநாதா சாய்ந்தாரே ஆயர்கள்வாதா
தீம்பாகநீர்பார்த்தும் தெரிவைதனைவிட்டு
வீம்பாகநீர்போக வீரமோசொல்லுவீர்

கிருஷ்ணன் தரு.

அவராலல்லோயிந்தகூத்து யிவைதயாரிடம்
சொல்கின்றாய் பார்த்து
மவுனமாயிருக்காமல் மாதேயதைசொன்னாய்
குமருநீதயென்வயர் கோதையேயென்செய்வேன்

சத்தியபாமா தரு.

உங்களின்சிஷ்டத்தைப்போல உகந்துசெல்லமெண்மேலே
நங்கைமார்கள்நாங்கள் நாடிவருகிறோம்
பங்கமில்லாமலே பார்த்துவருகலாம்

கிருஷ்ணன் கவி.

மங்கையேயிந்தயெண்ணம் மனதினில்கொள்ளவேண்டாம்
உங்களைகூட்டிநானும் ஒருபோதும்செல்லமாட்டேன்
பங்கமிலாமலேதான் பாவையேயிருந்தீரானால்
இங்கிதமாகசென்று இக்ஷணம்வருவேனே

சத்தியபாமா ஜம்பை.

இப்படிக்குநீர்சொன்னால் யெந்தனிட பிராணநாதா
இப்புவியில்நாங்களும்தான் எப்படிக்குவுய்வோம்சொல்வீர்

கிருஷ்ணன் ஜம்பை.

சொல்லுகிறேன்தோகைகளே சுந்திரமாய்தாருகனை
அல்லலில்லாவிஜயனிடம் அனுப்பினேன்வருவானே

ருக்மணி ஜம்பை.

வருவானென்றுநீர்சொன்ன வாள்விஜயன்வந்துமேதான்
பிரியமுடன்யெங்களைத்தான் பிசகில்லாகார்ப்பாரோ

கிருஷ்ணன் ஜம்பை.

கார்ப்பானேகாண்டீபனும் கருணையுடன்வுங்களைதான்
கர்ப்பினியேநீரிருப்பீர் காடுசென்றுவருகின்றேன்

சத்தியபாமா ஜம்பை.

வாரேனென் றீர்சொல்லி வண்மையுடன்வனத்தனில்
சீராயிருந்துவிட்டால் தேவிகாங்கள்வுயிர்விடுவோம்

கிருஷ்ணன் ஜம்பை.

உயிர்விடுவோம்யென்றுசொன்ன உத்தமியேபத்தினியே
அயன்விதித்தபடியாகும் அரிவையரேபோய்வாரேன்

ருக்மணி கவி.

பூதலவுயிர்வதைத்த புண்ணியரானயெந்தன்
நாதனே கானஞ்சென்று நன்மையாய்வருகுவீரே.

கிருஷ்ணன் கவி.

காதலுக்குகந்தமாதே கலங்கியேதவிக்கவேண்டாம்
போதவேசென்றழைத்து புறப்பட்டுவருகுவேனே.

(பொ. வ-ம்.) இந்தப்பிரகாரமாக கிருஷ்ணபகவான் எல்லாரிடத்திலும் சொல்லி கானகம் நோக்கி நடப்பது.

**கிருஷ்ணபரமாத்மா வைகுந்தம்நோக்கி கானகம்செல்ல நடப்பது.**

தரு.

அருவாசர்சாபம்கினைத்து துவாரகைபட்டணம்விட்டு
துளபமணிகிருஷ்ணதேவர் தொடர்ந்துகானகம்நோக்கிவாறார்
பாரில்பாலர்தான்மடிந்திட பாவைதந்தைதாய்தன்னைவிட்டு
பரந்தாமன்கானகம்நோக்கி பண்பாகநடந்துவாரேன்
ஆவலாய்தேவர்சபையில் ஆன்புடன்பூமிதேவிக்கு
அன்றளித்தவாக்குபடி ஆச்சுதென்றேசந்தோஷித்து
மேவியேகானகந்தனில் மேன்மையாய்வெகுதூரம்தாண்டி
மெல்லவேநடந்துநானும் அல்லலில்லாமலேவாரேன்

கிருஷ்ணபரமாத்மாயெதிரில் பலராமரைக்கண்டு சொல்கவி.

ஆஹாஹாயென்னசொல்வேன் அன்புள்ள அண்ணன் தானும்
யோகாந்தமாகத்தானே வுருதியாய்யிருக்கக்கண்டேன்
ஏகாந்தமாகக்காண யின்பமாய்நடக்கும்போது
பாகாகசோதியாகி பரவெளியாய்மறைந்தார்.

(வ-ம்.) எதிரில் அண்ணன் பலராமரைக்கண்டு நடக்கும்போது அவர் மறைந்து சோதியாகிபோய்விட்டார். இனிநாமும் போக வழி தேட வேண்டியதுதான்.

(பொ. வ-ம்.) பலராமர் ஆதிசேஷனோடு கலந்துபோய்விட கிருஷ்ணன் நடப்பது.

கிருஷ்ணன் தரு.

ஆஹா அதோ அண்ணன் தானும் அன்புடன்யோகத்திருக்க
அவரைக்கண்டுகேட்கும்போது அதிருசாய்மறையக்கண்டேன்
பாகாகமதண்ணனான பக்ஷமுமுடையயெந்தன்
பலராமரும்சென்றாரினி பார்த்துமேகளித்திட்டேனே
காடுசெடிநாடுதாண்டி கானகத்திருண்டயிந்த
விசாலமுள்ள ஆலின்கீழே கண்டுமேபடுத்திட்டேனே
நாடியேமனம்நிறுத்தி நாளுமேமுன்சாபத்தையெண்ணி
நன்றாககீழேபடுத்து நாடினேன்வைகுந்தம்செல்ல

கிருஷ்ணபரமாத்மா சொல்கலி.

தூலமாம்சரீரம்விட்டு சுத்தமாம்வைகுந்தத்தை
காலத்தில்செல்லநாமும் கடுஞ்சாபம்துருவாசர்
மேலதாயிருக்கக்கண்டு மேன்மைசேர்காட்டிலிந்த
ஆலதின்கீழ்தானே அன்புடன்படுத்திட்டேனே.

ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா ஆலின்கீழ்படுத்து யோகஞ் செய்வது.

தரு.

யோகந்தனிலமர்ந்தார் பெருஆலதின்கீழே யோ
யோகந்தனிலமர்ந்தார் பாதாலக்ஷமியுடன்
நாகந்தனிலமரும் நாதன்கிருஷ்ணனேனார் யோ
ரேசகபூரகமாய்நிறுத்தி வாயுவதனை
நினைத்துகும்பத்தில் குறித்து
வாசகமாய்நிலத்தில் வளமாய்சாய்ந்தொருகையை
நேசமாய்சிரசின்கீழ் நின்னையமாகவைத்து யோ
மற்றொருகையையிடையில்தாங்கி இருகால்தன்னை
மாறாமல்நீட்டிதானே வாங்கி
குற்றமில்லாமலேகுறித்து அட்டணையாக
சற்றேபோட்டுக்கொண்டு சாய்ந்துபடுத்துதானே யோ
வேதனும்பெருவிரலைவிட்டு அசைத்துக்கொண்டு
வேண்டியேபடுத்தாரே தான்பட்டு
நாதன்யிப்படியாக நாடிஅனைக்கண்ணாக
சோதிநித்திரைசெய்து சுத்தமுடனிருந்து யோ

(பொ. வ-ம்.) இந்தப்பிரகாரமாகத்தானே ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா வானவர் ஒரு ஆலின்கீழே உட்கார்ந்து சரீரத்தை விட்டு வைகுந்தம் செல்ல துருவாசர் சாபம் இருக்கிறதென்று யெண்ணி அந்தநிழலிலே படுத்து ரேசகபூரகமாய் வாயுவை கும்பத்திலடக்கிநிலத்தின்மீது ஒரு

காத்தை சிரத்தின்கீழ்வைத்து பற்றொருகாத்தை இடையில் தாங்கி ஒருகாலைநீட்டிமற்றொருகாலை அட்டணையாகயிட்டு பெருவிரலை அசைத்துக்கொண்டு அரைக்கண் நித்திரையாகயிருக்க அப்போது அந்த காட்டில் அம்புவில்லுடன் ஒரு வேடன் வருவது.

வேடன் வருகிற கவி.

ஆதியிலேவானரத்தின் அரசனாகி
அன்பானவாலியென்று பேர்பெற்றோனை
சீதானும்ராமரம்பு மார்பில்பட்டு
திறமுடனேயிறந்திட்ட பழியைதீர்க்க
நீதமுடன்வேடர்குலத் துதித்தோன்தானும்
நின்னயமாய் அம்புவில்லும் கையில்கொண்டு
போதமுடன்வேட்டையாட காட்டைநோக்கி
புறப்பட்டுவேடனிதோ வருகின்றானே.

தரு.

வீரசூரவில்வேடனுந்தானே வேட்டையாட
விந்தையாய்காட்டை நோக்கிவந்தனனே
ஆரவாரமும் கொண்டெழுந்திட
அவனியுள்ளவர் நடுநடுங்கிட
தீரமாய்பலபணிகள் பூண்டுமே
திக்குதிசைகண்டு வேட்டையாடிட வீர
அண்டர்கண்டு ராக்ஷதனென்றிட
அடவிமிருகங்கள் ஓடியொளித்திட
கண்டுபுவிபினில் காலன்தன்னிட
கடுகிதூதனே வந்தானென்றிட வீர
சல்லடத்துடன் கச்சையிருக்கிட
சார்ந்தவில்லம்பு கையில்பிடித்திட
நல்லமிருகத்தை கொன்றுதின்றிட
நாடிகாடெங்கும் தேடிதிரிந்திட வீர
இருண்டதிரேகமும் மீசைதன்னிட
இணையிலாசூரன் இவனேயென்றிட
மருண்டபார்வையால் மிருகம்பார்த்திட
மாட்டியம்பினால் கொட்டிகொன்றிட வீர

வேடன் கவி.

பசியதுவாகுதிப்போ பழுதிலாயிந்தகாட்டின்
திசையதைகண்டுநாமும் தேடியேமிருகத்தன்னை

இசையுடன்வில்லிலம்பை இன்பமாய்பூட்டிக்கொண்று
உருசியுடன்தின்னவென்று உகந்துமேநடக்கின்றேனே.

வேடன்வேட்டையாடுவது தரு.

வேட்டையாடினார் பாரீர்கல்ல
காட்டினில்மிருகத்தின் கூட்டத்தைகண்டு வே
நாட்டமுடனேகாட்டில் நன்றாய்சுற்றித்திரிந்து
தேட்டமதாய்மிருகம் வாட்டமடையகொல்ல
சருள் தேடிதேடிமலை காடுகள்சுத்தி
நாடிநாடிவெகு பாடுகள்பட்டு வே
ஓடும்மிருகம்பார்த்து ஒடுங்கபன்றியைதீர்த்து
தேடிமிகவேவேர்த்து திசைத்துமரத்தைநோக்கி
சருள் திசமுள்ளமிருகம் வரவில்லையென்று
கசமுள்ள ஆலின் கீழ்புராவதைக்கண்டு வே

ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவை வேடன்புராவென்றஅம்பினால் அடிப்பது

கந்தார்த்தம்.

கானகத்திரண்டுமூன்று காதத்திற்கதிகமான
வானத்தையளாவுமிந்த வனமதைதேடிபார்த்தும்
மான்முதல்மிருகமெல்லாம் மறைந்துமேபோகஆலில்
தோணிடும்புறாவின்மீது.

தரு.

தொடுத்தேன்பாராய் அம்பைபூட்டி
விடுத்தே னேராய்
அடித்தஅம்புசென்று அன்பாய்பெருவிரலில்
கடுத்துயடித்திது கண்ணன் துடித்திட

கிருஷ்ணபரமாத்மாமீது அம்புபட்டு சொல்வது கவி.

அடேஅடேபாவிலோபி ஆகாததுஷ்டவேடா
கொடும்பாவிஉயிர்கள்தன்னை கெடுதிசெய்திடுமிந்த
வடிவுள்ளயம்பைவிட்டு வதைத்தாயேகொடியமூடா
திடமுடனுனக்குயென்ன தீங்குநான்செய்தனேடா.

(வ-ம்.) அடே பாவி லோபி துஷ்டாமூடா வேடா நான்உனக்கு என்னதீங்கு செய்தேன், அதற்காக உயிர்களை வதைசெய்யக்கூடியஇந்தஅம்பைவிட்டு இப்படி இரத்தம் பிரவாகமாகபோகவும் நான் தியங்கவும்வைத்தாய் சொல்லும் வேடா.

வேடன் தரு.

ஆகாயென்னசெய்வேன் அன்புடன்பாக்பாமல் அய்யா
அடித்தனேபச்சை புருவென்றுவிரலினில் மெய்யா

கிருஷ்ணபரமாத்மா தரு.

விரலில்அம்புபட வீராயுயிர்போகுமே வேடா
திரமாய்மணம்பதர சிந்தியோடுதேரெத்தம் மூடா

வேடன் தரு.

மூடனறியாமல் மூர்க்கமாய்செய்தேனே காதா
காட்டில்படுத்துமே கடியதபம்செய்யும் வேதா

கிருஷ்ணபரமாத்மா தரு.

வேதன்யென்றுயெனை வேணதுபேசிடும் மூடா
காதன் துவாரகைகான் கிருஷ்ணனுச்சுதேவேடா

வேடன் கவி.

அய்யயோயென்னசெய்வேன் அவனியில்பெண்டுபிள்ளை
வையகத்தாசைவிட்டு வனமதில்கண்ணைமூடி.
மெய்தபம்வெகுநாள்செய்தும் மேதினிசிடைக்காயண்ணல்
ஐய்யவேயடித்துக்கொன்று நான்பழிதேடினேனே

வேடன் தரு புலம்பல்.

அம்யோகாளென்னசெய்தேன் அரிவாசுதேவனைதெய்வயேதெய்வமே
அடித்துகொன்றுமேதான் ஆகாபாவியானேன்தெய்வமேதெய்வமே
மெய்யாயோசிக்காமல் மேதினிலய்யன்மேல்தெய்வமேதெய்வமே
மெத்தயடித்துகொன்று சித்தம்பதரலானேன்தெய்வமேதெய்வமே

(வ-ம்.) ஆகா என்றும் அழியாத பெரும்பழியல்லவா தேடிக் கொண்டோம் ஏன் என்மதிகெட்டது என்னசெய்தோம்.

வேடன் புலம்பல் தரு.

என்னசெய்தேன் ஏதுசெய்தேன்
என்னிட மதியினலே
முன்பின்யோசியாமலேதான் முனிவர்சித்தர்தேடிக்காணு
அண்ணலையடித்துகொன்று ஆத்திரபடவுமானேன் எ
காதனை கிருஷ்ணன் தன்னை காணுமேயடித்துதன்னி
வேதனைநாகத்துக்கு வேண்டியேயாளாகினேனே எ
பத்துஅவதாரனென்று பாரினில்கேட்டுமிருக்கேன்
இத்தனையரிக்கிருந்தும் இம்சைசெய்துகொல்லலானேன் எ
திருவருளேவுன்செயலோ சிந்தமும்தோணவேயில்லை
ஒருவழியும்காணேன் ஐயோ உத்தமனைகொல்லலானேன் எ

வேடன் கவி.

நாதனேசொல்வேன்கேளும் நான்பாவியெய்தயிந்த
தீதுள்ள அம்பைநீக்கி திடமுடனம்புபட்டால்
வாதிலா ஆரச்செய்யும் வகையுள்ளபச்சிலையினாலே
சீதாநீர்த்துவைப்பேன் திருவுளம்வுரைசெய்வீரே.

(வ-ம்.) ஏ அரிகரி நாராயணா! சாமளருபா சங்குசக்கர அவதாரா தாமோதரா கோவிந்தா கோபாலா ருக்மணிமனோகரா காளிங்கநிர்த்தனா அடியேன்மனதில் யாதொரு வஞ்சனையியிலாமல் வனவேட்டையாடிவந்தேன் இந்த ஆலின்கீழ் பச்சைபுறாவென்று தங்கள்பெருவிரலில் அம்பால் அடித்துவிட்டேன் இப்போது உத்திரவளித்தால்அந்த அம்பைபிடுங்கியெரிந்து அம்புபட்டால் ஆறச்செய்யும் பச்சிலையினாலே ஆற்றிவிடுகிறேன் கர்த்தபமே:

கிருஷ்ணபரமாத்மா கவி.

கல்லாகவருக்குநிந்த ஞாயத்தையோசிந்தாலே
வில்லாளியர்னவாலி வீரனைகொன்ற அந்த
சொல்லாதபழியைதீர்க்க சத்தமாய்பிறந்துவந்து
எல்லாமும்சொல்லவந்தான் யிதுமிகநன்றுதானே)

கிருஷ்ணபரமாத்மா தரு.

ஆதியிலேதயசுரர்களை அன்புடனேசம்மரிக்க
அயோத்தியிலேராமனாக அவதரித்தேன்யானும்
வாதியாகிகைகேசியும் வனத்திலோட்டிவைக்க
வந்தோமேஜானகிநாங்கள் வகையுடனிருக்க

வேடன் தரு.

இருந்ததினால்யென்னகுற்றம் யெந்தனுக்கரிய
இன்பமாகசொல்லவந்தீர் இப்போஅம்புபட்டு
வருந்தியேயிருக்கும்போது வாய்திறந்துநாதா
வண்மையுடன்சொல்லவந்தீர் எந்தனுக்குநீதா

கிருஷ்ணபரமாத்மா தரு.

எந்தன்தேவிஜானகியை யெடுத்தான்ராவணனும்
எங்கிநாங்கள்செல்லும்போது யெதிரில்சுக்கிரீபன்
வந்துமேபணிந்துவாலி தன்னைகொல்லவென்றான்
வாக்குதுபோல்மறைந்து அம்பைவாலிமீதுயெய்தேன்

வேடன் தரு.

மெய்தேனென்றசொன்னகாதா எந்தனுக்கதையும்
எடுத்துரைத்தகாரியத்தை விடுத்துசொல்வீர்நீதா
வைகுந்தமேகோவிலாக வானவர்கள்போற்ற
வண்மையுடனமர்ந்திருக்கும் வாசுதேவபோதா

கிருஷ்ணபரமாத்மா கவி.

எடுத்துரைத்தகாரியத்தை சொல்வேன்கேளும்
இன்பமுள்ள அவ்வாவி நீயேயாகும்
திடத்துடனேவாலியென்னை யேசும்போது
சித்தமுடனூற்றிடுவேன் யென்றுசொன்ன
கடுத்திடும்வார்த்தையதை நீயும்சொன்னாய்
கண்ணனுமேகொள்ளேனான் இப்போநீங்கி
விடுத்திடும் கிருஷ்ணவதாரமேன்மை
விண்ணுலகமண்ணுலக மறியச்சொல்வேன்.

(வ-ம்.) ஏ வேடா நீ சொல்லுகிற வார்த்தை கேளேன் இனி இந்த அவதாரம் நீங்கிவைகுந்தம் சொல்லப்போகிறேன் இந்தபூமியில் இனி நம்மை பூசித்துபக்தியோடுதவம்பூசைவிரதம்முதலியபக்தியைசெலுத்தியவர்க்கு இந்தரூபத்தோடும் வந்துகாட்சிக்கொடுப்பேன் இந்தகிருஷ்ணவதார சரித்திரத்தைபூசித்தாலும்சொன்னாலும்கேட்டாலும்எழுதினாலும் படித்தாலும் உண்டாகும்நன்மையை சிறிது சொல்லுகிறேன் கேட்பாயாக.

பகவான் கிருஷ்ணவதார மகிமை சொல்லி மறைவது.

பாபமெல்லாம்போகும் முன்கால்செய்த
பழிகளதுவும் தீரும்
ஆவலாய்கிருஷ்ணவதார அருமைசரித்திரத்தை
மேவிகேட்டுபடித்து மேன்மையாய்பூசித்தோர்க்கு பா
தந்தைதாயைக்கொன்ற தனிப்பழியதனோடு
தமையன்தம்பிபெண்டு தன்பிள்ளையாம்பேடு
விந்தையாய்க்கொன்றுதான் விரதம்கெடுத்துமே
வீரன்போல்கோயிலை அதம்சண்ணிபிடித்திடும் பா
சாவடிசத்திரம் சாடிஇடித்துமே
தர்மம்செய்யாமலே தடுத்துக்கெடுத்துமே
ஆவலாய்ஜீவனை அடித்துயிம்சித்துமே
அன்போடளிப்பதை அடுத்துதடுத்திடும் பா

நாடிகவிவாணரை கன்றுறுஅஷித்துமே
காலாறுசாஸ்திரம் காணுணர்க்கேதனென்றும்
பாடும்கோவிந்தனின் பாடலைப்பழித்துமே
பாவிகளாகியகொடும் லோபிகள்தன்னிட பா

கிருஷ்ணபரமாத்மா மறைவது,

குற்றமேவுன்மீதில்லை கோவிந்தனுரைத்தேனனும்
சித்தமால்சிலதுநாளிவ் சேருவாயெந்தன்பாதம்
நத்தியேவைகுந்தத்தை நாடியேசெல்லவேண்டி
உத்தமவேடன்முன்னே உகந்துமேமறைந்திட்டேனே.

(பொ-வ-ம்) இப்படியாகபகவான்மீது அம்புபட்டிருக்கும்போது அதே சமயத்தில் பகவான் திரேகத்தில் கோடி சூரியப்பிரகாசம் போல் ஒரு சோதிஉண்டாகி பகவான்மறைந்துவிட வேடன் சொல்லுவது.

(வே. வ-ம்) ஆகாஎன்னசோதிபகவானைக்காணேமேமறைந்தாரோ

த ரு.

இந்தமோசமசெய்யலாகுமோ கோபாலகிருஷ்ண இந்
இந்தமோசம்செய்யலாமோ உந்தன்மீது அம்பைவிட்டு
சிந்தைநொந்திருக்கும்போது எந்தனையேமாத்திரியும் இந்

(வ-ம்.) இங்குப்படுத்துப்பேசி இருந்தாயே எப்படிபோனாயோ அரியேனே அரிஅரி வாசுதேவா.

த ரு.

மறைந்தாயேயென்னைவிட்டுமே உன்னையம்பினால்எய்ததால் ம
மறைந்தாயேயென்னைவிட்டு மாயனென்றும்சொல்லாமல்
பிறந்தும்பிறவானாக இறந்திறந்துபிறக்க இந்

(வ-ம்.) உன்னை கண்ணினால் கண்டும் என்னபயனை பெற்றேன் அல்லது உன்னிடம் ஏதாவது நல்மொழியாவது பெற்றேனோ.

த ரு.

கண்டும்காணாதானேனே இங்குகண்ணனினருளை கண்
கண்டயெந்தனையிங்கே கருதிவாரந்தந்தும்
தொண்டனுகசேர்த்திடாமல் தூயனன்பாசத்தில்நிற்க அந்

(வ-ம்.) இனிஇங்கு என்னசெய்கிறோம் போவோம்.

(பொ. வ-ம்.) (போகும்போது கண்ணன் சவத்தைக் கண்டு வேடன் சொல்வது) ஆகா! என்ன இது!

த ரு.

இதுவென்னமாயமாகுமோ ஸ்ரீகிருஷ்ணன்மாயம் இது
இதுவென்னமாயமாகும் இறந்தவிடத்தைவிட்டு
விதியிதுவோகண்ணன் விமலன்கிடக்கின்றீரே இது

(பொ. வ-ம்.) இந்தப்பிரகாரமாக ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா மறைந்து சிறிது தூரத்தில் சவமாகப்போய் கிடக்க வேடனாகிய வாலிகண்டு அழுதுபோய்விட அப்போ அஸ்தினாபுரியில் தாருகன் சேதிசொல்லக் கேட்டு தருமர் முதலாக அழுது விஜயனை அனுப்ப துவாரகை வருவது.

அர்ச்சுனன் துவாரகைகாடி வருவது.

விருத்தம்.

திக்குதிசைநடுநடுங்க தேவலோக
தேவேந்திரபட்டமதை ஆண்டவீரன்
மிக்கவே தான்கண்ணனை சாரதியாய்வைத்து
மிதமில்லாகௌரவரின் பகையொழித்தோன்
உக்கிரமுடன் ஆயரிட சேதிகேட்டு
உளம்குழம்பிபதைபதைத்து அழுதுதேறி
அக்கரையாய்துவாரகையை சென்றுகாண
அர்ச்சுனனும்துருசாக வருகின்றனே.

த ரு.

விண்ணுமண்ணவர்கண்ணனும் புகழும்வீராதிவீரனும்
விஜயகாண்டீபன் வந்துமேவினனே
அண்ணனார்மொழியனுவும் பிசகிடேன்
அரனிடம்பாசுபதமும் பெற்றிட்டேன்
திண்ணமாகவே எவரும்மீடிலேன்
தேவேந்திரன்சுதன் என்றும்பெருளேன் விண்
துரியன்செய்திட்ட சூதுகளைத்தும் துலைத்துதப்பினேன்
துய்யவலுவினால் பாரதம்முடித்தேன்
அரியசூதினால் அனைத்தும்தோற்றுமே
ஆரண்யம்பனிரெண்டு ஆண்டுமே
தெரியாமறைவதாய் ஒன்றுதீர்ந்துமே
ஜெயித்தேன்மாயனை அனுப்பியே விண்
பதினெட்டுபாரதம்தன்னில் கொன்றபேர்தன்னை
பார்த்துசொல்லிட ஏற்குமோபுவியில்

அதிவிதசுதன்வரவும் கொன்றேனே
அன்பாய்பகதத்தன் காம்போஜன்வென்றேனே
சுதக்ஷணன்ஜயத்ரதனு அம்பஷ்டன்
சொல்லும்சயிந்தவன் கர்ணன்கொன்றேனே விண்

தாருகன்வந்துசேதிசொல்லிடவும் தயங்கிமயங்கினேன்
தந்தாரன்னைனும்விடைகள் சென்றிடவும்
சிறுமாருமாய் ஆயர்தானுமே
திருவிஷாவிலே மாண்டுமடிந்தாமே
கூறுஞ்சேதியை காதில்கேட்டுமே
கொடியகாராசம் வென்றுமேற்றுமே விண்

அர்ச்சுனன் கவி.

மாமாவேயுந்தன் மலரடிதன்னில்
பூமலர்சாற்றி போற்றினேன்விஜயன்

வசுதேவர் கவி.

காமனைபழிக்கும் காளையேரூபா
க்ஷேமமாவுலகில் நீடூழிவாழி.

அர்ச்சுனன் தரு.

எந்தனுக்குகந்திட்ட மாமா
எழில்பெரும்ஆயரெல்லாம் பூமா
குந்தகமாகயவர்கூட்டமாய் மடிந்ததென்ன
சிந்தனையில்லாமல் சீக்கிரம்சொல்லுவீர்

வசுதேவர் தரு.

சொல்லுவேன்கேட்பாய்நீ மருக
சொன்னால்துக்கமேமிக பெருக
வல்ல ஆயர்கள் வாங்கியசாபத்தால்
சொல்லிகடலுமே தொலைந்தார்கூட்டமாகவே

அர்ச்சுனன் தரு.

கூட்டமாய்மடிந்திட ஐயோ
கோவிந்தன்யெங்குசென்றார் மெய்யா
காட்டமுடையமாயன் கல்லருளிருக்கையில்
வாட்டமாய்மடிந்திட வந்தகாரணமென்ன

வசுதேவர் தரு.

காரியமென்னசொல்வேன் இப்போ
கலைந்தருத்திரிகர்ப்பம் அப்போ

சாரியாய்கார்த்தானே | சாயலுயருமிப்போ
வீரியமாய்நின்ற | வேடிக்கைபார்த்தானே

அர்ச்சுனன் தரு.

பார்த்தார்யென்றுசொன்ன | காதா
பாலரவருக்கல்லோ | வேதா
கோர்த்தியாய்பார்த்திட | நீதியோயிதுவென்ன
கூத்தாகயிருக்குதே | கூறுவதைநகேட்டாலே

வசுதேவர் தரு.

கேட்டால்யெட்டாம்போர் | அவனுச்சே
கெடுத்தான்குட்டிசுவ | ருச்சே
காட்டமாய்மாண்டிட | காமேனகுழம்பலாமேன்
மூட்டியேசென்றானே | முகத்தையென்றுகா...

(அர். வ-ம்.) ஏ மாமா ஆனது ஆகிவிட்டது இது ... பாரதப் போரில் காந்தாரி பகவானுக்கு கொடுத்த சாபமும்யாதலச்சிறு ர்அகங் காரத்தால்பெற்ற சாபமும் இப்படியாச்சுது பகவான் எங்கே மாமா.

வசுதேவர் கவி.

மருகனேசொல்லக்கேளும் மாபலராமர்தானும்
அருங்கானம்சென்றானப்பா அன்புடனழைக்கவென்று
கிருஷ்ணனும்சொல்லவென்றான் கேட்டுமேதடுத்துபார்த்தேன்
அருச்சுனன்காப்பானென்று அன்புடன்யெகினேனே.

அர்ச்சுனன் தரு புலம்பல்.

அன்னைபோலவனியிலெவரை | கார்த்தாயேகிருஷ்ணதேவா
அடவியில்நீர்சென்றலையவிட்டீர் | எங்களைகிருஷ்ணதேவா
இன்னம்நீசென்றிடவினன்நான் | கேட்டுமேகிருஷ்ணதேவா
இறக்காதுயிர்வைத்திருக்கும் | பாவியானேன்கிருஷ்ணதேவா
உன்னைவிட்டொருநாழி | உயிர்வைத்திருப்பேனோகிருஷ்ணதேவா
உத்தமாயுந்தனையுலகி | லெப்போகாண்பேன்கிருஷ்ணதேவா
என்னைவிட்டுசெல்ல | ஏதுநான்செய்தேனோகிருஷ்ணதேவா
எத்தனைநாளின்னம் | இருப்பேனோஉயிர்வைத்துகிருஷ்ணதேவா

(அர். வ-ம்.) மாமா அந்தபுரம் சென்று தங்கையர்களைப்பார்த்து வாரேன் உத்திர வளிக்கவேண்டும்.

(வசு. வ-ம்.) அவர்களும் துக்கசாகரத்தில் தான் ஆழ்ந்திருக்கிறார் கள் சென்று கண்டு வாரும் அர்ச்சுனா.

சத்தியபாமா அர்ச்சுனனைக்கண்டு சொல் தரு.

கண்ணனருளைபெற்ற அண்ணா அர்ச்சுனபூபா
கன்னியர்தவிக்கலாமோ அனைவர்மாள கண்
எண்ணிலா ஆயர்பாலர் எல்லாம்மடிந்திட
கருள் எப்படிஉயிர் இப்புவியினில்
தப்பிநாங்களும் வைத்திருப்பது கண்

அர்ச்சுனன் தரு.

இருப்பதெப்படியென்று என்னைகேட்டிடும்தங்கா
என்னசொல்லித்தான் சென்றாரோகண்ணனவரும் என்
பொருப்பாக அவருமே போகும்போது தானே
கருள் பெண்ணாகிய உங்களுக்கு
என்னசொல்லித்தான் கண்ணன்சென்றாரோ இரு

ருக்மணி தரு.

சென்றபோது கண்ணன் தேவியெங்களுக்குமே
தேர்விஜயன் காப்பானென்றுமே துவாரகையெங்களை தேர்
அன்றுசொல்லித்தானே அய்யோமறைந்தாரே
கருள் ஆத்திரத்துடன் பார்த்து அண்ணனை
கேத்தியாய்வர நீர்த்துபோனாரே செ

அர்ச்சுனன் தரு.

போனகண்ணன் தனை போய்நாமும்பார்த்திட
புறப்பட்டுவாருங்கள் மாமனுடன் புற
ஆனவரையில்நாமும் அலைந்துவனத்தைதத்தி
கருள் அட்டியேதுதான் கிட்டிபார்த்திட
திட்டமாகவே ஒத்துவாருங்கள் போ

(சத். ருக். வ-ம்.) நாங்கள் வருகின்றோம் மாமா என்ன சொல்வாரோசென்று கேழ்ப்போம்.

அர்ச்சுனன் கலி.

அருமறையுணர்ந்தமாமா அரிகிருஷ்ணர்வனஞ்சென்றோரை
சரியுடன்தேடிபார்த்து சடுதியில்வருவதற்கு
திருவருள்புரிந்துமிப்போ தேவரீர்வருகவேண்டும்
நறுமலர்பாதந்தன்னில் நாங்களும்பணிந்திட்டோமே.

வசுதேவர் கலித்துறை.

பலராமன்போனான் பாலர்கள்மாண்டார் பார்க்கில்கிஷ்டன்
நலமாகசென்றான் னாடாகுந்துவாரகை நாள்யேழினில்

சலமூழ்குமென்று சாற்றினன்கிஷ்டன் சடலமினி
உலகத்தைவிட்டுஉயிர்விடுவேனிது னிச்சயமே.

(வ-ம்.) ஏ அர்ச்சுனா! பலராமன்போனான் குழந்தைமுதல் ஆயர் கூட்டம் தொலைந்தது. கிருஷ்ணனும் வனஞ்சென்றுவிட்டான் அது வன்றி, இந்த துவாரகையை கடல் ஏழுநாளில் மூழ்கிவிடும் என்று சொல்லி யிருக்கிறான் அப்படியிருக்க இனி நான் எங்கும் வரவில்லை உயிர் துறக்கப்போகிறேன். இது நிச்சயம் அர்ச்சுனா !

அர்ச்சுனன் தரு.

| | |
|---|---|
| மாண்டார்பாலரும்யென்ற | மாமனே அவர் |
| மாண்டாலதினாலென்ன | பூமனே |
| ஆண்டாண்டாய் அழுதாலு | மையன்விதித்தவிதியை |
| தாண்டிநடக்கப்போமோ | தள்ளுமந்தயோசனை |

வசுதேவர் தரு.

யோசனையென்றிடுமுத்தமா யுலகினிலின்னந்தானே
நேசனேயிருந்திடயெனக்கு சம்மதமில்லையுண்மைதானே

அர்ச்சுனன் தரு.

| | |
|---|---|
| உண்மையென்றிதனை நீ | உறைக்காதேயிந்த |
| உலகிலென்னகுறைதான் | மறைக்காதே |
| தன்மைசொன்னவிப்போ | தான் தீர்த்துவைக்கிறேன் |
| நன்மையுடனேசென்று | நாம்வருகலாம்வாரும் |

வசுதேவர் கவி.

வருகயெனக்குத்தான் வன்னவுலகிலென்னவுண்டு
பெருகபதம்தானும்பிள்ளை எனக்குண்டோசொல்லும்கண்டு

(அ. வ-ம்.) ஏ மாமா ! அப்படி சொல்லாதீர் பிள்ளையில்லாமல் எங்குபோய்விட்டார் பலராமர் கிருஷ்ணமூர்த்தி வனத்தில்தான்இருப்பார் வாரும் சென்று அழைத்துவருவோம்.

வசுதேவர் கவி.

அர்ச்சுனனேசொல்லுகிறேன் யானும்கேளும்
அரிகிருஷ்ணன்நினைந்திடிலோ குறைகளேது
அர்ச்சுனனுய்பகையாளி போலத்தானே
தானின்றுபார்த்திட்டான் வேடிக்கையாக
நிச்சயமாய்யெட்டாம்பேர் ஆனதாலே
நினைத்தபடிகுட்டிசுவராகச் செய்தான்

இச்சையுடனினியவனும் கிடைக்கமாட்டான்
இறப்பதினி நிச்சயமேநிச்சயந்தானே.

(வ-ம்.) ஏ! அர்ச்சுனா! கேட்பாயாக கிருஷ்ணன் நினைத்தால்இந்த குறைகளேது? அவன் ஏதோ நினைந்து பகையாளியைப்போல வேடிக்கைபார்த்துவிட்டான் மேலும் எட்டாம்போர் ஆனதால் குட்டிசுவராகவும்செய்தான் இனி தேடினாலும் அவன் கிடைக்கமாட்டான்நான் இனி இறப்பது உண்மையப்பா அர்ச்சுனா!

சத்தியபாமா தரு.

மாமாயிப்படிசொல்லப்போமா உங்கட்குயிது ஆமா தருமந்தானு
சேமாகருணைகூர்ந்து நீர்வந்துயிப்பொழுது
சாமியைப்பார்த்திட தருணம்வருகவேண்டும்

ருக்மணி தரு.

வருகையின்பகாங்களும்பெருக துக்கமதெல்லாம்கருககண்கூருமே
திருவழகுடையநாதன் ஸ்ரீ-கிருஷ்ணமூர்த்தியின்
உருவத்தைபார்க்காமல் உருகுதேமனமது

வசுதேவர் தரு.

உருகிமனமதுவும்கருதியொன்றாககூடி வருககாரணமெதுவோ
திருவனுப்வந்திட்ட திருட்டுகிஷ்டன்தானுமே
பெருகிமனம்வைத்தாலே பேதையேவாதில்லையே

அர்ச்சுனன் தரு.

மாதுயவரின்மீதுயேதுகுற்றமும்சொல்ல நீதுதகாதுமேதானே
வாதுகாந்தாரிசாபம் மகாசாபமாயரும்
நீதாய்பெற்றதாலே நீங்குவந்ததுதானே

(வ-ம்.) ஏதோ காலக்கொடுமை அதையெண்ணுதீர்மாமா.

வசுதேவர் இறப்பது கவி.

நியாயமதுபெதுசொன்ன போதும்கேட்கேன்
நின்னயமாய்பாலர்மைந்தர் பரிகொடுத்தேன்
மாயமதுபெண்டுபிள்ளை தனைவெறுத்தேன்
மாலையுடன்மணிமுடியின் ஆசைவிட்டேன்
காயமதுள்ளூரக எந்திரந்தன்னில்
கருணையுடனமர்ந்தோனை போற்றிசெய்து
வாயுவதைகும்பிட்டு மண்ணின்மீது
வண்மையுடன்விழுந்துயிதோ வணங்கினேனே.

(பொ. வ-ம்.) இந்தப்பிரகாரமாக வசுதேவர் வாயுவை கும்பிட்டு பரலோகம் சேர சத்தியபாமா ருக்கமணி அர்ச்சுனன் கண்டுஅழுவது

சத்தியபாமா தரு.

விட்டுவிட்டீரோமாமா விட்டுவிட்டீரேமாமா விட்
தட்டிவிட்டீரேயெங்களை நெட்டிவிட்டீரே
திட்டமாகபுவியின்மீது கெட்டியென்றுயாமிருந்தோம்
சட்டென்றுமேயெங்களைதான்நெட்டியேயிவ்விடந்தன்னில் விட்

ருக்மணி தரு.

ஆரடிதுணையினி கூரடிதுணை ஆர
பாரடிநமக்குயினி சீரடியொன்றுமேயில்லை
தேரடிபாலர்கள்மாள நேரடிமாமனும்சென்றார்
தீரடியொன்றுமேயில்லை தியங்கியேமயங்கிவாட ஆர

அர்ச்சுனன் தரு

அய்யோயிந்தகொடுமையை அரும்பாவிகாணவோ
அவனியில்பிறந்துவந்தேன் மாமாவே
வையகத்திலண்ணன் தம்பி வாகாய்மாமன்பிள்ளைமாள
வந்தேனேயுங்களைநம்பி மாமாவே
பையயுங்களைநாங்கள் பரிகொடுத்துபுவியில்
பார்த்திடும்பாவிகளானோம் மாமாவே
னையநீங்கள்மாளவே நான்பார்த்துநின்றிடும்
கரும்பாவியானேனே மாமாவே

சத்தியபாமா தரு.

இறந்துவிட்டோம்பாலர்தமை இப்புவியிலுன்னைநம்பி
இருந்திடுகயெங்களை தான் ஏமாத்திசென்றீரே

ருக்மணி தரு.

எரியுதையோவயர்குழம்பி இப்புவிலெங்களுக்கு
தெரியேனேயினிதுணைதான்தேவி நாங்களென்னசெய்வோம்

அர்ச்சுனன் கவி.

ஆண்டாண்டுவாகத்தானே அழுதுமேபுரண்டிட்டாலும்
மாண்டார்வருகயிந்தமானிலம்கண்டதுண்டோ
தீண்டாதநெருப்பைமூட்டி சித்தமாய்கவசத்தைவைத்து
வேண்டியேதகனம்செய்து விமலனைதேடுவோமே.

(பொ-வ-ம்) இந்தப்பிரகாரமாக மாகத்தானே ஸ்ரீஜனங்கள் எல்லோரும் அழுக அர்ச்சுனன்தேற்றி வசுதேவர் பத்தினிமார்களாகிய தேவகி ரோகணி பத்ராதேவி மதுராதேவி நால்வரையும் வசுதேவரை தகனம்செய்ய உங்கள்சித்த மென்னவென்றுகேட்க அவர்கள்நாங்களும் இருக்கமாட்டோம் கூடவைத்து தகனம் செய்யுமென்ன அப்படியே வச்சிற தங்களை கொண்டு சகல கிரிகையும் நடத்தி கண்ணனைத் தேடி சத்தியபாமா ருக்மணி அர்ச்சுனன் இவர்கள் கானகம் நோக்கி நடப்பது.

ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவை தேடி அர்ச்சுனன்
சத்தியபாமா ருக்மணி இவர்கள் கானகம்வருவது.

அர்சுனன தரு.

கானகம்நடப்போம்வாரும் தங்கையே
கண்ணன் தன்னை எண்ணிபின்னை
கடுகியேநடந்துநீங்கள் வாருங்கள்

சத்தியபாமா தரு.

வாறோமேகாடுசெடிகள் தாண்டியே
வன்னமானும் முன்னேதோனும்
வனமெலாம்திரிந்து கால்கள்நோகுதே

அர்ச்சுனன் தரு.

கொந்துமேயழுது வாடலாகுமோ
வந்தவிதியை நந்தன்சதியை
நம்மாலேவிலக்கப் போமோ

ருக்மணி தரு.

பெண்ணுள்நான் புலிமான்வாழும்காட்டினில்
புலம்பியிப்போ அலேந்துதப்பி
பூரணன் தன்னை தேடலானேனே

(பொ. வ-ம்.) இவ்விதமாக மூவரும்தேடி அலுத்துஇறக்கிறபோது அங்கொருவேடன் கிருஷ்ணனின் சவத்தைகாட்டகண்டுபுலம்புவது.

அர்ச்சுனன் கவி.

அரிகரிகோபாலாகிருஷ்ணா அச்சுதாயரிகோவிந்தா
முரகரியிதுவோயென்ன மோசமோசெய்தாயிப்போ
கரிதனைகார்த்தமாயா காரியமிக்தமட்டோ
மதுமொழிஉரைத்திடாமல் மாதேவாசாய்ந்திட்டாயோ.

அர்ச்சுனன் புலம்பல் தரு.

அய்யய்யோஇதுவென்ன அனியாயமனியாம்தெய்வமே
அரிவாசுதேவனும் ஆலின்கீழ்கிடந்திடதெய்வமே
பையவேபார்த்திடும் பாவிநானேனேதெய்வமே
பார்த்துஉயிர்வைத்துப் பாவியிருக்கின்றேன்தெய்வமே
வையகத்தைவிட்டு வனந்தனிலேவந்துதெய்வமே
வாசாய்மடிந்திட வர்மமேதாவறியேன்தெய்வமே
கையுதைய்யோமனம் கான்பாவிஎன்செய்வேன்தெய்வமே
காதனிப்படியானல் ஏதுபடப்போறேனேதெய்வமே

சத்தியபாமா தரு.

ஐய்யமணிமார்பழகா ஆக்குருயோயெந்தனுதா
தையலரையிக்குவிட்டு சாய்ந்தாயோபுவிமீது

ருக்மணி தரு.

புவிமீதுயெங்களைத்தான் புண்ணியரேநீர்விட்டு
சவமாய்கிடந்திடுக சாமியேநானென்னசெய்வேன்

சத்தியபாமா வேறு தரு.

ஆயர்தங்களைக்காக்க அன்றுமலைசுமந்த
ஐயோஎந்தனுதனே புகழ்நீதனேமிகுபோதனேஉந்தன்
அரிவையர்வாடிட அருங்கானகம்வந்து
அமர்ந்தாயே அமர்ந்தாயே அமர்ந்தாயே

அர்ச்சுனன்.

அமர்ந்துஅரவமீது அகிலவுலகுங்காக்கும்அரிகரி
அச்சுதனேஎன்மைத்துனனே பச்சைசிறனேஇந்த
ஐவரையும்விட்டு அடவிதன்னிவந்து
அடுத்தாயே அடுத்தாயே அடுத்தாயே

ருக்மணி.

அடுத்தஆயரெங்களைக் கெடுத்துவனத்தில்வந்து
அமர்ந்தாயேமலைசுமந்தாயே இங்குமறந்தாயேஉன்
அன்பானவாயினல் அழகுமொழியொன்று
சொல்வாயே சொல்வாயே சொல்வாயே

அர்ச்சுனன்.

சொல்லிப்பாரதம்வைத்து எல்லாரையும்கொன்ற
சுந்திரனந்தன்மாமா மிகுசேமாபாக்தாமாரியும்

ஆதாகமறைந்துமே வேதனைப்பட்டிட
விட்டாயே விட்டாயே விட்டாயே

அர்ச்சுனன் கவி.

இனியிங்கு அழுதிருந்தால் இறந்தவர்பிழைப்பதுண்டோ
பனிமொழித்தங்கைமாரே பரந்தாமன் தன்னையிப்போ
வனந்தனில்யாகந்தன்னை வளர்த்தியே அதனிவிட்டு
தனியாகசெல்வதற்குத் தங்கையேவுரைசெய்வாயே.

(வ-ம்.) கேளும் தங்கைமார்களே முன் துருவாசருக்கு அன்னம் பூசியபோது பெருவிரலில் பூசாததால் பெருவிரல் வழியாக பிராணவாயு நீங்குமென்று சொன்னபடி போய்விட்டது. தகனம் செய்துபோக உங்கள் சித்தமென்ன.

(சத். ருக். வ-ம்.) அப்படியே தகனம் செய்வோம்.

அர்ச்சுனன் பகவானை தகனம் செய்வது தரு.

தகனம்செய்தாரே கிருஷ்ணமூர்த்தியை தக
தகனமும்செய்தாரே தனஞ்சயன் அர்ச்சுனன்
கவனவக்கிரதந்தன் கையினால்தீமூட்டி தக
காட்டில்கட்டைபொருக்கி கவனமுடனடுக்கி
நாட்டமுடன்கண்ணனை நன்றாகவைத்துமே தக

சத்தியபாமா கவி.

அண்ணனேயென்னசொல்வேன் அரிகிருஷ்ணன் தன்னையிப்போ
நன்றாகவைத்துநீரும் நலமுடன்வச்சிரதந்தன்
தன்னாலேதகனம்செய்தீர் தானென்னவானந்தானும்
என்னமோயிருண்டுதானும் இறைச்சலாய்வருகின்றதே.

(வ-ம்.) அண்ணா தாங்கள் தகனம்செய்துவிட்டீர், இதோவென்னை ...ாயமானது இருண்டு ஒரே விருளாகமழைவந்து அடிக்கிறதே. ...கிருஷ்ணபரமாத்மாவைமழைவந்துவேகாமல்அடித்துபோய்விடல்

அர்ச்சுனன் சத்தியபாமா ருக்மணி தரு.

போகுதேஐயோ போகுதேஎன்செய்வோம்
போகுதேசொல்லொணு புரண்டுவெள்ளம்வந்து
பாகானசுவாமியை பக்ஷமுடன்கொண்டு போ

அர்ச்சுனன் கவி.

என்னமோகாலகோலம் எரிந்திடும்சவந்தானிப்போ
வன்னமாயடித்துப்போச்சு வாருங்கள்செல்லுவோமே

சத்தியபாமா ருக்மணி கவி.

உன்னிடமொழியைப்போல உகந்துமேவந்தோம்நாங்கள்
தன்னிடநாடுதேடி சடுதியில்செல்லுவோமே.

(பொது. வ-ம்.) இந்தப்பிரகாரமாக அர்ச்சுனன் வச்சிறதந்தனுல் கிருஷ்ணமூர்த்தியினுடைய திரேகத்தை தகனம் செய்ய மழை பதிக மாக பெய்து அடித்துபோய்விட அர்ச்சுனன் சத்தியபாமா ருக்மணி முதலிய பேருடன் துவாரகைவந்து பார்க்க பாதிவூரை சமுத்திரம் சூழ்கியிருக்கக்கண்டு எல்லோரையும் அழைத்துக்கொண்டு இந்திரப் பிரஸ்தம்வர காட்டில் நுழைந்து வரும்போது கிருஷ்ணபகவான் வேடனாக அர்ச்சுனன் பலத்தைபார்க்க வருவது.

கிருஷ்ணன் வேடனாக வருவது கவி.

முந்திபதினாயிரம் ரிஷிகள் தானும்
முலகமதில்கேட்டிட்ட வரத்தைப்போல
இந்தஅவதாரத்தில் கோபஸ்திரீ
எழுனுடையமாதராய் பிறக்கசெய்து
சந்திரமாய்அணைந்துமேதான் சுகத்தைதந்து
சுத்தமுடன் அவர்களுக்கு பூர்விக்யானம்
தந்துமேதான்மோக்ஷந்தரவேண்டுமென்று
சாரங்கன்வேடனாய் வருகின்றாரே.

தரு.

வேடரூபமெடுத்தாரே அந்தவிஜயனை
சோதிக்க மனதிலெண்ணி வே
வேடரூபமெடுத்தார் தேடரிதானநாதன்
காடிவில்லம்புகொண்டு காதன்ரூபத்தைமாற்றி
சருள் கானிலத்துள்ளவர் எனிதுவென்ன
வானவர்தானவர் யானவர்மயங்க வே
முதுகில்வலையைபோட்டு முரட்டுனதத்தைகாட்டி
பதமாய்கையில்தடியை பாங்குடனேகொண்டு
சருள் பார்த்தவர்மயங்கியே கூத்திதோவென்ன
கோர்த்தியாய்காட்டில் திமலனும்வந்தார் வே

(பொது. வ-ம்.) இப்படி பகவான் வேடனாக இருக்க அர்ச்சுனன் எல்லோரையும் அழைத்து வருவது.

அர்ச்சுனன் தரு.

தங்கையேவந்திடுங்கள் இந்திரபிரஸ்தம்
அங்கையே சென்றிடுவோம்

அங்கம்வாடிடமாயன் - அவர்செய்தருதனை
இங்கையேமறந்துமே எந்தன்பின்னால்நீங்கள் நம்

சத்தியபாமா தரு.

பின்னால்நடக்குவந்தோம் அதோ
முன்னால்புலிபால் கொந்தோம்
அன்னம்விளையாடுது அழகாய்மயில்ஒடுது
என்னமோயானையும் இரைச்சலும்போடுதே பின்

அர்ச்சுனன் தரு.

இரைச்சல்போட்டதை கண்டுதான்
நீங்கள்ஏனேபயம் கொண்டீர்தான்
மதித்துவந்தபோதுமாவ அம்பினால்கொன்று
அர்ச்சுனன்காவ்காப்பேன் அம்மாநீவந்திடுங்கள் இ

ருக்மணி தரு.

தெரிநடக்கும்போது முன்னாலதோ
பாரீர்சிங்கம் போகுதே
சாரியாய்மான்கூட்டம் சாய்ந்துவிளையாடுது
கூரிதோவேடனும் குரிக்கினில்வாறனே தே

காட்டில்போம்போது வேடன் மறிப்பது கவி.

ஆரடாபின்றுகாட்டில் அருவையும்நீயுமாக
கூரடாகூட்டமாக கூடியேசெல்லுகின்றீர்
சாதியாய்போகுகின்ற தையலையெந்தனுக்கு
பாரியாய்தருகாவிட்டால் பதைக்கவேகொல்லுவேனே.

(வே. வ-ம்.) ஆறடா போறது அந்தபொம்மனாட்டியை விட்டு விட்டுபோனுபோச்சு அல்லாபோனு விடமாட்டேன்.

அர்ச்சுனன் கவி.

வழிதனைமறித்துகேட்கும் வன்னவில்வேடாயானும்
பழியதாய்வேடர்தம்மை பதைக்கவே கொன்றுதள்ளும்
அழியாதவில்லைகொண்ட அர்ச்சுனன்யென்றுசொல்லும்
பழுதிலாவேந்தர்வேந்தன் பற்குணன்பானேகாண்பாய்

(வ-ம்.) அடாகானேவேடர்க்குவழிதியாகிய அர்ச்சுனன் பேசாமல் வழியேசெல்.

வேடன் தரு.

வேடரைகொல்வேனென்ற அர்ச்சுனனே ஓஒ பற்குணனே
வீராப்புசெல்வாதடா அர்ச்சுனனே

தேடியேகலைவன்விரல்கொண்ட அர்ச்சனனே ஒஒ பற்குணனே
ஜென்மபகையாளியாச்சே அர்ச்சனனே

அர்ச்சனன் தரு.

ஜென்மபகையாளியென்று வேடுவனே ஒ வனவேடுவனே
நிரமாய்பேசுவது வேடுவனே
ஈனசாதியில்உதித்த வேடுவனே ஒ வனவேடுவனே
சண்டாளனே செடுகுறாய் வேடுவனே

வேடன் தரு.

சாதிதனைபேசிடுகும் அர்ச்சனனே ஒஒபற்குனனே
உன்தாய்க்கைக்துபுருஷரல்லோ அர்ச்சனனே
நீதியாய்துரோபதைக்கு அர்ச்சனனே ஒஒ பற்குனனே
நீங்களைந்துபுருஷரல்லோ அர்ச்சனனே

அர்ச்சனன் தரு.

மந்திரத்தால்யெந்தன்தாயார் வேடுவனே ஒவனவேடுவனே
மருவிஜனித்தோம்நாங்கள் வேடுவனே
எந்தன்பெண்டுதுரோபதைதான் வேடுவனே ஒவனவேடுவனே
இதுமுன்காலசாபமடா வேடுவனே

வேடன் தரு.

சுந்திரசுபத்திரைக்காய் அர்ச்சனனே ஒஒபற்குணனே
சுயரூபமதைமறைத்து அர்ச்சனனே
பந்தமில்லாசன்னாசிபோல் அர்ச்சனனே ஒஒபற்குணனே
பதுங்கிபெண்ணைநீகொண்டாய் அர்ச்சனனே

அர்ச்சனன் தரு.

தாய்தங்கைதாரம் வேடுவனே ஒ வனவேடுவனே
தமக்கைதன்பிள்ளையுடன் வேடுவனே
பாய்போட்டொன்றாய்படுக்கும் வேடுவனே ஒ வனவேடுவனே
பரிவாயிருக்கும்சாதி வேடுவனே

வேடன் கவி.

பங்கல்கெட்டறிவிலாத பவிஷிகெட்டவனேகேளாய்
சங்கையிலாவலச்சி சந்தனராஜன்கொண்டான்
அங்கனம்உதித்துவந்து அருவைதுரோபதையாள்தன்னை
பங்கமாய்துகிலுரிய பார்த்திட்டவீரன்நீயே.

(வ-ம்.) அடே அர்ச்சுனா! வலைச்சியாகிய மச்சகெந்தியை சந்தனு ராஜன் கலியாணம் செய்தான் அந்த குலத்தில் பிறந்து வந்து துரோ

பதையை துர்ச்சாதனன் சபையில் துகிலுரிய பல்லிளித்து பார்த்து நின்ற வீரனுச்சே நீ.

அர்ச்சுனன் கந்தார்த்தம்.

இதுவரைவேடனென்று இன்பமாய்பார்த்திருந்தேன்
மதியாமல்பேசுகின்றாய் மடையனேவிடுவதுண்டா
சதிசெய்துஉன்னைக்கொல்ல தனுவதைபிடித்து
நதியணிந்தோனைப் போற்றி.

தரு.

கான்பிடித்தேனேவில்லம்பதை தான்பிடித்தேனே
கான்பிடித்துக்கொல்ல காணியேற்றும்போது
தான்காணியேறாமல் தளர்ந்துவிழுதே அம்பு

(பொது வ-ம்) இப்படியாக வேடனைக்கொல்ல காணியேற்றி அம்புவிடும்போது காணியேறாமல் அம்பு கீழே விழ வேடன் கண்டு யாதவர்களை இழுத்துச்செல்வது.

வேடன் கந்தார்த்தம்.

விஜயனே உந்தனின்முன் வீராப்புதெரிந்ததிப்போ
கிசமுடன்வில்பிடித்து கோணியேற்றிடாத
அசவிலாவீராஉந்தன் அங்காரம்தன்னைக்கண்டேன்
திசையெலா மடுகடுங்க.

தரு.

தேவிமார்களைபிழுத்தேன் அவர்களின்தன் ஆவிபதாவிடுத்தேன்
கூவியவர்கள் ஓட கோபாலமாதர்தமை
யாவரையுமிழுத்து அடித்துபிடித்திட்டேனே

அர்ச்சுனன் கவி.

அய்யய்யோவேடனாரே அருமையிவ்வெட்டுபேரும்
வைகுந்தவாசனின்தன் வனமுள்ளபட்டஸ்திரீகள்
மெய்யாகயிவரைவிட்டு மேதினிதன்னில்நீங்கள்
கையாதவரையிட்டு கலமுடன்யேகுவீரே.

(பொது. வ-ம்.) இந்தப்பிரகாரமாக வேடனாக பகவான் வந்து யாதவஸ்திரீகளை இட்டுக்கொண்டு போய் நகை முதலியவை பிடுங்கிக் கொண்டு விட்டுவிட அவர்கள் தவஞ் செய்து வைகுந்தம் அடைந்தார்கள் அர்ச்சுனன் பட்டஸ்திரீயை இந்திரபிரஸ்தம் அழைத்து போய் இந்திரபிரஸ்தத்தை வச்சிரதந்தனுக்கு பட்டம் கட்டி பட்டஸ்திரீயை உங்கள் இஷ்டமென்னவென்று கேட்பது.

அர்ச்சுனன் கவி.

அரிகிருஷ்ணன்பிறந்ததுக்கம் அதையெண்ணிடாதஉங்கள்
பிரியந்தான்யென்னவென்று புலப்படசொல்லுவீரே.

பட்டஸ்திரீ கவி.

சரியுள்ள அக்கினியை தான்மூட்டிதந்தீரானால்
எரியவேவிழுவோம்நாங்கள் இதைநீங்கள்செய்திடீரே.

(பொது. வ-ம்.) இந்தப்பிரகாரமாக பட்டஸ்திரீகளும் பலராமர் தேவிகளும் அக்கினியில் பிரவேசிக்க, அர்ச்சுனன் அஸ்தினபுரியை நாடி வருகிறபோது வியாசர் தோன்றி, எல்லா சேதியும் கேட்டு, இனி கலி பிறக்கப்போகிறது. நீ அண்ணன் தம்பியை அழைத்து உத்திரம் நோக்கி செல்வதே காரியமென்ன அர்ச்சுனன் கேட்டு அண்ணனைநாடி வர அப்போது தருமர் முதலதாகக் கொலுவாக வருவது.



தருமர் வருவது கவி.

மணிமுடியும்சிரசதனில் பளபளென்ன
மன்னர்மன்னர்பாதமதில் பணிந்துபோற்ற
துணிவுடையவீமனோடு நகுலன்தானும்
சத்தகுணசகாதேவன் அருகில்சூழ
அணிபெருகும்துவாரகைக்குச் சென்றதம்பி
அர்ச்சுனனும்காணோமே என்றுநோக்கு
தணிவுடையதருமருடன் தம்பிகூடி
சபைநாடிகொலுவாக வருகின்றாரே.

தரு.

அஸ்தினாபுரிக்கதிபன் வெற்றிபெருமதிபன்
ஐவர்கொலுவதாகினார் ஜயபேரிகைபூரிடமாரம்முழக்கிட ஐவ
மெத்ததேவர்முனிவர் கண்டு ஆசீர்வதிக்க
மெல்லியர்பாடவெகு வல்லியர்கூட
சுருள் மேதினிசிதான் ஆதவனருளால்
நிதறபாரதம் வாதறமுடிந்தோம் அஸ்
முறசக்கொடிபறக்க முனிவர் ஆசீர்வதிக்க
வரிசைதருமருடன் வல்லவீமன்நகுலன்
வந்துமேகூடவாணர் சிந்துகள்பாட
சுருள் வல்லவன்சாஸ்திர எல்லைப்பிரதாபன்
நல்லவன்சகாதேவன் மெல்லவேகூட அஸ்
வாதுதுரியனிட சூதனைத்தும்தப்பினோம்
நீதிசமரில்வென்று நீண்டபுகழும்கொண்டோம்
மின்னயமாகனனது அன்னையும்ஏக
சுருள் நித்தியகர்த்தனை சித்தத்திலிருத்த
மெத்தவேபெரியதந்தை தாய்சென்றார்குறித்து அஸ்
துவாரகைஆயருக்கு சூதுவந்ததென்று
பகவானும்அனுப்பிட பற்குணன்போனானே
பார்த்தனைக்காணோம்என்ன கூத்திதோதோணோம்
சுருள் பலபலயோசனை சலியாமல்தோணி
உலகினில்கோவிந்தன் பதமதைப்பாடி அஸ்

தருமர் கவி.

நல்லயென்வீமாதம்பி நகுலனேசாஸ்திரதீரா
எல்லையில்நம்மைக்காத்த எம்பிரான்கண்ணனிந்தன்
சொல்லொனாஆயர்கூட்டம் தொலைந்திட்டசேதிகாண
வில்லாளிபோனயந்த விஜயனைக்காணோம்தானே.

(தர்-வ-ம்.) துவாரகையாதவர் சேதிக்காணச்சென்ற அர்ச்சுனனை இன்னும் காணோமே தம்பிமார்களே.

(தம்பி-வ-ம்) வந்துவிடுவார் விசாரம் வேண்டாம்.

அர்ச்சுனன் வந்து தருமரைப்பணிவது தரு.

அண்ணாஉன்னிருபாதம்போற்றி இப்போ
எண்ணிப்பணிந்தேன்மலர் சாற்றி
அண்ணாதுவாரகை அருஞ்சேதியைச்சொல்ல
குன்றுதேமனமது கூறினாலும்சொல்ல

தருமர் தரு.

அர்ச்சுனுயிதுவென்னபேச்சு — அந்த
அரிகிருஷ்ணனருளெங்கே — போச்சு
பச்சைநிறமேனியன் — பகவானிருக்கையில்
அச்சமேன்வசதேவர் — அரிவைகேக்ஷமந்தானு

அர்ச்சுனன் தரு.

பகவான் தன்னையெண்ணினுல் — அண்ணு
இப்போபதருமிதமனமது — குண்ணு
சகத்திலாயர்மாமன் — சாய்ந்தாரேயெல்லோரும்
யுகமுடிடோகண்ணன் — உத்தமன்மறைந்தாரே

தருமர் தரு.

விஜயனேசொல்லாதே — நில்லு அப்போ
நிசமதோஅப்பேச்சு — சொல்லு
அசைவில்லாகாதன் தான் — அவறிறந்துவிட்டால்
திசைபுகழ்மாதர்தான் — உதவியிருப்பாரோ

அர்ச்சுனன் கவி.

யாதவர்கடலில்மாண்டார் அருமையாய்பலராமர்தான்
நீதியாய்வனத்தில்மாண்டார் நின்னயமாமாசாய்ந்தார்
சோதிதான்வனத்திலம்பு சுத்தமாய்ப்பட்டுமாண்டார்
பாதகன்தேவியோடு பக்ஷமாய்த்தகனஞ்செய்தேன்

(வ-ம்.) யாதவர்கள் கடலில் அடித்துக் கொண்டும் பலராமர் வனத்தில் தவஞ் செய்த விடத்தில் ஒரு வேடனல் காலில் அடி யுண்டும் இறந்தார். இந்தப் பாதகனுகிய நான் எல்லோரையும் எடுத்து அவரவர் தேவிமாரோடு தகனஞ்செய்தேன் அண்ணுவே.

தருமர் கவி.

ஐயய்யோவென்னகூத்தோ அடியோடெல்லாமான
கையவேகாந்தாரிதன்னின் கற்பெரும்சாபந்தானே
வையகந்தன்னில்மாள வகையுடன்கண்டிருந்து
ஐயயேவுலகில்நிற்கும் பாவிகளானேமே.

தருமர் புலம்பல் தரு.

உன்னையன்றியெங்களுக்கு — உலகினில்யார்தானேதுணை
உத்தமாவிட்டுசென்றீரே — கிருஷ்ணதேவா
முன்னமேஅரக்கால்செய்த — மோசமானமாளிகையில்
மூர்த்தியேகார்த்துநீவைத்தீர் — கிருஷ்ணதேவா

காடுவனத்தில் துருவாசர் — கண்சாபம்வந்திடாமல்
கண்ணனேகாத்தவைத்தீரே — கிருஷ்ணதேவா
திடம்பெரும் சூரியனிடம் — தேவனே நாரிசென்று
சேவிக்கயுந தம்மைத்தீரே — கிருஷ்ணதேவா
உத்தமுதல்பக்துவென்று — உதகாதென்றபார்த்தனுக்காய்
உரைத்தீரேகீதைதன்னை — கிருஷ்ணதேவா
பத்தியாபதிகாலாகள் — பாவிசயிந்தவனுக்காய்
பரிதியைமறைத்துவைத்தீர் — கிருஷ்ணதேவா
அவ்வமேதயாகந்தன்னில் — அன்பன்தாமரைதுவசனிடம்
அளவிலா சுகூமடைந்தீர் — கிருஷ்ணதேவா
இச்சைமையம்வுந்தனுக்கே — இந்தவிதிவந்திருந்தால்
என்னபடபோரோகாங்கள் — கிருஷ்ணதேவா

அர்ச்சுனன் கவி.

அண்ணனேசொல்வேன்கேளும் அரிகிருஷ்ணன்தேவியோடு
குண்ணியேவேடனாலே குமரியேவருகும்போது
விண்புகழ்வியாசர்தோன்றி விசனமேன்கலிகாலந்தான்
கண்ணுகவருகுமுந்தி காடுவீர்உத்திரமென்றார்.

(வ-ம்.) கேளும் அண்ணாவே பகவான் தேவிமார்களை அழைத்துக்கொண்டு இந்திரப்பிரஸ்தம் வரும்போது வேடர்களால் கஷ்டமடைந்து துக்கத்தோடு அவர்களைவிட்டு தங்களிடம் வரும்போது வியாசர் தோன்றி இனி கலிகாலம் பிறக்கப்போகிறது நீங்கள் ஏன் கஷ்டப்படுகிறீர்கள் உத்திரம் நோக்கிஅண்ணன் தம்பிகளைஅழைத்து செல்லுமென்றார் அண்ணாவே.

தருமர் கவி.

[illegible] திரேகம்அம்பு நலமுள்ளமந்திரதந்திரம்
[illegible] மசேர்வலுவுயெல்லாம் ஸ்ரீகிருஷ்ணன்அருளேயாகும்
உ[illegible]மையாய்மறைந்தபோது உதகாதுநமக்குபின்னம்
கும்[illegible]லாய்உத்திரம்செல்ல கூருவீர்தம்பிமாரே.

(வ-ம்) தம்பிமார்களே! நம்முடைய வலுவு மந்திரம் தந்திரம் திரேகம் முதலியது ஸ்ரீகிருஷ்ணபகவான் மயமாகும் அவர் மறைந்தபோது நமக்குஅது உதகாது: நாம்உத்திரதிசையை நோக்கிச் செல்லவேண்டியது தான். நல்லமார்க்கம், உங்கள் கருத்தை வெளியிடுங்கள் தம்பிமார்களே !

வீமன் தரு.

அண்ணாஉந்தன்சொல்லைப்போல — அனைவரும்உத்திரம்நோக்கி
செல்லுவோம்கலி — வெல்லுவோம்

கண்ணாயிருந்தால்பினி நம்மையும்மதியார்பூமி
அண்ணனேசொன்னேன் முன்னமே

அர்ச்சுனன் தரு.

அருமையுள்ள அண்ணனேநான் அடவியில்வேடரிடத்தில்
பார்த்தனேமனம் வேர்த்தனே
இருமையுவருகுமினி தேசத்திலிருக்கவொண்ணாது
மூர்த்தவாஇது சேர்த்தியா

நகுலன் தரு.

இனியிருந்தால்பூமி தன்னில் இடருகள் அதிகம்வரும்
அய்யனேபெரந்தன் மெய்யனே
தனியாகநாமெல்லாம்கூடி தாவியேவடக்குநோக்கி
போகுவோம்இனி ஏகுவோம்

சகாதேவன் தரு.

நாதனின்சேதிகேட்டதும் நானிலம்பூமியாவ
விட்டனே துன்பம் பட்டனே
வேதனைவருகுமினி வீணிலேயிருப்போமானால்
திட்டமாசெல்வோம் கூட்டமா

தருமர் கவி.

சரிசரிசொன்னவார்த்தை தம்பியேசந்தோஷித்தேன்
அருவையாள்நமதுதேவி அன்னதுரோபதையாள்தன்னை
பிரியமாயழைத்துபார்த்து பிசகில்லாகேட்டுயிப்போ
குரியுடன்கடப்போம்நாமும் கூப்பிட்டுஅரிகுவோமே.

துரோபதை வருவது சேபத்தியம்.

துருபதன்யாகத்தில் தோன்றியேவந்துதான்
சுந்திர அய்வர்க்கு பாரியாகி
தருமரையேமாத்தி சண்டாளதுரியனும்
சகுனியால்சூதுடன் துகிலுரியவாகி
அருமுனிவாழ்ந்திடும் அடவியில்சுற்றியே
அக்யாதவாசமுதல் தீர்ந்துபோக
கருமத்தின்வசம்போல கண்ணனும்பாரதம்
கடுகியேபதினெட்டு நாளையினில்தீர்க்க.

முடுக்கு

குருமொழிபோல் கூந்தல்தனைமுடித்த
கோதையும்வெகுபேர்கள் மாலைசாத்த

தருணமேனாதனை கண்டுபோற்ற
தையல்பாஞ்சாலியும் வருகின்றாளே.

தரு.

பஞ்சவர்தனக்குதேவி பாஞ்சாலியம்மனும்மேவி
அஞ்சனவிழியுடைய அம்மனும்வாரேன்
கூந்தல்தனையுங்கண்டு குண்ணிகாணவேமஞ்சும்
சாந்தகுணமுடைய தையலும்வாரேன்
தொட்டதுர்சாதனன்கை வெட்டிவிழவேசெய்து
அட்டிலாகூந்தல்முடித்த அம்மனும்வாரேன்
வாசமாவிலாடபுரம் கேசகன்தனைவதைத்த
தேசமேபுகழும்மாது திரௌபதைவாரேன்
மண்ணினில்துரியனிட எண்ணிலாபடையைக்கொல்ல
கண்ணனின்னருளைப்பெற்ற காரிகைவாரேன்
சித்தர்கட்கும்முத்தர்கட்கும் நித்தம்கோவிந்தசாமியற்கும்
பத்தியாவரமளிக்கும் பாஞ்சாலிவாரேன் பஞ்

திரௌபதை கவி.

அஞ்சிடாதுகிளுரித்த அரும்பாவிதுரியனோடு
வஞ்சனைசகுனிதன்னை வதைத்திட்டகாதாஉங்கள்
கஞ்சமாமலர்பாதத்தில் கன்னியாள்மலர்கள்சூடி
தஞ்சமென்றடிபணிந்தேன் தையலைகாப்பீர்தானே.

தருமர் கவி.

பாதமேபணிந்தமாதே பாஞ்சாலிவாழிவாழி
காதலாயழைத்தசேதி கன்னியேயுரைப்பேன்கேளும்
ஆதரவற்றேரும்நாமும் அரிகிருஷ்ணர்வேடனாலே
போதவேமறைந்துபோனார் பூவையேயென்னசெய்வோம்.

திரௌபதை கவி.

முந்தியேயென்னைகாத்து மூவர்க்குயொருவராகி
வந்தயென்அண்ணாஉந்தன் மணிமுடியரசைவிட்டு
அந்தகோர்காட்டில்வேடன் அம்பினால்சிந்தைசோர்ந்து
சொந்தமாம்வைகுந்தத்தை சுகமுடனசேர்ந்திட்டாயோ.

திரௌபதை புலம்பல் தரு.

அய்யய்யோஇதினிதியோ அண்ணாஅன்னீதமிப்படியோ
பைய்யரவக்கொடியோனை பெய்தனீ
பாராளவைத்ததும் நீதியெங்கேபோச்சு

அருச் பார்த்தாமனே இனியென்செய்வேன்
திறமாகவே திசையிலிருந்தோமே அய்
சோதிமணிமார்பாயெங்கள் சுந்திர அரிகோவிந்தா
நீதிதப்பியினிநிறைந்ததோ கலிகாலம்
ஆதிசோதி அரிகரிநாரணா
அருச் அய்யோயினி யென்செய்குவேன்
ஐயுதேமனம் உய்யுதேவுயர் அய்

தருமர் கவி.

பாவையேசொல்வேன்கேளும் பார்த்தாமன்பூமிவிட்டு
பூவையேமறைந்தானன்று பொற்கொடிஅழிவுஇல்லை
ஆவலாய்வடக்குநோக்கி அன்புடன்செல்வதற்கு
தேவியேஉந்தனின்தன் சித்தமெப்படியோசொல்வாய்.

திரௌபதை கவி.

இந்ததேர்வுலகில்நாமும் இனிஇருந்திடவொண்ணது
கந்தனுர்சென்றபோது நற்புகழ்யெல்லாம்போச்சு
சிந்தனையில்லாமல்தான் திருமுடிதன்னைப்போது
அந்ததேர்பரிக்ஷித்துக்கு அளித்துமே வருகுவீரே.

(பொ. வ-ம்.) இப்படியாக யோசித்திருக்க இரண்டு பிராமணுள் சண்டையிட்டு வருவது.

முதல்பிராமணன் தரு.

எங்காணும்உன்பூமிதன்னை வாங்கினேனேயன்றி
இருந்திடும்புதயலையும் எடுப்பேனோநான்கண்டு

மறுபிராமணன் தரு.

கண்டுபூமிஉன்னிடத்தில் விற்றிடும்போது
கருதுமதிலுள்ளதெல்லாம் உன்னதுவேதோது

முதல்பிராமணன் தரு.

என்னசொன்னபோதும் பொன்னெடுத்துக் கொள்ளமாட்டேன்
இன்பமாயுன்னிடம்தாரேன் எடுத்துக்கொள்ளுசொன்னேன்

மறுபிராமணன் தரு.

அப்படிநீசொல்லிவிட்டால் அடைவிடுகேன்பாரும்
அரசன்வீமன்தன்னிடத்தில் சொல்வோம்நாமும்வாரும்

(வீமன் வ-ம்.) ஏ பிராமணர்களே! நீங்கள் என்ன சண்டை.

முதல்பிராமணன் கவி.

அரசனேவீமாயிந்த அந்தணர்பூமிகொண்டேன்
வரிசையாய்பொன்குடத்தை வாங்கவேயில்லைகண்டாய்

(வ-ம்.) அரசேஇந்தப்பிராமணர்நிலத்தைவாங்கினேன். அதைப் பயிரிடும்போது அதில் கிடைத்த பொன்குடத்தைக் கொடுத்தால் வேண்டாமென்கிறார் அரசே.

(வீமன். வ-ம்.) உன் சேதி என்ன.

மறுபிராமணன் கவி.

சரசமாயதினிலுள்ள சகலமும்விற்றுவிட்டேன்
சிரசதுபோனபோது கிடமுடன்கொண்டிடேனே.

(வ-ம்.) கேளும் அரசே! அந்தப்பூமியை இவரிடத்தில் சகல சுதந்தரத்துடன் விற்று விட்டேன். ஆனதால் அதிலுள்ள பொன் குடம் அவருக்கே சொந்தம் அரசே.

வீமன் கவி.

அந்தணர்மாரேஉங்கள் அருமையாம்வழக்குதன்னை
சொந்தமாய்த்தீர்ப்புதன்னை சொகுசுடன்காலைதீர்ப்பேன்
இந்தநேரசண்டைவேண்டாம் இனிமையாயின்றுசென்று
வந்திடும்காலைதானே வகையுடனுரைத்திட்டேனே.

(வ-ம்.) நீங்கள் சண்டையில்லாமல் இன்றுபோய் காலை வாரும் தீர்ப்பு உரைக்கிறேன்.

(தருமர் வ-ம்.) தம்பி நகுலா நீ சென்று பரிக்ஷித்தை அழைத்து வாரும் பட்டங்கட்டி உத்திரம் செல்லவேண்டும்.

(நகுலன். வ-ம்.) அப்படியே அண்ணா.

பரிக்ஷித்து வருகிற கவி.

கெதையுடன்வில்லுஅம்பு கிட்டியேகையில்கொண்டு
அதிவிதமணிபணிகள் ஆடையுமணிந்துகொண்டு
சதிருடன்பாட்டன்மார்கள் சடுதியிலழைக்கக்கேட்டு
பதைபதைத்தெழுந்துசீறி பரிக்ஷித்துவருகின்றானே.

தரு.

பார்த்தன்தனக்குப்பேரன் கீர்த்திப்பிரதாபலோலன்
பரிக்ஷித்துதீரன்வந்தேன் பாட்டன்மார்களைக்காண பரி
கேர்த்தியாகநம்மை கினைத்துஅழைத்தசேதி

சுருள் கேரினில்சென்றுமே பாரினில்காண
சாரியாய்த்தோழர்கள் மீகியேகூட பார்

தேரகம்மையின்று இன்பமுடையபாட்டன்
சாது அழைத்தசேதி சடுதி அறிவோமென்று
சருள் சந்திரனொளிபோல் விந்தையதாக
அந்தரார்மகிழ்ந்திட வந்தேனேகாண பார்
திட்டிசல்லடம்கட்டி தகர்தசக்குகள்விட்டு
அட்டியில்லாப்பணி அணிந்துமதனைப்போலே
சருள் ஆசையின்றியே பாசமாகவே
ராசனைழைத்திட நேசமாகவே பார்
அஸ்வத்தாமனவனும் அழிக்கருத்திரிகர்ப்பை
வசுதேவபுத்திரனும் வளமாய்கார்த்துபிரந்த
சருள் வல்லவனென்றுமே எல்லையில்போற்ற
அல்லலையகற்றிடும் நற்குணசிலன் பார்

பரிக்ஷித்து கவி

தாதாவேடீந்தன் தாளிணைப்போற்றி
வேதாவேயழைத்த விபரத்தையுரைப்பீர்.

தருமர் தரு.

பேதகமில்லா பேரனேவாழி
காதலாபட்டங் கட்டிடஅழைத்தேன்

பரிக்ஷித்து தரு.

என்னவார்த்தைசொன்னீர் தாதா
இதுவென்னபெரும்பழி நீதா
சின்னஞ்சிறுவனுச்சே திருமுடிதாங்கேனே
அன்னவர்பட்டங்கட்டி அய்யோயெங்குநீர் போறீர்

தருமர் தரு.

போரேன்யாத்திரையாகத் தானே
பூமிபிரதக்ஷணம்செய்ய நானே
சீராய்பட்டங்கட்டி சிறுமைகளில்லாமல்
காராய்குடிகள்தன்னை கண்ணேவேறுசொல்லாதே

பரிக்ஷித்து தரு.

சொல்கிறீர்போறனென்று அய்யா
சுமோககான்வாரேன் மெய்யா
அல்லலாகியயிந்த அரியாதசிறுவனை
தொல்லையாய்விட்டுசென்றால் துணையார்தானெனக்கு

தருமர் தரு

துணைகிருபாச்சாரியோடு அப்பா
சொல்தௌமியருண்டு தப்பா
இணையிலாதூரன்போல் இருந்து அரசையாண்டு
குணமாகயிருப்பாயே குற்றமொன்றும்சொல்லாதே

பரிக்ஷித்து கவி.

என்னதான்சொன்னபோதும் இதைநானும்ஒப்புக்கொள்ளேன்
உன்னுடன்வருவேனன்றி உயிரதைமாய்த்துக்கொள்வேன்

தருமர் கவி.

பின்னமாய்சொன்னபோதும் பெரியோர்க்குகுறுக்கில்லாத
வன்னமாமதிகுலத்தில் வந்தாய்நீபோதும்தானே

பரிக்ஷித்து கவி.

பாட்டனேசொல்லகேள்தான் பழியொன்றும்சொல்லவேண்டாம்
கூட்டியேபட்டந்தன்னை சுகமுடன்பெருவீரே.

தருமர் கவி.

நாட்டினில்அரசர்க்கெல்லாம் கலமுடனறியச்சொல்லி
தாட்டிகபட்டந்தன்னை தானுமேசெல்லுவோமே.

(வ-ம்.) அப்பா தம்பிமார்களே இனி அரசர்க்கெல்லாம் தெரிவித்து பட்டங்கட்டி செல்லவேண்டியதுதான்.

தருமர் தரு.

தம்பிமாரேயிங்குவாரும் தருணமேபென்மொழிதேரும்
கும்பலாய்கூடியே குழந்தைபரீக்ஷித்துக்கு
கம்பியேதிருமுடி காமேசூட்டிவைக்க தம்
குருதௌமியர்கிருபாச்சாரி கூடிவந்தாராயிங்குபாரீர்
அருமைகுழந்தைக்கு அரசையொப்புவித்து
பரமனைபோற்றியே பட்டங்கட்டினேனே தம்

(பொது-வ-ம்.) இந்தப்பிரகாரமாக பரீக்ஷித்துக்கும் பட்டங்கட்டி தௌமியர் கிருபாச்சாரியை சகல அரசுக்குண்டான மார்க்கம் போதிக்கசொல்லி சுபத்திரையிடம் எல்லா இஸ்திரீயும் பாதுகாக்கும்படி சொல்லி உத்திரம்செல்ல பயணமாகயிருக்க அப்போது எமதர்மராஜன் தர்பார்காடி வருலது.

எமன் கவி.

கருத்திடும்மேனியோடு கைதனில்பாசங்கொண்டு
பெருத்திடும்கிடாவிலேறி பெலமுள்ளதர்மராஜன்

பொருத்திடும்குந்திமைந்தன் புகழ்தருமராஜன்பூமி
வெருத்திடும்சேதிகாண விரைவினில்வருகின்றானே.



தரு சிந்து.

ஏமதர்மராஜகிதோவந்தேன் நல்ல
எத்திசைபுகழ்பெரும் எருமைகிடாவேறி
சூலபாசங்கைபிடித்து வெகு
சூராதிசூரனென வீரபாஷைகூறி
ஆக்ரமித்துபல்கடித்து அப்போ
ஆரடாகிங்கில்யா வென்றேகடித்து
தோன்றியேமணிபணிகள் மின்ன
துலங்கியேசிரமீது முடியதுவுந்தன்ன ஏம
கலிகாலம்வந்ததை நினைந்து
காலனிங்கில்யர்தம்மீது கடிந்தேசினந்து
ஒழியாதவேலையினி யென்றுஅவர்
உள்ளம்மிகுழம்பி மெள்ளவேகலங்கி
உண்யோன்தருமனும் வருக
ஓகோகோசேதியது ஏதோதான்யென்று
சித்திராபுத்திரனும்கூடி பாடும்
சிறுவன்கோவிந்தனின் பாடலைதபாடி ஏம

எமன் கவி.

காலகிங்கில்யரேகேள் கடினமாய்யொருசேதித்தான்
சீலமாய்தருமராஜன் சேர்ந்திடவடக்குநோக்கி
கோலமாய்வருகயெண்ணி கூடியேயிருக்கானிப்போ
பாலனைகண்டுவாரேன் பரிவுடன்யிருந்திடீரே.

(வ-ம்.) கேளும் கிங்கில்யரே தருமராஜன் வடக்கு நோக்கி வரும் சேதியையரிந்து வாரேன் பத்திரமாக இவ்விடத்தில் இருங்கள்.

தருமராஜன் கவி.

என்னிடதம்பிமாரே இளவரசாகயிப்போ
பன்னியபரீக்ஷித்துக்கு பட்டமுங்கட்டிவிட்டோம்
உன்னிதபகவானின்தன் உருவதைதியானம்செய்து
பின்னிடவருவீர்யிப்போ புறப்பட்டுயாத்திரைசெய்வோம்.

(பொது. வ-ம்.) இப்படியாக யாத்திரைக்கு பயணமாகி வற பிராமணன் வந்து சொல்வது.

முதல்பிராமணன் தரு.

அரசனேயிவரிடத்தில் அன்புடனேபூமியதை
கோண்டேன்யாணும் கொண்டேன்
வரிசையாயிருந்தபொன்னை வாங்கவேகேழ்க்கயாணும்
கண்டேன் இப்போ கண்டேன்

மறுபிராமணன் தரு

கண்டுபூமிவிற்றேனன்றிகாலஞ் சென்றபெரியோர்வைத்த
பொன்னை விற்கேன் முன்னை
கொண்டிடகேட்டால்பொன்னதை கொடுக்கேனென்றுசொல்லுறான்
கேளுமே வாங்கி தாருமே

தருமர் தரு.

தம்பிமாரேயிந்தசண்டை தருணமேதீர்ப்பதென்னமோ
சொல்லுமே நீங்கள் புல்லுமே
வம்புள்ளசண்டையதனை வழக்கெப்படிதீர்ப்பீர்நீதான்
வல்லவா சொல்லும் நல்லவா

வீமன் தரு.

எந்தனிடஅண்ணனுரே இன்றேகலிபிறந்ததுவோ
என்சொல்வேன் உந்தன் முன்சொல்வேன்

சுந்தரமாய்கேற்றுசொன்ன சொல்லைதப்பிரட்டிடுக
கண்டனே துயர் . கொண்டனே

விமன் கலி.

சுந்திர அண்ணாயிந்த சொல்லிடுமிரண்டுபேரும்
விக்கையாய்கேற்றுவந்து விதமுடனென்னிடத்தில்
குந்தகமாகச்சொல்லி கூறியவார்த்தைதமாற்றி
இன்றுமேசொல்வதாலே இனிகலிகாலந்தானே.

(வ-ம்.) கேளும் அண்ணா இதோ நிற்கிற பிராமணன் அவரிடத்தில் நிலம் வாங்கியதாகவும் அதில் தான் பொன்குடம் எடுத்ததாகவும் அதைகொண்டு அவரிடத்தில் கொடுப்பதாகவும் அவர் வேண்டாமென்பதாகவும் சொன்னார் இவர் சகல சுதந்தரத்துடன் விற்றுவிட்டபடியால் தனக்கு தேவையில்லை என்றும் சொன்னார் இன்று மாற்றிபேசுகிறார் ஆகையால் இனி கலிகாலந்தான்.

(தரு. வ-ம்.) ஏ பிராமணர்களே இனி பரிக்ஷித்து அரசன் அவனிடத்தில்சென்று கேட்டுக்கொள்ளும்.

தருமர் தம்பிமாருடன் உத்திரம்நோக்கி செல்வது.

தரு மஞ்சள் கருப்பாச்சுதே என்றமெட்டு.

தம்பிமாரேயெந்தனுடன் தான்வாரும்யாத்திரைசெய்ய
விக்தையுடன்மறஉரியை விதமுடனேபூண்டுதானே

விமன் தரு.

உத்தனிடவார்த்தைபோல் உளமகிழ்ந்தெல்லாமும்விட்டு
சுந்திரமாய்வந்தேனண்ணா சுத்தமாய்கதையும்போட்டேன்

அர்ச்சுனன் தரு.

தொண்டாநந்தம்தன்னில்வாழும் சொன்னரேகோவிந்தனிதை
எண்டிசையாத்திரைசெய்ய எடுத்துவாரேன்காண்டீபத்தை

நகுலன் தரு.

ஞானிலம்யெலாவெறுத்து ஞாதனின் அருள்குறித்து
யாதும்மறவுரிபூண்டு யன்புடன்வருகின்றேனே

சகாதேவன் தரு.

பாரினில்யெலாம்வெறுத்து பலபணிஆசையும்விட்டு
கூரிடும்பகீரதியை குணமுடனடைந்திட்டோமே

திரௌபதை தரு.

நாதர்களுடனேகூடி நங்கைமார் துணையும்விட்டு
நீதானருளினாலே தெரிசித்தோம்கீழ்சமுத்திரமே

தருமர் கவி.

கீழ்திசைவெகுவாய்நோக்கி குணமுடன்நடந்துவந்து
ஆழியைகண்டோம்தானே அன்புடன்செல்லுவோமே.

வீமன் கவி.

ஆழியைகையில்கொண்ட அரிகிருஷ்ணன் தன்னையெண்ணி
வாழியில்யிதனை தாண்டி வலமுடன்யேகுவோமே.

(பொது வ-ம்.) இந்தப் பிரகாரமாக ஐவரும் துரோபதையுங்கூட வந்த நாயும் பகீரதியை அடைந்து கீழ்சமுத்திரங்கண்டுதெரிசிக்க அவ்விடத்தில் மூன்றுமுக மூள்ளவராய் ஆட்டுக்கிடாவின்மேரில்ஏறி அக்கினிபகவான் வந்து எதிர்பட்டு நீங்கள் ராஜ்யத்தைதுறந்து தபோநிஷ்டராக மரவுரிபூண்டு புறப்பட்டீரே உங்களில்அர்ச்சுனன்மாத்திரம் வில்லைவிடாமல் வைத்திருப்பானேன் தேவகாரியம் முடியும்பொருட்டு வருணதேவன்கையில் வாங்கிக்கொடுத்தவில்லை பாரதம் முடிந்தபிற்பாடு வைத்திருப்பதில் பிரயோசனம் இல்லை இந்த சமுத்திரத்தில் போட்டு விட்டுபோங்கள் என்று தன் சுடர் கரத்தை நீட்டி காட்டினார் காண்டீபத்தை எறிந்து செல்வது.

அர்ச்சுனன் கவி.

ஆண்டவனருளினாலே அன்புடன் கிடைத்தயிந்த
காண்டீபந்தன்னைநாமும் கருதிடலாகாதென்று
பாண்டவர்கடுவோனை பற்குணன்யெழுந்துசீறி
தாண்டியேகடலில்தானே தனுவதையெறிந்திட்டாரே.

தருமர் தரு.

பூமிபிரதக்ஷணம்போக தெற்குநோக்கிதம்பிமாரே
ஆமிதுகண்டுநாம்அகல்வோம் மேற்குநாடிதம்பிமாரே

வீமன் தரு.

மேற்குவந்துநாமும் மெல்லவேகண்டோமேஅண்ணா
பார்க்கவடக்குநாம் பரிவுடன்செல்லுவோம்அண்ணா

அர்ச்சுனன் தரு.

வடக்குநோக்கிநாடிவந்தோம் — துவாரகைநாமே
இடமாய்சமுத்திரம்தெரிசித்து — நாம்செல்லுவோமே

நகுலன் தரு.

சமையம்துவாரகைதான் — தாண்டிவந்தோமேஇப்போ
இமயமலைதாண்டியேகுவோம் — பனிகாற்றிலிப்போ

சகாதேவன் தரு.

நடந்தயீனைப்பாரிநாதன் — இருக்கின்றார்இங்கே
அடர்ந்துதோத்திரம்செய்து — அனைவரும்யேகுவோம்அங்கே

தருமர் கந்தார்த்தம்.

என்னிடதம்பிமாரே இதுவரைமூன்றுதிக்கும்
வன்னமாதிரிந்தாப்போல வடக்காம்திரியொண்ணுது
சொன்னதோர்வாயுவைக்கும்பித் துரிதமாயோகமார்க்கம்
நன்குகபத்தியோடு.

தரு.

நலமுடன்வருவீர் — ஏமகூடம்வெரியுதேபாரீர்
நிலையாய்கிடதகிரி — நிற்கும்தேவதைவாழும்
பாலகோபுரம்மண்டபம் — பார்த்துமகாமேருவை நல

திரௌபதை மரணம். கந்தார்த்தம்.

மேருவின்மேற்கதாக மெல்லவேஉத்திரம்செல்ல
சாரியாய்நடக்கும்போது சலமிலாவாய்வரண்டு
நேரிலேவநனம்தன்னில் மின்றிட்டநக்ஷத்திரம்தான்
சாரியாய்சாய்ந்தாப்போலே.

தரு.

சாய்ந்தனேநாதா — எந்தனைப்பார்க்கசாலமேன்வாதா
ஓய்ந்துமலையினமீது — ஓகோஒரிவைப்போலே
பாய்ந்துமேருவடியில் — பாவையும்சேர்ந்தேனே

வீமன் தரு.

அண்ணுதுரோபதை — அருவையும்சாய்ந்தாளேபாரும்

தருமர் தரு.

என்னிடாதேரீங்கள் — எட்டிநடந்துமேவாரும்

வீமன் தரு.

உத்தமியாச்சுதே விழுந்தவிதமென்னகூரும்

தருமர் தரு.

பத்தியாய்அய்வரில் பார்த்தன்மேலதிகாசைசேரும்

## சகாதேவன் மரணம்.

பய்யத்தடுமாறிபதறியே விழ்ந்தேனுன் தானே

வீமன் தரு.

ஐவரில்யிளையவன் ஆகாவிழ்ந்துபோனுன் அண்ணு

தருமர் தரு.

விழ்ந்தாலவன்போனுன் வேகமாகநீரும்வாங்கள்

வீமன் தரு.

சாஸ்திரவல்லவன் சாய்ந்தானே யவன்யேனுசொல்லும்

தருமர் கவி.

சாய்ந்திடும் சகாதேவன் சாஸ்திரவித்தைதன்னில்
ஓய்ந்திடகெர்வம்கொண்ட உளத்தவன் ஆனதாலே
பாய்ந்துமேசாரியதாக பலமதாய்வருகயில்லே
மீந்திடும்பேர்கள்நீங்கள் மிதமுடன்வருகுவீரே.

(வ-ம்.) அவன் சாஸ்திரம் கற்றேரும் யென்ற கெர்வம் அதிகம் ஆனதால் கெடுவ வருகயில்லே நீங்கள் வாருங்கள்.

## நகுலன் மரணம். தரு.

காவுதடுமாறிநடக்கச்சோகமாகுதே அண்ணனே அண்ணனே
கூவும்யெக்தனுயிர்கொற்றவாபோகுதே அண்ணனே அண்ணனே

வீமன் தரு.

தமையனேநகுலனும்தான்சாய்ந்தானே இதோ அண்ணனே அண்ணனே
அமையும்இவன்சேதி அறியஉரைத்திடும் அண்ணனே அண்ணனே

தருமர் தரு.

உரைப்பேன் அழகுக்குஒருவர்இல்லேஎன்று வீமனேவீமனே
அரையும்அகங்காரம்அதிகம்கொண்டதினுல் வீமனேவீமனே

அர்க்குனன் மரணம்.

ஆயாசமாகியே அதிகசோர்வாகுதே அண்ணனே அண்ணனே
காயமொழிந்துவேகடந்தேனேபுவிமீது அண்ணனே அண்ணனே

வீமன் கவி.

அண்ணனே அர்ச்சுனன் அதிவேகமாயிறக்க
என்னதான்சேதியென்று எடுத்துரைசெய்குவீரே.

(வீ. வ-ம்) அர்க்குனன் இறந்தகாரியம் சொல்லுமண்ணு.

தருமர் கவி.

கண்ணுகஒரேநாளில் கலமுடன்கொல்வேனென்று
சொன்னதோர்சபதந்தப்பி சுகமுடன்கொன்றதோஷம்.

(த. வ-ம்.) தான் சண்டையில் ஒரேநாளில் கொல்வதாக சபதம் பண்ணி சபதம் தப்பி இரண்டுமூன்றுநாளில் கொன்றதோஷம்.

வீ ம ன் ம ர ண ம்.

ஓரடி கந்தார்த்தம்.

என்னமோ அண்ணு என்னுயிர்தானும்

த ரு.

ஏகும்போலிருக்கே இதுவென்னசோகமோகுருக்க
ஆகாதுயிதுவென்ன அருங்காரணம்யென்று
பாகாசொல்லிநீயும் பக்ஷமாசொல்லுவீர்

தருமர் ஓரடிகந்தார்த்தம்.

நீக்கிடுமென்ற நின்னையவீமா

த ரு.

இத்திரையதிகம்நீசெய்த குத்தமேயதுவாம்
பத்தியாய்போசனம் பாங்காயதிகமுண்பாய்
இத்தரையிலின்பவார்த்தை பேசியறியாய்

(வீ. வ-ம்.) அண்ணு என்னையாவது திரும்பி பார்க்கபடாதா அண்ணு! அண்ணு!!

(த. வ-ம்.) எல்லாம்போனுர்கள் தீர்ந்தது இனி என்ன அதை பார்ப்பது.

தருமர் கவி.

காயம்போய்தம்பிமார்கள் கன்னிதுரோபதையும்மாண்டான்
மாயமாய்யெல்லாம்மாள மன்னருன்தனியாய்ப்போக
நாய்மட்டும்பின்னும்வர நன்மைதான்செய்ததோதான்
ஆயனைமனதிலெண்ணி அன்புடன்நடக்கின்றேனே.

(த. வ-ம்) தம்பி துரோபதை யெல்லாம் மாண்டார் இந்த நாய் மட்டும் என்ன புண்ணியம் செய்ததோ இன்னம் வற பார்ப்போம்.

(பொ. வ-ம்.) இப்படியாக தருமர் போக விமானத்தோடு இந்திரன் வருவது.

இந்திரன் வருகிற கவி.

சந்திரகுலத்துதித்த தருமரும்சொர்க்கம்நாடி
விந்தையாய் வெகுதூரம்தான் வேண்டியேவருககண்டு
இந்திரதேவர்சூழ இணையிலாவிமானத்தோடு
சுந்திரதேயயிந்திரன் குருசுடன்வருகின்றேனே.

தரு.

சந்திரகுலத்துமன்னன் தருமன்தன்னைகாணவென்று
இந்திரதேவர்கள்சூழவே தேவேந்திரராஜன்
இணையிலாரதங்கொண்டு வாறானே
குருபகவான்பிரகஸ்பதி கூடியேயவரும் வற
சரியுடன்வாத்தியம்முழங்கவே விமானம்கொண்டு
தருமர்முன்னே வந்துமேவினார்
நாரதர்தும்புருமீட்ட நடனமாதர்ஆட்டம்ஆட
சீரதேவர்கள்சூழவே தேவேந்திரராஜன்
தேடிவாரார் தருமன்தன்னையே
பூலோகத்தில்புண்ணியரின்று புகழுடன்நடந்துவர
சாலோகப்பதம்தருகவே தேவேந்திரராஜன்
தருமன்தன்னை தேடிவாறாரே சந்

தருமர் கவி.

ஆவலாய்யென்முன்வந்த அன்புள்ளகூட்டமான
தேவரேவுங்களின்தன் திருவடிபோற்றிபோற்றி

இந்திரன் கவி.

மேவியேயெங்களின்தன் மேன்மையைகாணவென்று
தாவியேவந்ததர்ம சடுதியில்விமானமேறும்.





தருமர் தரு.

சொல்தட்டா தம்பியோடு துரோபதைதன்னையும்விட்டு
எல்லையில்விமானமேற என்மனம்கொள்ளுமோ

இந்திரன் தரு.

கொண்டதேகமோடுவந்துகூடும் சொர்க்கம்சேறதானும்
உண்டோயவர்க்குசுதந்தரம் ஒகோதர்ம்மாவாரும்

தருமர் தரு.

வருகசொந்தமர்க்குமட்டும் வல்லவாயில்லாதபோதும்
பெருகபதம்யெனக்குமட்டும் பேசமோயிதென்ன

இந்திரன் தரு.

தர்மமேவுருவாய்வந்த சத்தியவந்தனதாலே
பெருகவந்தாய்யிவ்வளவுதூரம் பேசாதேநீவாரும்

தருமர் தரு.

தம்பிபோல்ஒழியாமலே தானேயெந்தன்கூடயிப்போ
நம்பிவந்தாரையேற்றும் நானும்வாரேன்கூட

### இந்திரன் தரு.

அய்யோவென்னசொல்லவந்தீர்    அன்னீதமாய்நாயை
மெய்யாயேத்தசொல்வதாலே    மெத்தபாபம்சேரும்

### தருமர் கவி.

உலகத்தில்பெரிதுசொர்க்கம் உம்பர்கள் அதினும்மேலு
இலகியதேவராஜன் இதைவிடரிஷிகள்மேலு
நலம்பெருவியாழன்மேலு காரணன்மைத்துனனுமாகி
சிலதூரம்நம்பிவந்த ஜீவனைவிடுகபோமோ.

(த. வ-ம்.) உலகத்தில் பெரிது சொர்க்கம். அதைவிட பெரிது தேவர்கள். அதைவிட பெரிது தேவராஜன். அதைவிட பெரிது ரிஷிகள். அதைவிட பெரிது பிரகஸ்பதி பகவான். அதைவிட பெரிது காரணன். அவற்கு மைத்துனனாகி என்கூட நம்பி வந்த இந்த ஜீவனை விடபோமோ அதைவிட இவ்வளவு தூரம் வந்து தங்களையும் கண்டு தெரிசித்த பிற்பாடு கூட அதற்கு சொர்க்கமில்லாமல் எப்படிபோகும் அந்தநாயையும் ஏற்றும் வருகிறேன்.

### இந்திரன் தரு.

மானிடர்க்குசொர்க்கபூமி    மற்றஜெந்துஎமலோகம்
மார்க்கமே    இது    பார்க்குமே

### தருமர் தரு.

நம்பினோர்களைவிட்டவர்க்கும்    நாடும்செந்துரோபதம்
நல்லவா    சொன்னேன்    அல்லவா

### இந்திரன் தரு.

தர்மனேயிதென்னபேச்சு    நன்னியேயந்தயோசனை
வாருமே    விமானம்    ஏறுமே

### தருமர் தரு.

சூரியகுலத்தரசன் சிபிச்சக்கரன்    புராவுக்காக
பட்டானே    பெண்சாதிப்பிள்ளை    விட்டானே

### தருமர் கவி.

என்னதான்சொன்னபோதும் என்ஜீவன்வுள்ளமட்டும்
வன்னமாயடைந்தஜெந்தை வகையுடன்கைவிடேனே.

இந்திரன் கவி.

உன்னிடமொழியைக்கண்டு உத்தயாசந்தோஷித்தேன்
பின்னிடாமெடுத்தேன் புறப்பட்டான்யமன்றானே.

(த. வ-ம்.) நீரென்னசொன்போதும் என்ஜீவன் உள்ள மட்டும் என்னையடைந்த ஜெந்தை கைவிட்டு வரமாட்டேன்.

(இ. வ-ம்.) உன்உருதிமொழியைக்கண்டு இதோநாயையெடுத்தேன்.

(பொ. வ-ம்.) அதில்நீருந்துநாயைதுக்கஎமனுகவறதருமர் பணிவது.

தருமர் எமதர்மனை பணிவது கவி.

தந்தையேவுந்தன்பாதம் தனயனுன்போற்றிசெய்தேன்
எந்தையேகார்ப்பீரென்னை இருபாதம்போற்றித்தானே.

எமன் கவி

மைந்தனேவுன்கனமதை மாகாளமுனிவனத்தில்
சிந்தையில்சோதித்துகண்டேன் சேருவாய்பதமும்தானே.

(த. வ-ம்.) தந்தையே வணங்கினேன் காக்கவேண்டும்.

(எ. வ-ம்.) மைந்தனே உன்மனதை காளமாமுனி வனத்தில் சோதித்து கண்டேன் இனி விமானம் யேறி செல்லும்.

(த. வ-ம்.) அப்படியே தங்கள் உத்திரவு.

(பொது. வ-ம்.) இப்படியாக விமானத்தில் தருமர் ஏற எமன் இந்திரன் இரண்டுபக்கம் சூழசொர்க்கம்வந்துசேர்ந்து அங்குவந்துநாரத தரிசனம் பரமதரிசனம் காணவேண்டும்என்றுசொல்லஅப்படியேகாட்டுவது

தருமர் தரு.

| | |
|---|---|
| வாரும்அதோதானும் | மேன்மையதாய் அங்கு |
| வண்ணமண்டபத்தில் | தானிருக்கும் |
| கூருமவர்தானும் | யாரென்று இப்போ |
| கூடியேயானுமே | வந்திடுக |

எமன் தரு.

| | |
|---|---|
| கதிர்குலத்திலே | உதித்துவந்து-அன்று |
| கருணையுடனே | புராவுக்காக |
| அதிவிதமாய்பெண்டு | பின்னை தான்சென்றிட்ட |
| அன்பன்பிச்சக்கர | வர்த்தியாச்சே |

தரு'ஸ் தரு-

பொன்மண்டபத்தில் புகழுடனே-அதோ
பூரித்திருந்திடும் புண்ணியவந்தன்
இன்னவரென்று அரிந்திடுகவவரை
எடுத்துசொல்லும்கான் தெரிந்திடுக

எமன் தரு

தந்தையின்முதுமை தான்வாங்கி அப்போ
சகித்துதன்பம்பட்ட புரூரான்யென்னும்
விந்தையயாதிபிள்ளை யாகும்விடம்பினேன்
சன்மிஷ்டைக் குதித்தவனே

தருமர் தரு.

சகலஜனங்கள்கூட்டமாக அதோ
தானேசகலவை பவமுடன்
புகழயிருந்திடும் அரசனுரேயதை
புரியவுரைத்திடும் போற்றினேனே

எமன் தரு.

உன்னுடன்பகைத்து யுத்தத்திலேமடிந்த
ஓ கோ துரியனவனுகும்
சொன்னேன்சகுனி தம்பிவார்களுடன்
சுத்திஇருப்ப தரிந்துகொள்ளும்

(த. வ-ம்.) அதோமுடிபெரியமண்டபத்தில் இருப்பவர்யாரோ.

(எ. வ-ம்.) அவர் சத்திய அரிச்சந்திரன்.

(த.வ-ம்.) அவரை நான் பார்க்கதயைபுரியும்.

(எ.வ-ம்.) நீ பார்க்கப்படாது நீ யொய்யும் சொன்னவர் இவ சத்தியவந்தன் ஆனதால்,

(த.வ-ம்.) காட்டாவிட்டால் அவர் கால் பெரிய விரலையாவது காட்டும் பார்த்து என் பாபவிமோசனம் ஆகிறேன்.

(எ.வ-ம்.) அப்படியேபாரும்.

தருமர் கவி.

அய்யய்யோபாவிகண்ணு அன்புடன்பட்டபோதே
நய்யவேகருத்துபோச்சே கலமுள்ளவிறலும்தானே
செய்யாதவேலையாக செய்தனேபார்ப்பனென்று
வையகம்தன்னில்பொல்லா வரும்பாவியாகினேனே.

(த.வ-ம்.) ஆகா என்னுடைய கண்பட்டபோதே சத்தியவந்தனுடைய கால்பெருவிறல் கருத்துபோச்சே யான்தெரியாமற்படிகாலைகாட்டசொல்லி அவர்காலைகருக்கசெய்துபொல்லாதபாவியாகினேனே அரிஅரி

(எ.வ.ம்.) இனி நரகம் காட்டுகிறேன் வாரும்.

(த-வ-ம்.) ஆகா இவர் யாரோ?

(தம்பிமார்கள்-வ-ம்) அண்ணா! அண்ணா!! என்னைபாருமே.

(துரோபதை.வ-ம்.( நாதா! நாதா!! என்னசெய்வேன்.

தருமர் கவி.

ஆஹாஹாஎன்னசொல்வேன் அன்புள்ளதம்பியாச்சே
பாகானயெனதுதேவி பாஞ்சாலியிவளுமாச்சே
சோகமாநரகந்தன்னில் சுத்தமாயாழ்ந்திருக்க
வாகாகபார்த்துநானும் வரமாட்டேன்செல்லுவீரே.

(த.-வ-ம்.)இவர்கள் என்சொல்தட்டாதம்பியாச்சே இவள்எனது தேவிபாஞ்சாலியாச்சேஇதைவிட்டுவரமாட்டேன் நீங்கள்செல்லுங்கள்

(எ-வ-ம்.) உன்னை நல்லபதத்திற்கு அழைத்தால் வாருமே.

(த.வ-ம்.) நான் வரவில்லை போய்இந்திரனிடம் சொல்லுமே.

(இந்திரன்.வ-ம்.) என்ன சேதி?

(எ.வ-ம்.) நரகத்திலேயேநின்று வரமாட்டேன் என்கிறார்.

இந்திரன் தரு.

தருமனேநரகத்தில் — நான்ஏறிநிற்கின்றாய் வாரும்

தருமர் தரு,

துரியன்பதத்திலும் — சொல்தம்பிநரகத்தில்பாரும்

இந்திரன் தரு.

கொஞ்சபுண்ணியபாம்கூரும் — சொர்க்கம்நரகந்தானே
அஞ்சாதுரியனை — அன்பாய்நரகத்தினிபாரும்

தருமர் தரு.

அந்தசந்தேகத்தாலங்கே — நின்றுவிட்டேன்நானே
வந்தேன்வுன்பிரகே — வல்லவாசென்றிட தானே

(இ. வ-ம்.) ஏதோகொஞ்சம் தீவினையிருந்துதான் நரதரிசனை கண்டு சற்றுநேரம் அங்குநின்றாய் தெரியுமா ?

(த. வ-ம்,) ஏதோ அதுவும் தீர்ந்தது.

(இ. வ-ம்,) இனி உன் தம்பிமார்கள் உனைதரிசித்த புண்ணியத்தால் பாபவிமோசனம் ஆகி, அமிர்தபோஜனம்பண்ணி இருக்கிறார் காட்டுகிறேன் வாரும்.

(த. வ-ம்.) அப்படியே தங்கள் சொல்படி.

(இ. வ.ம்.) இந்த கெங்கையில் ஸ்நானம் செய்யும்.

(த. வ-ம்.) அப்படியே இதோ செய்தேன்.

(இ. வ-ம்.) இனி உன்மானிட ஜென்மம் தீர்ந்தது திவ்ய தேகம் பெற்றாய் பூமி சம்பந்தமான பந்தத்துவபாசம் உனக்கு கொஞ்சம் ஞாபகத்தில் இருக்கிறது நீ சத்தியரூபம் பெற்றாய்.

(எ. வ-ம்.) ஏ தருமா! உன்னைப்பார்க்க நான் இரண்டு தரம் வந்தேன் ஒரு தடவை வனத்திலும் ஒருதடவை நாய்ரூபமாகவும் தெரிசனங் கொடுத்தேன் (என்று பக்ஷத்துடன் கட்டியணைத்துக் கொண்டார்கள் இதனால் ஒருவர்க்கொருவர் ஐக்கியமானார்.)

(இ. வ-ம்.) இதோபாரும் பரவாசுதேவன் வாழும் வைகுந்தம்.

(த. வ-ம்.) ஆகா! என்ன இது?





தருமர் கவி.

ஆனையைகாத்தசோதி அவனியென்பெண்டுபிள்ளை
ஏனையுங்காத்துயிங்கு எழுந்துமேயிருக்கும்சோதி
வானவர்தேவர்போற்ற வளர்ந்திடும்நாகமீதில்
நான்காண அமர்ந்தஉந்தன் கனினபாதத்தில்போற்றி.

(விஷ்ணு. வ-ம்.) உனக்கு ஆசிர்வாதம் இன்னும் உனக்கு இருக்கும் பந்தத்தை இந்திரன் நீக்கி வைப்பான் நீ போய்ப்பாரும்.

இந்திரன் தரு.

சந்திரகுலத்துமன்னு இந்தாவுன்பாட்டன்
வீஷ்மர் பாரும்

தருமர் தரு.

வந்துயிவரைப்பார்த்தேன் இந்த
அவர்கள்யாரோ கூறும்

இந்திரன் தரு.

குருதுரோணாச்சாரி பெரியதகப்பன்
தாய்குந்தி பாரும்

தருமர் தரு.

அவரைபார்த்தேன் இன்றுதெரிய
அவர்கள்யாரோ கூறும்

இந்திரன் தரு.

கர்ணன்வீமன்தம்பி கன்னி
துரோபதையை பாரும்

தருமர் தரு.

ஆகாதம்பியைபார்த்தேன் அரிய
சிறுவர்யாரோ கூறும்

இந்திரன் தரு.

இளம்பஞ்சபாண்டவரோடு இவன்
அபிமன்யுபக்கு பாரும்

தருமர் தரு.

எல்லாவற்றையும்பார்த்தேன் உந்தன்
அருளெனக்கு வேணும்

(பொது,வசனம்.) இந்தப் பிரகாரமாகத்தானே எல்லாரையும் காட்டி இனி உனக்கு என்னதேவையென்று இந்திரன்கேட்க தருமர் உங்கள்கிருபாகடாக்ஷம் மாத்திரம் வேண்டுமென்று சொல்ல அப்படியே தேவேந்திரன் தருமரைதன்னிடம் மருவியிருக்கும்படி அனுக்கிரகம்செய்தார் என்பதாம் இந்த நாடகத்தை உலகில் ஆடினபேர்களும் பாடினவர்களும் பாட்டினை அன்போடு கேட்டபேர்களும் பூமியில் பரி

பூரணநிலைசவரை சகலசௌபாக்கியத்துடன் வாழ்ந்து மறுமையிலின்பானந்த சுகத்தை அநுபவித்து ஸ்ரீகண்ணபிரான் பாத கமல சேர்ந்தேனையுண்டு வாழ்வார்கள் என்பதாம். மங்களம். மங்களம். மங்களம்.

வாழி விருத்தம்.

ஈசனின்சுதனுய்வந்த ஏகதந்தாயன் வாழி
மாசில்லாவேலனேடு மாவுமைபரமன் வாழி
கேசவன்வைகுந்தத்தை கேட்டிட்டோர் ஆடிபாடி
நேசமாய்பரவச்செய்தோர் நீடூழிவாழிதானே.

இதுவுமது.

பின்னமில்லாதொண்டகர் பெரியோர்தொண்டன்
பெருமைபெருபாண்டவர் வைகுந்தந்தன்னில்
சொன்னதொகுற்றமதை ஐம்புலிங்கன்
சுத்தமுடன்பரிசோதித் தளிக்கவாங்கி
சென்னைநகரை, சி. வே. மீனாக்ஷிசுந்தரமென்னும்
சிறந்திடும்முதலியார் அவரின்சொந்த
வன்னமிடும்பெரிய நாயகியம்மன்
வளர்பிரசில்அச்சிட்டார் வாழிமாதே.

சம்பூரணம்.

பாண்டவர் வைகுந்த நாடகம்.

முற்றுப்பெற்றது.

---

# நாடகபபுத்தக விளம்பரம்.

| விற்பனையில் | ரூ. | அச்சில் |
|---|---|---|
| பாண்டவர் வைகுந்த நாடகம் | 1 | எம்பிரான் சதகம் |
| கூலிக்குத் தாலிகட்டிய நாடகம் | ,, | சந்திரன் கர்வபங்க நாடகம் |
| பிரமாவை மறைத்த நாடகம் | ,, | [illegible] நாடகம் |
| அக்நிபாதேவி சரித்திர நாடகம் | ,, | சதி [illegible] நாடகம் |
| கொடி மோக்ஷ நாடகம் | ,, | [illegible] ஜலக்கிரீடை நா |
| இந்திரஜைவிலாஸ நாரதர்பங்க நாடகம் | ,, | [illegible] நாடகம் |
| அம்பிகை நாரதர் பங்க நாடகம் | ,, | [illegible] பங்க நாடகம் |
| (பி-பன்னா) நாரதர்பங்க நாடகம் | ,, | [illegible] ஜலக்கிரீடை நா |
| மார்க்கண்டன் உற்பத்தி நாடகம் | ,, | [illegible] மோட்ச நா |
| சுந்தரர் பட்டாபிஷேக நாடகம் | ,, | [illegible] நாடகம் |
| தங்கம் [illegible] | ,, | [illegible] நாடகம் |
| பார்வதி கல்யாண நாடகம் | ,, | [illegible] பங்க நாடகம் |
| சாரங்கதாரா நாடகம் | ,, | [illegible] நாடகம் |
| மதுரை வீரியன் நாடகம் | ,, | [illegible] நாடகம் |
| ஸ்ரீராம [illegible] நாடகம் | ,, | திரிபுர சம்கார நாடகம் |
| சந்திரவல்லி மோக்ஷ நாடகம் | ,, | [illegible] நாடகம் |
| ஆரவல்லி சூரவல்லி நாடகம் | ,, | [illegible] நாடகம் |
| ஜலந்திராசுர சம்ஹார நாடகம் | ,, | அர்ச்சுனன் [illegible] நாடகம் |
| [illegible] நாடகம் | 1 | [illegible] நாடகம் |
| [illegible] நாடகம் | ,, | [illegible] பட்டாபிஷேக நாடகம் |
| இந்திரன் கர்வபங்க நாடகம் | ,, | கன்னையா [illegible] நாடகம் |
| சுந்தரர் [illegible] நாடகம் | ,, | [illegible] பங்க நாடகம் |
| [illegible] 1005 ரூ | | [illegible] பங்க நாடகம் |
| | | [illegible] பங்க நாடகம் |
| | | [illegible] நாடகம் |
| | | [illegible] நாடகம் |
| | | [illegible] |
| | | [illegible] நாடகம் |
| | | [illegible] |
| | | முருகத்தியானம் |
| | | [illegible] நாடகம் |
| | | [illegible] |

[illegible] " [illegible]
[illegible] சம்ஹார மென்னும் "

# வீரவன்னியர்

# நாடகம்

[illegible] நாடகங்களும், [illegible] தமிழ்ப்புத்தகங்களும் [illegible] கிடைக்கும். [illegible] இலவசமாக [illegible]

விலாசம்:—

# C. M. தாமோதர முதலியார்,

[illegible] அச்சகம்,

1. 4, வி. வி. கோயில் தெரு, [illegible], சென்னை-7.

# வன்னி இளஞ் சிங்கம்

## சாந்தி நாடகம்

S. சண்முக உபாத்தியாயர்

1. கூ 1-8

உ

கடவுள் துணை

திருவிளையாடற் புராணத்தில் ஓர் பாகமாகிய

# வன்னி கிணறு லிங்கம் சாக்ஷி நாடகம்

...வர் தாலுக்கா

[illegible]

... குமாரர்


S. ஷண்முக உபாத்தி...

...ர்களால் இயற்றியதை



அ. முத்துவடிவேல் முதலியாரால்

சென்னை

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பித்தது.

1937


இதன் விலை] ... பிரைட்) [... 1-8

# ரிஜிஸ்டர் அறிவிப்பு

இதனால் சகல அச்சுக்கூடத்ததிபர்கட்கும் மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில், ம-ா-ா-ஸ்ரீ, கூடலூர் தாலுக்கா செம்மங்குப்பம் சான்றோர்குலம் எஸ். ஷண்முக உபாத்தியாயர் அவர்களியற்றிய "வல்லரி கிணறு லிங்கம் சாக்ஷி நாடகம்" ஆகிய இப்புத்தகத்தை ஷை யாரிடம் சகல சுதந்தரமும் பெற்று அடியிற் கண்ட என்னால் அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளேன். இப்புத்தகத்தை மகாகனம்பொருந்திய கவர்ன்மெண்டார் அவர்கள் சட்டப்படி காபிரைட் செய்திருக்கின்றேன். ஆகையால் இப்புத்தகத்தை என்னுத்தரவின்றியாரும் அச்சிடக்கூடாது என்பதைத் தெரியப்படுத்தியிருக்கிறேன்.

இப்படிக்கு

அ. முத்துவடிவேல் முதலியார்.

24, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

கடவுள் துணை

திருவிளையாடற் புராணத்தில் ஓர் பாகமாகிய

# வன்னி கிணறு லிங்கம்

# சாக்ஷி நாடகம்

கணேசர் துதி

வன்னியுங்கிணறுலிங்கம் வந்துமேசாக்ஷிசொன்ன
இன்பமாய்சரிதைதன்னை எடுத்துநாடகமாய்சொல்ல
கன்றுமானேந்துமீசன் களிப்புடன்யீன்றெடுத்த
அன்புள்ளகணேசன் தாள் அஞ்சலிசெய்தேன்மாதோ.

பாண்டியன் வருகிற கவி

கதிர்மணி [illegible] ண்டலம்களாட
அதிவிதட [illegible]
பதியணியு [illegible]
பதிபுகழ்மதுரை [illegible]

பாண்டியன் தரு

பதியில்புகழ்பெற்ற வழியில்மகனேயொத்த
பாண்டியராஜன்வந்தேன் கொலுவைநாடி பாண்

கொடியிடை மடவர்கள் கூடி நாட்டியமாட
கொஞ்சுங்கவிவாணர் ரஞ்சிதகவிபாட

சுருள் குவலயமன்னர்கள் நேசமிடுந்திடும்
பயமதிலா அரசு புரிந்திடும் [illegible]

முத்துமணிமகுடம் [illegible]
மோசனமாலையாட வே [illegible] மாக
அத்திபுரிந்தசிவன் [illegible] வாமல்
அன்புடன் துதிசெய்வேன் இக [illegible] மாய்தவறாமல்

சுருள் அறமதுபெருகிட தருமமும்செய்வேன்
குறையதுநேராமல் பிரியமாய்காவேன் ப

வரும்பொருளுரைத்திடும் அமைச்சர்இருபால்நின்று
வணங்கியேநீதிதுரைவே மனுநர்மநீதிப்படி வண

அருமறைவேதியர் ஆசீர்மிகவதிக்க
அன்புள்ளகுடிகளும் இன்பமுடன்மதிக்க

சுருள் அந்தரதேவர்கள் விந்தையாய்துதி
புரிந்திடும்மதுரையை யாண்டிடும்பதி ப

கத்திகட்டாரிகட்டி மெத்தக்கெதைவில்லம்பு
கையிற்செங்கோலுந்தண்ணவே பளபளவென்று கையி

நெற்றியில்திருநீறு கீர்த்தியாய்பிரகாசிக்க
சேரிமையெந்தன்தேவி கீர்த்தியாய்அருகிருக்க

சுருள் நீண்டபுஜமணி காந்திவண்கூச
காண்டபணிவனென்று யாவரும்பேச ப

பாண்டியன் விருத்தம்

சதுர்மறைவிளங்கவெந்தன் தவச்செங்கோலுமோங்க
மதிகுலம்தழைக்கநாளும் மாமுனிஇருடிபோங்க
நிதியதுதழைக்கநாட்டில் நீடித்தென்குடிகள்வாழ
நதிபுனைகைலைவாசா நானுனைப்போற்றினேனே.

பாண்டியன் கவி

அருகினில்அமர்ந்திருக்கும் அமைச்சரேசொல்லக்கேளீர்
குருகுறைநமதுநாட்டில் குடிகளும்செழித்துமிக்க
வறுமைகள்அணுகிடாமல் மாதமும்மாரிபெய்து
பெருமையாய்வாழ்கின்றாரா பிரியமாயுரைத்திடீரே.

பாண்டியன் வசனம்

கேளுங்கள் மந்திரிமார்களே! நம் மதுரையம்பதியில் மாதமும் மாரிபெய்து குடிபடைகள் க்ஷேமமாக இருக்கின்றார்களா? சீக்கிரம் தெரிவிப்பீர்கள் மந்திரிமார்களே.

மந்திரி வசனம்

அரசே! யாதும் குறைவின்றி குடிபடைகள் எல்லோரும் க்ஷேமமாய் இருக்கின்றார்கள் அரசே.

பாண்டியன் தேசவிசாரணை தரு

தேவாலயங்களிலேபூசை தினமும்தவறிடாமல்
சிறப்புடன்நடக்கின்றதா தெரிவிப்பாயேமந்திரி

அந்தணர்கள்செய்கின்ற யாகாதிஜெபதபம்
அவரவர்செய்கின்றாரா அறிவிப்பாயேமந்திரி

பகுதிபணம்சிற்றரசர் பண்புடனேசெலுத்தி
தகுதியாய்வருகின்றாரா சாற்றிடுவாயேமந்திரி

அன்னநடையுடைய அருவையர்கள்தினம்
அன்புடன்கணவனை தொழுதுவருகின்றாராமந்திரி தே

## பாண்டியன் விருத்தம்

அம்புலிசடைதரித்த ஆண்டவன் கிருபையாலே
நம்மிடச்செங்கோலுமெந்த காலுமேமபெருகியோங்கி
செம்மையாய்நிதிபெருகி சுகமுடன்குடிபடைகள்
சம்ப்ரமாய்வாழ்வதாலே சந்தோஷம்கொண்டேன்மந்திரி.

## பாண்டியன் வசனம்

கேளுங்கள் மந்திரிமார்களே! நமது நாடு செழித்து பிரஜைகள் சுகமாக வாழ்ந்து வருவதால் சந்தோஷம் கொண்டு கொலுவில் வீற்றிருக்கின்றேன். எதிர்வர்த்தமானங்களை அறிந்து யோசிப்பீர் மந்திரிமார்களே.

## பொது வசனம்

இவ்விதமாக பாண்டியன் கொலுவிலிருக்க மதுரைக்கு நேர் கிழக்கேயுள்ள சிவபட்டண வாசியாகிய சிவநேசசெட்டியார் கொலுவாக வருகிறவிதங் காண்க.

## சிவநேசசெட்டியார் வருகிற கவி

தார்பெருகும்சிவபட்டணம் வாழுகின்றதனவைசியகுலத்தில்வந்த
பேர்பெருகும்சிவநேசன் பிரியமாய்முத்தாரம்பூண்டு
ஏர்பெருகும்பரமன்பாதம் இறைஞ்சியேமிகதுதித்து
சீர்பெருகும்சபையைநாடி சிறப்புடன்வருகின்றானே.

## சிவநேசசெட்டி தரு

செகத்தில்புகழ்பெற்ற சிவபட்டணம்தன்னில்வாசன்
சிவநேசசெட்டியும்வந்தார் கொலுவைநாடி
சிவநேசசெட்டியும்வந்தார்

பகலவன் ஒளியோவென்ன [illegible]
பாசமுடனேவசியர்

சுருள் பாரினில்புகழ் [illegible]
பூரியசெல்வ [illegible]

அப்புமதியணிந்த அரனடிமறவாமல்
அனுதினம்துதிசெய்குவேன் சிவசிவாவென்று
அனுதினம்துதிசெய்குவேன்

முப்புரிநூல்மெய்யில் மெய்ப்படவேஇலங்க
மொய்க்குழல்மாதர்கண்டு மதனனோவென்றுகலங்க

சுருள் மோகனமுத்து மாலையும்ஆட
நாகரீகமாய் யாவரும்கூட செ

ரத்தின வியாபாரி யென்று
நித்தியம்வந்து இணங்குவார்
நித்தியம்வந்து இணங்குவார்

மெத்த உலகிலுள்ளோர்
எந்தனைமிக

சத்தியந்தவறாத
சாந்தகுணமுள்ள

உத்தமகுணசீலன்
காந்தியொளிசேலாலன்

சுருள் தர்மதானங்கள்
கர்மவினைகளை

தவறாமல்செய்வேன்
போக்கிடவேன் செ

வஞ்சியென் தேவிதன்னை
வார்த்தைமிகப்பேசியே
வார்த்தைமிகப்பேசியே

வண்மையுடனழைத்து
சரசமதாகவே

கொஞ்சுமென்செல்வியற்கு
கோலமாய்திருமணம்

குலத்திற்புருஷன்பார்த்து
செய்யவேண்டும்ஆர்த்து

சுருள் கோரியபெண்ணமுஞ்
மீறியேவர்தேன்

சிறுடன் முடித்திட
மனைவிக்குபடித்திட செ

## சிவநேசசெட்டி விருத்தம்

அருமையும்பெருமையவாய்ந்த அன்புள்ள காவற்காரா
ஒருமையாய்சேதியொன்று உந்தனுக்குரைப்பேன்கேளாய்
நருமலர்குழலாளான நங்கையென் தேவிதன்னை
விரும்பியே அழைத்தேனென்று விரைவினிலழைத்துவாரும்.

## சிவநேசசெட்டி வசனம்

கேளுங்கள் காவலாளிகளே! என் தேவியாகிய சிவநேசவல்லியை சீக்கிரம் அழைத்துவருவீர் காவலரே.

## சிவநேசவல்லி வருகிற கவி

அன்புள்ளபிராணநாதன் அழைத்திட்டசேதிகேட்டு
மின்னலைநிகர்த்தயிடை மெல்லியாள் தானெழுந்து
துன்னவே இலழியாரங்கள் தோகையாள் சிங்காரித்து
கன்னிசிவநேசவல்லி களிப்புடன்வருகின்றாளே.

## சிவநேசவல்லி தரு

சித்திரவடிவமுள்ள
சிவநேசவல்லியும்வந்தாள்
சிவநேசவல்லியும்வந்தாள்

புத்தியில்மிகுந்தமாது
அதிஒயிலாள்

பத்தியாய்சிவபூசை

நித்தமும்மறவாசாது

சுருள் பங்கையவதன
மங்கையரோடு

நங்கையிவள்வஞ்சி
இராகமும்கொஞ்சி சி

கந்தகஸ்தூரிவாடை கமகமவென்றுவீச
சந்திரகங்கணங்கையில் சொகுசுடனொளிபேச
சுருள் சந்திரவதன மாதிவள்வஞ்சி
சந்திரங்கண்டபேர் மயங்கிடகொஞ்சி சி

பங்கமில்லாதமுத்து பவழசரங்கள்மின்ன
இங்கிர்தகாசுமாலை இலங்கும்பதக்கம்துன்ன
சுருள் இடையதுதுவள கடிகியேமாது
நடையதுபெருகிட வருகிறேனிப்போது சி

கும்பதனங்கள்ரெண்டும் குடத்தைநிகர்த்ததென்ன
அம்புவியில்கண்டோர் அழகுரதியோவென்ன
சுருள் அதிவிதசரிகை ஆடையும்பூண்டு
சதிருடன்வருகிறேன் அன்புமேமகொண்டு சி

## சிவநேசவல்லி தரு அம்பிகா என்ற மெட்டு

நாதனே எந்தனைநீருங் காதலாஅழைத்ததைகூறும்
சாதிமல்லிகைமுல்லை சவ்வாதுசாந்துங்கொண்டு
பாதமதில்பணிந்துபாவையாள் செய்தேனேதொண்டு நா

## சிவநேசசெட்டி தரு

சருணஞ்செய்திட்டபாவையே சற்குணமுள்ளதேவியே
கருத்துடனேஎந்தநாளுங் கடவுளின்கிருபையாலே
அருவையேவாழ்ந்திருப்பாய் அன்புடன்புவிமேலே ச

## சிவநேசவல்லி தரு

எந்தனையழைத்ததென்னமோ இன்பமாய்சொல்வீர்முன்னமே
கந்தமலரைசூடுங்கன்னி யாளின்றுகேட்க
சுந்திரபிராணநாதா சொல்வீரெனக்குதீர்க்க எ

## சி[illegible]செட்டி [illegible]

கன்னியேஉந்தனையானே [illegible]
பன்னுவேன்கேளடிநீ [illegible]
இன்பமாய்வார்த்தையாடி இன்றிருப்போம்பெண்மயிலே க

## சிவநேசவல்லி கவி

அன்புதனில்மிகுந்த அழகுள்ளபிராணநாதா
பன்னுவேனுந்தனுக்கு பாவையாளறியத்தானும்
கன்னியாள்என்னைநீரும் களிப்புடனழைத்தசேதி
இன்னதுஎன்றெனக்கு எடுத்துரைசெய்வீர்நாதா.

### சிவநேசவல்லி வசனம்

கேளும் நாதா! என்னை யாதுகாரணமாக அழைத்தீர் அடியாளுக்கு கருத்தைச் சொல்லவேண்டும் நாதா.

### சிவநேசசெட்டி கவி

ஆசையும்பாசமுள்ள அருமையென்பிராணதேவி
நேசமாயுன்னை இங்குநேர்த்தியாய் அழைத்தசேதிசொல்வேன்
ஈசனார்கிருபையாலே இன்பமாய்பிறந்தமாதை
தேசத்தில்புருடன்பார்த்து திருமணம்முடிக்கவேண்டும்.

### சிவநேசசெட்டி வசனம்

நமக்கு அருமையாக பிறந்த புத்திரியாகிய சிவகாமிவல்லியை நம் பந்துவர்க்கத்தில் புருஷன் பார்த்து திருமணம் முடிக்கவேண்டும் உன் கருத்தென்ன மாதே.

### சிவநேசவல்லி தரு

திருமணம்முடிப்போமென்று சேதிநீர்சொல்லவந்தீர்
அருமைசெல்விக்கேற்ற ஆடவர்யாரைபார்த்தீர்

சுருள் அருமையாளெனக்கு பிரியமாயின்று
பொருத்தமாய்சொல்வீர் புருஷனை ஒன்று தி

### சிவநேசசெட்டி தரு

எந்தனிடகாதலியே இன்பமாய்சொல்வேன்கேளும்
சொந்தவழியில்மிக்க சுந்திரர்களில்லைநாளும்

சுருள் எண்ணியேபார்த்து ஏக்கமேகொண்டு
குண்ணியேஎன்மனம் வாடியேவிண்டேன் எ

### சிவநேசவல்லி தரு

குன்னினேனென்ற குணமுள்ளஎந்தன்நாதா
நண்ணியேநீர்பார்த்ததெங்கு நவிலுவீர்மிகத்தோதா

சுருள் நாட்டினில்புகழ் பெற்றிடும்பதியே
மேட்டிமையாகபதில் சாற்றுமித்ததியே கு

### சிவநேசசெட்டி தரு

சாற்றுமென்றுஉரைத்த சேயிழையேசொல்வேனடி
நேர்த்தியானசெல்வியற்கு கோத்திரத்தில்காணேனேடி.

சுருள் நிந்தையில்லாமலே சொந்தமாயன்னிய
பந்துவழியிலே கொடுப்போமாகன்னியை சா

சிவநேசவல்லி தரு

கன்னியாளை அன்னியத்தில் இன்பமாய்க் கொடுப்பதற்கு
என்னிடமனமது இசையாது முடிப்பதற்கு

சுருள் எப்படியெண்ணமுங் கொண்டிரோமறந்து
செப்பிடவேண்டாம் சொல்லுமுன்கருத்து க

சிவநேசசெட்டி தரு

கருத்தென்னவென்றுயென்னை காரிழையே கேட்கவந்தாய்
வெறுத்துசுற்றத்தாரை வீணாகபேசிநொந்தாய்

சுருள் வனிதையேஉந்தன் மனமதுஎப்படி
இனிதுடன்யானும் முடிப்பேனே அப்படி ௨

சிவநேசவல்லி விருத்தம்

சொல்லுவேன்கொண்டஎண்ணம் சுந்திரமுள்ளகோவே
தொல்லுலகோர்புகழும் திருவாலவாய்தன்னிலே
மெல்லியேஎன்அண்ணன் பெற்ற மிகுஅழகுள்ளமைந்தன்
வல்லவன்தனக்குநமது வஞ்சியைகொடுக்கவேண்டும்.

சிவநேசவல்லி வசனம்

ஆனால் கேளும் நாதா! மதுரைநகரில் வாசமாகிய எனது அண்ணன் புதல்வனாகிய சிவகுணசெட்டியாருக்கு நமது செல்வியாகிய சிவகாமிவல்லியை கொடுக்க பிரியங்கொண்டேன் நாதா.

சிவநேசசெட்டி தரு

ஐயோ ஐயோ என்னமோசம் அடிசண்டாளி
அண்ணன்மகன்தனக்கு தருவலாமோகொடுங்காளி ௩

சிவநேசவல்லி தரு

கொடுக்கேனென்றுசொல்லுவீர் கொடுமையாகவே
கொடுத்தாலென்ன

அண்ணன்மகன் இ[illegible] [illegible]
அவன்மணந்து இருக்கிறான் இதுஉண்மையே ௪

சிவநேசவல்லி தரு

கட்டியபெண் இருந்தாலென்ன களிப்பாயவர்க்கே
கன்னியாளை திருமணம் முடிப்போம்பெருக்க க

சிவநேசசெட்டி வேறு தரு

பெண்ணிருக்கபெண்கொடுக்க நீதியாகுமா
அடி நீதியாகுமா
என்னைக்கொண்டாய் இப்போநீயும்
சாதிக்காகுமா நம் சாதிக்காகுமா பெ

சிவநேசவல்லி தரு

சாதிக்காகாதென்றுநீரும் சாற்றுகிறீர்நாதா
நீருஞ் சாற்றுகிறீர்நாதா
மாதுளனக்குபிரியம் மகளைகொடுக்க
நாதா மகளைகொடுக்க சா

சிவநேசசெட்டி தரு

என்னமதிஉந்தனுக்கு எந்தன்தேவியே
அடி எந்தன்தேவியே
கன்னியைகொடுத்தா லென்றுங்கலங்குது ஆவியே
அடி கலங்குது ஆவியே எ

சிவநேசவல்லி தரு

சொந்தமானசாதியிலே ஆளனிருக்க
நாதா ஆளனிருக்க
சந்தோஷமாய்மணம் முடிப்பீர்மணம்
பெருக்க நாதா மணம்பெருக்க ச

சிவநேசசெட்டி விருத்தம்

இப்படிநாமும்சண்டை யிடுவதுஞாயமல்ல
ஒப்பியேஉந்தன்வார்த்தை ஒருமனதாகக்கொண்டேன்
இப்பவேசெல்வியாளை இங்குநாம்வரவழைத்து
கப்பியேவார்த்தையாடி கருத்தையறிகுவோமே.

சிவநேசசெட்டி வசனம்

ஆனல் கேளும் பெண்ணே! நாம் இப்படி சண்டை இட்டுக் கொண்டிருப்பது நியாயமல்ல நமது மகளை இங்கு வரவழைத்து அதன் கருத்தை அறியவேண்டும். சீக்கிரம் சிவகாமிவல்லியை அழைத்துவருவாய் மாதே.

சிவகாமிவல்லி வருகிற கவி

அருமையென்தந்தைதாயார் அழைத்திடும்சேதிதன்னை
நருமலர்குழலாளான நங்கையாள் அறியவேண்டி
மருமலர்புஷ்பத்தோடு மல்லிகைமுல்லைசூடி
பெருமையாய்சிவகாமவல்லி பிரியமாய்வருகின்றாளே.

சிவகாமிவல்லி தரு

சிவநேசசெட்டியாருக்கு செல்வியாகவந்த
புவிபுகழ்சிவகாமிவல்லி பூவையும்வந்தாள் சி

நெற்றியில்திலர்தபொட்டும் நேர்விழிக்குமையும்இட்டி
ரத்தினப்பணிகுலுங்க நங்கையும்வாராள் சி

பச்சைவயிரத்தோடு கச்சிதமூக்குத்திதன்ன
மெச்சும்சூர்யபிரகாசி மெல்லியும்வந்தாள் சி

கொண்டைபூசெண்டுமாட குலுங்கநடைநடந்து
கெண்டைவிழிபாவையான கிளிமொழிவாராள் சி

இடையில்சரிகைசேலை யெங்கும்பளபளென்ன
நடையில்அன்னத்தைதபோன்ற நங்கையும்வந்தாள் சி

சிவகாமிவல்லி தரு காவடிச்சிந்து மெட்டு

தந்தைதாயேஉங்கள்பாதம் மாது
தாளிணைபணிந்தேனே நிதம்
தந்தையரேவிந்தையாக எந்தனைஅழைத்தசேதி
கூறும் மிக நீரும் த

சிவநேசசெட்டி தரு

பாமன்எனக்களித்தகோதே ஒளிர்
பத்தரைமாற்றுத்தங்கமாதே நீயும்
பாருலகில்சிறுடனே கூரிழையேவாழ்ந்திருப்பாய்
பாசமாய் வெகு நேசமாய் ப

சிவநேசவல்லி தரு

அன்னமேயான்பெற்றகண்ணே வெகு
அழகில்மிகுத்திடும்பெண்ணே உனக்கு
ஆசிர்மிகவதித்தேன் காசினியில்வாழ்ந்திருக்க
அருவையே வாலை பருவையே அ

சி

தந்தையேஉந்தன் ...ம்
தயங்கிஇருப்பதேத ...
சஞ்சலங்கள்கொண்டிடாமல் வஞ்சியாளெந்தனுக்கு
சொல்லும் பதில் விள்ளும் த

சிவநேசசெட்டி விருத்தம்

அன்னவன்தவத்தினாலே அருமையாயெனக்குதித்த
கன்னியேஉனையழைத்த காரணம்சொல்வேன்கேளும்

உன்னிட அழகுக்கேற்ற உத்தமபுருஷன்பார்த்து
துன்னவேமணம்முடிக்க தோகையேஉனையழைத்தேன்.

சிவநேசசெட்டி. வசனம்

உனது அழகுக்கேற்ற புருஷன்பார்த்து மணம்முடிக்க உனை யழைத்தேன் உன் கருத்தென்னசொல்லும்.

சிவகாமிவல்லி தரு

நல்லவார்த்தை சொன்னீர்ஐயா எனக்கு
நாயகன்யார் சொல்வீர்மெய்யா

வல்லமைபுருஷனாக வரவேண்டுமெந்தனுக்கு
உல்லாசமாகவேஉரைத்தேனே உந்தனுக்கு ந

சிவநேசசெட்டி தரு

அன்னியத்தில்கொடுக்க கண்மணி உன்னை
அழைத்தேன்வார்த்தைசொல்ல பெண்மணி

கன்னிஉனக்குஏற்றக்கணவனை பார்த்துவந்தேன்
என்னிடமனப்படி இப்போசொல்லஇசைந்தேன் அ

சிவநேசவல்லி தரு

அம்மான்மகனிருக்கிறான் கண்ணே நீயும்
அன்னியத்தில்போகவேண்டாம் பெண்ணே

இம்மானிலத்திலே எவர்க்குண்டு அவர்தீரம்
வம்பாகவேபேசவேண்டாம் வருமேபெருங்கோபம் அ

சிவநேசசெட்டி தரு

தாய்சொல்லும்வார்த்தை நம்பாதே நான்
தடுத்தேனென்று வெம்பாதே

பேய்குணம்பிடித்துமே பேசுறாளுன்னிடம்
நாய்போலகுலைத்துமே நடிக்கிறாள்என்னிடம் தா

சிவகாமிவல்லி தரு

உந்தன்வார்த்தைதன்னைதந்தையே என்னும்
உத்தமியாளும்கேட்பே னெந்தையே

என் அழகுக்கேற்ற இன்பபுருஷன்தன்னை
சந்தேகமில்லாமல்சாற்றுவீர் எந்தன்முன்னே உ

சிவநேசவல்லி தரு

என்னிடமகளுக்கே போதனை நாதா
ஏற்றாய்உனக்குவரும் வேதனை

முன்பின்பாராமல் மோதியே அடிப்பேனுன்
கன்னியமாய்வாயைமூடி களித்திருப்பாய்நீதான் எ

சிவகாமிவல்லி தரு

தந்தையை அடிக்கலாமோ நீயே இப்போ
தையலாள்பேச்சைகேளும் தாயே

எந்தக்காரியமானாலும் என்னிடம்சொல்லுமேல
அந்தவிதமாக முடிப்பேனே முன்னாலே த

சிவநேசவல்லி தரு

வீணவார்த்தைவேண்டாம் செல்வியே நான்
விருப்பமாய்சொல்வேன்கேளாய் மெல்லியே

காணுதும்காணலாம் களிப்புள்ள அம்மான்வீட்டில்
தோணவேசெல்வமாய் சுகித்திருக்கலாம்நாட்டில் வீ

சிவகாமிவல்லி தரு

எந்தஊரு அம்மானுக்கு என்னையே தாயே
இசைந்துகொடுக்கப்போறாய் மன்னியே

என்னவிதமென்றெனக்கு இயம்புவாயடியம்மா
என்நேரமுஞ்சண்டை இடுவதழகோசும்மா எ

சிவநேசவல்லி வேறு தரு

பெருமைபெறும்மதுரையிலே எந்தன் கண்மணி
பேர்பெற்றஅம்மானுக்கே கொடுக்கபெண்மணி பெ

சிவகாமிவல்லி தரு

அருமையுள்ளதாயேகேளும் அறியஇப்போது
அவர்தொழிலெனக்குசொல்லும் தெரியஇப்போது அ

சிவநேசவல்லி தரு

நம்மைபோலவர்த் [illegible]
காட்டினிலேதிரவி [illegible]

[illegible]

சொன்னவார்த்தைஒப்புக்கொண்டேன் சோருதென்மனம்
சொல்லிவிட்டால்என்தகப்பன் பழிப்பாரேதினம் சொ

சிவநேசவல்லி தரு

கூடப்பிறந்தஎந்தன் அண்ணன்மகனுக்கே
கோதையாளேஉந்தனுக்கு சொன்னேன்பேச்சிதே கூ

சிவகாமிவல்லி தரு

தாரமுண்டுஅவர்க்கென்று தந்தைசொன்னாரே
தாயேநீசூதானவார்த்தை சொன்னாய்முன்னாலே தா

சிவநேசவல்லி தரு

குணமுள்ளவல்லவர்க்குத் தாரமிருந்தால்
கொள்ளலாமேரெண்டுபெண்ணு நீரமிருந்தால் கு

சிவநேசசெட்டி தரு

பாவிஉந்தன்தாய்வார்த்தையை கேட்டிடாதேஅம்மா
பாரில்உனக்குநல்லபுருஷன் பார்ப்பேனேசும்மா பா

சிவநேசவல்லி தரு

என்னிஷ்டப்படிமணம்முடித்தால் எந்தன்நாதனே
இன்பசுகமடைவாள்மகள் சொன்னேன்நீதனே எ

சிவகாமிவல்லி தரு

அன்னைவார்த்தைதடுக்கவேண்டாம் எந்தன் ஐயாவே
அவளிஷ்டப்படிஒத்துக்கொள்ளும் சொன்னேன்மெய்யாவே அ

சிவநேசசெட்டியார் விருத்தம்

வடிவினில்மிகுத்ததேவி வஞ்சியேசொல்வேன்கேளும்
கெடிபெரும்மதுரைநகரில் இர்க்தியாய்பெண்கொடுக்க
திடமதுமிகவேகொண்டேன் சீக்கிரம்மாப்பிள்ளைதன்னை
கடுகியேவரவழைப்பாய் களிப்புடனிக்குதானே.

சிவநேசசெட்டி வசனம்

கேளும் பெண்ணே பிராணநேதவி! உன்மனப்படி ஒத்துக் கொண்டேன் மாப்பிள்ளையை இங்கு வரவழைப்பாய் மாதே.

பொது வசனம்

இந்தப்பிரகாரமாகத்தானே இருவரும் மதுரையிலிருக்கும் சிவகுணசெட்டிக்கு பெண்கொடுக்க சம்மதித்து வரவழைக்க மதுரையில் வாசமாகிய சிவகுணசெட்டி வருகிறவிதங் காண்க.

சிவகுணசெட்டி வருகிற விருத்தம்

அருமையாய்மாமன்மாமி அழைத்திடுஞ்சேதிதன்னை
பெருமையாய்மதுரைவாசன் பிரியமாய்காதில்கேட்டு
திரிபுரமெரித்தநாதன் திருவடிபோற்றிசெய்து
வருகிறேன்சிவகுணசெட்டி வண்மையாய்கொலுவைநாடி.

சிவகுணசெட்டி தரு

சிவகுணசெட்டியு மிதோவந்தேன் — நல்ல
சீர்பெரும்மதுரையில் — பேர்பெறவாழ்ந்திடும்
சிவகுணசெட்டியு மிதோவந்தேன்

நவநவமான ஆடை — நாடியணியுஞ்சீலன்
நாரிபாகனை நிதம் — நண்ணிதுதிக்கும்லோலன்
சுருள் நாடியேபலகலை — யோதியுணர்ந்தவர்
தேடியதிரவியம் — மிககொணர்ந்தவர் சிவ

நெற்றிநிறையவெண்ணீறுபூசி — சிவாயாவென்று
நேர்த்தியானமந்திரம்பேசி

மெத்தவேமுப்புரிநூல் — மெய்யில்மிகவேதுன்ன
சுருள் முருக்கியேமீசையை — உருட்டிகண்விழித்து
சிரித்தமுகமுடன் — வருகிறேன்களித்து சிவ

இதுகாலம்இல்லாமல்இன்று — எந்தனைநாடி
எதுக்குஅழைத்தாரோநன்று

பதிபுகழ்சிவபட்டணம் — பரிவுடனேவாசன்
அதிவிதமாமன்மாமி — அழைத்ததைகாணநேசன்
சுருள் அவசரமாகவே — அதிவிரைவாக
கவனமாய்வருகிறேன் — காலதுநோக சிவ

செம்மங்குப்பம்நகர்வாசன் — நல்ல
சீர்பெருஞ்சான்றோர்குலமதிலுதித்த

பேர்பெருகுஞ் — சண்முகதாசன்
நம்பியேவீரப்பனும் — நடித்திடகேட்டபடி
சுருள் நலம்பெறநாடக — மாகவேபாடினேன்
புலவர்கள்சீர்பிழை — திருத்தவேதேடினேன் சிவ

சிவகுணசெட்டி விருத்தம்

அருமறைவேதநான்கு மறிந்திடுமறிவேஞான
கருணைசெய்பொருளே [illegible]
தருநிலைக்குரியஜீவ [illegible]
பொருமையில்மிகுத் [illegible]

சிவகுணசெட்டி தரு

சிவபட்டணந்தன்னைநாடி — சீக்கிரமாய்செல்லவேண்டி
நவமணிமுத்துமாலையாட — நாடியோடிவாரான்பாரீர் சி

எந்தனிடஅத்தைமாமன் — இருவருமழைத்தசேதி
சுந்திரனுக்தானறிய — சுருக்குடனேஓடிவாரான் சி

சந்தணபொட்டுதுலங்க சரிகைபுட்டாமிகஇலங்க
கந்தமுங்களபம்வீச களிப்புடனேவாரான்பாரீர் சி
மாமியிடவீடுகண்டு மனதினில்சந்தோஷம்கொண்டு
தாமதமின்றிநடந்து சம்பிரமுடன்வந்துசேர்ந்தான் சி

சிவகுணசெட்டி கவி

வித்தையுள்ளசிவபட்டணம் விளங்கவேவாசஞ்செய்யும்
சொந்தமென்மாமன்மாமி சுந்திரஉங்கள்பாதம்
சந்தோஷமாய்வணங்கி சருணம்மிகவேசெய்தேன்
எந்தனை அழைத்ததேது இன்பமாயுரைசெய்வீரே.

சிவகுணசெட்டி வசனம்

எனது அருமை மாமன் மாமிகளே! உங்கள் பாதங்களில் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்தேன். என்னை அழைத்த விபரம்தெரிய சொல்லவேண்டும் மாமாவே.

சிவநேசசெட்டி கவி

திருவளர்மதுரைதன்னில் சிறப்புடன்வாசஞ்செய்யும்
அருமையென்மருகாநீயும் அன்புடன்வாழ்ந்திடுவாய்
பெருமையாய்எனதுசெல்வி பெண்ணையும்மணமுடித்து
ஒருமையாய்நீயும்செல்ல உத்தமாயுனையழைத்தேன்.

சிவநேசசெட்டி வசனம்

ஆனால் கேளும் மருமகனே! எனது புதல்வியாகிய சிவகாமிவல்லியை மணம்முடித்து உனது ஊர்செல்ல அழைத்தேன். நீயும் சுகமாக வாழ்ந்திடுவாய் மருமகனே.

சிவகுணசெட்டி தரு அடங்காது அடங்காது என்ற மெட்டு

உதவாது உதவாது உந்தன்மகளெந்தனுக்கு உத
மதிமுகவதன ஒரு மங்கையரை இதம்குழுந்தி
பதிபுகழுமணம்முடித்தேன் தகாதுசெய்யவேபிந்தி உ

சிவநேசசெட்டி தரு

சொல்லுவேன்சொல்லுவேன் சுந்திரவடிவமாரா சொல்
மெல்லியரைமணம்முடித்தால் மேன்மையாகவாழ்ந்திருப்பாய்
அல்லலில்லான்றுமனுகிடாது அட்டியின்றிமணம்முடிப்பாய் சொ

சிவகுணசெட்டி தரு

ஆகாது ஆகாது ஆசைகொண்டுமணம்முடிக்க ஆகா
பாகார்மொழியையொத்த பைங்கொடியாளெனக்கிருக்க
கோதையையமணம்முடிக்க கூடுமோசொல்வீர்பெருக்க ஆ

சிவநேசசெட்டி தரு

தள்ளாதே தள்ளாதே தனவந்தனென் சொல்லை தள்
தெள்ளமுதைமணம்முடித்தால் தேடியபொருளுமுண்டு
உள்ளதையானுரைத்தேன் உத்தமதெறிவாய்கண்டு த

சிவநேசவல்லி கவி

யோக்கியகுணமுள்ள இன்பமார்மருகாஎந்தன்
வாக்கியந்தள்ளவேண்டாம் வஞ்சியைமணந்துகொண்டால்
பாக்கியமனேகந்தாரேன் பரிவுடன்பெற்றுகொண்டு
சிலாக்கியமாகநீங்கள் சுகித்துமேவாழ்குவீரே.

சிவநேசவல்லி வசனம்

கேளும் மருமகனே! எங்கள் வார்த்தையை தள்ளவேண்டாம். என் செல்வியை திருமணம் முடித்துக்கொண்டால் வேணபாக்கியந் தருகிறேன். நீ சுகமாய் வாழலாம் மருமகனே.

சிவகுணசெட்டி தரு

பெருமையுங்கீர்த்தியுள்ள எந்தன்மாமனே
பெண்ணிருக்கமணமாலை சூட்டேன்கோமானே பெ

சிவநேசசெட்டி தரு

நல்லகாலம்பார்த்திருந்தேன் மகளையுனக்கு
நலமாய்மணம்சூட்டிவைத்தால் சுகம்எனக்கு ந

சிவநேசவல்லி தரு

உன்னைவிடஎன்மகளை அன்னியருக்கே
ஒத்துகொள்ளேன்மாலைசூட்ட கன்னியருக்கே உ

சிவகுணசெட்டி தரு

அன்னியத்தில்ஒருபெண்ணை மணங்கொண்டேனே
அவள்வயிற்றில்புத்திரனுண்டு வேண்டாம்விண்டேனே அ

சிவநேசசெட்டி தரு

வேண்டாமென்றால்கேட்டாயோடி எந்தன்தேவியே
கண்டுகொள்ளாய்மருமகன்சொல்லை நிந்தைபாவியே வே

சிவநேசவல்லி தரு

எந்தனெண்ணங்கெடுக்கவேண்டாம் இன்பமருகனே
என்மகளை மாலைசூட்டும் அருமைமருகனே எ

சிவகுணசெட்டி தரு

மாலையிடத்தடையில்லை எந்தன்மாமியே
மார்க்கமல்லரெண்டுபெண் கொள்ளகேமியே மா

சிவநேசவல்லி தரு

வேறுபிள்ளை இல்லாததால் வேண்டினோம் உன்னை
விரும்பிபெண்ணும்பொருளும்பெற வருந்தினோமுன்னை வே

சிவகுணசெட்டி தரு

வம்புசெய்துபெண்கொடுக்க வேண்டாம்மாமியே
வருத்தம்வரும்தடுத்தால் சொந்தமாமியே வ

சிவநேசவல்லி தரு

தடுத்துசொன்னால்உயிர்விடுவேன் இன்பமருகனே
தையலென்மகளைகொள்ளும் அருமைமருகனே த

சிவகுணசெட்டி தரு

கொள்ளத்தடையில்லைஉங்கள் இஷ்டத்தின்படி
கள்ளமின்றிநடக்கவேண்டும் எந்தன்சொற்படி கொ

சிவநேசவல்லி தரு

என்னசொல்லும்மருகனே உன் இஷ்டத்தின்படி
எல்லாங்கேட்டால்தந்திடுவேன் தடுக்காதபடி

சிவகுணசெட்டி கவி

என்னிடமாமிமாமா எண்ணத்தைச்சொல்வேன்கேளும்
கன்னியைஎனக்குத்தந்து கருத்தொருமித்துமெய்யா
உன்னிடபொருள்பூமியை உறுதியாய்யெந்தனுக்கு
இந்நகர்அறியபத்திர மெழுதிட்டால்மணமுடிப்பேன்.

சிவகுணசெட்டி வசனம்

ஆனால் கேளும் மாமன் மாமிகளே! உங்களுடைய பொருள் பூமி ஆஸ்திகளெல்லாம் பத்திரம் மூலமாய் எழுதி தந்தால் உமதுமகளை மணம்முடிப்பேன் மாமாவே.

சிவநேசவல்லி கவி

மன்னவாபிராணநாதா மருமகன்சொன்னதுபோல்
பண்ணுவோனுமிப்போ பத்திரம்தன்னைவாங்கி
கன்னிக்குத்தானமாகக் கருத்தொடுஎழுதித்தந்து
மன்னியேசெல்விக்குநீர் மணஞ்செய்துவைப்பீர்தானே.

பொது வசனம்

இவ்விதமாக மூவரும் பத்திரம் எழுதுவதற்காக ஆலோசனை செய்துக்கொண்டிருக்கிற சமயத்தில் காவேரிப்பூம்பட்டிணம் வாழும் பரசுராமன் என்னும் பெயருள்ள கணக்கப்பிள்ளை கொலுவாக வருகிற விதங்காண்க.

கணக்கப்பிள்ளை வருகிற கவி

இப்படியாகமூவர் இனியதோர்வார்த்தையாடி
ஒப்பியேப்பத்திரமெழுத உடன்பட்டிருக்க அப்பால்
பெப்புள்ளகாவேரிப்பட்டணம் மேன்மையாய்வாழ்ந்திருந்த
கப்பியேபத்திரமெழுதும் கணக்கப்பிள்ளையும்வருகின்றாரே.

கணக்கப்பிள்ளை தரு

கல்விதனில்சிறந்த — வல்லமையிலுயர்ந்த
கணக்கப்பிள்ளையும்வந்தேன் — பரசுராமனென்னும்
செல்வமெல்லாமிழந்து — ஜீவிக்கவழியில்லாமல்
சுருள் தேடியேஉலகினில் — நாடியேகணக்கு
வாடிடாமலே — எழுதுவேன்பிணக்கு — கல்

முப்புரத்தையெரித்த — முக்கண்ணன் தன்னைக்கோரி
எப்பொழுதும்திருநீறு — இடுவேன்நெற்றியில்வாரி
சுருள் இங்கிர்த அத்தர் — மெய்யில்வீச
அங்கனிவனென்று — யாவரும்பேச — கல்

எந்தன் நகரந்தன்னில் — எனக்குபிழைப்பில்லாமல்
வந்தேனின்நகர்தேடி — வருத்தம்மிகக்கொள்ளாமல்
சுருள் வறுமையைநீக்கி — வையகம்சுற்றி
செருமையாய்வருகிறேன் — சுந்திரன்கத்தி — கல்

சிறப்புதனில்மிகுந்த — சிவபட்டணந்தன்னில்
பாபரப்பாய்நடந்து — பாசமாய்வந்தேன்முன்னில்
சுருள் பத்திரம்பாண்டு — மெத்தஎழுதுவேன்
உத்தமருண்டானால் — நத்திமேதொழுவேன் — கல்

கணக்கப்பிள்ளை கவி

என்னிடவிதிவசத்தால் இவ்வூரைதேடிவந்தேன்
மன்னவர்யாரானாலும் மகிழ்ந்துபத்திரம்பாண்டெழுத
நன்னயமாய்கூப்பிட்டால் நியாயமாய்வேலைசெய்வேன்
பன்னிடும்பொருளெனக்கு பக்ஷமாய்தருவாருண்டோ.

கணக்கப்பிள்ளை வசனம்

ஆனல் சேளுங்கள் தனதனவான்களே! சட்டதிட்டங்களாக பத்திரம் பாண்டு எழுதுவேன் எனக்கு வேலையிருந்தால் சொல்வீர் நகர வாசிகளே.

சிவநேசவல்லி தரு

பத்திரம்எழுதுதற்கு — உத்தமகணக்கப்பிள்ளை
பார்த்தயா — நாதா — சேர்த்திடயா

மெத்தவேகம்வீதியிலே மிக்கவேநடந்துபோறார்
பாரும் நாதா நீரும்

சிவநேசசெட்டி தரு

எந்தவூருஎந்ததேசம் எங்கிருந்துஇங்குவந்தீர்
அய்யா நீரும் மெய்யா
சொந்தமாகவாழும்தேசம் சொல்லுவீர்எந்தனுக்கு
அய்யா நில்லும் துய்யா

கணக்கப்பிள்ளை தரு

சொந்தமுள்ளஎந்தன்நகர்சொல்லுவேன் காவேரிப்பட்டணம்
அய்யா கேளும் மெய்யா
வந்தேனின்நகர்தேடி வாசமதுசெய்யவென்று
நானே மிக தானே

சிவநேசசெட்டி தரு

நல்லகாலம்வந்ததினால் எந்தன் இல்லம் தேடிவந்தீர்
அய்யா நீரும் அய்யா
செல்வமுள்ளஎந்தனுக்கு சீருடன்பத்திரமெழுத
வாரும் உறுதி கூறும்

கணக்கப்பிள்ளை தரு

இந்நகரில்பத்திரம்பாண்டு நன்மையாய்எழுதுவோர்கள்
இல்லையா நீரும் சொல்லையா
உந்தனிடவார்த்தைப்படி உகந்துமேயானும்வாரேன்
பின்னையே தாங்கள் பின்னையே

சிவநேசசெட்டி தரு

அவசரத்திற்கேற்றபடி ஆட்கள்ஒருவருமிங்கு
இல்லையே இச்சமயம் இல்லையே
கவனமாய்தான்பத்திரம் கருத்துடனெழுதுவீரே
சொல்லையா பதில் சொல்லையா

கணக்கப்பிள்ளை விருத்தம்

பத்திரமெழுதவென்று பாசமாய்அழைத்துவந்தீர்
சுத்தமாய்தானபத்திரம் சுந்திரன்எழுதும்கூலி
மெத்தவேஐம்பதுபவுன் மெய்யாநீர்தருவீராகில்
உத்தமர்சட்டப்படி உந்தனுக்கெழுதித்தாரேன்.

கணக்கப்பிள்ளை வசனம்

கேளுமையா செட்டியாரே! எனக்குக்கூலி ஐம்பதுபவுன் கொடுத்தால் தானபத்திரம் சுத்தமாய் எழுதித்தாரேன் செட்டியாரே.

சிவநேசசெட்டி விருத்தம்

காலத்திற்கேற்றதுபோல் கோரியபத்திரமெழுத
கூலிஐம்பதுபவுன் கொடுமென்றுகேட்டீரையா
சீலமுடனேஉமக்கு சிறப்புள்ளபவுனைதந்தேன்
சாலஞ்செய்திடாமல் சீக்கிரம்எழுதிதாரும்.

தானபத்திரமெழுதுகிற அகவல்

திருவளர்மதுரை தேசத்தில்வாழும்
பெருமைசேர்சிவகுண செட்டியார்தனக்கு
பெருமையாய்சிவபட்டணம் புகழ்பெறவாழும்
பெருநிதிபடைத்த கருணைசேர்சீமான்
சிவநேசசெட்டியார் சிந்தையும்களித்து
கவனமாய்எழுதி கொடுத்ததான
பத்திரமாவதுஎன்ன வென்றால்எனக்கு
புத்திரரொருவரும் பிறந்திடாததனால்
உதித்திட்டசெல்வியை உகந்துமேமாலை
பதிதனில்சூட்டும் புருடோதத்து
புத்திரராவாராதலா லெங்கட்கு
நத்தியேகருமம் நாட்டமாய்முடித்திடில்
பொன்பொருள்பூமி என்மனையாவும்
கன்னியாளோடு களிப்புடனடையவும்
இன்னகாறிய என்மனப்பூர்வமாய்
நன்னயமாக நாட்டமாய்எழுதி
கொடுத்திட்டதான பத்திரமிதுவே.

சிவகுணசெட்டி விருத்தம்

புண்ணியமாமன்மாமி புகழ்ந்திட்டேன்உங்களையான்
எண்ணியகாரியத்தை யிப்பவேமுடிக்கவேண்டாம்
கன்னியாள்முன்மனைவியற்கு கலியாணவிஷயம்சொல்லி
பெண்ணவளோடுவந்துன் புதல்வியைமணந்துகொள்வேன்.

சிவகுணசெட்டி வசனம்

ஆனால் கேளுங்கள் மாமன் மாமியாரே! உங்களிட இஷ்டப்படி பொன் பொருள் பூமியெல்லாம் தானமாக் எழுதி கொடுக்க நான் பெற்றுக்கொண்டேன். இப்பொழுது உன்மகள் சிவகாமிவல்லியை

என் முதல் பத்தினி இஷ்டமின்றி மணம்முடித்துக் கொள்ளமாட்டேன். அவளை இங்கழைத்துவந்து பிறகு மணம்முடித்துக்கொள்ளுகிறேன் மாமனாரே.

சிவநேசசெட்டி கவி

மருகனேநீருங்கேளும் மதுரைமாநகருக்கிப்போ
பெருமையாய்நீருஞ்சென்று பேசிமுன்தேவியோடு
இருவருமாகக்கூடி என்னிடநகரம்வந்து
திருமணம்முடித்துக்கொள்வாய் தேனமர்குழலினாளை.

சிவநேசசெட்டி வசனம்

ஆனால் கேளும் மருகனே! உன் இஷ்டப்படி மதுரைநகர் சென்று உன்மனைவியோடுவந்து என் மகளாகிய சிவகாமிவல்லியை திருமணம் செய்துகொள்வாய் மருகனே.

பொது வசனம்

இவ்விதமாகத்தானே சிவகுணசெட்டி மதுரையைநாடி போக இப்பால் சொத்துக்களை தானமாக சிவகுணசெட்டிக்கு எழுதி கொடுத்ததினால் சிவநேசசெட்டி திகிலடைந்து மரணத்துக்கேது வாகும் விதம் காண்க.

சிவநேசசெட்டி ஜம்பை தரு

என்னசெய்வேனேதுசெய்வேன் — என்னருமைகண்மணியே
அன்னவாகனப்பிரமன் — அமைத்தவிதியோ அறியேன் எ

சிவநேசவல்லி தரு

மன்னவரேஎன்கணவா — உனக்குமயக்கம்வந்தவிதமறியேன்
கன்னியாளெந்தனுக்கு — களிப்பாய்சொல்வாய்தெரியேன் ம

சிவநேசசெட்டி தரு

தானபத்திரமெழுதினதால் — தவிக்குதடிஎந்தன் ஆவி
மானேஉன்னைதனியாய்விட்டு — மாயக்காலமானேன்தேவி தா

சிவநேசவல்லி தரு

மகள்சிவகாமிதன்னை — மருகனுக்குகொடுப்பதற்குள்
திகைப்பிஉந்தனிட — ஜீவனும்போய்விடுமோ ம

சிவநேசசெட்டி தரு

போகுதடிஎந்தன்உயிர் — புதல்வியாளைபார்த்துக்கொள்ளும்
பாகார்மொழிமயிலேஉந்தன் — பாசமதைமறந்தேனடி போ

### சிவநேசவல்லி கவி

அரகராகைலைவாசா அம்பலத்தாசேயுந்தன்
திருவுளச்செயலிதுவோ நீவினைக்கென்னசெய்வேன்
பெருமையாய்எந்தனோடு பேசிக்கொண்டிருந்தபோதே
சிறுமையும்மிகவேபட்டு ஜீவனைவிட்டாரையோ.

### சிவநேசவல்லி புலம்பல் தரு

ஐயையோஎன்னசெய்வேன் ஆசைநாதனையிழந்து
மெய்யுருகிவாடலானேன் மெல்லியாளும்இன்றுநாளில்
நாதனேஉனைமறந்து நானிலத்திலிருப்பேனோ
காதலுள்ளஎந்தன்நாதா கன்னியாளைவிட்டுபோறீர்
திருமணம்முடித்திடாமல் செல்வியாளைநீரும்விட்டு
பெருமையாய்எமலோகம் புண்ணியரேபோனீர்பட்டு
கன்னிநான்கண்டகினவு காளைஉனக்குபலித்ததோ
இன்னிலத்திலினிமேலே இருப்பேனோநானும்நீதோ ஐ

### சிவநேசவல்லி கவி

மன்னனும்இறந்தபின்பு மங்கையுந்தானிருந்து
என்னதான்சுகமினிமே லடையவேபோறேனிங்கு
மின்னலினிடையுடைய மெல்லியாள்தான்நினைத்து
அன்னவன்விதிப்படியே ஆவியுந்துறந்திட்டாளே.

### பொது வசனம்

தந்தை தாயார் இருவரும் இறந்து கிடப்பதைக் கண்ட சிவகாமிவல்லி துயரப்படும் விதங் காண்க.

### சிவகாமிவல்லி தரு

ஐயையோஎன்தந்தைதாயே அனியாயமாயிறந்தீர்
அருமையாய்யெனைப்பெற்று தந்தைதாயே
வையகத்திலெனைப்போல வஞ்சியாள்என்னசெய்வேன்
அரும்பாவியாருமுண்டோ தந்தைதாயே
எந்தனைதனித்துவிட்டு இறந்தீரே இன்றுநாளில்
இருவருமொருமிக்க தந்தைதாயே
கந்தன்தன்னையீன்ற கன்னியைவிட்டுபோகிறீர்
கர்த்தன்செயலிதுவோ தந்தைதாயே
திருமணமுடிப்பதற்கு சிந்தைகளித்திருந்தீர்
செல்வியாளெந்தனுக்கு தந்தைதாயே
பெருமையாய்மணம்முடித்து போனீரேஎமலோகம்
பூவைபெணைபாராமல் தந்தைதாயே அ

### சிவகாமிவல்லி மாரடிப்பு தரு

போனீரோ என் தகப்பா புதல்வியாளென்னைவிட்டு
யேனோ எனை மறந்தீர் இனியமொழிசொல்லாமல்
மாண்டீரோ என் தந்தைதாயே மங்கையாளென்னைவிட்டு
ஆண்டவன் விதிப்படியே ஆவிதுறந்தீர்களோ
மண்ணள்ளிபோடுதற்கு மைந்தனில்லாதொழிந்தீரே போ

### சிவகாமிவல்லி ஜம்பை தரு

மதுரையிலேஎனைகொடுத்தீர் மணமாலை ஆகலியே
அதற்குள்ளே இருவருமாய் ஆவிஇழந்தீரையோ
அங்கம்பதறுதையோ ஆவிமிகசோருதையோ
மங்கைநான் இனிமேலே மாநிலத்திலிருப்பேனோ ம

### சிவகாமிவல்லி மாரடிப்பு முடுக்கு

போனநாதன் வருவதற்குள் புண்ணியரே இறந்துவிட்டீர்
நானொருகொடும் பாவியாகி நட்டாற்றில் நின்றனையோ

### சிவகாமிவல்லி விருத்தம்

பிறையினைசடைதரித்து பூமியைப்பாதுகாக்கும்
இறைவனேஈசாஎன்னை யிக்கெதிக்காளாக்கிவிட்டாய்
துறையானஎந்தன்நாதன் தோகைமுன்வரவேபாங்கி
பறைதனையடிக்குந்தோட்டி பஞ்சமன்தனையழைப்பீர்.

### சிவகாமிவல்லி வசனம்

ஆனால் கேளும் தாதியே! மதுரைக்குப் போகிறேனென்று வாக்களித்துப்போன நாதனவர் இதோ சமீபத்தில்தான் போவார் அவருக்கு என் தந்தைதாய் இருவரும் இறந்து போன சேதியை தெரிவிக்க தோட்டியை அழைத்துவாரும் நான் ஓலை எழுதுகிறேன் பாங்கிமார்களே.

### சிவகாமிவல்லி அகவல்

தேவரீர்நாதன் திருவடிதனக்கு
சிவகாமிவல்லி சரணம்செய்து
ஆவலாய்எழுதிய அழகுள்ளநிருபம்
உன்னையும்என்னையும் ஒண்டியாய்விட்டு
என்னையும்ஈன்ற இன்பதந்தையும்தாயும்
சிவன்பதிசேர்ந்தார் சிறப்புடன்இருவரும்
அவர்களையெடுத்து அழகுடன்தகனம்செய்து
சூதகம்கழித்து தோகையாள்என்னை
காதலாய்திருமணம் களிப்புடன்செய்து

பேதமில்லாமல் பிரியமாய்இருவரும்
கோதில்லாமதுரை குணமுடன்செல்வோம்
நாதனைசீக்கிரம் நடந்துநீவாரும்.

சிவகாமிவல்லி வசனம்

இவ்விதமாக இழவுவோலை அறிவிக்க சிவகாமிவல்லி தோட்டியை அழைக்க தோட்டி வருகிறவிதங் காண்க.

தோட்டி வருகிற கவி

வஞ்சியாள்சிவகாமி வரவழைத்தசேதிதன்னை
பஞ்சமகுலத்தில்வந்த பரதோட்டியும்காதில்கேட்டு
நஞ்சணையுடையசிவ நாதனைமனதில்கோரி
கொஞ்சிபேசபையைநாடி குணமுள்ளதோட்டிவாரான்.

தோட்டி தரு

தோட்டியும்நானே இவ்வூரில்வாழும்
தோட்டியும்நானே

தோட்டியும்வந்தேனே துரிசாய்நாடி
நாட்டமாய்மாது அழைத்திடதேடி தோ

காத்தான்வீரமாடன் கருப்பண்ணன்முனியாண்டி
தோத்திரஞ்செய்து தொழுதேவேனேவேண்டி தோ

துய்யபேரிகைதன்னை தோளில்மிகமாட்டி
ஒய்யாரமாய்தலைபாகை இறுக்கிக்கட்டி தோ

பையவேதிருநீறை பரக்கநெற்றியில்பூசி
கையில்தடியூன்றி கலக்கமற்றுப்பேசி தோ

தோட்டி கவி

அம்மணிதாயேயுந்தன் அழகுள்ளபாதந்தன்னில்
செம்மையாய்பணிந்துநின்றேன் தேசத்தில்வாழும்தோட்டி
நம்பியேஅழைத்தசேதி நலமுடனெந்தனுக்கு
செம்பதுமிகவுண்டாக தாயேநீசொல்லுவாயே.

சிவகாமிவல்லி கவி

சொல்லுவேன்கேளும்தோட்டி சுருளோலைகையிற்கொண்டு
மல்லியில்புகழ்பெற்றோங்கும் இனியதோர்மதுரைசென்று
நல்லசிவகுணசெட்டிக்கு நங்கைதான்தந்ததாக
சொல்லிநீகொடுத்துயிங்கு சுருக்கினில்வருகுவாயே.

சிவகாமிவல்லி வசனம்

இந்த இழவு ஓலையைக்கொண்டு மதுரையென்னுநகரில் வாசமாகிய சிவலிங்கசெட்டியார் குமாரன் சிவகுணசெட்டியாரிடம்தந்து அவரை கையோடு அழைத்து வருகுவாய் தோட்டியே.

தோட்டி தரு

ஓலைசருள் தன்னை உத்தமனுங்கையிற்கொண்டு
வேலையகப்பட்டதென்று விரைவுடனே தானடந்தான்

மலைவனந்தனைக்கடந்து மதுரைபதியைநாடி
நிலைபிரளாமலே நேர்த்தியாகவாரான்தேடி

அந்தமும்அழகுடைய அரிவைசிவகாமிமாது
சிந்தைதெரிந்துதந்தஓலை தெரிவிக்கவாரான்தேடி

கையில்தடியுங்கொண்டு கழுக்கட்டில்பையும்வைத்து
மெய்யில்திருநீறும்பூசி மதுரையைநாடிவாரான் ஓ

தோட்டி வசனம்

மதுரைதேசம் போகிறேனென்று மாமன் மாமியாரிடம் விடைபெற்றுக்கொண்டுபோன மாப்பிள்ளையாகிய சிவகுணசெட்டி நடுவழியில் தோட்டியைக்கண்டு சொல்லுகிறவிதம் காண்க.

சிவகுணசெட்டி விருத்தம்

ஆரடாதோட்டிநீதான் அதிகவிரைவாகஇங்கு
போகிறவன்யார்சொல்லும் புகழ்பெறயெந்ததேசம்
சீரடாநீயும்போகிற சேதியையெந்தனுக்கு
கூறடாநாமிருவர் கூடியேகர்செல்வோமே.

தோட்டி கவி

சீலமாய்என்னைகேட்ட சீர்பெருஞ்செட்டியாரே
ஓலையைநீதாதந்தேன் உத்தமாநீரும்பார்த்து
காலதாமதமில்லாமல் கொடுத்திடவேண்டுமிப்போ
மேலானமதுரைநாடி மிக்கவேபோகவேண்டும்.

தோட்டி வசனம்

கேளுங்கோ ஆண்டே! இந்த இழவு ஓலையை நீர் பார்த்துவிட்டு சீக்கிரம்தாரும் நான் மதுரைநகர் போகவேண்டும் ஆண்டே.

பொது வசனம்

இந்தவிதமாக தோட்டி கொடுத்த ஓலையை சிவகுணசெட்டி கவனித்து துக்கத்தோடு மாமன் வீட்டுக்குத் திரும்பி வருகிற விதம் காண்க.

சிவகுணசெட்டி ஜம்பை

ஐயையோயென்னசெய்வேன் அருமையுள்ளமாமன்மாமி
வையகத்தில்என்னைவிட்டு எமலோகம்போனீரோதான்

தெம்பானவார்த்தைசொல்லி தேவியரும்நீருமாக
நம்பிஇருந்தயென்னை நட்டாற்றில்விட்டுப்போனீர்

என்னபாவம்செய்தேனோநான் எங்களிருவரையும்விட்டு
அன்னவன்விதிப்படியே ஆவியைவிட்டீர்மாமா
நாட்டமுடன்நான்நடந்து காட்டுவழிமலையெல்லாம்
ஓட்டமும்நடையுமாக ஓடிவாரேன்மாமனைகாண

பொது வசனம்

இவ்விதமாக புலம்பிக்கொண்டு சிவகுணசெட்டி வருவதற்குள் அப்பட்டணத்திலுள்ளவர்கள் அவ்விரண்டு பிரேதங்களையும் மயானத்திற்கொண்டுபோய் தகனம் செய்ததையறிந்து வீட்டிலிருக்கும் சிவகாமிவல்லியைப் பார்த்து சிவகுணசெட்டி சொல்லுகிற விதம் காண்க.

சிவகுணசெட்டி புலம்பல் தரு

அருமைஅத்தைமகளே வருத்தம்கொள்ளவேண்டாம்
ஆசைநாதன்வந்தேனே பெண்மயிலே
ஒருமையுள்ளமாமன்மாமி உன்னைவிட்டுமாண்டதினால்
ஒருகவலைபடவேண்டாம் பெண்மயிலே
எண்ணியயெண்ணமெல்லாம் இருவரும்முடிக்காமலே
எமன்பதிசேர்ந்தாரே பெண்மயிலே
கண்ணில்பார்ப்பதற்கு புண்ணியஞ்செய்யவில்லை
கர்த்தன்செயலிதுவோ பெண்மயிலே
வித்தையுள்ளஉந்தனை சுந்திரன்மணமுடிப்பேன்
விசனம்கொள்ளவேண்டாம் பெண்மயிலே
எந்தனிடநகரம் இருவருமாய்கூடிசென்று
இன்பமாய்வாழ்ந்திடலாம் பெண்மயிலே

சிவகாமிவல்லி கவி

வண்மையுள்ளநாதா விளம்பியபடியேசெய்வேன்
கன்னிதாய்தந்தைக்கு கருமமும்ஆனதாலே
தன்மையாய்இவ்விடத்து தாமதம்செய்திடாமல்
பெண்ணவள்எந்தனைநீ பிரியமாய்மணம்முடிப்பீர்.

சிவகாமிவல்லி வசனம்

கேளும் நாதா! தாங்கள்சொன்ன வார்த்தையெல்லாம் ஒப்புக்கொண்டேன். என் தாய்தந்தையருக்கு ஈமக்கடன்களெல்லாம் முடிந்துபோய்விட்டதால் என்னை திருமணம் செய்துக்கொள்ளும் நாதனே.

சிவகுணசெட்டி கவி

நல்லகுணமானதேவிநான் சொல்லும்வார்த்தைகேளும்
உல்லாசமாகயிங்கு உனைமணஞ்செய்யமாட்டேன்
செல்வமாய்மதுரைக்கு சீக்கிரம்நாமுஞ்சென்று
மெல்லியேமணம்முடிப்பேன் மேதினியறியத்தானே.

சிவகுணசெட்டி வசனம்

ஆனால் கேளும் தேவியே! உன்னை நான் இவ்வூரில் மணம் முடிக்கமாட்டேன் என் சொந்ததேசமாகிய மதுரைக்குச்சென்று என்சுற்றத்தார் அறிய நான் உன்னை மணஞ்செய்துக் கொள்ளுகிறேன் மதுரைநகர் செல்லுவோம் வாரும்பெண்ணே சிவகாமிவல்லி.

சிவகாமிவல்லி தரு

வாவாநாதாமதுரைநகர் போவோம்நீதா
ஆவலானதந்தை அன்னையர்இறந்ததும்
பாவியானஎனக்கு பதருதேமனம்நிதம் வா

சிவகுணசெட்டி தரு

மெல்லியேவாராய்மதுரைநகர் செல்லுவோம்நேராய்
தொல்லையானவிசனத்தை தோகைநீகொள்ளாதே
வல்லவன்என்பின்னே வருதுவாய்விள்ளாதே மெ

சிவகாமிவல்லி தரு

நாதனேபாரும்வழியில்வாவி கட்டுமேதகூறும்
கோதையாளெனக்கு கொடும்பழிசேருமோ
ஆதரவுள்ளநாதா அறிவிப்பாய்நீருமே நா

சிவகுணசெட்டி தரு

பத்தினிபெண்ணேஅதனால்குற்றம் இல்லைஎன்கண்ணே
உத்தமன்நானிருக்க உனக்கென்னகுறைசேரும்
மெத்தவேவழிநடந்து மெல்லியாளேவாரும் ப

சிவகாமிவல்லி தரு

அந்திபொழுதாகுதேநாதா சிந்தைமிகநோகுதே
எந்தனுக்குபயமது இனிமேல்ஆகுதே
சொந்தவூர்காணாமல் தோகைமனம்வேகுதே அ

சிவகுணசெட்டி தரு

தெரியுதுபாராய்திருப்புரம்பியூர் அரிவையேநேராய்
பெருமையில்மிகுந்திட்ட புண்ணியசிவஸ்தலம்
அரிவையேவந்தோமே அன்பாகஇங்குநலம் தெ

சிவகாமிவல்லி கவி

ஆசைதனில்மிகுந்த அழகுள்ளபிராணநாதா
நேசமாய்நகரைவிட்டு நீண்டதோர்வழிகடந்து
பாசமாய்வழிகடந்து பண்புள்ளமூதூர்நாடி
வீசியேவந்துசேர்ந்தோம் விந்தையாய்தங்குவோமே.

சிவகுணசெட்டி கவி

கன்னியேயிதோபாரும் கர்த்தனீசன்கோவில்
வன்னியுங்கிணறுலிங்கம் வண்மையாயிருப்பதாலே
மன்னியேசமையல்செய்து மகிழ்ச்சியாய்நாமுமுண்டு
கன்னலேபடுத்துறங்கி காலையில்வருவோமே.

சிவகுணசெட்டி வசனம்

ஆனால் கேளும் பெண்ணே! நாம் இருவரும் திருப்புறம்பிய மூதூர் வந்து சேர்ந்தோம் அந்தப்பொழுதாகையால் இதோ இருக்கும் சிவ ஆலயத்திற்குச்சென்று வன்னி கிணறு லிங்கம் இருப்பதால் சமையல் செய்து போஜனம் உண்டு உறங்கி காலையிற் செல்லுவோம் பெண்ணே.

பொது வசனம்

இவ்விதமாகத்தானே சிவகுணசெட்டியும் சிவகாமிவல்லியும் திருப்புறம்பியமூதூர் வந்து அங்கே திருக்கோவில்கொண்ட ஈசுரன் கோவில் கிணற்றில் நீராடி அவ்விடத்திலிருக்கும் வன்னி மரத்தடியில் சமையல்செய்து போஜனமுண்டு மேருவை வில்லாக வுடைய கடவுள் கோவிற்புறத்தில் ஓர் படிமீது நித்திரை செய்திருக்க திருஞானசம்மந்தசுவாமி கொலுவாக வருகிற விதம் காண்க.

திருஞானசம்மந்தர் கவி

திருவோங்குஞ்சீர்காழி தன்னில்வாசன்
  தேவியுமையாள்மகிழ முலைப்பாலுண்டோன்
ஒருமையொடுமனமொழி மெய்களாலே
  உகந்துமேதிரிசூலம் கபாலந்தன்னை
பெருமைபெறவேதுதித்து பாடவல்லோன்
  பேசரியபஞ்சாக்ஷர நிலைவகித்தோன்
திருநுதலில்வெண்ணீறும் பிரகாசிக்க
  திருஞானசம்பந்தர் வருகின்றாரே.

திருஞானசம்மந்தமூர்த்தி தரு

ஞானசம்மந்தர் வந்தனர் இந்த
ஞாலமெலாம்புகழ்சீலமறைமுடி மோனநிலையிலுணர்ந்தவர்

தீதையாபரனும் தேவதேவனைநிதம்
மானசபூசைசெய்து மகிழ்ந்துதுதிப்பேன்சதம்

சுருள் மாண்புள்ளமாதவம் மெத்தபுரிந்தவர்
காண்பவரான்போடு போற்றசிறந்தவர் ஞா

நெற்றியில் வெண்ணீறு இலங்கவே மிக்க
நீண்டசடைமுடி பூண்டிடும்நாதன் பெற்றபாலனுய்த் துலங்கவே
உற்றசிஷியரெல்லாம் உண்மைஎழுத்தைப் போற்ற
கற்றவர்சடையனை கருதிமனதுள் பற்ற

சுருள் காதலாய்ஸ்தலங்களை கண்டுமேமனம்
பேதமைநீங்கிட பாடினேன் தினம் ஞா

பாண்டியன்சுரத்தை தீர்த்தவர் திருநீற்று லே
பண்புள்ளசைவமேபூமியில்பரவிட கண்யமுடனேகார்த்தவர்
எண்டிசைபுகழ்சமணர் ஏற்றும்போதத்தைவென்றேன்
கண்டித்து அவர்களை கழுவிலேற்றியேகொன்றேன்

சுருள் கதித்திடும்பேத வாதத்தைபோக்கியே
துதிபெரும்நீரதை துணைஎனசெய்துமே ஞா

பார்முழுவதும் சுற்றியே சிவ
பரமகடவுள்மேல்பதிகமேபாடி சார்ந்தஞானமுமுற்றியே
சீர்பெருகுஞ்செம்மங் குப்பந்தனிலே திகழ்
நற்குணசண்முகன் நாடகபாடல்புகழ்

சுருள் நித்தியாசனே நத்திடுஞ்சீலன்
பத்தியாய் அவரடி பெற்றிடும்லோலன் ஞா

## திருஞானசம்மந்தர் கவி

நற்குணசிஷமாரே நானுரைக்கும்வார்த்தைகேளீர்
துற்குணசமணர்களை துடிக்கவேகழுவிலேற்றி
சற்குணபாண்டியனுக்கு சுரந்தனைநீக்கிவைத்தேதன்
அற்புதமதுரைவிட்டு அழகுடன் ஏழூர்செல்வோம்.

## திருஞானசம்மந்தர் வசனம்

கேளுங்கள் சிஷியர்களே! பாண்டியனோடு எதிர்த்து சமர்புரிய வந்த சமணர்கள் எண்ணாயிரம் பெயர்களையும் கழுவிலேற்றி பாண்டியனுக்கு சுரத்தை நீக்கிவைத்தேன். இனி இம்மதுரை நகரை விட்டுத் திருப்புரம்பியமூதூர் போகும்படியாக எண்ணங்கொண்டேன் செல்லுவோம் வருவீர்கள்.

## திருஞானசம்மந்தர் தரு

மதுரைநகரைவிட்டு அதிவேகமாய்நடந்து
பதிபுகழ்திருப்புரம்பியமூதூர் பாசமுடனேவாரும்
கையில்ஜெபமாலையிலங்க காவிவேஷ்டி இடைதுலங்க
மெய்யில்திருநீறுபிரகாசிக்க மிக்கவேகமாய்நடந்தார்

அருமையுள்ளசிஷியரெல்லாம் ஆனந்தமாய்பஜனைபாட
பெருமையுள்ள திருஞானசம்மந்த புண்ணியரும்ஓடிவாரார்
திருப்புரம்பியமூதூர்கண்டு சிந்தையும்மகிழ்ச்சிகொண்டு
விருப்பமுள்ளசிஷியரோடு விரைவினிலேவந்துசேர்ந்தார் ம

திருஞானசம்மந்தர் கவி

என்னிடமனதைபோல இசைந்துமேநடக்கின்ற
உன்னிதசிஷியமாரே உத்தமமதுரைவிட்டு
இன்னிலம்புகழும்மூதூர் இப்பவேவந்துசேர்ந்தோம்
சென்னியில்பிறைதரித்த சிவபிரான்றனைத்துதிப்போம்.

திருஞானசம்மந்தர் வசனம்

கேளுங்கள் சிஷியர்களே! நாம் திருப்புரம்பியமூதூர் வந்து சேர்ந்தோம் இதோ இருக்கும் சிவாலயத்திற்குச்சென்று பரமக் கடவுளைத் தெரிசிப்போம் வருவீர்கள்.

சிவஸ்தோத்திரம்

தோடுடையசெவியன்விடையேறி ஓர்தூவெண்மதிசூடி
காடுடையசுடலைப்பொடிப்பூசி என்னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமலரான்முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவிய பெம்மான்இவனன்றே.

திருஞானசம்மந்தர் கவி

கல்லால்கீழ் அமிர்தகுரு நாதாபோற்றி
கருணைபெரும்உளமுடைய தேவாபோற்றி
எல்லார்தம்மனத்துறையும் இறைவாபோற்றி
இருவிழிகள்கவரும்திரு உருவாபோற்றி
பொல்லார்வாழ்திரிபுரத்தை எரித்தாய்போற்றி
பொங்கரவமொடுதிங்கள் புனைந்தாய்போற்றி
நல்லார்தொழுதேத்தும் திரிபுரம்பியமூதூர்வாழும்
நாயகனே போற்றிபோற்றி.

திருஞானசம்மந்தர் தேவாரப்பண்

பீடுடையநெறியுடையோர் போற்றுந்திருபெம்மானின்
ஆடுநடங்கண்டுய்ய அருள்புரிவதென்றோ
பாடுநெறிவிட்டிலேன்காண் பித்தாவின்சம்மதமோ
தேடுமடியார்க்குஒரு தெவிட்டடாததெள்ளமுதே.

பொது வசனம்

அதோதெப்படியென்றால் திருஞானசம்மந்தர் திருப்புரம்பிய மூதூர்வந்து பரமக்கடவுளை தோத்திரம்செய்து அவ்வூர் மடத்தில்

சிஷியர்களோடு தங்கியிருக்க சிவகுணசெட்டி படுத்துறங்கும் போது சர்ப்பம்தீண்ட விழித்து தன்தேவியாகிய சிவகாமிவல்லிக்கு சொல்லுகிற விதங்காண்க.

சிவகுணசெட்டி கவி

வஞ்சியேயென்னசெய்வேன் வடிவுள்ள திரேகமதில்
நஞ்சதையுடையகோர நாகமும்கடித்ததையோ
பிஞ்சுமதிசடையணிந்த பெம்மானின்செயலிதுவோ
மிஞ்சியேவிஷம்தலைக்கேறி மெய்யதுசோருதையே.

சிவகுணசெட்டி வசனம்

பெண்ணே சிவாமிவல்லியே! நான் நித்திரை செய்யும்போது என்னைச் சர்ப்பங் கடித்தது பெண்ணே.

சிவகாமிவல்லி கவி

வடிவுள்ளநாதன்வார்த்தை வஞ்சியாள்காதில்கேட்டு
இடியதுவிழுந்தாற்போல ஏங்கியேதுடிதுடித்து
முடிமீதுமதியணிந்த முக்கண்ணன் அமைப்போவென்று
கொடியிடைபோன்றகோதை சோர்ந்துமேவிழுந்திட்டாளே.

சிவகாமிவல்லி வசனம்

அரகரா பரமேசா! என்பத்தாவை அரவம் தீண்டியதே என் செய்வேன் தெய்வமே.

சிவகுணசெட்டி ஜம்பை தரு

கலைமுகவதனமுள்ள கன்னியாளேஎன்னசெய்வேன்
தலைக்குவிஷமிகவேஏறி தடுமாறுதேஎந்தன்நெஞ்சம்
ஈசனிடஆலயத்தில் இன்றுநான்நித்திரைசெய்ய
ஆவிமுடியும்படி அமைத்தானேபிரமன்மெய்யா
உந்தனைமணம்முடித்து விந்தையாகவாழ்கவென்று
சிந்தையில்நான்கொண்டஎண்ணம் சிதறிப்போச்சுதேயின்று
மங்கையேஉனையழைத்து மதுரைக்குநான்போவதற்குள்
இங்குஉன்னைதனித்துவிட்டு எமன்பதிபோகின்றேனே

சிவகாமிவல்லி தரு

ஆசையுள்ளஎந்தன்நாதா அரிவையாள்என்னைவிட்டு
மைத்துனரே
ஆவிபோகுதேஎன்றீர்
காசினியோர்புகழ கன்னியாள்என்னைநீர்
களிப்பாய்மணமுடிக்கஇருந்தீர் மைத்துனரே

நம்பியிருந்தவென்னை நட்டாற்றில்நீரும்விட்டு
நமன்பதிபோறேனென்றீர் மைத்துனரே
அம்புலிசடைதரித்த ஆண்டவன்செயலிதுவோ
அரிவையெனைபிரிய மைத்துனரே
வரும்போதுவழியில் ஆகாதசகுனங்கண்டு
வந்ததினால்இக்குறையே மைத்துனரே
பெருமைபெரும்உந்தன்பெண்டு பிள்ளைகளைநீரும்விட்டு
பெரும்பழிசுமந்தீரே மைத்துனரே
மங்கையாள்எந்தனைநீர் மகாபாவிதனியாய்விட்டு
மடிந்திடப்போறேனென்றீர் மைத்துனரே
அங்கம்மிகவாடி ஆவியும்சோருதையே
அரிவையாள்என்னசெய்வேன் மைத்துனரே ஆ

## சிவகுணசெட்டி ஜம்பை தரு

ஆவியதுபோகுதடி அரிவையாளேஎன்னசெய்வேன்
பாவிநான்உன்னைவிட்டு பரகதிசேர்கின்றேனே
மார்பைவந்தடைக்குதடி மெய்யதுமிகவும்சோர்ந்து
வார்த்தைதடுமாறுதையோ வஞ்சியரேஎன்னசெய்வேன்
முக்திரான்மணமுடித்த மொய்குழலாள்தன்னை
இந்தநாளில்பார்ப்பதற்கு என்கண்ணிலிருக்குதையோ
ஆருந்துணையில்லாமல் அரிவையாள்என்னைவிட்டு
சேரவும்போகின்றேனே சித்திரவந்தஎமலோகம் ஆ

## சிவகுணசெட்டி முகாரி விருத்தம்

பெருமையுள்ளமுன்மனைவி பூவையாள்தனைமணந்து
திருமணம்முடிப்பேனென்று தீரமாய்வார்த்தையாடி
கருணையோடுஅழைத்துவந்த கன்னிசிவகாமியாளை
தெருவினில்தானும்விட்டு ஜீவனைவிட்டேனையோ.

## சிவகாமிவல்லி விருத்தம்

ஐயோநான்என்னசெய்வேன் அழகுள்ளபிராணநாதா
வையகந்தான்புகழ வஞ்சியைமணமுடித்து
மெய்யாகவாழவந்தீர் மெல்லியைதனித்துவிட்டு
பையரவந்தீண்டி பத்தாவேஉயிரைவிட்டீர்.

## சிவகாமிவல்லி ஜம்பை தரு

இனிஎன்னசெய்வேனையோ எந்தனிடபத்தாவும்
அனியாயமாய்என்னைவிட்டு ஆவியும்இழந்தனரே
எந்தனிடஆசையெல்லாம் என்கணவாநீமறந்து
நொந்துமேநீர்ஆவிவிட்டீர் நாதன்இவ்வாலயத்தில் இ

### மாரடிப்பு தரு முடுக்கு

நட்டாற்றில்கட்டுமரம் நாதனை அவிழ்ந்ததைப்போல்
இட்டுவந்துஎன்னை இவ்வூரில்தனிக்கவிட்டு
மாண்டீரோஎன்கணவா மங்கைநான்என்னசெய்வேன்
ஆண்டவன்செயலிதுவோ அரிவையாள்புலம்பிநிற்க

### சிவகாமிவல்லி ஜம்பை தரு

தொட்டுதாலிகட்டிடாமல் சுந்திரனே அரவந்தீண்டி
கட்டழகாமாண்டதினால் கவலைமிகக்கொள்ளலானேன்
கன்னியாள்எந்தனைநீர் குண்ணிமனம்வாடவிட்டு
வன்னிமரத்தின்கீழேவந்து இன்றுபள்ளிகொண்டீர் தொ

### சிவகாமிவல்லி மாரடிப்பு தரு

முந்திநீர்மணம்முடித்த மெல்லியவள் என்னைகேட்டால்
சுந்தரிபதில்என்னசொல்வேன் தோகைமனம்வாடுதையோ
உன்னை அன்பாய்பெற்றதந்தை என்னைவந்துகேட்பாராகில்
கன்னியாள் அதற்குஏற்ற காரணங்கள்என்னசொல்வேன்

### சிவகாமிவல்லி ஜம்பை தரு

கங்கணந்தனைகழற்றி கன்னியாளுந்தானெறிந்தேன்
செங்கையிலணிந்திருந்த சித்திரவளையல்தனையுடைத்தேன்
அணிந்திருந்தநகைகள்எல்லாம் அரிவையாள்கழற்றிவைத்து
குணமுள்ளநாதனோடு கோதையாளும்மடியப்போறேன் க

### சிவகாமிவல்லி விருத்தம்

திங்களைசடைதரித்து திரிபுரமெரித்ததேவா
பங்கயமுகவதன பத்தாவை அரவந்தீண்டி
அங்கமும்மிகவேவாடி அரன்பதிதன்னைசேர்ந்தார்
மங்கைநான்புலம்பிவாடி மகேஸ்வரா தவிக்கலாமா.

### சிவகாமிவல்லி வசனம்

அரகரா சம்போ சங்கர மகாதேவா! என் நாதனை சர்ப்பம் தீண்டிவிட அவர் இறந்துபோக நான் மகாபாவியாகி புலம்பிக் கொண்டிருக்கின்றேனே தெய்வமே.

### சிவகாமிவல்லி தரு

ஐயோநான்என்னசெய்வேன் அருந்துணையில்லாமல்
தையலாள்பாதவித்து தவிக்கலானேன் இன்றுநான் அ

திருஞானசம்மந்தர் தரு

என்னசொல்வேன்சிஷியர்களா ஈசனிடஆலயந்தன்னில்
கன்னியழுகிறசத்தம் காதில்விழுகுதேமுன்னில் எ

சிவகாமிவல்லி தரு

வழிவிடாமல்வாலிகட்ட வல்லவாநீதைரியம்சொல்லி
பழிகாரபாம்புக்கிரை பத்தாவேவந்தீர்துள்ளி

திருஞானசம்மந்தர் தரு

ஒற்றகுரலோசையைப்போல் ஒருமாதழுகிறசத்தம்
மெத்தஅக்குகேட்டதாலே மடத்தைவிட்டுசெல்வோம்சித்தம் ஒ

பொது வசனம்

இவ்விதமாகத்தானே சிவகாமிவல்லி புலம்புகின்ற சத்தம் மடத்தில் தங்கியிருந்த திருஞானசம்மந்தருக்கு கேட்டு அம்மட தலைவரும் இருவருமாக பார்க்க வருகின்றபோது சிவகாமிவல்லி இருவரையுங் கண்டு பணிகிறாள்.

காவடிச்சிந்துமெட்டு சிவகாமிவல்லி தரு

வந்தனம்புரிந்துநின்றேன் சுவாமி உந்தன்
வண்மையுள்ளஇருபாதம் நேமி மாது
வருத்தம்தன்னையேநீக்க கர்த்தனைப்போலவந்தீர்
வாசா சிவன் நேசா வந்

திருஞானசம்மந்தர் தரு

அடிபணிந்துநின்ற மாதே உனக்கு
ஆசிர்மிகவதித்தேன் கோதே நீ
அழுதிடுஞ்சேதிதன்னை பழுதில்லாமலெனக்கு
அறிவி மிக தெரிவி அ

சிவகாமிவல்லி தரு

ஆசிர்வதித்திட்ட ஐயா எந்தன்
அழகுள்ளபுருஷனிவர் மெய்யா இன்று
அரவந்தீண்டியவர் பரமபதமடைந்தார்
ஐயா அறிவீர் துய்யா ஆ

திருஞானசம்மந்தர் தரு

எந்தஊர்உங்கள்தேசம் அம்மா நீங்கள்
எங்கிருந்துஇங்குவந்தீர் சும்மா அதை

இன்பமுடன் எந்தனுக்கு துன்பமதைபோக்கிக்கொள்ள
எடுத்து சொல்லும் அடுத்து எ

## சிவகாமிவல்லி தரு

சீர்பெரும்சிவபட்டண தேசம் ஐயா
சிறப்புடன் அங்குளங்கள் வாசம் நாங்கள்
திருவளர்மதுரைபோக இருவருமாகக்கூடி
வந்தோம் வழியில் நொந்தோம் சீ

## திருஞானசம்மந்தர் தரு

கணவன் இவனென்றாய் பாவையே உந்தன்
கழுத்தில்மாங்கல்யம்காணேன் பூவையே நீ
காரணத்தைஎந்தனுக்கு பூரணமாய்சொல்லிடுவாய்
கன்னியே எந்தன் முன்னேயே க

## சிவகாமிவல்லி கவி

கரமதில்மழுமானேந்தி கங்கையைசடையில்வைத்த
பரமனைபோலவந்து பாவையைகேட்கும்ஐயா
மறைபொருள்வைத்திடாமல் மங்கையாள்நடந்தசேதி
அறைகுவேன் இன்னதென்று அருமறையுணர்ந்தவையா.

## சிவகாமிவல்லி வசனம்

சுவாமி! என்வரலாற்றைத் தெரிவிக்கின்றேன் கவனமாக கேட்பீர் சுவாமி.

## சிவகாமிவல்லி அகவல்

வரலாறுதன்னை வகுத்துமேகேட்கும்
பரிவுள்ள ஐயா பாவைநான்சொல்வேன்
சிவபட்டணம்வாழும் சிவநேசசெட்டியார்
தவமதிலுதித்திட்ட தையலாள்எனக்கு
புவனமெச்சிட பூரித்துபேரு
சிவகாமியென்று சீர்பெறஅழைத்து
பருவமாய்வளர்ந்து பாவைநானிருக்க
திருமணம்முடிக்க சிந்தித்துதந்தை
பெருமையாயென்தாயோடு பேசியேஇருவரும்
திருவளர்மதுரை தேசத்தில்வாழும்
பரிவுள்ளபுருஷனை பாசமாயழைத்து
கருத்ததைகேட்க களிப்புடன் அவரும்
சொத்துக்களையெல்லாம் தானமதாக
பத்திரமெழுதி சுத்தமாய்தந்தால்

சீர்பெறஎன்னை திருமணம்முடிக்க
பேர்பெறஒப்புக் கொள்ளுவேனென்றார்
தந்தையும்அதற்கு சம்மதப்பட்டு
நிந்தையில்லாமல் நிலையுள்ளபத்திரம்
வாங்கியேவந்து வகையுள்ளசொத்தை
பாங்குடன்எழுதி பாசமாய்தந்தார்
தந்ததும்அவர் தாக்ஷண்ணியமில்லாமல்
முந்திமணந்த மெல்லியைபழைத்து
வந்துமேதிருமணம் விந்தையாய்முடிக்க
சுந்திரனுரைத்து தான்சென்றார்மதுரை
சென்றதும்அவர் சீருள்ளதந்தை
மன்னியேசொத்தால் மனமதுநொந்து
ஆவியும்இழந்து அரன்பதிசேர்ந்தார்
பாவியென்தாயார் பாவையெனைபாராமல்
கணவன்கூடவே கன்னியும்இறந்தாள்
துணையில்லாமல் தோகைபழிகாரி
பிரேதத்தைக்கொண்டு புதைத்திட்டபின்பு
திரமுள்ளஎன்நாதன் தேடியேவந்து
கருமகாரியங்கள் களிப்புள்ளதந்தைக்கு
பெருமையாய்காரியம் புனிதனும்நடத்தினார்
நடத்தியேபின்பு நங்கையாள்என்னை
திடமாய்மதுரையில் திருமணம்முடிக்க
கன்னியாள்எனக்கு கருத்தையுரைத்து
பொன்பொருள்பூமி யாவையும்விற்று
மதுரைக்குச்செல்ல மணவாளரோடு
வழிதெரியாமல் வந்திங்குதங்கினோம்
பழியுள்ளபாம்பு பத்தாவைகடித்திட இறந்தார்.

திருஞானசம்மந்தர் கவி

அழுதுமேதுடித்துவாடி அங்கமுந்தளர்ந்துமெத்த
மொழியதுகுளறிநொந்த மொய்குழல்மாதேகேளாய்
பழியுள்ளபாம்புதீண்டி பத்தாவுமிறந்திருந்தால்
செழித்தபூவுலகில்வாழ சிறப்புடனெழுப்பித்தாரேன்.

திருஞானசம்மந்தர் வசனம்

ஆனல் கேளும் பெண்ணே! உனது புருஷனை நான் எழுப்பித் தருகிறேன் மனக்கஷ்டம் வேண்டாம் மாதே.

சிவகாமிவல்லி தரு

பத்தாவைதருவேனென்று உத்தமனேசொல்லவந்தீர்
பாசமா வெகு நேசமா

மெத்த திகைதப்பிகளை சேர்ந்ததோர்மரக்கலம்போல்
இன்பமே கொன்றேன் துன்பமே ப

திருஞானசம்மந்தர் தரு

உயிர்பெருமுன்கணவனோடு உகந்திங்குதிருமணம்
பாவையே கேளும் பாவையே
கயல்விழிமாதேகிணறு வன்னிலிங்கம்இங்கு
வைத்தேனே சாக்ஷி வைத்தேனே உ

சிவகாமிவல்லி தரு

கணவனை எழுப்பித்தந்தால் குணமாய்அவரைகேட்டு
கர்த்தனே பரி சுத்தனே
மணமதுமுடித்துக்கொண்டு மதுரைக்குசெல்வேன்
மாமுனி எழுப்புவீர் தானினி ௩

திருஞானசம்மந்தர் தரு

திருநீறுமைகையிலள்ளி சிவாயநமோவென்று
ஜெபித்து போட்டேன் குபித்து
பருவமுள்ளஉந்தன்காதன் படுத்துஎழுந்தவர்போல்
பாராய் எழுந்தார் சீராய் ௪

சிவகாமிவல்லி கவி

தூங்கிவிழித்தவர்போல் துடித்துமேஎழுந்தநாதா
மாங்குயில்தொனியாளான மாதுநான்சொல்வேன்கேளாய்
ஏங்கினேன் அழுதுகொண்டு இருந்திடும்வேளைதன்னில்
எங்கும்நிறைந்தவர்போலுன்னை எழுப்பியேதந்தார்நாதா.

சிவகாமிவல்லி வசனம்

கேளும் பிராணநாதா! நான் அழுதுக்கொண்டிருந்த பரிதாபத்தை இவர்பார்த்து தங்களை எழுப்பித்தந்தார்நாதா.

சிவகுணசெட்டி தரு

எந்தனைஎழுப்பித்தந்த சுந்திரனேஉந்தன்பாதம்
வந்தனம்புரிந்துநின்றேன்சுவாமி வணங்கி
சிந்தைமகிழ்ச்சியோடுகேமி ௫

திருஞானசம்மந்தர் தரு

சர்ப்பங்கடித்திறந்த நற்குணமுள்ளபாலா
தையலோடுஎன்றும்கூடியே வாழ்ந்து
அய்யமில்லாதிருப்பாய்சோடியே ௬

சிவகுணசெட்டி தரு

ஆசீர்வதித்தசுவாமி அரிவையாளுடன் கூடி
அன்புள்ளஎந்தன்நகர்போகவே விடை
செய்குவீரேஎனக்குஏகவே ஆ

திருஞானசம்மந்தர் தரு

கன்னியை திருமணம் இந்நகரமதில் நீயும்
காதலுடனேமணம்முடித்து
கோதையாளுடன்செல்லும்பிடித்து

சிவகுணசெட்டி தரு

எந்தனிடபந்துவர்க்க சொந்தஜனமில்லாமல் பின்னால்
எப்படிஇந்நகரில்மணம்முடிக்க
ஒப்புவாரோதந்தைதாயார்துடிக்க

திருஞானசம்மந்தர் விருத்தம்

உன்னிடபந்துவர்க்கம் ஒருவரும்இல்லையென்றாய்
வன்னியும்கிணறுலிங்கம் வண்மையாயிருப்பதாலே
அன்னவைசாக்ஷியாக அன்புடன்மணம்முடித்தால்
பன்னுமேசந்தேகம்நீங்க பத்தியாயழைத்தாலங்கு.

திருஞானசம்மந்தர் வசனம்

ஆனால் கேளும் சிவகுணசெட்டியாரே! மதுரைநகர் சென்று நீர் மணம் முடித்துக்கொள்ளவேண்டாம். வன்னி கிணறு லிங்கம் சாக்ஷியாக வைத்து மணம் செய்துக்கொண்டால் சந்தேகமுள்ள இடத்தில் சாக்ஷிசொல்ல அழைத்தால் மூன்றும் வரும். நீர் சந்தேகமில்லாமல் இக்கன்னிகையை திருமணம் செய்துக் கொள்ளுமையா.

சிவகுணசெட்டி கவி

பரமரைபோலவந்து பதியுளோர்தான்புகழ
வரமதைதந்தஐயா உன்வார்த்தைதள்ளமாட்டேன்
திருமணம்முடித்துக்கொள்ள தாமதமில்லையிப்போ
பெருமையாய்மனதைபோல பிரியமாய்முடித்திடுமே.

சிவகுணசெட்டி வசனம்

ஆனால் கேளும் சுவாமி! தங்கள்வார்த்தையின்படி எனக்குத் திருமணம் முடிப்பீர் சுவாமி.

### பொது வசனம்

இவ்விதமாகத்தானே திருஞானசம்மந்தசுவாமி வன்னி கிணறு லிங்கத்தை சாக்ஷியாக வைத்து சிவகுணசெட்டியாருக்கும் சிவகாமி வல்லிக்கும் திருமணம் முடிக்கிற விதம் காண்க.

### திருமணத் தரு

திருமணஞ்செய்தாரே சிவகுணசெட்டிக்கு
திருமணஞ்செய்தாரே

திருமணஞ்செய்தாரே பெருமையதாகவே
அருமையாய்திருஞானர் அன்புடனிருந்து தி

வன்னிகிணறுலிங்கம் சாக்ஷியாகவைத்து
விண்ணவர்யாவரும் வேடிக்கைபார்த்திட தி

அரசாணிகால்கொண்டு அழகாகநாட்டினார்
வரிசையாய்சாலுங் கரகமும்வைத்தான் தி

எக்கியம்நிறைவேற்றி எடுத்துக்கங்கணங்கட்டி
மிக்கவேமாப்பிள்ளை மணமாலைசூட்டவே தி

### திருஞானசம்மந்தர் கவி

பெருமையாலிங்கம்முன் பேச்சதுதவறிடாமல்
திருமணம்முடித்துவைத்தேன் தேசத்தோர்தான்புகழ
அருமையாய்வார்த்தையாடி அழகுள்ளமதுரைநகர்
இருவருமாகக்கூடி இப்பவேவருகுவீரே.

### திருஞானசம்மந்தர் வசனம்

ஆனால் கேளுமையா இந்த வன்னி கிணறு லிங்கம் உமக்கு சாக்ஷியாக வரவேண்டுமென்று நினைத்து துதிசெய்தால் சந்தேகமுள்ள இடத்தில்வரும் நீங்கள் இருவரும் மதுரைநகர் சென்று வருகுவீர்.

### சிவகுணசெட்டி தரு

வாராய்நீமாதே மதுரைக்கேக
சீரதாய்கோதே
தீராதவினையகற்றும் சிவஸ்தலமதுவாகும்
கூறாய்பரமனின் திருநாமம்எப்போதும் வ

### சிவகாமிவல்லி தரு

அருமைமயன்நாதா மதுரைநகரெங்கே
அறிவிப்பீர்நீதா

திருப்புரம்பியமூதூர் தாண்டியேவெகுதூரம்
விருப்பமாய்வந்ததால் வருந்துதேகால்களும் அ

சிவகுணசெட்டி தரு

மங்கையேபாராய் மதுரைகோபுரம்
தெரியுதேநேராய்
தங்கிடாமலே தாவிநடந்துவாடி
இங்கிர்தகண்மணி இசைந்துவாராய்கூடி ம

சிவகாமிவல்லி தரு

வந்தோமேநாதா மதுரைநகர்
வண்மையாய்நீதா
சுந்திரமீனுக்ஷி சொக்கநாதரைக்கண்டேன்
குந்தகமில்லாமல் கோதைபணிந்துக்கொண்டேன் வ

பொது வசனம்

இவ்விதமாக சிவகுணசெட்டியும் சிவகாமியும் திருப்புரம்பிய மூதூர்விட்டு மதுரைநகர் வரும்போது சிவகுணசெட்டியாருக்கு முதல்மனைவியாகிய சௌந்தரவல்லி வருவது.

சௌந்தரவல்லி வருகிற விருத்தம்

கணவனார்போனசேதி கன்னியாளறியவேண்டி
குணமுடன்தானெழுந்து கோலமாய்நீறுபூசி
மணமுள்ளபாரிஜாத மல்லிகைமுல்லைசூடி
இணங்கியேதாதிசூழ வந்திறைவருகின்றாளே.

சௌந்தரவல்லி தரு

சந்திரமுகவதன சுந்திரந்தனில்மிகுந்த
சௌந்தரவல்லிவந்தாள் பாங்கிமார்சூழ
சௌந்தரவல்லிவந்தாள்

கந்தகஸ்தூரிவாடை கமகமவென்றுவீச
சுருள் கதிரொளிபோல் காதில்கம்மலும்மின்ன
பதிதனில்சிறந்த பாவையாளென்ன சந்

காதில்தங்கவளையல் காந்திமிகஜொலிக்க
சரமானமுத்துமாலை தையல்மார்பில்வொலிக்க
சுருள் தாவியேசேடியர் காவலாய்இணங்கி
ஆவலாய்பாதம் பணிந்திடவணங்கி சந்

வள்ளைக்கொடியைபோன்ற மெல்லிஇடைதுவள
வெள்ளிசரிகையாடை விளங்கபுகழ்பவழ

சுருள் வாயிதழ்கோவை பழமெனபன்னி
சேயிழைமாதர்கள் சேர்ந்திடமன்னி சங்

சொந்தமாமிவீடு சந்திரநாதன்போன
அந்தசேதியறிய அருவைவாரேன்தோண

சுருள் அருவையைவிட்டு பிரிந்துமோநாதன்
இருக்கின்றார்மூன்று மாதமாய்நீதன் சங்

சௌந்தரவல்லி விருத்தம்

வஞ்சியென்தோழிமாரே வண்மையுள்ளநாதன்
கொஞ்சியேமாமிவீடு குணமுடன்சென்றுரையோ
மிஞ்சியேமாதம்மூன்றாய் மெல்லியென்கண்ணில்காணேன்
சஞ்சலமாகுதிப்போ தையல்நான்என்னசெய்வேன்.

சௌந்தரவல்லி வசனம்

ஆனால் கேளுங்கள் சேடியர்களே! எனது நாதனனவர் அவருடைய சொந்தமாமி வீட்டுக்குப்போய் வருவதாக வாக்களித்து சென்றவர் இன்றோடே மூன்றுமாதமாக வரவில்லை இதற்கென்ன செய்வேன் தோழிமார்களே.

சௌந்தரவல்லி தரு

என்னநான்செய்வேனடி தோழிகளா அம்மா
என்மனம்வாடுதோடி பாங்கிகளா

கன்னியாள்என்னைவிட்டு பாங்கிகளா அம்மா
கால்நாழிஇருக்கமாட்டார் தோழிகளா

மன்னவர்க்குஎன்னதீங்கோ தோழிகளா அங்கு
மார்க்கமொன்றும்அறியேனடி பாங்கிகளா

எந்தனைபிரிந்துஅவர் தோழிகளா அம்மா
இன்றோடுமூன்றுமாதம் ஆச்சுதடி

சொந்தமாமிவீட்டில் தோழிகளா அவர்
சுகமாய்இருக்கின்றாரோ பாங்கிகளா என

பொது வசனம்

இவ்விதமாக சிவகுணசெட்டியார் முதல் மனைவியாகிய சௌந்தரவல்லி அழுகிற சப்தத்தை சிவகுணசெட்டியார் கேட்டு சிவகாமிவல்லிக்கு சொல்லுகிற விதம் காண்க.

சிவகுணசெட்டி தரு

எந்தன்மனைவியாள்பெண்ணே அவள்
ஏனோஅழுகிறாள்கண்ணே

சொந்தமாமிவீடு சொல்லாமல்போனேனென்று
சிந்தைநொந்துமே தியங்கியழுகிறுளின்று எ

சிவகாமிவல்லி தரு

அருமையுள்ளஎந்தன்நாதா நீர்
அவசரமாய்செல்லும்நீதா

பிரியமுள்ளஉந்தன் பேதைக்குஎன்னமோ
அறியவேண்டும்சென்று அவசரமாய்முன்னமே அ

சிவகுணசெட்டி தரு

அழுகவேண்டாமோடிபெண்ணே உந்தன்
ஆசைநாயகன்வந்தேன்கண்ணே

பழுததுஉனக்கு பாவையேஎன்னமோ
பாசமாய்எனக்கு பகருவாய்முன்னமே அ

சௌந்தரவல்லி தரு

எந்தன்மனதுக்கேற்றநாதா மூன்றுமாதம்
எங்குசென்றிருந்தீர்சூதா

சொந்தமாமிவீட்டில் சுகமாய்இருந்தீரோ
சுந்திரநாதனே சொல்லுவீர்பிரிந்தீரோ எ

சிவகுணசெட்டி தரு

மாமன்மாமியரும்பெண்ணே அவர்கள்
மாண்டுபோனதினுல்கண்ணே

க்ஷேமமாய்கருமகாரியம் நேர்த்தியாகமுடித்து
தாமதமாச்சுதே தங்கிவாஅடுத்து மா

சௌந்தரவல்லி தரு

தையளிவள்யாருநாதா மிக்க
சாற்றுவீர்எனக்கதைபோதா

மெய்யானவார்த்தையை மெல்லியாள்தனக்கு
அய்யமில்லாமல் அறிவிப்பீரெனக்கு தை

சிவகுணசெட்டி தரு

அத்தைமகளிவளாச்சே ஒருவரும்
ஆதரவில்லாமல்போச்சே

மெத்தவேஎன்னோடு மெல்லியைகூட்டிவந்தேன்
உத்தமசேதியைஉரைத்து சுகம்தந்தேன் அ

சௌந்தரவல்லி தரு

சக்காளத்திஎனக்கென்று வந்தாளா உனக்கு
சரியாகவேசுகம் தந்தாளா
மிக்கவேயிதுகாலம் மேன்மையாய்வாழ்ந்தேனே
பக்குவமாய்கொண்டுவந்தாய் பாவையும்நொந்தேனே மி

சிவகுணசெட்டி கவி

சொந்தஎன் அத்தைமகளிவளேயாகும் சொல்லாதேகுற்றம்தன்னை
விந்தையாய்இரண்டுபேரும் ஒருமனதாகஒத்து
சந்தோஷமாய்எனக்கு தகுந்ததோர்வார்த்தையாடி
குந்தகம்நேர்ந்திடாமல் குடும்பத்தைநடத்துவீரே.

சிவகுணசெட்டி வசனம்

ஆனால் கேளும் பெண்ணே! எனது அத்தையின் மகள் இவளாகும். நீ வித்தியாசமான வார்த்தைகள் பேசவேண்டாம். இருவரும் மனம் ஒத்து என் சொல்லைக்கேட்டு சுகமாக வாழ்ந்துக் கொண்டு வருவீர்கள் மாதே.

சௌந்தரவல்லி கவி

மன்னவாஎந்தன்மீது வருத்தமுங்கொள்ளவேண்டாம்
கன்னியாள்எந்தன்வீட்டில் கால்நாழிஇருக்கொணாது
இன்னொருவீடமைத்து ஏந்திழைதன்னைவைத்து
அன்னவளோடுநீரும் அழகுடன்வாழ்ந்திருப்பீர்.

சௌந்தரவல்லி வசனம்

ஆனால் கேளும் பிராணநாதா! நான் இருக்கும்வீட்டில் இருந்தால் என்நேரமும் சண்டைகள் நேரும். அதனால் அவளை வேறு வீடுகட்டி அதில் இருக்கச்செய்யும் பிராணநாதா.

சிவகுணசெட்டி கவி

அன்னமேமானேதேனே அழகினில்மிகுந்தகண்ணே
உந்தனுக்குசொந்தமாக வீடதுகட்டிகொடுத்தேன்
மின்னிடும்பணிகளோடு மேலானதிரவியந்தந்தேன்
கன்னியேசுகமாக களிப்புடன்வாழ்ந்துவாராய்.

சிவகுணசெட்டி வசனம்

ஆனால் கேளும் பெண்ணே! விசித்திரமான வீடு அமைத்து வைத்தேன். அதில் சுகமாக இருந்து வாழ்வாய் பெண்ணே.

பொது வசனம்

இவ்விதமாகத்தானே 'முன்மனைவி சொற்படி சிவகுணசெட்டியார் சிவகாமிவல்லிக்கு ஒரு வீடு அமைத்து அதில் அவளோடுகூடி சுகமாக வாழ்ந்து வருகிறநாளில் சிவகாமிக்கு கெற்பந்தங்கி பத்து மாதம் சரியாகி கெர்ப்பவேதனை படுவது.

சிவகாமிவல்லி சீசபத்தியம்

பங்கையவதனமுள்ள சேடிமாரே
பாவையாள்என்னனுன் செய்வேனிப்போ
சங்கரன் அருளினால் என்வயிற்றில்
தங்கியகெர்ப்பத்தால் இன்றுநாளில்
அங்கமும்சோர்ந்து அதிகவேதனையாகி
அருவையாள்மனங்கலங்கி வாடலானேன்
மங்கையாள்எனக்குமே மருத்துவம்பார்க்கவே
மருத்துவக்கிழவியை அழைத்துவாரும்.

சிவகாமிவல்லி தரு

என்னநான்செய்வேனடி பாங்கிகளா அம்மா
இடுப்பதுநோகுதடி தோழிகளா
கன்னிநான் என்னசெய்வேன் பாங்கிகளாஎனக்கு
கனைவந்துழுண்டுதடி தோழிகளா
அடிவயிறுநோகுதடி பாங்கியரே அம்மா
அதிகதுன்பமாகுதடி தோழியரே என

சிவகாமிவல்லி தரு

பாலன்பிறந்தானம்மா பகலவனுதயம்போல
பாலன்பிறந்தானம்மா

பாலன்பிறந்தானம்மா ஆலமுண்டஈசனைப்போல்
சீலமாயவதரித்தான் சிந்தைமிகக்களிக்க பா

கண்ணழகும்கையழகும் கறுத்தமயிரழகும்
மண்ணில்கிடையாதே மைந்தனைபோலபாலன் பா

சிவகாமிவல்லி வசனம்

ஆனல் கேளும் நாதா! கோடிசூரிய பிரகாசம்போல் மைந்தன் பிறந்தான் இவனுக்கு பேர்வைப்பீர் நாதா.

### சிவகுணசெட்டி கவி

பாரினில்கீர்த்தியோங்க பாலனும்எந்தனுக்கு
சீரதாய்சோமவாரம் சித்தியோகத்தில்பிறந்ததாலே
பேரதுசொக்கனென்று பிரியமாய்வைத்தேன்யானும்
காரிகையாளேநீதான் களிப்புடன்வளர்த்துவாராய்.

### சிவகுணசெட்டி வசனம்

ஆனால் கேளும் எனக்காசையுள்ள பிராணதேவி நமக்குக் கடவுள் கிருபையால் சோமவாரம் சித்தயோகம்கூடின சுபதினத்தில் மைந்தன் பிறந்தபடியால் பேரானது சொக்கநாதன் என்று வைத்தேன் ஆசையாய் வளர்த்துவாரும் பெண்ணே.

### பொது வசனம்

இவ்விதமாகத்தானே சிவகாமி மைந்தனை அதிக செல்வத்தோடு வளர்த்துக்கொண்டு வருகிறபோது முன்மனைவியாகிய சௌந்தரவல்லி சொல்லுகிறவிதங் காண்க.

### சௌந்தரவல்லி கவி

வஞ்சியென்தோழிமாரே விபரமாய்சொல்வேன்கேளும்
மிஞ்சியவடிவமுள்ள மெல்லியாள்தனக்குதித்த
கொஞ்சிடும்மைந்தர்தன்னை கோதையாளழைத்தேனென்று
சஞ்சலங்கொள்ளாமல் சலுதியாய்அழைத்துவாரும்.

### சௌந்தரவல்லி வசனம்

கேளடி தோழிமார்களா! எனது மைந்தராகிய ஞானசுந்திரன் ஞானபாலன் இருவரையும் சீக்கிரம் அழைத்து வருகுவீர்.

### ஞானசுந்திரன் ஞானபாலன் வருவகிற கவி

விந்தையுள்ளதாயார் விரும்பியேஅழைக்கக்கேட்டு
சுந்திரஞானபாலன் தோழர்கள்தன்னைக்கூட்டி
சிந்தையும்மகிழ்ஷியாக சீர்பணியலங்கரித்து
வந்திட்டார்தாயைகாண வண்மையாய்சபையைநாடி.

### பிள்ளைகள் தரு

வந்தார்சௌந்தரவல்லிபாலகர் விந்தையாக
வாரார்சௌந்தரவல்லிபாலகர்

வந்தார்வேடிக்கையாக சிந்தைமகிழ்ஷிகொண்டு
சுந்திரதாயாரை சுருக்காய்காணவென்று வ

காதில்கடுக்கனொளிமின்ன தோழர்கள்வந்து
களிப்பாய்வார்த்தைகளும்பண்ண
கோதில்லாபூநூல் குலுங்கமார்பின்மேலே
பேதமில்லாததம்பி பிரியமாய்அரசாள கா

பிள்ளைகள் கவி

ஈசனார்கிருபையாலே எங்களைப்பெற்றெடுத்த
பாசமுள்ளதாயே பாலர்கள்இருவர்தானும்
நேசமாய்வணங்கிநின்றோம் நேர்த்தியாய்எங்களுக்கு
ஆசிர்வதித்திடும் அழகுள்ளஅன்னையாளே.

பிள்ளைகள் வசனம்

அன்னையே! உன்பாதத்திற்குச் சிறுவர்கள் வந்தனம்.

சௌந்தரவல்லி | கவி

அந்திவண்ணன் அருளினாலே அழகுள்ளபாலாநீங்கள்
சுந்திரம்மிகவேயுற்று சுடர்மணிவிளக்குதுபோல்
தொந்தரவணுகிடாமல் தொல்புவிதன்னில்நாளும்
விந்தையாய்வாழ்ந்திருக்க மெல்லியும்வாழ்த்தினேனே.

பிள்ளைகள் தரு

விளையாடப்போறோமம்மா வீதியிற்சென்று
விளையாடப்போறோமம்மா
பளபளப்புள்ளஎந்தன் பட்டாடைதன்னைதாரும்
கலங்கமில்லாததாயே கருத்துடனேநீரும் வி

சௌந்தரவல்லி தரு

செல்வரேபோகவேண்டாமே விளையாடநீங்கள்
செல்வரேபோகவேண்டாமே
அல்லல்வந்தடைகுவீர் அருமைமைந்தரேகேளீர்
நல்லதோர்தின்பண்டங்கள் நான்வாங்கித்தாரேன்பாலா வி

பிள்ளைகள் தரு

எந்தன்வார்த்தைதள்ளவேண்டாமே அம்மம்மாதாயே
எந்தன்வார்த்தைதள்ளவேண்டாமே
சுந்திரதோழர்கள் விளையாடப்போறார்கூடி
மைந்தரும்சென்றுவாரோம் மகிழ்ஷியாய்விடைதாரும் எ

சௌந்தரவல்லி தரு

சண்டைபோடாமல்வருவீர் விளையாடிபாலா
சண்டைபோடாமல்வருவீர்

அண்டைவீட்டுபிள்ளையோடு — ஆரிடமுஞ்சோராமல்
கண்டபடியேவார்த்தை — கடிந்துமேகூறாமல் சண்

பொது வசனம்

இவ்விதமாகத்தானே மூத்தமனைவி பிள்ளை இருவரும் விளையாட வீதிக்குச்சென்றிருக்கும்போது இளையமனைவியாகிய சிவகாமிவல்லி மைந்தனுகிய சொக்கநாதன் தோழமாருடன் விளையாடப் போக தாயிடத்தில் விடைகேட்பது.

சொக்கநாதன் வருகிற கவி

ஆலத்தையுண்டஈசன் ஆண்டவன்கிருபையாலே
பாலனுய்சிவகாமிக்கு புதல்வனுய்வந்துதித்த
சீலனும்சொக்கநாதன் சீர்பணியலங்கரித்து
கோலமாய்தாயைக்காண குணமுடன்வருகின்றனே.

சொக்கநாதன் தரு

சிவகுணசெட்டியாருக்கு — செல்வனுகவந்துதித்த
நவமணிபோலசொக்கநாதன் — வந்துமேவினுனே

சாந்துபொட்டுதளதளென்ன — சரிகைகுல்லாபளபளென்ன
காந்தியொளியுள்ளபாலன் — கனகசபைவாரான்பாரீர்

முத்துமணியாரம்தோடா — ரத்தினக்கடுக்கன்மின்ன
சுத்தமுள்ளபூநூலாட — சந்திரனும்வாரேனிதோ

பிள்ளைகளுடனேகூடி — பெருமையுடன்விளையாட
கள்ளமில்லாதாயைகேட்டு — கருத்துடனேவாரான்பாரீர் சி

சொக்கநாதன் தரு

அன்னையாரேஉந்தனிட — பாதம்பாதம்
அடிபணிந்திட்டேன்சொக்க — நாதன்நாதன் அ

சிவகாமிவல்லி தரு

பிள்ளைகலிதீர்க்கவந்த — பாலாபாலா
பெருமையோடுவாழ்ந்திருப்பாய் — மேலாமேலா பி

சொக்நாதன் தரு

வீதிகளிலேயானும் — சென்றுசென்று
விளையாடிவாரேனம்மா — இன்றுஇன்று வீ

சௌந்தரவல்லி தரு

போகவேண்டாம்விளையாட — கண்ணேகண்ணே
பூந்திஅல்வாதாரேன் — திண்ணேதிண்ணே போ

சொக்கநாதன் தரு

பூந்தி அல்லவா வேண்டாம் அம்மா அம்மா பூ
பாலன் விளையாடப் போறேன் அம்மா அம்மா

சிவகாமிவல்லி தரு

பிள்ளைகளோடு விளை யாடியாடி
பாலனை விடுவாராய் தேடிதேடி பி

ஞானசுந்திரன் ஞானபாலன் தரு

தோழமாரெல்லோரும் வாருங்கள் மண்ணை
தோண்டி விளையாடுவோம் சேருங்கள்

ஆழபள்ளந் தோண்டி அழகாய் வீடுகட்டி
தாழஉட்கார்ந்து தங்கி விளையாடுவோம் தோ

சொக்கநாதன் தரு

தம்பிமாரே உங்களோடு கூடியே விளையாட
தவறாமல் வருகிறேன் நாடியே

செம்மையாய்பந்தாடி சிறுவரெல்லாங்கூடி
கும்பலாய்நாமும் குதித்திடுவோம்நாடி த

ஞானபாலன் தரு

பந்துவருகுது பாலரே நீங்கள்
பார்த்துபிடியுங்கள் சிலரே

சந்தோஷமாய்சில்லே தவரும் அடிக்குறேன்
உந்தன் பந்துவந்தால் உடனே பிடிக்குறேன் ப

சொக்கநாதன் தரு

பந்தை தீபலமாக அடித்திட உனக்கு
பலமே ததுஎன்பந்தை பிடித்திட

எந்தன் பலத்தால்சில்லே எகிறவே அடிக்குறேன்
உந்தன் பந்துவந்தால் உடனே பிடிக்குறேன் ப

ஞானபாலன் தரு

வந்திடும்பந்தையே பிடிக்குறேன் என்முன்
வளையாமல் அடிப்பாய் துடிக்கிறேன்

உந்தன் பந்தைபிடித்து ஓடவேயுந்தனே
எந்தன் பலத்தாலே எகிறியே அடித்தேன் வ

பொது வசனம்

அகோதெப்படி யென்றால் பந்து விளையாடும்போது ஞான பாலன் சொக்கநாதனை பந்தால்அடிக்க அடிதாங்காமல் சொக்கநாதன் தாயிடம் சொல்வது.

சொக்கநாதன் கவி

அம்மணிஎந்தன் தாயே ஐயோநான்என்னசெய்வேன்
கும்பலாய்தெருவில்கூடி விளையாடும்போது
தெம்புடன்பந்தினாலே தூரத்தியேவந்துஎன்னை
விம்பியேஅடித்தானம்மா மெய்யதுநோகுதிப்போ.

சொக்கநாதன் வசனம்

கேளும் எந்தன் தாயே! தெருவில் பிள்ளைகளோடு விளையாடும் போது பந்தினால் என்னை அடித்து விட்டார்களம்மா என் தேகம் வலிகாணுது தாயே.

சிவகாமிவல்லி விருத்தம்

என்னடாசிறுவர்களே இறுமாப்போடுநீங்கள்
கன்னியாளீன்றெடுத்த களிப்புள்ளபாலன் தன்னை
அன்னிதமாயடிக்க ஆகுமோநியாயந்தானும்
கன்னத்திலடித்தேன்பாராய் குன்னிடயுங்களையான்.

பொது வசனம்

பிள்ளைகளை சிவகாமிவல்லி அடிக்க சௌந்தரவல்லி சிவகாமி வல்லியோடு சண்டை போடுவது.

சௌந்தரவல்லி தரு

மைந்தர்களையடிக்கஉந்தனுக் கதிகாரமேது
போடி அடி போடி
உந்தனை இப்போதுஓகோ நான்விடுவேனோ
வாடி சண்டைக்கு வாடி மை

சிவகாமிவல்லி தரு

வாடிபோடிஎன்றுவார்த்தை பேசிடாதே
மாதே அடி மாதே
சேடியர்விளையாடியசெல்வனை அடிக்கலாமா
கோதே அடி மாதே வா

சௌந்தரவல்லி தரு

அடிக்கலாமாவென்றுநீயும் இடிக்கவந்தாய்கன்னத்திலே
பேசி நீ பேசி
துடுக்கானவார்த்தைகள் முடுக்குடன்பேசுகிறாய்
வீசி கையை வீசி அ

சிவகாமிவல்லி தரு

வீசிகையைகாட்டுகின்றதினால் அல்லவோ
மெல்லியே அடி மெல்லியே
மோசக்காரசக்களத்திபேசுறாய் என்னிடம்
துள்ளியே அடி துள்ளியே வீ

சௌந்தரவல்லி தரு

தாலிகட்டிவந்தவள்போல்சரியாக எந்தன்முன்னே
நின்று அடி நின்று
நாயைப்போல்பேசுகிறாய்நிற்காது உன்வாழ்வு
என்றும் அடி என்றும் தா

சிவகாமிவல்லி தரு

தட்டுவாணிசிறுக்கியே மட்டுப்படாவார்த்தை
பேசினாய் அடி பேசினாய்
விட்டுவிடமாட்டேனுன்னைதொட்டிழுத்தேன்சண்டைக்கு
வாடி அடி வாடி த

சௌந்தரவல்லி தரு

ஏண்டிபடுபாவிஎந்தன் மயிரைப்பிடித்தாய்
சிறுக்கி பாவி சிறுக்கி
தாண்டிமயிர்பிடித்துதவடையி லடித்தேனே
முறிக்கி காதை முறிக்கி ஏ

சிவகாமிவல்லி வேறு தரு

சண்டைக்குநீமிகக்கெட்டியா எந்தன்
சக்காளத்திபேசுகிறாய்மட்டியா
கொண்டஎன்கணவன் கொடுத்திட்டதிரமா
கோதைபேசுகிறாய் கொடுமையாய்வீரமா ச

சௌந்தரவல்லி தரு

சூதுதனம்செய்துகாதனை நீயும்
தொட்டதும்எற்றினாய்போதனை
சாதியென்றுதெரியாத சக்காளத்திமுண்டையே
மாதுஉனைதொட்டு பிடித்தேனேகொண்டையை சூ

சிவகுணசெட்டி தரு

என்னசண்டை இருவருக்கும் மானே அடி
ஏனோமனவருத்தம்தேனே
பண்ணுவாயேசேதி பாவையரேகேங்கள்
அன்னிதமான சண்டை ஆகாசெய்யப்போகுமா என

சிவகாமிவல்லி தரு

ஐயையோஎன்னசெய்வேன்நாதா என்னை
அனியாயமாகவேவாதா
மையவேளந்தனை பாவிசௌந்தரவல்லி
மெய்யதுகோகவே யடித்தாளேஎன்னைத்துள்ளி ஐ

சிவகுணசெட்டி தரு

மங்கைசௌந்தரவல்லியே நீயும்
மயிர்பிடித்தடிக்கலாமாமெல்லியே
பங்கமாகுதெனக்கு பாரோர்கள்நகைக்கவும்
சங்கையில்லாமல்சண்டை போடுநீர்பழிக்கவும் ம

சௌந்தரவல்லி தரு

போதும்உன்வார்த்தை நிறுத்து நாதா
புத்திசொல்லவேண்டாம் வெறுத்து
பாதகாஉந்தன்பக்ஷ மெல்லாம்மறந்தேன்
காதலாய்தாய்வீடு கன்னிபோகஇசைந்தேன் போ

சிவகாமிவல்லி தரு

தந்தைவீடுபோனால்போறாள் நாதா அவளை
தடுக்கவேண்டாமநீயும் வேதா
உந்தனுக்குஏற்ற உத்தமியிருக்க
சிந்தைகளிப்பீரே சந்தோஷமாகவே த

சிவகுணசெட்டி தரு

பெண்ணேசௌந்தர வல்லியே நீ
போகாதேதாய்வீடு மெல்லியே
கண்மணியேஉந்தன்கருத்தில் கொண்டஎண்ணம்
திண்ணமாய்எனக்கு சொல்லுவாயேதிண்ணம் பெ

சௌந்தரவல்லி தரு

மாதுசிவகாமி தன்னையே நீர்
மணமதுமுடித்ததுண்டா முன்னையே

சூதுவாதில்லாமல் தோகையாள்எந்தனுக்கு
ஓதுவீரோநாதா உண்மையைதனக்கு மா

சிவகுணசெட்டி தரு

திருப்புரம்பியமூதூரில் பெண்ணே மணம்
சிவஆலயத்தில் கண்ணே
பெருமையாய்வன்னிலிங்கம்கிணறு பேர்பெறசாக்ஷிவைத்து
அருவையாளேமணம் அன்பாய்செய்தேன்ஒத்து தி

சௌந்தரவல்லி கவி

திருப்புரம்பியமூதூரில் சிவகாமியைதிருமணம்
பெருமையாய்முடித்தேனென்று பேசிடவந்தீர்நாதா
அருமையாய்நமதுபந்து ஆருக்கும்தெரியாமல்
ஒருமையாய்மணம்முடித்தால் ஒப்புமோஉலகம்சொல்லும்.

சௌந்தரவல்லி செனம்

ஆனால் கேளும் நாதா! நீர் திருப்புரம்பியமூதூரில் சிவஆலயத்தில் சிவகாமிவல்லியை மணம்முடித்து வந்தேனென்றீர். இது நம் பிக்கையில்லை நமக்குள்ள பந்துக்கள் யாருக்கும் தெரியாமல் நீர் மணம்முடித்து வந்ததினால் அதற்கு சாக்ஷிகள் உண்டா எனக்குத் தெரிவிப்பீர் நாதா.

சிவகுணசெட்டி தரு

வன்னிகிணறுலிங்கம் மூன்றும்சாக்ஷிசொல்லும்
வருகுவாய்என்பின்னே வஞ்சியே உனக்கு
தெரிவிப்பேன்உண்மையை கொஞ்சியே

சௌந்தரவல்லி தரு

வன்னிகிணறுலிங்கம்சாக்ஷி சொல்லுமாயுலகில்
வார்த்தைநீர்சொல்லவந்தீர்ஞாயமா நான்
பூர்த்தியாய்ஒப்புக்கொள்வேன்நேயமா

சிவகுணசெட்டி தரு

உண்மையைதெரிய திருப்புரம்பியமூதூர்
ஒருமையாய்மூவரும்சென்றாலே சாக்ஷி
பெருமையாய்மூன்றுஞ்சொல்லும்முன்னாலே உ

சௌந்தரவல்லி தரு

வன்னிகிணறுலிங்கம் சாக்ஷிசொல்லுமாகில்
வஞ்சியாள்என்முன்னே இன்றே வந்து
சஞ்சலம்நீங்கசொல்லட்டும்நின்று

பொது வசனம்

இவ்விதமாக சௌந்தரவல்லி சாக்ஷி சொல்லுவோர் இங்கு வந்து சொன்னால்தான் ஒப்புக்கொள்ளுவேன் என்று சொல்ல சிவகாமிவல்லி திருப்புரம்பியமூதூர் பரமக்கடவுளை தோத்திரம் செய்வது.

சிவகாமிவல்லி தேவாரம்

அரிஅயன்தேடிக்காணு அப்பனே கைலைவாசா
கரியுரித்தோனேயந்த காலனையுதைத்தபாதா
விரிசடைமதியுங்கெங்கை விளங்கிடதரித்தஈசா
திருப்புரம்பியமூதூர் தேவனேபோற்றிபோற்றி.
முப்புரமெரித்தகண்ணு முனிவர்கள்பணியும்வண்ணு
செப்பியேதிருஞானசம்பந்தர் திருவுளவாக்கைப்போல
இப்பவேசாக்ஷிசொல்ல வன்னியுங்கிணறுலிங்கம்
ஒப்பியேமூதூர்விட்டு உண்மையாய்வருகவேணும்.

பொது வசனம்

இவ்விதமாகத்தானே சிவகாமிவல்லி ஈஸ்வரனை துதிசெய்து கொண்டிருக்க திருப்புரம்பியமூதூரில் எழுந்தருளிய வன்னி கிணறு லிங்கம் மூன்றும் சாக்ஷி சொல்லுவதற்கு மதுரைக்கு வருவதை சிவகாமி நாதனுக்குச் சொல்வது.

சிவகாமிவல்லி தரு

வருவதைபாரும் கிணறுலிங்கம் வன்னியைநீரும்
திருஞானசம்மந்தர் திருவாக்கின்படி
அரிவைமகிழ்ந்திட அழகாகபார்நாடி வ

சிவகுணசெட்டி தரு

அன்னமேபெண்ணே அழகில்மிகுந்தகண்ணே
சொன்னபடிகிணறுலிங்கம் தோகைநீபார்த்தாயா
கன்னியேவீண்வார்த்தை பண்ணினாய்கீர்த்தியாய் மே

சௌந்தரவல்லி தரு

நாதனேவாரும் மாது நவிலுவேன்கேளும்
கோதையைதிருமணம் கொண்டதுநிசமென்று
மாதிடம்சாக்ஷியை சொல்லும்படிசொல்வீர் நா

சிவகாமிவல்லி தரு

திருப்புரம்பியவாசா வாய்திறந்து சொல்லுவீர்ஈசா
அரிவையுன்ஆலயத்தில் திருமணம்முடித்ததை
பெருமையாகவே அரைகுவீர்கடித்ததை தி

பரமன் லிங்கத்திலிருந்து வெடித்து சொல்வது

பரமன் விருத்தம்

நற்குணமுள்ளசௌந்தர நங்கையேசொல்லக்கேளாய்
சற்குணசிவகாமிக்கு திருப்புரம்பியமூதூரில்
அற்புதஎன் ஆலயத்தில் அரிவைக்குதிருமணம்
குற்றமில்லாமல் கோதைக்குநடந்ததுண்டு.

வசனம்

ஆனால் கேளும் சௌந்தரவல்லியே! சிவகுணசெட்டியாருக்கும் சிவகாமிவல்லிக்கும் திருப்புரம்பியமூதூரில் என் ஆலயத்தில் திருமணம் நடந்ததுண்டு. நீ சந்தேகம்கொள்ளவேண்டாம் மாதே.

பொது வசனம்

வன்னி கிணறு லிங்கம் மூன்றும் சாக்ஷிசொல்லி மறைந்த போது சௌந்தரவல்லி சிவகுணசெட்டிக்கு சொல்வது.

சௌந்தரவல்லி கவி

என்னிடபிராணநாதா ஏந்திழைசஞ்சலந்தீர
வன்னியுங்கிணறுலிங்கம் வந்துமேசாக்ஷியாக
கன்னிமுன்சொன்னதாலே காரிழைஒப்புக்கொண்டேன்
மன்னிக்கவேண்டும்நாதா மங்கையான்செய்தகுற்றம்.

சிவகுணசெட்டி கவி

மன்னிக்கவேண்டுமென்று மாதுநீசொல்லவந்தாய்
கன்னியேசிவகாமி காரிழைக்குதொண்டுசெய்து
பன்னியஇல்லந்தன்னில் பாசமாய்நீங்கள்கூடி
அன்புடன்வாழ்ந்திருப்பீர் அகிலத்தோர்புகழ்ந்திடத்தான்.

சிவகுணசெட்டி வசனம்

ஆனால் கேளும்பெண்ணே சௌந்தரவல்லியே! நீ சிவகாமியை நம்பாமல் அவளோடு சண்டைபோட்டு அவளை பேதகம்பண்ணினாய். ஆதலால் நீ அவளுக்கு தொண்டுசெய்து சுகமாக வாழுவீர்கள் பெண்ணே.

சுபம்! சுபம்!! சுபம்!!!

வன்னி கிணறு லிங்கம் சாக்ஷி நாடகம்

முற்றிற்று.

---

பூமகள்விலாசம் பிரஸ், சென்னை:—1937.

# பூமகள் பதிப்பின் நாடக விளம்பரம்

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்: இதன் அடியிற்கண்ட புத்தகங்களும், இன்னும் அநேகவிதமான புத்தகங்களும், எமது பூமகள்விலாச அச்சுக்கூடத்தில் தகுந்த வித்வான்களைக் கொண்டு பிழையற சீர்திருத்தப்பட்டு அச்சிட்டுவருவதால் யாவரும் பூமகள் பதிப்பை கவனித்து வாங்கக் கேட்டுக்கொள்ளுகிறோம்

(ரிஜிஸ்டர் காபிரைட் செய்தது)

| | ரூ | அ | ப |
|---|---|---|---|
| வள்ளிகலியாணநாடகம் | 0 | 6 | 0 |
| சிங்கிசர்கலியாணநாடகம் | 0 | 5 | 0 |
| ஸ்ரீராமர் அஸ்வமேதயாகமென்னும் குசலவநாடகம் | 0 | 6 | 0 |
| மாங்கனி சரித்திர நாடகம் | 0 | 6 | 0 |
| கம்ச சம்மாரநாடகம் | 0 | 5 | 0 |
| தொண்டரடிப்பொடியாழ்வார் நாடகம் | 0 | 5 | 0 |
| தாருகாவனரிஷி சரித்திர நாடகம் | 0 | 5 | 0 |
| கமலவல்லி நாடகம் | 0 | 5 | 0 |
| பத்மாவதி நாடகம் | 0 | 5 | 0 |
| நரகாசுர சம்மாரநாடகம் | 0 | [illegible] | 0 |
| சந்திரன் கர்வபங்கமென்னும் சந்திராம்பாள் நாடகம் | 0 | 5 | 0 |
| மணிமாலன் சண்டை நாடகம் | 0 | 6 | 0 |
| வீமன் அர்ச்சுனன் யுத்தநாடகம் | 0 | 6 | 0 |
| ஸ்ரீராம ஆஞ்சநேய யுத்தநாடகம் | 0 | 5 | 0 |
| சிறுத்தொண்டபத்தன் நாடகம் | 0 | 5 | 0 |
| வல்லபைகலியாணமென்னும் விநாயகர் கலியாணநாடகம் | 0 | 8 | 0 |
| சுபத்திராபரிணயநாடகம் | 0 | 6 | 0 |
| இலட்சுமணாதேவி மாலையிடுநாடகம் | 0 | 8 | 0 |
| அருந்ததி கலியாண நாடகம் | 0 | 6 | 0 |
| வல்லாளமகாராஜன் நாடகம் | 0 | 6 | 0 |
| கேதாரி ஈஸ்வரர் நோன்பு நாடகம் | 0 | 5 | |
| பார்வதி இடபாகம்பெற்ற மகிடாசூர சம்மார நாடகம் | 0 | 6 | 0 |
| சகுந்தலை நாடகம் | 0 | 6 | 0 |
| சித்திரசேனன் சரித்திர நாடகம் | 0 | 6 | 0 |
| வாணாசூரன் சண்டை நாடகம் | 0 | 6 | 0 |
| புநந்திரன் தூது என்னும் சின்ன அர்ச்சுனன் சண்டை | 0 | 6 | 0 |
| கெஜகௌரி என்னும் காந்தாரி நோன்பு நாடகம் | 0 | 5 | 0 |
| துரியோதனன் கெர்வபங்கமெனும் அர்ச்சுனன் சண்டை | 0 | 6 | 0 |
| சுந்தரராஜன் பாபவிமோசன கிருஷ்ணார்ச்சுனன் சண்டை | 0 | 6 | 0 |

**அ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ்,**

24, தாண்டவராயப்பிள்ளைவீதி சென்னை.